உள்ளே...

வண்ணமயில் பெண்ணொருத்தி...	5
உன் காதல் கண்ணிலா	109
மலர்விழி மயக்கம்	172

*

வண்ணமயில் பெண்ணொருத்தி...

1

மைவிழிகள் விரிய கண்ணாடி முன் நின்று அழகு பார்த்த நந்தனாவிற்கு ஒருகணம் வேடிக்கையாய் இருந்தது. சிவப்பு பருத்தி பட்டு, ஜரிகை பார்டர் சேலை, கை நிறைய வளையல்கள். காதுகளில் கழுத்தில் மின்னும் பொன்நிற நகைகள், தலையில் பளபளப்பான நெற்றிச் சூடி... என எல்லாம் அசல் மணப்பெண் போலவே அவளுக்குத் தோற்றத்தைக் கொடுத்தன.

ஆனால்... நந்தனா அங்கு மணப்பெண் அல்ல. விளம்பரப் படம் ஒன்றுக்கான மாடல்.

ஒப்பனை அறையை விட்டு திருப்தியடைந்தவளாய் நந்தனா வெளிவந்தாள்.

வண்ணத்துப்பூச்சி கூட்டம் போல் சிறுசிறு பெண்கள் உட்கார்ந்திருக்க... நடுவில் அழகுப் பதுமையாய் அவள் உட்கார வேண்டும். அவளது நளினமான மெல்லிய உடல் அசைவுகளுடன் செவ்விதழ்களை பிரித்து அமர்த்தலான ஒரு புன்னகையை புரிய வேண்டும். அவ்வளவுதான்.

நந்தனா சொன்னபடியே சிறுமிக் கூட்டத்தின் நடுவில் போய் உட்கார்ந்து புன்னகையை விசிறினாள். கேமிரா அப்படியே உள்வாங்கிக் கொண்டது. புதியதாய் திறக்கப்பட இருக்கும் ஜவுளி நிறுவனம் ஒன்றுக்கான மாடல் விளம்பரப்படம் அது. நந்தனா மாடலாய் தேர்வு செய்யப்பட்டு நடித்துக் கொண்டிருந்தாள்.

ஷாட் சரியாக அமைந்து விளம்பரப் படம் நன்றாக வந்து விட்ட திருப்தியில், விளம்பரப் பட தயாரிப்பு நிர்வாகி பெரிய புன்னகையுடன், ஊதியத் தொகைக்கான செக்கையும் உடனே நீட்டினார்.

நந்தனா வாங்கிக் கொண்டாள். ஐந்து இலக்க தொகை செக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு சேலை கட்டி சின்ன புன்முறுவல் செய்ததற்கு இவ்வளவு பெரிய தொகை கிடைப்பது அவளுக்கு ஆச்சரியமே!

கொஞ்சம் பழைய விஷயங்களை நினைத்துப் பார்த்தாள் நந்தனா. கலைக்கல்லூரி ஒன்று நடத்திய ஆடை அலங்கார விழாவில் தற்செயலாய் கலந்து கொண்டபோது நடந்த சம்பவம் அது.

இருபது வயது வனப்பான உடல்வாகுடன் தங்கச் சிலை போல் பளீரிடும் அழகில் அவள் வலம் வந்தபோது நிறைய கண்கள் அவளை உறுத்துப் பார்த்தது. அப்படி உறுத்துப் பார்த்து அவளைத் தேடி வந்தவர்தான் விளம்பர கம்பெனி ஒன்றின் ஒருங்கிணைப் பாளரான மேனேஜர் கணேசன்.

''மாடலிங் செய்ய உங்களுக்கு விருப்பமா?'' என்று அவர் கேட்டபோது புதிராய்த்தான் அவரை நந்தனா பார்த்தாள். ஆனால் அவர் கொடுத்த விளக்கத்தில் திருப்தியடைந்தவளாய் ஒன்றிரண்டு விளம்பரங்களுக்கு மாடல் செய்தாள்.

முதலில் சுவாரஸ்யமில்லாமல் கலந்து கொண்டவளுக்கு தொடர்ந்து செய்யும்போது ஒருவித ஆர்வமும் பிடிப்பும் ஏற்பட்டு விட்டது.

மாடலிங் மூலம் கிடைக்கும் அபரீத பணம் பல நல்ல விஷயங்களுக்கு உதவிற்று. சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட நந்தனா அதன் மூலம் மெர்ஸிஹோம், அனாதை இல்லம், முதியோர் விடுதி என தேடிப்பிடித்து பண உதவி செய்தாள்.

தாயில்லாப் பெண்ணாய், சிறு வயதிலேயே தாயை இழந்து, தந்தை சிவராமின் அணைப்பிலேயே வளர்ந்தவளுக்கு இந்த விதமாய் உதவி செய்வது பெரும் நிம்மதியைத் தந்தது.

அன்றைய தினமும் வேலை முடிந்து வெளிவந்தாள். தன் வீட்டுப்பக்கம் உள்ள தெருவோர சிறுவர்களுக்காக நிறைய இனிப்பு வகைகளை வாங்கியபடி உற்சாகமாய் வீடு கிளம்பி னாள்.

வீடு வந்ததும் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கி விட்டு வீட்டிற்குள் நுழைந்தவள் அலுப்பு தீர குளித்தாள். புன்னகையுடன் தந்தை கொடுத்த சூடான காபியை ஆவலாய் பருகியபடி அன்று நடந்த மாடலிங் விஷயங்களை தந்தையிடம் விவரித்தாள்.

பின் சிறிது ஓய்வெடுக்கலாம் என நினைத்து அவள் எழுந்தபோது அவள் கண்களில் அந்த லெட்டர் பட்டது.

''உனக்கு வந்த ரெஜிஸ்டர் லெட்டர்ம்மா....'' என்றபடி சிவராம் அந்த லெட்டரை நீட்டினார்.

ஆவலாய் வாங்கிப் பிரித்தாள்.

'பாப்புலர் மில்ஸ்' நிறுவனத்திடமிருந்து மாடலிங் செய்ய அவளுக்கு அழைப்பு!

பெங்களூரில் 'மாடல் ஷோ' ஒன்று நடக்க இருப்பதாகவும், அதில் பாப்புலர் மில்ஸ் சார்பாக, அவர்களது உற்பத்திப் பொருட்களுக்கு விளம்பரம் செய்யும் மாடலாக கலந்து கொள்ள விருப்பம் கேட்டிருந்தார்கள்.

அவள் பத்து நாட்கள் பெங்களூரில் தங்கி இருக்க வேண்டும். அங்கேயே பயிற்சியும் கொடுக்கப்பட்டு இறுதி நாளில் நடக்கும் மாடலிங் பெண்களுக்கான போட்டியிலும் அவள் கலந்து கொள்ள வேண்டும். அனைத்து செலவுகளையும் மில் நிர்வாகம் ஏற்றுக்கொண்டு நல்ல சம்பளத் தொகை ஒன்றைத் தருவதாகவும் அவளுக்கு உறுதி கூறப்பட்டிருந்தது.

நந்தனாவிற்கு இவையெல்லாம் பிடித்துப் போக... மாடல் கேம் ஷோ போட்டியில் கலந்து கொள்ள தீர்மானித்தாள்.

மறுநாள் முதல் வேலையாய் நந்தனா கிளம்பி பாப்புலர் மில்ஸின் நிர்வாக அலுவலக கட்டிடத்திற்கு சென்றாள்.

'பாப்புலர் மில்ஸ்' நகரின் பிரபலமான துணி உற்பத்தி நிறுவனம். வெளிநாட்டு ஏற்றுமதி, உள்நாட்டு விற்பனை என ஆண்டுக்கு கோடிக்கணக்கில் வர்த்தகம் செய்யும் பெரிய கம்பெனி!

அதன் கிரானைட் படிகட்டுகளில் ஏறி உள்ளே சென்றாள். ரிசப்ஷனில் விபரம் சொல்லி சம்பந்தப்பட்ட பொது நல அதிகாரியான மிஸஸ் டெய்சியை சந்தித்தாள்.

டெய்சி இனிமையாய் பேசி மாடலிங் ஷோ பற்றிய விபரங்களைச் சொல்ல நந்தனா முழுமையாக சம்மதித்தாள்.

அவளுக்கும் பாப்புலர் மில்ஸ்க்குமான காண்ட்ராக்ட் ஒப்பந்தம் ஒன்று உடன் தயார் செய்யப்பட்டது. அதில் உற்சாகமாய் கையெழுத்திட்டாள் நந்தனா.

அன்று மதியமே கம்பெனியின் மாடலிங் ஒருங்கிணைப்பாளரை சந்தித்து மற்ற விபரங்களை தெரிந்து கொள்ளுமாறு அவளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மில்ஸின் கீழ்தள கேண்டினில் மதிய உணவு அருந்திவிட்டு காத்திருந்தாள்.

சரியாக மூன்று மணிக்கு ஒருங்கிணைப்பாளரை பார்க்க அவளுக்கு அனுமதி கிடைத்தது.

பெரிய வராண்டாவில் நடந்து அந்த விசாலமான ஏ.ஸி. அறையை திறந்தவளுக்கு சேரில் ஒருங்கிணைப்பாளராய் இருந்தவனைக் கண்டதும் பலத்த அதிர்ச்சி!

அது... சரவணன்! யாரை தன் வாழ்நாளில் இனி சந்திக்கவே கூடாது என்று நினைத்திருந்தாளோ... அதே சரவணன்! அவனும் நிமிர்ந்தான்.

யாரை தன் வாழ்நாளில் இனி சந்திக்கவே கூடாது என்று நினைத்திருந்தானோ... அதே நந்தனா! அவனும் அதிர்ச்சியடைந்தான்.

நந்தனா, சரவணனை ஒருங்கிணைப்பாளராய் பார்த்த அந்த கணமே தீர்மானித்து விட்டாள். மேலும் அங்கு நிற்கப் பிடிக்காமல் விறுவிறுவென திரும்பி விட்டாள். சரவணனும் அவள் வீராப்பாய் திரும்பிப் போவதை ஒரு அழுத்தமான பார்வையுடன் பார்த்தவன் பார்வையை திருப்பிக் கொண்டான்.

மறுநாள் காலை முதல் வேலையாய் பாப்புலர் மில்ஸ் தலைமையக கட்டிடத்திற்கு சென்றாள் நந்தனா.

மாடலிங் பிரிவின் தலைமையான டெய்சி வரவேற்று உட்காரச் சொன்னாள்.

''எனக்குப் பிடிக்கல... நான் விலகிக்கறேன்...'' என்றாள் நந்தனா.

''என்ன சொல்றீங்க நீங்க?'' புரியாமல் நாற்பது வயது ஆங்கிலோ இந்திய டெய்சி தன் மூக்குக் கண்ணாடியை சுருக்கினாள்.

''நான் பேஷன் விழாவில் கலந்துக்கல. என்னோட காண்ட்ராக்ட்டை கேன்சல் பண்ணிருங்க...''

''என்ன.. கேன்சல் பண்ணனுமா?''

''ஆமா... என்னோட அக்ரீமெண்ட்டை ரத்து பண்ணனும்...''

''திடீர்ன்னு சொன்னா... எப்படி?''

''திடீர்ன்னுதான் தோணுது. அதான் முடிவு பண்ணிட்டேன்...''

''நந்தனா... பீ... சீரியஸ்...''

''நான் சீரியஸாத்தான் சொல்றேன்...''

''எவ்வளவு பெரிய வாய்ப்பு... என்ன ஒரு அருமையான ஒப்பந்தம்? இப்படி யோசிக்காம எடுத்தெறிஞ்சு பேசாதீங்க. கன்சிடர் பண்ணுங்க..''

''மிஸ் டெய்ஸி...'' என்றபடி குரலை உயர்த்தினாள் நந்தனா.

''சொல்லுங்க...''

''நான் தெளிவா... யோசிச்சு, நல்ல மனநிலையோடதான் இந்த முடிவை எடுத்திருக்கேன். எனக்கு இந்த வாய்ப்பு வேண்டாம். என்னோட அக்ரீமெண்டை ரத்து பண்ணிருங்க...!''

''நீங்க என்கிட்ட சொன்னாப் போதாது?''

''வேற யார்கிட்டே சொல்லணும்?''

''மிஸ்டர் சரவணன் கிட்ட...''

'சரவணன்' பெயரைக் கேட்டதுமே மேலும் கோபம் சிலிர்க்க ஒப்பென நிமிர்ந்தவள்...''ஆர்... யூ... ஜோக்கிங்...? விளையாடு றீங்களா நீங்க? ஹூ... இஸ்... சரவணன்? அவர் இந்த கம்பெனியில் வேலை பார்க்கிற சம்பளம் வாங்குகிற சாதாரண மாடலிங் கோ ஆடினேட்டர்தானே? அவர்கிட்ட எதுக்கு நான் சொல்லணும்? வேணும்ன்னா உங்க எம்.டியையோ சேர்மன் முதலாளியையோ கூப்பிடுங்க... நான் அவங்ககிட்ட பேசிக்கிறேன்..''

கோப வேகத்தில் பொரிந்து தள்ளிவிட்டு நந்தனா நிறுத்த டெய்ஸி அதீத சிரிப்பு பொங்க அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன டெய்ஸி.. சிரிக்கிறீங்க?''

''உங்க அறியாமையை நினைச்சுதான்...''

''அறியாமையா....?''

''ஆமா... சரவணன் கம்பெனி கோ-ஆடினேட்டர் மட்டுமில்ல. இந்த பாப்புலர் மில்ஸ் முதலாளியும் அவர்தான்...''

''என்ன... சரவணன்... முதலாளியா?''

நிஜமாகவே நம்ப முடியாமல் ஒரு கணம் வாய்பிளந்து அதிசயித்தவள் அதற்குமேல் பேச வார்த்தைகள் வராமல் தடுமாறினாள்.

''நந்தனா. எங்க முதலாளி அப்படித்தான் பார்க்கிறதுக்கு சிம்பிளா... கொஞ்சமும் கரடு முரடா தெரிவார். ஆனால்

உள்ளுக்குள்ள பலாச்சுளை மாதிரி அன்பில் நெகிழ வைச்சிடுவாரு. அத்த பரிவு காட்டுவாரு... நீங்க..."

டெய்ஸி மேலும் பேச முடியாதபடி நந்தனா கையுயர்த்தினாள்.

"உங்க முதலாளி புராணத்தை என்கிட்ட பாட வேண்டாம்..."

"சரி.... பாடல. இப்போ நான் என்ன செய்யணும்?"

"உடனடியா உங்க முதலாளியை நான் சந்திக்கணும் ஏற்பாடு பண்ணுங்க..."

"பண்றேன்.. உங்க உத்தரவுக்கு கீழ்ப்படியறேன்...!" ஒருவித கேலியாய் டெய்ஸி பேசியவள். அதே சிரிப்புடன் இண்டர்காமில் பேசினாள்.

அடுத்து ஐந்து நிமிடத்தில் சரவணனின் பிரத்யேக அறையினுள் நந்தனா சிலிர்ப்பாய் நுழைந்தாள்.

அவன் முகத்தை நிமிர்ந்து. இருக்கையில் சிங்கம்போல் உட்கார்ந்திருந்ததை பார்க்கப் பிடிக்காதவளாய் குனிந்த தலையுடனே, "உங்க கம்பெனிக்காக மாடலிங் செய்ய விருப்பமில்லை. உடனே என்னோட அக்ரீமெண்ட்டை ரத்து பண்ணுங்க..." என்று தெளிவாய், உயர்ந்த குரலில்

சரவணனோ ஸீட்டை விட்டு எழுந்து கைகளை கட்டிக் கொண்டான். எந்தவித உணர்ச்சியும் பிரதிபலிக்காதவனாய் அவளைப் பார்த்தான்.

"ரத்து பண்றேன். அதுக்கு முன்னால.."

"முன்னால?" இன்னமும் அவள் முகம் நிமிர்த்தாமல் அவனைப் பார்க்காமல் வேறு திசையில் பார்த்தாள்.

"சில கேள்விகளுக்கு.. நீ...", என்றவன் அவசரமாய் திருத்தி. "நீங்க பதில் சொல்லணும்..." என்று முடித்தான்.

"கேளுங்க..." என்றாள் அவள் ஒற்றை வார்த்தையில்.

"மொதல்ல... நீங்க... ஏன் தலையை குனிய வைச்சிருக்கீங்க? நிமிர்ந்து ஏன் என்னை பார்க்கக் கூடாது?"

"அ... அது.. அது..."

இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்காததால் திணறினாள்.

அவன் அடுத்த அஸ்திரத்தை வீசினான்.

"பழசை... இன்னும் நீங்க மறக்கலையா?"

அவள் சிலிர்த்தாள்.

"இல்ல... எப்போ மறந்திட்டேன்..."

"அப்போ நிமிர்ந்து பாருங்க..."

அவளுக்கு வேறுவழியில்லாது போயிற்று. சிரமப்பட்டு கண்கள் அகல விரிய தனது மைவிழிகளை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் பிட்நியை உலுக்கிக் கொண்டு நிற்கும் சிங்கம் போன்ற அதே உருவம்! முகத்தில் எவ்வித பதட்டமுமில்லாத அசாத்திய கூர்மை. ஊடுருவும் விழிகளில் பாய்ந்த போது பழைய நினைவுகள் எழும்பி அவளைத் தடுமாறத்தான் வைத்தது. இந்த அசாத்திய ஆண்மையில். மயக்கும் விழிகளில்தானே அன்று மயங்கிப் போனாள்?

அவள் உள்ளுக்குள் கொண்டிருந்த கோபம் வெறுப்பு எல்லாம் அவனது பார்வையில் கொஞ்சம் கொஞ்சமாய் அடிபடுவது போலிருந்தது.

ஒரு கணம் பயந்து அதிர்ந்தவள், சட்டென தனது பார்வையை திருப்பி அவன் முகத்திற்கு பின்னாலிருந்த சுவரில் பதியும்படி வைத்துக் கொண்டாள்.

''ம்ம்... சொல்லுங்க....'' பிசிறில்லாமல் பேசி குரலை உயர்த்தினாள்.

''நீங்க.. ஏன் அக்ரீமெண்ட்டை ரத்து பண்ணனும். அதுக்கு என்ன அவசியம்?''

''எனக்குப் பிடிக்கல...''

''பிடிக்கலேன்னு... மொட்டையா சொன்னாப் போதாது. காரணம் அவசியம் வேணும்...'' அழுத்தமாய் சொல்லியபடி அவன் கண்களால் ஊடுருவதை உணர்ந்தாள்.

''காரணம்ன்னு... ஒண்ணும்... இல்ல...''

''அப்ப கலந்துக்கோங்க...''

''அதான் பிடிக்கலைன்னு சொல்றேன்...'' அவள் குரல் உயர்ந்தது.

''சரியான காரணமில்லாம கம்பெனி ரூல்ஸ்படி உங்களை விடுவிக்க முடியாது...''

''ஓஹோ...''

''யோசிங்க... வீட்டுல போய் நல்லா யோசிங்க. இப்படி டக் டக்குன்னு முடிவெடுத்து வருந்துறது உங்க சுபாவமா கூட இருக்கலாம்...''

அசால்ட்டாய் முள் குத்துவது போல் அவன் சொல்ல அவளுக்கு வந்ததே கோபம். ''மத்தவங்க மாதிரி எனக்கு ஒண்ணும் கோணல் புத்தி இல்ல. நல்ல புத்தியைத்தான் ஆண்டவன் கொடுத்திருக்கான்'' என்றாள் ஆவேசமாய்.

''அப்ப அதை வைச்சு யோசிங்க. ஏன் பின் வாங்குறீங்க?'' என்றான் அவன் அமைதியாய்.

''நான் பின் வாங்கல. ஆனா...''

''சொல்லுங்க...''

''வெளிப்படையாகவே ஒண்ணு கேக்குறேன்...''

''கேளுங்க...''

''பிடிக்கலைன்னு சொல்லியும் ஏன் வற்புறுத்துறீங்க? என்னை விட்டா மாடலிங்குக்கு வேற பொண்ணே கிடைக்காதா?''

''கிடைக்காததுதான்...'' என்றான் அவன் விட்டேற்றியாய்.

''என்ன... என்ன சொல்றீங்க?''

''உண்மையைத்தான் சொல்றேன். பெங்களூர் மாடலிங் பெஸ்டிவல் புரோகிராமில் உங்களையும் சேர்த்து பத்துபேரா எங்க கம்பெனி சார்பா அனுப்ப தேர்ந்தெடுத்தோம். பத்து பேரோட பெரு. பயோடேட்டா எல்லாம் பெஸ்டிவல் கமிட்டிக்கு அனுப்பி அவங்களும் ஒப்புதல் கொடுத்திட்டாங்க. இப்போ திடீர்ன்னு உங்க பேருக்கு பதிலா வேற ஒருத்தருன்னு சொன்னா புரோகிராமில் கலந்துக்கவே வேண்டாம்ன்னு சொல்லிருவாங்க...''

அவன் பொறிதாய் சொல்லி முடித்தும் அவள் கொஞ்சமும் அசராதவளாகவே பார்த்தாள்.

''அது உங்க ப்ராப்ளம்! பிரச்சினை...! நான் ஒண்ணும் செய்ய முடியாது'' கைகளை விரித்து அவள் சொன்னதும். அவன் முகத்தில் சிறுக்கம் கூடியது.

''இப்போ வரமாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறது நீங்கதான் அதை மறந்துராதீங்க...''

''அது என்னோட முடிவு...''

''அப்ப நானும் என்னோட முடிவை அறிவிக்கலாமா.''

அவன் குரல் மாறிச் சொன்னதும் அவள் பார்வை நேராய் அவன் கண்களுக்குச் சென்றது. ஆளையே துளைப்பது போன்ற தீர்க்கமான பார்வை! கொஞ்சமும் சலனமில்லாமல் உசுப்பேற்று வது அவனது பாணி. அன்றும் இப்படித்தானே.. எவ்வித சலனமில்லாமல் அவளை பெரிய ஆபத்தில் சிக்க வைத்தான்? இம்முறை அவனை விடக்கூடாது என்று அவள் நினைக்கும் போதே அவன் குரல் உயர்ந்தது.

''இப்போ என்னோட முடிவைச் சொல்றேன். உன்னோட... ஐ...மீன் உன்னோட...'' என்றபடி நிறுத்தி ஒருமையில் விளிப்பதை அழுத்தந்திருத்தமாய் உச்சரித்தவன், ''உன்னோட சர்டிபிக்கேட்ஸ் எல்லாம் என்கிட்டத்தான் இருக்கு. அது நீ புரோகிராமுக்கு ஒத்துக்கலைன்னா உனக்கு திரும்ப கிடைக்காது. மேலும் நீ புரோகிராமுக்கு ஒத்துக்கிட்டு கடைசியில சண்டித்தனம் பண்ற விஷயத்தை மற்ற எல்லா பேஷன் கம்பெனிகளுக்கும் சொல்லி... இந்த பேஷன் டெக்னாலஜியில் உனக்கு எதிர்காலமே இல்லாதடி பண்ணிருவேன். இது என்னுடைய வேண்டுகோள் இல்ல. மிரட்டல்! எது வேணும்? என்ன முடிவெடுக்கணும்ன்னு நீயே தீர்மானி!''

உறுதியான உயர்ந்த குரலில் சொல்லிவிட்டு அவள் பதிலுக்கு காத்திராமல் வெளியேறிவிட்டான் அவன்.

நந்தனா அதிர்ந்து போய் நின்றாள்.

என்ன சொன்னான்? அவளது சர்டிபிக்கேட்டை தரமாட்டா னாம்... அவளுக்கு பேஷன் டெக்னாலஜியில் எதிர்காலமே இல்லாதபடி செய்து விடுவானாம்?

சொல்வது மட்டுமல்ல. செய்வதும், சிரித்துக்கொண்டே எதிராளியின் கழுத்தை வளைப்பதும் அவன் குணம் தானே?

அன்றும் இப்படித்தானே நம்ப வைத்து அவளது கழுத்தை வகையாய் அறுத்தான்?

இப்போ என்ன செய்ய?

சரவணனின் பிடிவாதம் அவளுக்கு நன்றாகவே தெரியும். சரியான அழுத்தக்காரனாய் சொன்னபடியே செய்து விடுவான். அப்படி ஒருவேளை செய்துவிட்டால்...? அவளது எதிர்காலம்?

... இந்திய அளவில் பெரிய மாடலிங் பெண்ணாய், சிறந்த பேஷன் டிசைனராய் வரும் அவளது கனவு? எல்லாம்... எல்லாம் அடிப்பட்டு போய் விடுமே...!

அதற்காக சரவணனின் மிரட்டலுக்கு பயந்து ஒத்துக் கொள்வதா...?

வேறுவழியில்லை...! ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்! புலி பதுங்குவது போல் பதுங்கி சமயம் பார்த்து அவனை பழிக்குப் பழியாய் வீழ்த்த வேண்டும். அதுதான் வழி!

- மனதிற்குள் உறுதியெடுத்தாள் நந்தனா.

3

மறுநாள் எந்த எதிர்ப்பும் காட்டா மல் வெள்ளைக் கொடியை பிடிக்காத குறையாய் நந்தனா அவன் முன் நின்ற போது சரவணன் முதல் முறையாய் இறுக்கம் தளர்ந்து சிரித்தான்.

''ரொம்பச் சரியான முடிவு எடுத்திருக்கிறாய். இனி உன் எதிர்காலம் குறித்து நீ பயம் கொள்ளத் தேவையில்லை!'' என்றான்.

அவளுக்கு சுருக்கென கோபம் வந்தது.

''எதிர்காலத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்க...''

''இப்போது என்றால்...?''

''பெங்களூர் புரோகிராம் பற்றி...''

''நாளையே ஊர் கிளம்ப வேண்டும். நாளை உனது உடைமைகளுடன் நேராக ஸ்டேஷன் வந்து விடு...''

''டிக்கெட்?''

''டெய்ஸியிடம் வாங்கிக் கொள்....''

அவள் திரும்பி நடக்கப் போனாள்.

''ஒரு நிமிடம்..'' அழைத்தான் அவன்.

''என்ன?'' என்பது போல் நந்தனா பார்த்தாள்.

''நேற்று நான் கொஞ்சம் கடுமையாய்.. மிரட்டலாய் பேசி விட்டேன். அதை மனதில் வைத்துக் கொள்ளாதே... மன்னித்து விடு..''

சலனமில்லாமல் அவன் பேச அவளும் பேசாமல் சிலையாய் நின்றாள். காயத்தை கீறிவிட்டு விட்டு மருந்திடுவது கூட அவனது இயல்புதான். இதில் மயங்கிவிடக் கூடாது.

''பெங்களூரில் பதினைந்து நாள் ட்ரெய்னிங் கொடுக்கப் போவது நான்தான் ஆனால்.....''

''....''

''என்னால் எந்தவித தொந்தரவோ அசௌகரியமோ உனக்கு ஏற்படாது...''

அவள் அதற்கும் பதில் சொல்லாது நகரப் போனாள்.

''நந்தா....''

முன்பு செல்லமாய் அவளைக் கூப்பிடும் பெயரை அவன் உச்சரித்ததும் அவளுக்கு சுருக்கென்றது.

''இன்னும் என் மீது உள்ள கோபம் உனக்குத் தீரல.. அப்படித்தானே?''

தணிவான குரலில் சொல்லியபடி அவன் பக்கத்தில் வந்தபோது அவளுக்குள் ஏதோ ஊர்ந்தது.

இப்போது வெகு நெருக்கமாய் அவன் நின்று அவளது முகத்தையே உற்றுப் பார்ப்பது தெரிந்தது.

தலையை அப்படியே குனிந்து கொண்டாள்.

''நந்தா... நீ.... பழசையெல்லாம் நினைச்சு ரொம்ப ஃபீல் பண்ற. அப்படி இருக்கக்கூடாது. எதையும் ஸ்போர்ட்டிவ்வா எடுத்துக் கணும். அதுதான் நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது.''

சொல்லியபடி இம்முறை அவன் விரல்கள் மெல்ல அவளது முதுகை தொட்டு மிருதுவாய் வருடியது.

ஸ்பரிசம் பட்டு சிலிர்த்தவள் எழுந்த குபீர் உணர்வுகளை அடக்க சிரமப்பட்டாள். கண்களை இறுக மூடி உதடுகளையும் இறுக்கிக் கொண்டாள். எதுவும் பேசக்கூடாது. அவன் முகத்தையும் பார்க்கக் கூடாது. பார்த்தால் உடைந்து விடுவாள்.

ஆனால் அவன் விடுவதாயில்லை.

முதுகை வருடிய விரல்களால் மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி அவள் கண்களை விழிக்கச் செய்தான்.

நேருக்கு நேராய் அவன் முகம்!

அசாத்திய ஆண்மையோடு தெரிந்தாலும்... அந்தக் கண்கள்...? அந்த கெஞ்சலான கண்கள்...? கனிவும் அன்பும் ததும்ப அவளை அரவணைக்கும் அந்தப் பார்வையில்தானே அவள் அடிபட்டு மயங்கினாள்...?

இப்போது இவ்வளவு நாள் கழித்து நேருக்கு நேர் பார்க்கும் போதும் அதே வீச்சு... அதே... கூர்மை... அந்த அழகு மாறவே யில்லை!

ஒரு கணம் அப்படியே அவனது நெஞ்சில் விழுந்து கதறலாம் போல் அவளுக்கு இருந்தது.

எத்தனை நாட்கள்... எத்தனை இரவுகள்... இவனது பிரிவிற்காக வருந்தியிருக்கிறாள்? பிழியப் பிழிய அழுதிருக்கிறாள்?

அவனை அப்படி பார்த்துக் கொண்டிருக்கும் போதே கண்களில் நீர் கோர்த்து வரும் போலிருந்தது.

பழைய நினைவுகளில் உணர்வுகளில் தவித்தவளுக்கு அடுத்து அவன் பேசிய வார்த்தை செவிட்டில் அறைவது போலிருந்தது.

''பழையது எல்லாவற்றையும் மறந்து விடு நந்தா. நான் இப்போது மாடலிங் கோ ஆடினேட்டர். நீ மாடலிங் பெண். அவ்வளவுதான் நம் உறவு. அதை நான் எந்த வகையிலும் மீற மாட்டேன். இந்த மாடல் புரோகிராம் முடிந்ததும் நீ உன் வழியில் போகலாம். நான் உன் வழியில், உன் வாழ்க்கையில் எந்த விதத்திலும் குறுக்கிட மாட்டேன்...''

அவன் பழைய விஷயங்களுக்காக கெஞ்சி வருந்துவான். மன்னிப்பு கேட்பான் என்றெல்லாம் எதிர்பார்த்தவளுக்கு அவன் இரும்புத் தடியால் தலையில் அடிப்பது போலிருந்தது.

ஆக... முன்பு நடந்தவைகளுக்காக அவன் வருந்தவில்லை. எவ்வித குற்ற உணர்வும் கொள்ளவில்லை..!

இப்போது இந்த அதீத பரிவு... புரோகிராமில் அவள் நல்லபடியாக நடந்து கொள்ளவேண்டும் என்ற சுயநலம் ஒன்றுதான். அவன் வேலையும் பணலாபமும் மட்டுமே அவன் குறி. அதற்காக பரப்பு வார்த்தைகளை வீசியிருக்கிறான்.

மற்றபடி பழைய நிகழ்வுகளைப் பற்றி அவனுக்கு எவ்வித உறுத்தலோ நினைப்போ இல்லை.

எதற்காக நிற்க வேண்டும்? இனி இவனிடம் என்ன பேச்சு?

விறுவிறுவென அகலப் போனாள் அவள். கைத்தாங்கலாய் தடுத்தான்.

''நந்தா... நீ என்ன நினைக்கிறாய்? ஒன்றும் சொல்லாமல்...''

அவன் உச்சரித்த 'நந்தா' அழைப்பு பெரும் எரிச்சலைக் கிளப்பியது. எல்லாவற்றையும் மறந்து விட்டவனுக்கு இதற்கு மட்டும் என்ன உரிமை?

பார்வையை திரும்பி முறைப்பாய் அவன் கண்களைச் சந்தித்தாள்.

''நந்தனா... என்றே கூப்பிடுங்கள்...'' என்றாள் கண்டிப்புடன்.

''சரி... நந்து... ஸாரி..., நந்தனா நீ ஒன்றும் சொல்லாமல்....''

இம்முறை சங்கோஜப்படாமல் தோள்களை குலுக்கியவள், ''மிஸ்டர் சரவணன். நீங்கள் எதற்கும் பயப்படத் தேவையில்லை. மாடலிங் புரோகிராமில் நல்லமுறையில் நடந்து கொள்வேன். என்னால் இனி உங்களுக்கோ, உங்களது கம்பெனிக்கோ எவ்வித பிரச்சினையும் வராது. அதுபோதும்தானே?''

குத்தலாகவே அவள் கேட்டாலும் அதையெல்லாம் அவன் உணர்ந்து கொண்ட மாதிரி தெரியவில்லை.

பலமாய் தலையாட்டினான். "அது போதும்...!" என்றபடி அவளுக்கு வழிவிட்டான்.

நந்தனா எரிச்சலான பார்வையொன்றை வீசியவாறு விறுவிறுவென அங்கிருந்து அகன்று போனான்.

4

மறுநாள் நேரிடையாக, சரியான நேரத்திற்கு ரயில்வே ஸ்டேஷன் வந்து விட்டாள் நந்தனா. அவளுக்கு முன்னரே சில பெண்கள் வந்திருந்தனர். சரவணன் இன்னும் வந்த பாடில்லை. வந்திருந்த மற்ற மாடலிங் பெண்களிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு நந்தனா பேசிக் கொண்டிருந்தாள்.

பிங்கி, ரீனா, ஹேமா, ட்விங்கிள் என கவர்ச்சியான பெயர்களுடன் அந்தப் பெண்களும் மாடலிங்கிற்காகவே பிறந்தவர்கள் போல் கவர்ச்சியாகவே இருந்தனர். வழவழப்பான கால்கள் தெரியும்படி சின்ன ஸ்கார்ட். முன்புற அழகுகளை ஆண்கள் பார்த்தே தீரவேண்டும் என்பது போலான இறுக்கமான டீ-ஷர்ட். லிப்ஸ்டிக் சாயம். அதீத மேக்கப் சமாச்சாரங்கள் என தூக்கலான செயற்கைத்தனத்துடன் அழகை பறைசாற்றிக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு மத்தியில் நளினமாய் சேலை உடுத்தி இயற்கையாய் பளீச்சிடும் நந்தனாவின் தங்க நிற அழகு அமைதியாய் அடக்கமாய் தெரிந்தது. தூரத்தில் வந்து கொண்டிருந்த சரவணனின் பார்வையில் முதலில் பட்டதும் அதுதான். நந்தனா மாறவில்லை அன்று பார்த்த அதே அழகு... சற்றும் குறையாமல் மெருகேறி

அல்லவா இருக்கிறது என வியப்புடன் அவர்களை நெருங்கினான்.

அவன் தன்னையே பார்த்துக் கொண்டு வருவதை உணர்ந்த நந்தனா பார்க்கப் பிடிக்காதவளாய் முகத்தை திருப்பிக் கொண்டாள். சரவணன் அதை உணர்ந்தாலும் பொருட்படுத்தாதவனாய் பிங்கி பக்கம் போனான்.

"பிங்கி..."

"சொல்லுங்க சரவணன்..."

"எல்லோரும் வந்தாச்சா பிங்கி?"

"வந்துட்டாங்க. மீனா.. மட்டும் வரல. அவளும் இப்போது ஆன் தி வேயாம். வந்திருவா..."

"உங்க உடைமைகள்.. திங்க்...?"

"எல்லாத்தையும் ஏத்தியாச்சு. டிக்கெட்டையும் டி.டி.ஆர்.கிட்ட கண்ஃபர்ம் பண்ணிட்டோம்..."

"வெரிகுட்... பிங்கி..."

சிரிப்புடன் சரவணன் அகலப் போனான்.

"சரவணன்..." பிங்கி அழைத்தாள்.

சரவணன் திரும்பவும், அவன் பக்கத்தில் சென்று அவன் தோள்களில் கை போட்டு, காதில் ஏதோ ரகசியம் பேசுவது போல் பிங்கி குனிந்தாள்.

அவள் சரவணனை தோளோடு தோளாய் அணைத்துப் பேசும் காட்சியைக் கண்ட நந்தனா மேலும் எரிச்சலானாள். அவள் எரிச்சலை அதிகப்படுத்தும்படி பிங்கியின் கைகள் இறங்கி சரவணனின் இடுப்பையும் வளைத்தது.

நந்தனா வெறுப்பாய் அசூயையாக முகத்தை திருப்புவதற்குள் சரவணனே சிரிப்புடன் தன்னை பிங்கியிடமிருந்து விடுவித்துக் கொண்டான். பிங்கி பெரிய ஹாஸ்யத்தை கண்டது போல் சிரிக்க ஆரம்பித்தாள்.

பக்கத்திலிருந்த ரீனா, ''இந்த பிங்கிக்கு விவஸ்தையே கிடையாது. மட்டரக அசிங்கமான ஜோக்குகளை சொல்லுவதே அவள் வேலையாய் போயிற்று...'' என அலுக்கவும் நந்தனாவுக்கு பிங்கி கிசகிசத்த விபரம் புரிந்தது.

சரவணன் அவளிட்மிருந்து சட்டென விடுபட்டுச் சென்றது நந்தனாவுக்கு நிம்மதியை ஏற்படுத்தியது. ஆனால் சரவணன் கடந்து சென்றதும் ரீட்டாவின் பக்கம் வந்த பிங்கி தன் பொதுமும் முன்னழகுகளை குலுக்கியபடி, ''ரீட்டா, நம்ம சரவணன் சாரை இந்த பெங்களூர் புரோகிராம் முடியறதுக்குள்ள வசப்படுத்திரணும்ன்னு வைச்சிருக்கேன்...'' என்றபடி களித்தாள்.

''வசப்படுத்திரணும்ன்னா?'' புரியாதவளாய் இழுத்தாள் ரீட்டா.

''உனக்குப் புரியல?''

''புரியல...''

''எப்படியும் ஒருநாள் அவர் கூட...'' சொல்லியபடி கண்ணடித்து முகத்தை வெட்டி அசிங்கமாய் சிரித்தாள்.

நந்தனாவுக்கு தலையிலடிக்கலாம் போல் இருந்தது. நாகரீகம் என்ற மமதையில் இப்படியும் பெண்கள் அலைய ஆரம்பித்து விட்டார்களே! என அதிசயித்தாள்.

ஆனால் பிங்கியின் பதிலுக்கு ரீட்டா பெரும் சிரிப்பு சிரித்தாள்.

''என்ன ரீட்டா சிரிக்கிற?''

''உன்னால முடியாது பிங்கி..''

''முடியாதா... ஏன்?''

''ஏன்னா... சரவணன் அப்படிப்பட்ட ஆள் இல்லை....''

''என்ன சொல்ற?''

''சரவணன் மலர்களை முகர்கிற ரகம் இல்ல... ஓடிப் போற ரகம்...''

''ஓடிப் போற ரகம்ன்னா?''

''எந்தப் பொண்ணோடும் நெருக்கமா பழக மாட்டார். ஒரு லிமிட்டுக்கு மேல் விலகிருவார்...''

''நீ சொல்றது நம்பமுடியலையே...!'' என பிங்கி இழுத்தவள் ஏதோ யோசித்தவளாய் ரீட்டாவை கூர்மையாய் பார்த்தாள்.

''ஆமா... இது எப்படி உனக்குத் தெரியும்?''

ரீட்டா பதில் சொல்லாமல் அசட்டுச் சிரிப்பு சிரித்தாள்.

''சிரிக்காத. பதில் சொல்லு...''

''எல்லாம் சொந்த அனுபவம்தான்! அதை வைச்சுத்தான் சொல்றேன்...''

''அடிசக்கை! அப்படி வா வழிக்கு! எனக்கு முன்னாடியே நீ தூண்டில் போட்டு பார்த்தியா?''

ரீட்டா தலையசைத்தாள்.

''இல்ல...''

''பின்ன...?''

''வேறு மாதிரி நடந்துச்சு...''

''வேறு மாதிரின்னா...''

''நானே ஒருநாள் இரவு அவரு ரூமுக்கு வலியப் போனேன்...''

''அப்புறம்?''

''அப்பதான் இந்த விஷயம் தெரிஞ்சது. அவரு இந்த விஷயத்தில் சபலம் இல்லாத சாமியாருன்னு...''

''அவ்வளவுதானா?''

''இன்னொண்ணும் சொன்னாரு...''

''அவரு யாரையோ காதலிச்சாராம். ரெண்டுபேரும் லவ் பண்ணாங்களாம். திடீர்ன்னு காதல் தோல்வி ஏற்பட்டு பிரிஞ்சிட்டாங்களாம். ஆனாலும் இன்னமும் அந்தப் பொண்ணோட நினைவாவே அவரு இருக்கிறாராம்...''

ரீட்டா சொல்லச் சொல்ல பிங்கியை விட பக்கத்தில் கேட்டுக் கொண்டிருந்த நந்தனா பயங்கரமாய் திடுக்கிட்டாள்.

ஏனெனில்... சரவணன் காதலித்தது அவளைத்தானே!

5

ரீட்டா சொன்னது நந்தனாவை அதிர்ச்சியடைத்தான் செய்தது. சரவணன் இன்னமும் அவளை மறக்கவில்லையா? அவள் நினைவாகவே அவன் இருக்கிறானா? நம்பவா முடிகிறது?

யோசித்த நந்தனா பரபரவென கண்களால் சரவணனை தேடினாள்.

எதிர் பிளாட்பார்மில் யாருடனோ பேசியபடி நின்று கொண்டிருப்பது தெரிந்தது. அவன் அப்படி பேசிக் கொண்டிருந்தாலும் அவனது பார்வை அங்கிருந்தே அவள் மீது படர்வதை உணர்ந்தாள். அடிக்கடி அவளையே பார்த்துக் கொண்டிருப்பது போலும் தோன்றியது.

ரீட்டா சொல்வதெல்லாம் உண்மைதானா? சரவணன் முழுமாகவே இன்னமும் அவளை நினைத்துக் கொண்டிருக்கிறானா? அவளுக்காக உருகுகிறானா?

பின் ஏன் நேற்று அந்த வரத்து வந்தான்? ஒப்பந்தப்படி பிங்களூர் வராவிட்டால்... எதிர்காலமே இல்லாதபடி பண்ணி விடுவதாய் மிரட்ட வேறு செய்தானே? அது மட்டுமா... அவளை நிற்க வைத்து அறிவுரை வேறு செய்தானே? அவன் மாடலிங் கோ ஆடினேட்டர். அவள் மாடலிங் பெண் அவ்வளவுதான் நம் உறவு என்றெல்லாம் விளக்கம் கொடுத்தானே...? அவனாவது... அவளை நினைப்பதாவது...?

வெறுப்புடனே நந்தனா முகத்தை திருப்பினாலும், அவளுள் பழைய நினைவுகள் நீர்க்குமிழியாய் உருவெடுத்தன. இந்த... சரவணனை தன் வாழ்க்கையில் சந்திக்காமலிருந்தால்... எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்? என அவள் நினைக்கும் போதே, அவனை முதல் முதலாய் சந்தித்த நிகழ்ச்சி மெல்ல அவள் நினைவுக்கு வர ஆரம்பித்தது. சரியாக மூன்று வருடங்களுக்கு முன்பு...

அது ஒரு நாடக நிகழ்ச்சி.

ஷேக்ஸ்பியரின் புகழ்பெற்ற நாடக காவியமான ''ரோமியோ ஜூலியட்'' நாடகத்தில் தான் முதன் முறையாய் சரவணனைப் பார்த்தாள்.

அந்த கல்லூரி நாட்களில் நடந்தது இன்னமும் பசுமையாய் இனிமையாய் அவள் நினைவில் இருக்கிறது. அது இரண்டாம் இளங்கலை ஆங்கில இலக்கியம் சார்பாக நடந்த நாடக விழா!

அந்த நாடக விழாவில் மாணவிகள் சார்பில் ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜுலியட் நாடகத்தை நடத்துவதாய் தீர்மானிக்கப் பட்டது.

நாடகப் பொறுப்பேற்றிருந்த டெய்ஸி மிஸ் வகுப்புக்கு வந்து நாடகத்திற்காக ஆட்களை தேர்வு செய்ய ஆரம்பித்தாள். அப்படி அவள் ஜுலியட் பாத்திரத்தில் நடிப்பதற்காக தேர்வு செய்தது நந்தனாவைத்தான்!

''நந்தனா, நீ தான் இந்த ஜுலியட் பாத்திரத்திற்கு பொருத்த மானவள். உன் மாசுமறுவற்ற இயற்கை அழகு. பளீரிடும் பால் வெண்மை முகம். நளினமான உடலமைப்பு... சந்தேகமே இல்லை... நீ தான் அந்த ஜுலியட்...!'' என அத்தனை மாணவிகள் முன்னிலையிலும் தன்னை உயர்வாய் விளித்துச் சொன்னபோது... முகம் சிவந்துதான் போனாள் நந்தனா...

ஆனாலும் உள்ளூர அவளுக்கு தவிப்பு. இந்த நாடகம். மேடைப்பேச்சு போன்ற ஸ்டேஜ் அனுபவங்களை அவள் ஒருபோதும் விரும்பியதில்லை. தனது தயக்கத்தை மெல்ல மிஸ்ஸிடம் வெளிப்படுத்த டெய்ஸி ஒரு பிடிபிடித்து விட்டாள்.

''என்ன நந்தனா நீ பேசுவது? இது காலேஜின் இன்னர் காம்படிஷன் அல்ல. மாநில அளவில் எல்லா கல்லூரிகளும் போட்டி போட்டு பங்கேற்கும் நாடக விழா. இவ்விழாவில் நாம் கலந்து அந்த கல்சுரல் அகாடமி விருதை எப்படியும் வாங்கிவிட வேண்டும். அப்படி நாம் வாங்கிக் கொடுத்தால்தான் நமக்கும் பெருமை. நம் கல்லூரிக்கும் பெருமை புரிகிறதா?'' டெய்ஸி மிஸ்

கொடுத்த லெக்சரில் நந்தனா ஊமையாகி வேறு வழியில்லாது பலியாடு போல் தலையாட்டி சம்மதித்தாள்.

அப்படி நந்தனா ஒப்புக்கொண்டதும், மறுநாளே நாடக விழாவுக்காக தினம் மாலை நடிப்பு ஒத்திகையும் , ரிகர்சலும் நடக்க ஆரம்பித்து விட்டது.

ஷேக்ஸ்பியரின் பிரசித்தி பெற்ற ரோமியோ ஜுலியட் நாடகத்தை விலாவாரியாய் அவளுக்கு விளக்கினாள் டெய்ஸி மிஸ்.

அதன்படி. ''வெரோனா நகரத்தில் எதிர் எதிர் துருவங்களாய் இரண்டு பகையான குடும்பங்களில் உதித்தவர்கள் தான் இந்த ரோமியோவும் ஜுலியட்டும்! இருவர் குடும்பத்திற்கும் தீராத பகை. ஆனால் தற்செயலாக நகரின் பெரிய நிகழ்ச்சி ஒன்றில் ரோமியோவும், ஜுலியட்டும் நேருக்கு நேராய் சந்திக்கிறார்கள். இருவரும் அக்கணமே ஒருவர் அழகில் ஒருவர் மயங்கி மனதை பறிகொடுக்கின்றனர். கண்டதும் காதல் ஏற்படுகிறது. எத்தனையோ எதிர்ப்புகளை மீறி அவர்கள் காதல் வளர்கிறது. நண்பர்கள் துணையோடு ரோமியோ ஜுலியட் திருமணமும் நடைபெறுகிறது. ஆனாலும் எதிர்பாராத விதமாய் எதிரிகளின் சூழ்ச்சியால் இருவரும் பிரிந்து விடுகின்றனர்.

அந்த நேரத்தில் கொலைப்பழி ஒன்றிலும் ரோமியோ சிக்கி விடுகிறான். ஜுலியட்டிற்கோ இன்னொரு கல்யாணம் செய்யும் முயற்சி நடைபெறுகிறது. ரோமியோவின் நண்பர் ஒருவர் மூலம் கிடைத்த அதிசய மருந்தொன்றை ஜுலியட் குடிக்கிறாள்.

அந்த மருந்தை குடித்ததும் கீழே விழுந்து பிணம் போல் ஆகிவிடுகிறாள் ஜுலியட். அவள் உறவினர்கள் ஜுலியட் நிஜமாகவே செத்துவிட்டதாய் நினைத்து கல்லறையில் அவள் உடலை வைத்து விடுகின்றனர். ரோமியோ வந்ததும் தனது

ஜுலியட் செத்து விட்டதாய் நம்பி மனமுடைகிறான். தற்கொலை செய்து கொள்கிறான். மருந்தின் மயக்கம் தீர்ந்து எழுந்த ஜுலியட் ரோமியோ செத்துக்கிடப்பதைப் பார்த்து தானும் உயிரை மாய்த்துக் கொள்வதோடு...

....கதை முடிகிறது.

இதுதான் ரோமியோ ஜுலியட்டின் அமரகாவியம் என டெய்ஸி மிஸ் சொல்லி முடித்தாள்.

எப்படி ஜுலியட் வேடத்திற்கு நந்தனா தேர்வு பெற்றாளோ, அதேபோல் ரோமியோ வேடத்திற்கு தேர்வு பெற்றவன்தான் இந்த சரவணன்!

நெடுநெடு உயரமும், திடமான உடற்கட்டுமாய் சிவப்பாய் வசீகரமாய் இருந்தவனை நந்தனா அப்போதுதான் பார்த்தாள். ''நந்தனா, இதுதான் சரவணன். தர்ட் இயர் எகனாமிக்ஸ். உன்னுடன் ரோமியோவாய் நடிக்கப் போகிறவர்...'' என டெய்ஸி மிஸ் சரவணனை அறிமுகப்படுத்தியபோது வழக்கமான புன்முறுவலுடன் நந்தனா தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் சரவணனோ எவ்வித அதிர்வும் இல்லாமல் லேசான ஒரு சிரிப்புடன் அகன்று விட்டான்.

நந்தனாவுக்கு அது பெரும் ஆச்சரியமாயிருந்தது.

அவளைப் பொறுத்தவரையில் அந்தக் கல்லூரியில் எந்த ஆண்களிடம் பேசினாலும் காணாததைக் கண்டது போல் தான் அத்தனை பற்களையும் காட்டி அசடு வழியப் பேசுவார்கள். கண்களால் உடம்பு முழுவதையும் துளைக்கிற பார்வை பார்ப்பார்கள்.

ஆனால்... சரவணன் அவர்களிடமிருந்து ரொம்ப வித்தியாசமானவனாக தெரிந்தான்.

அதற்குப்பின் அவளைப் பார்க்கும் போதும் சரி... நாடக ஒத்திகையின் போதும் சரி, அனாவசிய பேச்சுக்களுக்கு இடம் கொடுக்காமல் தன் வேலையை மட்டும் கவனித்தான்.

நந்தனாதான் தன்னை அவன் பார்க்கிறானா என்ற சந்தேகத்தில் அடிக்கடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரோமியோவும் ஜுலியட்டும் சந்தித்துக் கொள்ளும் முதல் காட்சியை அன்று ஒத்திகை பார்த்தார்கள்.

டெய்ஸி மிஸ் இருவருக்கும் காட்சியை விளக்கினாள்.

''வெரோனா நகரில் பெரிய விழா ஒன்று நடக்கிறது. அந்த விழாவில்தான் முதன் முதலாய் ரோமியோவும் ஜுலியட்டும் அதிசயமாய், அற்புதமாய் சந்தித்துக் கொள்கின்றனர். அந்த விழாவில் ரோமியோ திருட்டுத்தனமாய் முகமூடி அணிந்து நுழைகிறான். அவனது அலைபாயும் கண்களில்... மின்னும் வைரமாய் பளீச்சென தெரிகிறாள் ஜுலியட். இருவரது கருவிழிகளும் ஒருவரையொருவர் ஆழமாய் சந்தித்துக் கொள்கின்றன.

அந்தப் பார்வையில்... அந்த நொடியில் இருவர் மனதிலும் சலனம். இனம் புரியா உணர்வு அந்த இனம்புரியா உணர்விலே அவர்களுள் காதலும் ஏற்படுகிறது.

டெய்ஸி மிஸ் விளக்கம் கொடுத்து விட்டு நடிக்கச் சொன்ன போது நந்தனா திணறத்தான் செய்தாள். அவளுக்கு இதுபோன்ற அனுபவம் புதிது. அதிலும் சரவணன் எந்த அலட்டலும் சலனமும் இல்லாமல் வித்தியாசமான ஆண் மகனாய் அவளுக்குத் தெரிந்தான். அவனது அமைதியான சுபாவத்தைக் கண்டு அவளே வியந்து அவனை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள். இதில் நாடகத்திற்காக அவன் மீது காதல் பார்வை பார்க்க வேண்டுமென்றால்...?

அவள் பதட்டமாகுவதை கவனித்து விட்டான் சரவணன். அவனே ஸ்நேகமான சிரிப்புடன் பக்கத்தில் வந்து, ''இதோ பாருங்கள், இது வெறும் நாடக ஒத்திகைதான். நீங்கள் ஜுலியட் பாத்திரத்தை உணர்ந்து முக பாவனைகள் செய்தால் போதும். இது ஒரு சாதாரண நடிப்புதான். தைரியமாய் செய்யுங்கள். உங்களால் முடியும்...!'' என நம்பிக்கையூட்டி பேச... நந்தனா, வியப்பு நீங்காமல் தலையசைத்தாள். சரவணனின் கனிவான பேச்சும் தைரியமான சொற்களும் அவளுக்கு நிஜமாகவே தன்னம்பிக்கையைக் கூட்டி அவன் மீதிருந்த மதிப்பை பன்மடங்கு உயர்த்தியது.

அதனாலே ஒத்திகை தொடங்கியதும் ஜுலியட்டாய் ரோமியோ மீது காதல் பார்வையை வீச வேண்டியவள் நந்தனாவாய் மாறி சரவணன் மீது காதல் பார்வையை வீசினாள். கம்பீரமும், அமைதியும் கலந்த அவனது ஆண்மையில் கிறங்கிப் போய் அவனையே மயக்கத்துடன் வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

பார்வை....

இருவரும் ஒருவரையொருவர் பார்க்கும் பார்வை.

அதற்குத்தான் என்ன ஒரு சக்தி!

அந்தப் பார்வையில்.. அந்த நொடியில் நந்தனா மனதில் சலனம். இனம்புரியா உணர்வு. ஒருகணம் அப்படியே தடுமாறத் தான் செய்தாள் நந்தனா. அவளுக்கு அந்த அனுபவம் என்னவோ போல்தான் இருந்தது காதலைப் பற்றி அவள் கேட்ட விளக்கங்களும் நாடக பாதிப்பினால் ஏற்பட்ட காதல் சூழ்நிலையும் அவளது மனநிலையை பெரிதும் மாற்றியிருந்தது.

நிஜமாகவே தன்னையறியாமல் சரவணன் மீது காதல் கொள்வது போல் உணர்ந்தாள்.

அதனாலே மறுநாள் ஒத்திகையின் போது சரவணன் அவனது மலர்க்கரங்களை பற்றி நாடகத்தின் காதல் வசனத்தை பேசியபோது எந்த எதிர்ப்பும் காட்டாமல் அவனது கரங்களோடு கோர்த்துக் கொண்டாள் இடை இடையே அவனது தோள் ஸ்பரிசம் படும்போதும் அவளது உடம்பும் அதற்கு ஒத்துப் போய் அவனது செயலுக்கு எதிர்ப்பு காட்டாத நிலையை நந்தனா அடைந்து விட்டாள். அப்போதுதான் நந்தனா உணர்ந்தாள். தெரிந்தோ... தெரியாமலோ தான் சரவணனை காதலிக்க ஆரம்பித்து விட்டோம் என்று

அவளுக்கு அதைவிட அதிர்ச்சியான பெரிய ஆச்சரியம் மறுநாளே காத்திருந்தது. சரவணன் மறுநாள் ஒத்திகை முடிந்ததும் அவளைத் தனியே சந்தித்தான். ''நந்தனா உங்களிடம் ஒரு விஷயம்...'' என ஆரம்பித்தவன் சொல்லத் தயங்கியவாறு அப்படியே நின்றான்.

''ம்ம் .. சொல்லுங்கள்...'' என்றாள் நந்தனா.

''நான் உங்களை விரும்புகிறேன் நந்தனா...'' என்றான் சரவணன் மென்மையான குரலில்

6

சரவணன் சொன்னபோது நந்தனாவால் ஒருகணம் தனது காதுகளையே நம்பமுடியவில்லை அதே அதிர்வோடு, ''என்ன சொல்கிறீர்கள். ? என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் திரும்பவும்.

ஆனால் சரவணன் அழுத்தந்திருத்தமாய் மறுபடியும் உச்சரித்த போதுதான் அவளுக்கு எல்லாம் புரிந்தது. தன்னைப் போலவே

சரவணனும் மயங்கி காதல் கடலில் விழுந்து விட்டான் என்று அவள் ஆச்சரியத்தில் இரு விழிகளையும் விழித்து விரித்துப் பார்க்க சரவணன் புன்முறுவலுடன் விடுவிடுவென சென்று விட்டான்.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் சரவணனும் நந்தனாவும் நடித்த ரோமியோ ஜுலியட் நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்று, போட்டியில் கல்சுரல் அகாடமி விருதை தட்டிச் சென்றது.

கல்லூரி முழுக்க சரவணனுக்கும் நந்தனாவுக்கும் பாராட்டு மழை. ஆள் ஆளுக்கு தேடிப்பிடித்து அவர்களை பாராட்டியதோடு மட்டுமல்லாமல், நிஜமாகவே நீங்கள் பொருத்தமான ரோமியோ ஜுலியட் ஜோடிதான் என சர்ட்டிபிக்கேட்டும் கொடுத்தார்கள்.

நந்தனாவின் தோழிகள் ஒருபடி மேலே போய் நந்தனாவும், சரவணனும் ஒருவரையொருவர் காதலிப்பதாய் செய்தியையும் பரப்பினார்கள். ஆக கல்லூரி முழுவதும் சரவணனும் நந்தனாவும் காதலன் காதலி போன்ற பிரமை எளிதில் உருவாயிற்று.

தினம் வகுப்பு இடைவேளையின் போது சரவணன் லைபரரி செல்வது வழக்கம். அதை தெரிந்து கொண்ட நந்தனா வேண்டு மென்றே அந்த நேரத்தில் லைபரரிக்கு செல்ல ஆரம்பித்தாள். தன்னைத் தேடி வரும் நந்தனாவைக் கண்ட சரவணன் சிரிக்க சிரிக்க ஆவலோடு அவளுடன் பேச ஆரம்பித்தான். சரவணன் பேசுவதில் மட்டுமல்ல ஒருவர் மனதை புரிந்து கொள்வதிலும் படுசமர்த்தன்.

நந்தனாவுடன் பழகிய சில நாட்களில் அவளது விருப்பு வெறுப்புகளை நன்கு தெரிந்து கொண்டான். அதற்கேற்றாற்போல் தனது நடை உடை பாவனைகளை மாற்றி அப்படியே நடந்து கொண்டான். தினம் சுவாரஸ்யமாய் பேசுவதற்கு ஏதாவது

விஷயத்தை ரெடி செய்து வந்தே பேசுவான். அவனது அழகு பேச்சில் மைவிழிகள் படபடக்க நந்தனா தன்னை மறந்து கேட்டுக் கொண்டிருப்பாள்.

இப்படித்தான் ஒருநாள் யாருமில்லாத மரத்தடியில் அவளிடம் இனிமையாய் பேசியவன், அவள் அழகை இலக்கிய பாணியில் புகழ ஆரம்பித்தான். ''நீலப்பூவிழி நிலத்தை நோக்க, கோலச் சிற்றிடை கொடி போல் துவழ, அப்படியும் இப்படியுமாய் கைகள் அசைய நீ வருகிற அழகு அப்படியே பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்கிறது...'' என உருக உருக பேசியவன், பேசிக்கொண்டே அவளது சிறு இடையை மெல்ல அணைத்தான். அப்படியே குனிந்து அவளது செவ்விதழ்களில் முத்தமிடவும் செய்தான்.

எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் அதை அனுமதித்து, கிறங்கிப் போனவளாய் தனது மலர்க்கரம் கொண்டு அவனை அணைக்கவும் செய்தாள் நந்தனா.

தங்களை மறந்து காதல் மயக்கத்தில் இருவரும் கிடந்த காட்சி தற்செயலாய் அங்கு வந்த கல்லூரிப் பேராசிரியர் ஒருவரின் கண்களிலும் பட்டு விட்டது. அந்த கல்லூரிப் பேராசிரியர் நந்தனாவின் தந்தை சிவராமுக்கு மிக நெருங்கிய நண்பர். ஆக, இந்த ஒரே சம்பவத்தின் மூலம் அவர்கள் காதல் அவளது வீட்டுக்கு உடனடியாக தெரிந்து போயிற்று.

நந்தனாவின் வீட்டில் ஒரே ரகளை ஆரம்பமாயிற்று. அவளது தந்தை சிவராம் கண்டிப்புக்கு பெயர் போன பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர். நந்தனாவின் காதல் விஷயம் தெரிந்ததும் கொதித்துப் போனார். ''நீ படித்தது போதும். வீட்டிலே இரு...'' என கடுமையான கட்டளையும் இட்டார். நந்தனாவும் விடவில்லை. தன் பங்கிற்கு நியாயமாய் வாதிடவும் செய்தாள். ''நல்ல நண்பரான

சரவணனுடன் மனதிற்கு பிடித்தபடி பழகுகிறேன். பேசுகிறேன். மற்றபடி சினிமாக் காதலர்கள் போல் பார்க், பீச் என நாங்கள் சுற்றிவரவில்லை. எங்களது அன்பு தூய்மையானது'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தாள்.

சிவராம் கேட்கிறபாடில்லை. ''தாயில்லாப் பெண் என்று உனக்கு செல்லம் கொடுத்ததால் நீ அளவுக்கு மீறிப் போய்விட்டாய்...'' என்றெல்லாம் கூறி ஆவேசமடைந்தார். நந்தனாவுக்கு இந்த இக்கட்டான சூழ்நிலையில் என்ன சொல்வதென்றே தெரிய வில்லை. மறுநாள் முதல் வேலையாய் சரவணனை சந்தித்து விஷயத்தைச் சொன்னாள்.

சரவணன் கேட்டுவிட்டு அமைதியாய் சிரிக்க, மருண்ட விழிகளோடு அவளை ஆச்சரியமாய்ப் பார்த்தான். ''நந்தனா இது நான் எதிர்பார்த்ததுதான்!'' என்றவன், ''நந்தனா, நாம நடித்தோமே ரோமியோ ஜுலியட் நாடகம்... ஞாபகமிருக்கிறதா? அதில் காதலர்களுக்கு எவ்வளவு சோதனைகள்? யாரும் சுலபத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்... சம்மதிக்க மாட்டார்கள். நாம்தான் போராட வேண்டும். ஆனால்... உன் விஷயத்தில் அப்படிப் போராடவும் முடியாது. வேறு வழியைத்தான் கையாள வேண்டும்...'' என்றான் சரவணன் அமைதியாய்.

''வேறுவழியா? என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் நந்தனா புரியாத பார்வையுடன்.

''ஆமாம் நந்தனா, உன் தந்தை மிகப் பரிவோடு அன்பு செலுத்தி தாயில்லாப் பெண்ணான உன்னை வளர்த்து வந்திருக்கிறார். அவர் மனம் நோகும்படி நீ பிடிவாதம் பிடித்தாலோ, நடந்து கொண்டாலோ அவர் மிகவும் அதிர்ச்சியடைந்து நிலைகுலைந்து விடுவார். அதனால்...''

சரவணன் நிறுத்தி விட்டு அவளையே உற்றுப் பார்த்தான்.

''சொல்லுங்கள்...'' என்றாள் நந்தனா படபடப்பு குறையாமல்.

''சொல்லத் தயக்கமாய்த்தான் இருக்கிறது. ஆனால் இதைத் தவிர வேறு வழியில்லை. நான் தீர யோசித்துத்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன்...''

மறுபடியும் அவன் தயங்க நந்தனாவுக்குத்தான் அவசரமான எரிச்சல் வந்தது.

''ஐயோ... சொல்லுங்கள் சரவணன், என்ன வழி? இந்தப் பிரச்சினையை எப்படி சரி செய்யலாம்... சொல்லுங்கள்?''

சரவணன் பெருமூச்சுவிட்டவன், ''ஒரே வழி உன் தந்தை சொல்படி நடப்பதுதான்..!'' என்றான் உறுதியான தொனியில்.

''தந்தை சொல்படி என்றால்...?''

''வேறு என்ன, காதலை மறந்துவிடுவதுதான்...!'' அசால்ட்டாய் அவன் சொல்ல அதிர்ந்து போய்விட்டாள் நந்தனா.

''சரவண...ன்... என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள்.

நந்தனா ஏறக்குறைய கத்தியவாறு.

சரவணன் அமைதியாகவே பார்த்தான்.

''பதட்டப்படாதே... நந்தனா... நான் சொல்வது கொஞ்ச நாளைக்குத்தான்... நம் கல்லூரி படிப்பு முடியும் வரைக்கும் தான்...! அதுவும் உண்மையாய் அல்ல... ஒரு நடிப்பாக...!''

''நடிப்பாகவா?''

''ஆமாம் நந்தனா. நான் நம் காதலை மறந்துவிடச் சொல்ல வில்லை. கொஞ்ச நாளைக்கு உன் தந்தைக்காக காதலை விட்டு விட்டது போல நாம் இருவரும் நடிக்க வேண்டும் என்கிறேன். நடிப்பு என்றால் ஏமாற்றும் நடிப்பு அல்ல. நிஜமான நடிப்பு.

நிஜமாகவே நாம் இப்போது பேசுவது போல் பேசிக் கொண்டு, காலேஜ் முழுவதும் ஜோடியாய் சுற்றிக்கொண்டு... காதலர்கள் போல நடமாடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும். பார்க்கும் யாவருக்கும் நாம் இருவரும் வெறும் நண்பர்கள்தான் என்ற எண்ணம் வரும்படி நடந்து கொள்ள வேண்டும். ஆனால்... அதே நேரத்தில் நம் மனதில், யாரும் அறியா வண்ணம் ஒருவர்.. மீது ஒருவர் தீராத காதலைக் கொண்டபடி நடமாடிக் கொண்டிருப்போம்...''

சரவணன் மூச்சுவிடாமல் சொல்லிவிட்டு நந்தனாவைப் பார்க்க அவள் அதிர்வோடு சிலைபோல் நின்று கொண்டிருந்தாள்.

''என்ன நந்தனா.... நான் சொல்வது புரிகிறதா?'' என சரவணன் உலுக்கியபோதுதான் அவள் நினைவு முழுவதுமாய் திரும்பியது.

ஆனாலும் நெற்றியில் கைவைத்து கவலையாய் யோசித்தவள், 'நீங்கள் சொல்வது விளையாட்டுப்போல் இருக்கிறது. இதெல்லாம் சாத்தியம்தானா சரவணன்? வேறு வழி ஏதாவது சொல்லுங்களேன்...'' என்றாள் கெஞ்சல் குரலில்.

சரவணன் தோள்களை குலுக்கி தலையைச் சிலுப்பினான். ''இல்லை நந்தனா, நான் நன்றாக யோசித்து விட்டேன். வேறு வழியே இல்லாமல்தான் இந்த முடிவிற்கு வந்தேன். எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒன்றில் மட்டும் உறுதியாக இருக்கிறேன் நந்தனா...''

சரவணன் சொல்லிவிட்டு தீர்க்கமான கண்களால் நந்தனாவை ஊடுருவிப் பார்த்தான்.

''என் வாழ்க்கையில் உன்னைத் தவிர வேறு எந்த பெண்ணிற்கும் இடமில்லை நந்தனா. நீயில்லாத ஒரு வாழ்க்கையை என்னால் எதிர்காலத்தில் நினைத்துக் கூட பார்க்க முடியாது.. அது ரொம்பவும் உறுதி நந்தனா...''

சொல்லியவன் அவளையும் அன்று இரவு முழுவதும் சிந்தித்து முடிவெடுக்கும்படி சொல்லிவிட்டு சென்று விட்டான்.

நந்தனாவுக்கு அன்று தூக்கம் வந்த பாடில்லை. இரவு முழுவதும் தூங்காமல் வெகுநேரம் யோசித்தாள். சரவணன் சொல்வது ஒரு வகையில் சரிதான். அப்பா ரொம்பவும் பிடிவாதமாய் இருக்கிறார். தொடர்ந்து அவருடன் வாதிட்டால் படித்தது போதும் என காலேஜ் படிப்பையே நிறுத்தி விடுவார். அவரை எதிர்த்து அவர் மனம் நோகும்படி சொல்வதும் பெரும் அவப்பெயரையே தரும்.

என்ன செய்ய...?

ரொம்ப நேரம் யோசித்து குழம்பியவள் கடைசியில் சரவணன் சொன்னபடி, கொஞ்சநாட்களுக்கு காதலை மறந்து நடமாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்தாள். கூடவே தன் தந்தைக்காக பரிவு காட்டி சிந்திக்கும் அவன் மனநிலை கண்டு வியந்தாள்.

அவள் மனதில் சரவணனைப் பற்றிய எண்ணம் பன்மடங்கு உயர்ந்துவிட்டது.

மறுநாள் தந்தையிடம் அதேபோல் சொல்லிவிட்டாள். சிவராம் அவளை நம்பாமல் கண்களை உருட்டிப் பார்த்தவர், அரை மனதுடனே சம்மதித்தார். அன்று கல்லூரியில் சரவணனை சந்தித்தவள் தந்தையிடம் சொல்லி, அவன் முடிவெடுத்தப்படி நடக்க ஆரம்பித்ததை சொன்னாள். சரவணன் முகம் இறுக அவளையே பார்த்தான்.

''நந்தனா, இது ரொம்ப கஷ்டமான விஷயம் ஆனால் வேறு வழியில்லை. நம் காதல் ஜெயிக்க நாம் இப்படி செய்துதான் ஆகவேண்டும்..'' என்றான் வருத்தம் தோய்ந்த குரலில்.

நந்தனாவுக்கும் புரிந்தது. அவளும் உணர்ச்சிகளை அடக்கி மௌனமாய் உதட்டைக்கடித்தபடி நின்று கொண்டிருந்தாள். இனி மற்றவர்கள் முன்னிலையில் பேசுவதைக் கூட தவிர்த்துவிட வேண்டும் என்ற உறுதியெடுத்து இருவரும் 'பிரியா விடை' கொடுத்தனர்.

அதற்குப்பின் வந்த நாட்கள் இருவரும் தெரியாதவர்கள் போலவே நடமாடினர். ஒருவரை ஒருவர் பார்ப்பதைக் கூட தவிர்த்து நடந்தனர்.

எல்லாம் சில நாட்கள்தான். நந்தனாவால் அதற்குமேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. சரவணன் பற்றிய நினைப்பு அவளை விடாது துரத்திற்று. ஒருநாள் அவன் முகத்தைப் பார்க்காவிட்டால் என்னவோ போல்தான் அவளுக்கு இருந்தது. எதிலும் லயிக்க முடியவில்லை. வகுப்பிலோ மற்ற நேரங்களிலோ எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. எப்பவும் சதா சரவணன் பற்றிய எண்ணமே அவள் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. அவனைப் பார்த்து பேசிக் கொண்டிருந்தபோது இருந்ததை விட இப்போது நினைவுகள் பன்மடங்காகி அவளை இம்சித்தது. மற்ற ஆண்களைப் போல் இல்லாமல் எவ்வளவு தெளிவாய் தீர்க்கமாய் சிந்திக்கிறான் என வியந்தாள்.

அந்த வியப்பிலே தொடர்ந்து அவன் நினைவாகவே இருந்தவள், ஒரு கட்டத்திற்குப் பிறகு பொறுக்க முடியாதவளாய் அவனைத் தேடிப் போனாள். சரவணன் திகைப்பாய் அவளைப் பார்த்தான்.

''என்னால் முடியாது சரவணன். தினம் உங்களை பார்க்காமல் பேசாமல் என்னால் இருக்க முடியவில்லை. உங்களது நினைவு தினமும் ஒவ்வொரு நொடியும் எழுந்து இம்சிக்கிறது..'' என்றாள்.

சரவணன் கொஞ்ச நேரம் பதில் சொல்லாமல் வெறித்தவாறு யோசித்தான்.

அதுவே நந்தனாவுக்கு பெரும் பயத்தைக் கொடுத்தது.

''என்ன சரவணன்... யோசிக்கிறீர்கள்? நீங்கள் யோசிப்பதைப் பார்த்தால் எனக்கு இன்னொரு பயம் ஏற்படுகிறது...''

''இன்னொரு பயமா?''

''இப்படியே நாம் பார்க்காமல் பேசாமல் இருந்தால் உண்மையிலேயே நீங்கள் என்னை மறந்து விடுவீர்களோ... என்று பயப்படுகிறேன்...''

நந்தனா பதட்டமாய்ச் சொல்ல அமைதியாய் சிரித்தான் சரவணன்.

''நந்தனா, இந்த விஷயத்தில் நீ பயப்படவே தேவையில்லை. ஏனெனில் காதல்... என்பது பொதுவானதுதான்..''

''பொதுவானது என்றால்...?''

''உன் மனதில் என்ன உணர்ச்சிகள் ஓடுகிறதோ... அதே உணர்ச்சிகள்தான் என் மனதிலும் ஓடும். என்ன... நீ எனக்கு முந்திக்கொண்டு விஷயத்தைச் சொல்லிவிட்டாய். நான் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன்...''

சரவணன் சொல்ல நந்தனாவின் முகம் பிரகாசமாய் மலர்ந்தது. விழிகள் விரியப் பார்த்தவள், ''அப்படியானால் என்னைப் பார்க்காமல், என்னுடன் பேசாமல் இருந்ததால் உங்களுக்கும் தவிப்பு ஏற்பட்டதா?'' என்றாள் ஆவலோடு.

சரவணன் கண்களை தாழ்த்தி தலையசைத்தவன் அவளை நெருங்கி, அவளது இரு கரங்களையும் சிறைபிடித்துக் கொண்

டான். ''அதில் சந்தேகமா உனக்கு...?'' என்றபடி நந்தனாவின் முகத்தையே கூர்ந்து பார்த்தான்.

''நந்தனா...''

''சொல்லுங்கள்...''

''நாம் நினைப்பது எல்லாம் சரிதான். ஆனால் உன் தந்தையை நினைத்துப்பார்...''

''நினைத்துப் பார்த்து விட்டேன். அவரை ஏமாற்றுவது பாவம்தான்... ஆனால் வேறு வழியில்லையே சரவணன்..''

''ஆனால்... கையில் எந்த ஒரு வேலையும் இல்லாமல் கல்லூரி படிப்பைத்தான் படித்துக் கொண்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் பெற்றவர்களை எதிர்த்து போராடி நம்மால் என்னதான் செய்ய முடியும் என்று நினைக்கிறாய்.. ?''

சரவணன் கேட்க நந்தனாவின் முகம் சீரியஸானது.

''இல்லை... சரவணன் முடியும்!'' என்றாள் உறுதியான குரலில்.

''எதை வைத்துச் சொல்கிறாய் நந்தனா?''

''நான் தீர்மானமாய் யோசித்து ஒரு முடிவு வைத்திருக்கிறேன்.... சரவணன்...''

''முடிவா... என்ன முடிவு?''

''நாம் இருவரும் இந்த காதலன் காதலி ஸ்டேஜில் இருந்தால் தான் இந்த ஆபத்து எதிர்ப்பு எல்லாம். இந்த ஸ்டேஜை. இந்தக் கட்டத்தை நாம் கடந்து விடவேண்டும். கடந்து விட்டால் எல்லாம் சரியாகிவிடும்...''

''நீ சொல்வது புரியவில்லை நந்தனா...''

தலைசாய்த்து தன்னையே படபடக்க உற்றுப்பார்த்த நந்தனாவின் தங்க நிற அழகை அந்த நேரத்திலும் ரசித்தவன் அவளை வியப்பாகவே பார்த்தான்.

நந்தனாவோ மெல்ல தன் திட்டத்தை விளக்க ஆரம்பித்தாள். அதன்படி இருவரும் இந்த காதலன் காதலி நிலையை கடந்து கணவன் மனைவி ஆகிவிட வேண்டும். எங்காவது ஓரிடத்தில் நண்பர்களை சாட்சியாய் வைத்து தாலிகட்டி திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதன்பின் விஷயம் தந்தைக்குத் தெரிவித்தால் அவரால் ஒன்றும் செய்ய முடியாது. அவரும் வேறுவழியில்லாது இருவரையும் ஏற்றுக் கொள்வார். இதுதான் நான் வைத்திருக்கும் திட்டம்... என நந்தனா விவரிக்க... விவரிக்க ஆடித்தான் போய் விட்டான் சரவணன்.

அவனால் நந்தனா சொல்வதை நம்பமே முடியவில்லை!

''யாருக்கும் தெரியாமல் கல்யாணமா? என்ன சொல்கிறாய் நந்தனா?'' என்றான் அதிர்ச்சியோடு.

நந்தனாவோ வெகு அமைதியாய் அவனைப் பார்த்தாள். ''நான் நன்றாக யோசித்துவிட்டேன். இதைத் தவிர வேறு வழியே இல்லை சரவணன்...''

''அப்படியானால் யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாய் திருட்டுத்தாலி கட்டிக் கொள்ள உனக்கு சம்மதமா? அது நல்லதென்று நினைக்கிறாயா?'' என்றான்.

நந்தனா சிரித்தாள். ''அப்படியெல்லாம் யோசித்தால் ஒன்றும் நடக்காது சரவணன். தெரிந்தோ தெரியாமலோ நாம் ஒருவரை யொருவர் காதலிக்க ஆரம்பித்து விட்டோம். இந்தக் காதலில் ஜெயிக்க வேண்டுமென்றால் இப்படி முடிவெடுத்தால்தான் முடியும்...'' என்றபடி பேசிய நந்தனா விடாமல்... ''இதோ

பாருங்கள் சரவணன் எந்த வீட்டில் காதலிருக்கிறேன் என்றதும் சந்தோஷமாப் பச்சைக்கொடி காட்டுவார்கள்? உடனே மன மகிழ்ந்து ஓ.கே. சொல்லுவார்கள்? கொஞ்சம் நீங்களே சிந்தித்துப் பாருங்கள்...'' என்றபடி எத்தனையோ உதாரணங்களை காட்டினாள். கல்லூரியில் காதலித்து துணிந்து வீட்டை எதிர்த்து திருமணம் செய்து கொண்டு இன்று சந்தோஷமாய் வாழும் காதல் ஜோடிகளின் பெயரை அடுக்கினாள்.

அவள் சொல்வதைக் கேட்டு சரவணனே ரொம்பவும் குழம்பித்தான் போனான். இறுதியில் வேறுவழியில்லாது அவள் முடிவிற்கு சம்மதிக்கவும் செய்தான். ஆனால் கூடவே அவன் மனதில் வேறொரு திட்டமும் உதிக்க ஆரம்பித்தது.

நந்தனா சொன்னதோடு மட்டுமில்லாமல் படபடவென ஏற்பாடுகளும் செய்ய ஆரம்பித்து விட்டாள். அதன்படி அன்றைய வார இறுதியில் யாருக்கும் தெரியாமல் நந்தனா பெட்டியும் கையுமாய் கிளம்பி வந்துவிடுவாள். ரெயில்வே ஸ்டேஷனில் சரவணன் தயாராக நிற்க வேண்டும். இருவரும் அன்றே ரயில் பிடித்து சென்னை செல்ல வேண்டும். சென்னையில் நந்தனாவின் உயிர்த்தோழி ஒருத்தி இருக்கிறாள். அவள் வீட்டில் தங்கிவிட்டு பின் நண்பர்கள் முன்னிலையில் கோவிலில் வைத்து இருவரும் தாலிகட்டி திருமணம் செய்து கொள்ளவேண்டும். பின் அன்றே ஊர் திரும்பி நந்தனாவின் தந்தை காலில் வந்து விழ வேண்டும். எப்படியாவது கதறியோ கெஞ்சியோ... அவரை ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிடவேண்டும்...

இதுதான் திட்டம் என நந்தனா சரவணனிடம் விவரித்து சம்மதிக்கவும் வைத்து விட்டாள்.

நாட்கள் ஓடியது. நந்தனா குறித்த நாளும் வந்தது. நந்தனா சொன்னபடி சொன்ன நாளில் பெட்டியும் கையுமாய் தந்தைக்குத்

தெரியாமல் கிளம்பிவிட்டாள். கிளம்பும்போது தான் செய்வது சரியா தவறா? என்ற பயம் வந்து நெஞ்சுத்துடிப்பை அதிகரிக்கச் செய்தது.

பெரிய பெரிய மூச்சுக்களை நிதானமாய் எடுத்து தன் இருதயத்துடிப்பை சரிப்படுத்தினாள். அதே பயத்தில் பதட்டத்தில் ரெயில்வே ஸ்டேஷனை அடைந்தபோது அங்கு தயாராய் நின்றிருந்தான் சரவணன்.

நந்தனா சரவணனை நெருங்க நெருங்க அவன் பக்கத்தில் முகத்தை திருப்பியவாறு யாரோ நின்றிருப்பதும் தெரிந்தது. அந்த முகத்தை கூர்ந்து பார்த்த நந்தனா சப்தநாடி ஒடுங்க அதிர்ந்தே போய்விட்டாள்! அது அவளது தந்தை சிவராமேதான்!

7

நந்தனாவால் அவளது கண்களையே நம்பமுடியவில்லை. சரவணன் பக்கத்தில் நிற்பது அவளது தந்தை சிவராமேதான்! அவர் எப்படி இங்கே? பயங்கரமாய் திடுக்கிட்டவள் செய்வதறியாது அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

பெட்டியும் கையுமாய் அவள் நிற்கிறாள்! ஒருகணம் திரும்பிப் போய் விடுவோமா.... என்று அவள் நினைத்து முடிப்பதற்குள்... சிவராம் நிமிர்ந்தவர் அவளைப் பார்த்து விட்டார்!

பக்கத்தில் சரவணன் கல்லுளிமங்கனாய் நின்று கொண்டு இறுக்கமான முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். இங்கு என்னதான் நடக்கிறது? எப்படி சரவணனுடன் அப்பா வந்தார்? யார் அவரை இங்கு வரவழைத்தது...?

திகைப்பின் உச்சத்தில் கற்சிலை போல் அவள் நின்று விட இருவரும் அவளை நோக்கி வர ஆரம்பித்தனர். அதிலும் அப்பாவின் கண்கள்... அவரது பார்வை... விழிகளை உருட்டி அப்படியே எரித்து விடுவது போல் பார்த்தார். நந்தனா நிமிர்ந்து பார்க்க முடியாமல் அப்படியே குனிந்தாள். என்ன ஒரு இக்கட்டான நிலை! வகையாய் அவள் மாட்டிக் கொண்டாளே!

நந்தனாவுக்கு ஒரு கணம் ஒன்றும் ஓடவில்லை. கையும் களவுமாய் பிடிபட்ட பயங்கர குற்றவாளியாய் தந்தை முன் நிற்கிறாள். கூனிக் குறுகிப் போய் உடம்பே அவளுக்கு ஆடியது.

சரவணன் மெல்ல முத்து உதிர்த்தான். ''என்னை மன்னித்து விடு நந்தனா. உன் தந்தையை இங்கு வரவழைத்தது நான்தான். நம் காதலின் சக்தியை அவருக்குப் புரிய வைக்கவே அவரை இங்கு வரவழைத்தேன்...''

சரவணன் கூற... என்ன முட்டாள்தனமாய் இவன் உளறுகிறான் என திடுக்கிட்டு நந்தனா நிமிர்ந்து அவனை வெறித்தாள்.

''ஆமாம்... நந்தனா, எனது செய்கை உனக்கு அதிர்ச்சியாக இருக்கும். ஆனால் நன்கு யோசித்துப் பார். நான் செய்தது உனக்குப் புரியும். நமது காதலுக்கு முடியாது என எதிர்ப்பு தெரிவித்து ஒரேயடியாய் மறுத்துவிட்டார் உன் தந்தை. அவருக்கு நாம் எவ்வளவு தீவிரமாய் காதலிக்கிறோம் என்பதை உணர்த்த நினைத்தேன். அதனாலே நீ இங்கு வருவதற்குள் அவருக்கு போன் செய்து...''

சரவணன் வார்த்தையை முடிப்பதற்குள் சிவராம் கடுமையான குரலில் ஆரம்பித்தார். ''என்னை வரவழைத்து, பாருங்கள் உங்கள் அருமை மகளை, காதலுக்காக இவ்வளவு நாள் வளர்த்த தந்தையை, அவரது உறவை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு காதலே பெரிது என பெட்டியுடன் வந்து விட்டாள். நீங்கள்

பெண்ணை வளர்த்திருக்கிற லட்சணம் இதுதான். அதைப் புரிந்துகொண்டு இனிமேலாவது எங்களது காதலுக்கு குறுக்கே நிற்காதீர்கள். அப்படி நின்றால் இருக்கிற உங்களின் கொஞ்ச நஞ்ச மானமும் காற்றில் பறந்து விடும் நீங்களே முடிவெடுங்கள்... என கேட்கிறார்.. உன் அருமைக் காதலர்... பதில் சொல்... பதில் சொல்லம்மா...?''

ஆவேசமாய் பேசிவிட்டு மூச்சு வாங்க கொதிப்பாய் அவளைப் பார்த்தாள் சிவராம். நந்தனா கூனிக்குறுகி முகத்தை தொங்க விட்டவாறு நின்றாள்.

அவளால் என்ன பதில் பேச முடியும்? எப்படி தந்தையை சமாதானப்படுத்த முடியும்? ஏதோ... நல்லது செய்வதாக நினைத்து தன்னை கையும் களவுமாக தந்தையிடம் மாட்ட வைத்து கேவலப் படுத்தி விட்டானே இந்த சரவணன்? இப்படி ஒரு முட்டாள் தனமான யோசனை எப்படி அவன் மண்டையில் உதித்தது? அப்படியே உதித்தாலும் தன்னிடம் ஒரு வார்த்தை இப்படிச் செய்யப் போவதாய் யோசனையாவது கேட்டிருக்கலாம் அல்லவா...? அதை விட்டு விட்டு அவன் மட்டும் பெரிய யோக்கியன் போல் நின்று கொண்டு அவளை அல்லவா வசமாக மாட்ட வைத்து விட்டான்? இப்போது என்ன செய்வது? எந்த முகத்தை வைத்துக் கொண்டு தந்தையைப் பார்ப்பது?

தவித்துப் போனவளாய் அவமானம் பிடுங்க அப்படியே குனிந்திருந்தாள். சிவராம் ஆவேசம் குறையாதவராய் அவளைக் கடுமையாய் சாடியவர் கடைசியில், ''இதோ பார் நந்தனா, என் முகத்தில் கரியைப்பூசி என்னை எவ்வளவு அவமானப்படுத்த வேண்டுமோ அவ்வளவு அவமானப்படுத்தி விட்டாய். இதற்கு மேல் இனி உன் வாழ்க்கையில் நான் குறுக்கிட போவதில்லை. நீ என்ன முடிவெடுத்தாலும் சரி... எக்கேடு கெட்டாலும் சரி... இனி

இப்படியொரு தந்தை இருப்பதை மறந்து விடு...!'' என சொல்லிவிட்டு விறுவிறுவென திரும்பிப் பாராமல் நடந்தார்.

அதுவரை எல்லாவற்றையும் கைகளை கட்டியபடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சரவணன் முதன்முறையாய் அதிர்ந்தான்.

''நந்தனா... என்ன... இது... உன் தந்தை... இப்படி பேசிவிட்டு செல்கிறார்...?'' என படபடத்து திகைத்தவனை நிமிர்ந்து எரித்து விடுவது போல் பார்த்தாள் நந்தனா.

''சரவணன்... என்ன ஒரு முட்டாள்தனமான வேலையைச் செய்திருக்கிறீர்கள்?'' என்றாள் கடும் குரலில்.

''என்ன முட்டாள் தனமாகவா... என்ன உளறுகிறாய்?''

''இப்படி ஒரு கிறுக்குத்தனமான ஐடியா உங்களின் மூளையில் உதித்தால் அதை என்னிடம் சொல்லி ஆலோசனை கேட்டிருக் கலாமே..? அதைவிட்டு விட்டு இப்படிச் செய்து... என் முகத்தில் ஒரேயடியாய் கரியைப் பூசி விட்டீர்களே...?''

அவள் ஆவேசமாய் கொதித்துக் கேட்க... நடந்த கலவரத்தில் சரவணனுக்கும் கோபம் வந்து விட்டது.

''ஏய்... ஏய்...நிறுத்து...'' என பெருங்குரலில் அவனும் கத்தியவன், ''என்ன... நீ பாட்டுக்கும் முட்டாள்... கிறுக்கன்... என பேசிக் கொண்டே போகிறாய்? உன் நன்மைக்காக... உன் அப்பா நம் காதலை புரிந்து கொண்டு சம்மதிப்பார் என்றுதானே... இப்படியெல்லாம் செய்தேன்... ஆனால்... ஆனால்...''

அவனை மேலே பேசவிடாமல், ''ச்சீ... நிறுத்துங்கள்..'' என்றாள் நந்தனா ஆத்திரமாக. ''உங்கள் மடத்தனத்தை கொண்டு குப்பையில் போடுங்கள்! இப்படி யாராவது செய்வார்களா? சுத்த... பைத்தியக் காரத்தனமாய் ஐடியா... செய்து கொண்டு... உங்களைப் போய் காதலித்தேனே...? சே...! என் புத்தியைச் சொல்ல வேண்டும்...!''

நிஜமாகவே தலையிலடித்து நந்தனா அலுக்க... சரவணனும் ஆவேசம் கொண்டவனாய் அவள் முன் வந்து அவளை உலுக்கினான்.

''நந்தனா. உன் பேச்சை முதலில் நிறுத்து. நீ பாட்டுக்கு வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டு போகிறாய்? எதற்கும் ஒரு அளவு இருக்கிறது... அதை மீறினால் நான் பொல்லாதவனாகி விடுவேன்...''

அதற்கும் நந்தனா ஆத்திரமாக, ''ச்சீ... வாயை மூடுங்கள்!'' என்றவள். ''இனி நீங்கள் என்ன சொல்வது... பேசுவது...? நான் சொல்கிறேன். உங்களை நான் மறந்து விட்டேன்! தலை முழுகி விட்டேன்! இனி நமக்கு இடையில் காதலும் கிடையாது ஒரு மண்ணாங்கட்டியும் கிடையாது. நீங்கள் யாரோ... நான் யாரோ...!'' என்றபடி விறுவிறுவென முன் செல்லும் தந்தையைப் பின் தொடர்ந்து நடக்க ஆரம்பித்து விட்டாள் நந்தனா.

நடப்பதைக் கண்டு அப்படியே திகைத்து விக்கித்துப் போனான் சரவணன். அவள் புரிந்து கொள்வாள். புரிய வைத்துவிடலாம் என்று கோபமாய் பேசினால்.... இப்படி ஒரேடியாய் தலைமுழுகி விட்டுச் சென்று விட்டாளே...? என்ற ஆதங்கத்துடன் அப்படியே உட்கார்ந்து விட்டான் சரவணன்...!

ஆனால் நந்தனா, தான் அவசரமாய் எடுத்த முடிவில் கொஞ்சமும் பின் வாங்கவில்லை. 'இனி சரவணன் மேல் காதல் இல்லை. அவனை ஒரேயடியாய் மறந்து விட வேண்டியதுதான். இப்படி தந்தையிடம் சிக்கவைத்து பெரும் அவப்பழியை தன் மேல் போட்டவனை இனியும் காதலித்து கல்யாணம் செய்தால் அதைவிட வேறு கேவலமில்லை. எனவே சரவணனுக்கு இனி தன் வாழ்க்கையில் இடமில்லை...!' என தெளிவாய் தீர்மானமாய் முடிவெடுத்து விட்டாள்!

அதை உடனடியாய் செயல்படுத்த தீர்மானித்தவள்... முதல் கட்டமாய் தந்தையை சமாதானப்படுத்த முடிவு செய்தாள்.

கோபமாய் வேகத்துடன் சென்றவரின் பின்னே சென்றவள் வீட்டை அடைந்ததும் அவர் காலில் விழுந்து கெஞ்சினாள். தன்னை மன்னிக்கும்படி மன்றாடினாள். தான் சரவணனை மறந்துவிட்டதாக காதலை துறந்து விட்டதாக உறுதி கொடுத்தாள். கடைசியில் தந்தை சிவராமும் நடந்ததையெல்லாம் மறந்து மனம் இளகியவராய் நந்தனாவை மன்னித்து ஏற்றுக் கொண்டார்.

மறுநாள் முதல் சரவணனை சுத்தமாய் புறக்கணிக்க ஆரம்பித்தாள் நந்தனா. சரவணன் விடாது அவளைத் துரத்திப் பேச முயற்சித்தான். கெஞ்சினான். பிடிவாதமாய் அவனையும் அவனது நினைவுகளையும் மனதிலிருந்து உதறினாள் நந்தனா. ''நடந்ததையெல்லாம் மறந்து விடுங்கள். இனி நம் இருவருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீங்கள் யாரோ நான் யாரோ...!'' என்று திட்டவட்டமாய் கூப்பிட்டு வைத்து சரவணனிடம் கூறியபோது அவன் கொஞ்சமும் அசரவில்லை. ''நல்லது நானும் உன்னை வெறுக்கிறேன். இனி உன் முகத்திலேயே விழிக்க விரும்பவில்லை. குட்பை!'' என்றான் வீராப்பாய்.

கல்லூரி படிப்பு முடிந்ததும் இருவரும் வேறு வேறு ஊர்களுக்குச் சென்று விட பிரிவு... நிரந்தரப் பிரிவு போல் ஆயிற்று.

தன் வாழ்நாளில் இனி சரவணனை சந்திக்கக்கூடாது. சந்திக்கவே போவதில்லை. என்று நந்தனா நினைத்திருந்தாள். முடிவு செய்திருந்தாள்...!

ஆனால் இன்று....?

விதிவசத்தால் சரவணனை டெக்ஸ்டைல் கம்பெனி உரிமையாளராகவும், அவள்... அந்தக் கம்பெனியில் மாடலிங் பெண்ணாக

வும் வருவோம் என அவள் கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லையே..?

8

ஆயிற்று நந்தனா மெல்ல பழைய நினைவுகளிலிருந்து மீண்டு நிஜத்திற்கு வந்தாள். அவள் ரயில்வே ஸ்டேஷனில் பெங்களூருக்கு கிளம்ப தயாராக நிற்பது புரிந்தது. வெறித்த பார்வையுடன் மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்தவைகளை நினைத்துக் கொண்டிருந்தவளை அதே சரவணன் தான் பேச்சால் உலுக்கி நினைவுக்கு கொண்டு வந்தான்.

''நேரமாகி விட்டது. ரெயில் கிளம்பப் போகிறது. உள்ளே ஏறலாம்...'' என்றான்.

நந்தனா தன் நிலையை சுதாரித்தவள் அவசரமாய் பெட்டியினுள் ஏறிக் கொண்டாள். உள்ளே பெட்டியில் கதையடித்துக் கொண்டிருந்த நீலா. பிங்கியுடன் சேர்ந்து இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

மறுநாள் காலை....

பெங்களூர் வந்தாயிற்று. ஏற்பாடு செய்யப்பட்ட ஹோட்டலில் இன்று முழுவதும் ரெஸ்ட் ரூம் வாசம்தான்...! என்றதும் நந்தனாவுக்கு போரடித்தது. கசகசத்த சேலையிலிருந்து மெல்லி கவுனுக்கு மாறியவள் காலாற முன்புறம் நடந்தாள்.

பக்கத்து ரூம் பிங்கி, நீலா, ரீனா எல்லோருமே உடைமைகளை வைத்த கையோடு எங்கோ 'ஊர்மேய' சென்றாயிற்று. அப்படியே ஹோட்டலின் ரிசப்ஷன் பக்கம் வந்தவள் ரிசப்ஷனின் எதிர்

இருக்கையில் டெய்ஸி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து பக்கம் சென்றாள்.

ஐம்பதைத் தொடும் பருத்த உடம்புடன். டெய்ஸி, செல்போனில் பேசிக் கொண்டிருந்தவள் அவளைப் பார்த்ததும் புன்னகைத்தவாறே கையைப் பிடித்து இழுத்து பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள். டெய்ஸி சரவணனின் உதவியாளினி. அவனைப் பற்றி அனைத்து விஷயங்களும் தெரிந்தவள் என்ற உணர்வே நந்தனாவை அவளிடம் பேச தூண்டியது.

செல்போன் பேசிவிட்டு நிமிர்ந்த டெய்ஸியிடம், ''நீங்கள் எப்படி இங்கு?'' என்றாள் நந்தனா ஆச்சரியமாய்.

டெய்ஸி சிரித்தாள். ''நான்... சாரின் பி.ஏ.தானே? சார் செல்லும் இடங்களுக்கெல்லாம் நிழல் போல் பின் செல்வதே என் வேலை என்ன...நேற்று ஒரு நாள் முன்னதாகவே பெங்களூருக்கு வந்து விட்டேன்... ஆம்... நந்தனா ரொம்பவும் கோபமாக இருந்தாயே... சரியாயிற்றா?''

''ம்ம்..'' என்றாள் நந்தனா தயக்கத்துடன்.

டெய்ஸி தொடர்ந்தாள்.

''நான் எதற்கு அன்று அப்படிச் சொன்னேன் என்றால், சரவணன் சாரிடம் வேலைக்கு வந்து மூன்று வருடங்களாயிற்று. மனிதர் ரொம்ப ஜென்டில்மேன். உடன் இருப்பவர்கள் வேலை பார்ப்பவர் களின் கஷ்ட நஷ்டங்களை புரிந்து கொள்வார்... மேலும்...''

''சொல்லுங்கள்...''

''எந்தப் பெண்ணுடனும் தொழில் ரீதியாக பேசுவதோடு சரி, தொழிலை மீறி எந்தவித உறவும் அவர் வைத்துக் கொள்ள விரும்பியதில்லை. வரம்பு மீறியதுமில்லை...!''

''ஒருவேளை அன்பு மனைவியின் கட்டளையாக கூட இருக்கும்...'' என சிரிப்புடன் நந்தனா சொல்ல பதிலுக்கு டெய்ஸியும் சிரித்தாள்.

''அதற்கும் வாய்ப்பில்லை..'' என்றாள்.

''வாய்ப்பில்லையா...?''

''கல்யாணம் என்ற ஒன்று ஆனால்தானே அதெல்லாம்...?''

டெய்ஸி எதிர் கேள்வி கேட்டதும் நிஜமாகவே வாய்பிளந்து விட்டாள் நந்தனா.

''என்ன சரவணனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லையா?'' இது அவள் கொஞ்சமும் எதிர்பாராத விஷயமே! உதறிப் போய் ஒருவரை ஒருவர் மறந்து மூன்று வருடங்களாயிற்று! அவள்தான் இனி கல்யாணம் எதற்கு? என கல்யாண விஷயத்தில் நாட்ட மில்லாமல் இருந்து விட்டாள். அவனும் அப்படியே இருந்து விட்டானே... எதனால்...? மூளையில் அவளுள் நட்சத்திரங்கள் கண்சிமிட்டலாய் மின்னி கேள்விகளை வீசியது.

இது என்ன வீண் ஆராய்ச்சி. இதெல்லாம் உனக்குத் தேவையா என புத்தி அதட்டினாலும் இன்னொரு மனம் மேலும் மேலும் அவன் பற்றி தகவல்களை சேகரிக்க ஆசைப்பட்டது.

''அப்படியானால் இன்னும் அவர் தனிதானா... தனியாகத்தான் தங்குகிறாரா?''

''ம்ஹூம்...! தனிக்காட்டு ராஜாதான்! துணைக்கு ஜேம்ஸ் தாத்தா என தூரத்து உறவுமுறை பங்களாவில் இருப்பதை ஒரு முறை பார்த்திருக்கிறேன். ஆனால்... சாருக்கு... சதா... ஆபீஸ்தான்... தொழில் சிந்தனைதான்...!''

பேசிய டெய்ஸி அப்படியே தனது சுயபுராணக் கதைக்குப் போய் விட்டாள். தன்னைப் பற்றி மிலிட்டரியில் இருக்கும் தனது

கோபக்கார கணவன் பற்றி என பெரிய லெக்சர் கொடுக்க ஆரம்பித்து விட்டாள். நந்தனா வெளியில் கேட்டுக் கொண்டிருப்பது போல் இருந்தாலும் உள் மனதில் சரவணன் பற்றிய சிந்தனையையே மனதில் அசை போட்டுக் கொண்டிருந்தாள்.

அவனைப் பிரிந்து இந்த மூன்று வருடங்களில் அவ்வப்போது அவனது நினைப்பு அவளுள் எழும்பும். அப்போதெல்லாம் பெரிய கோபம் கொண்டு அதை அகற்றி துரத்துவாள். எல்லாம் அவனைப் பார்க்காதது வரை சரியாகத்தான் நடந்தது. எப்போது அவனை மாடலிங் ஹாலில் பார்த்தாளோ... அது முதல் அவளுள் தடுமாற்றம்தான்.

அவ்வளவு நாள் இறுக்கமாய் பிடித்து வைத்திருக்கும் எண்ணங்களை மீறி அவனது நினைப்பு துளையிட்டது. அதிலும் சரவணன் முன்பு போல் பழக்கமோ, நெருக்கமோ காட்டாமல் விலகிச் செல்வது அவளை நெருடி, அவனைப் பார்க்கச் சொல்கிறது எனவும் நினைத்தாள் நந்தனா.

அன்று முழுவதும் சரவணன் பற்றிய நினைவுகளுடன் அப்படியே தூங்கியும் போனாள் நந்தனா.

9

மறுநாள் அதிகாலையில் எல்லோரும் எழுந்து மெரிடியன் ஹோட்டலுக்கு கிளம்பினர்.

அங்குதான் 'மாடல் ஷோ'வுக்காக ஒத்திகை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெங்களூரில் நடக்கும் இந்த 'சவுத் இண்டியன் மாடல் ஷோ'வில் பத்து துணி உற்பத்தி கம்பெனிகள் பங்கேற்று தங்களது தயாரிப்புகளை விளம்பரப்

படுத்துகின்றன. நடுவர் குழு ஒன்று பரிசீலித்து சிறந்த உற்பத்தி பொருளுக்கு பரிசீலிக்கும். பின் அந்த நிகழ்ச்சி தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு அந்த துணிக் கம்பெனிக்கு நல்ல விளம்பரமும், பொருள்களுக்கு கிராக்கியும் ஏற்படும். இதுவே 'மாடல் ஷோ' நடத்துவதான பின்னணி ஆகும்.

நந்தனா 'ஷோ' நடக்கும். ஒத்திகை செய்யும் ஹாலுக்கு வந்தபோது அவளைப் போலவே வெவ்வேறு இடங்களில் இருந்து மாடல் பெண்கள் வந்திருந்தார்கள். முதல் கட்டமாய் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்யும் படலம் நடந்தது. அது முடிந்ததும் எல்லா மாடல் பெண்களையும் பெரிய ஹால் ஒன்றில் உட்கார வைத்து ஷோ நடத்தும் நிர்வாகிகள். 'கேம் ஷோ' போட்டி பற்றியும் அதற்கான பத்து நாள் பயிற்சியைப் பற்றியும் விளக்க ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு மாடல் பெண்ணும் நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பயிற்சி நபர்களான 'மாடல் ட்ரெய்னர்களை' தங்கள் விருப்பம் போல் தேர்ந்தெடுத்து ட்ரெய்னர் மூலம் பயிற்சி பெறும்படி அறிவுறுத்தப்பட்டார்கள்.

அப்படி மாடல் ட்ரெய்னர்களாக இருபது ஆண் பயிற்சியாளர்களை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினார்கள். அப்படி நிர்வாகிகளால் நந்தனாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பயிற்சியாளன்தான் பாஸ்கர்.

பாஸ்கர் கறுத்த நிறமும் ஒல்லி உடம்புமாய் துறுதுறுவென இருந்தான். அவன் கண்கள் நந்தனாவைப் பார்த்ததும் படபடவென அலைபாய்ந்து தடுமாறியது. அவளது அழகை அப்படியே வாய் பிளக்கும் ஆச்சரியத்துடன் விழுங்கியது. வெறும் 'ஹலோ...' சொல்லி சாதாரணமாய் அறிமுகமானவன் வேண்டுமென்றே நந்தனாவைத் தேடித்தேடி வந்து எதாவது பேச முயன்று

கொண்டிருந்தான். தேவையில்லாமல் வந்து அசடு வழிந்து கொண்டிருந்தான்.

அவனை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் நடந்து ஹாலின் மறுபகுதிக்குச் சென்றாள் நந்தனா. அவளது கண்கள் சரவணனைத் தேடிக் கொண்டிருந்தது. அவள் நினைத்தபடியே மறு ஹாலில் தனது உதவியாளினி டெய்ஸியுடன் பேசிக் கொண்டிருந்தான் சரவணன்.

மெல்ல... நடந்து வந்தவள் உள்ளே நுழையாமல் ஹாலின் முகப்பு கதவுப்பக்கமே நின்று விட்டாள். சரவணனும் டெய்ஸியும் பேசுவது தெளிவாகக் கேட்டது. அவளுக்கு அதிலும் அவர்களது பேச்சில் தனது பெயர் அடிபடுவது கண்டு காதுகளை கூராக்கி கேட்க ஆரம்பித்தாள் நந்தனா. கேட்க கேட்க கோபத்தில் அவள் முகம் சிவக்க ஆரம்பித்தது.

நந்தனா ரூமிற்குத் திரும்பி விட்டாள். அவள் மனதில் சரவணன் டெய்ஸியிடம் சொன்ன வார்த்தைகள் திரும்பத் திரும்ப ஓடியது. ''அவர் நந்தனா ரொம்ப க்யூட். அனாவசியமா எந்த ஆண் களையும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டா. பேச மாட்டா. சொல்லப்போனா அவளுக்கு ஆண்களையே பிடிக்காது...!'' என்று சரவணன் சொன்னது உண்மைதான்! உண்மையைத்தான் சொன்னான்.

ஆனால் அவன் டெய்ஸியிடம் சொல்லும் போது எழுந்த தொனி வேறுவித கருத்தையும் எதிரொலிப்பதாய் நந்தனாவுக்கு தோணிற்று. 'அவள் வாழ்க்கையில் குறுக்கிட்ட ஒரே ஆள் நான்தான். இனி யாரும் குறுக்கிட முடியாது...' என திமிராய் சொல்வது போலவும் அவளுக்கு உறுத்தியது.

கூடவே அன்று டான்ஸ் ஹாலில் பாஸ்கர் தன்னுடன் வலிய வலிய வந்து பேசியபோது சரவணனின் முகம் சிடுசிடுத்து

கறுத்ததை நந்தனா கவனித்திருந்தாள். இப்போது அதையெல்லாம் யோசித்தபோது சரவணன் மீது எரிச்சலாய் வந்தது. தன் மீது மறைமுகமாய் ஆதிக்கம் செலுத்த நினைக்கிறான்... தன்னைக் கட்டுப்படுத்த நினைக்கிறான்...! நம்மை ஆதிக்கம் செலுத்த... கட்டுப்படுத்த இவன் யார்? இவனுக்கு அந்த அதிகாரத்தை யார் கொடுத்தது?

கோபமாய் நினைத்தவள் அவனது அந்த நினைப்புக்கு சரியான சாட்டையடி கொடுக்க எண்ணினாள். மறுநாளே தனது மாடல் ட்ரெய்னராக பாஸ்கரை நியமித்து விடும்படி டெய்ஸியிடம் சொன்னாள்.

அவள் சொன்னதும் டெய்ஸியின் முகமே அதிர்வுக்குப் போனது.

''என்ன நந்தனா... பாஸ்கரையா?''

நந்தனா அமர்த்தலாய் தலையசைத்தாள்.

''நந்தனா...''

''ம்ம்...''

''பாஸ்கர் வேண்டாம். வேற யாரையாவது தேர்வு பண்ணிக் கலாமே?'' என்றாள் டெய்ஸியே குரலை தாழ்த்தி.

''எதுக்கு சொல்றீங்க..?''

''பாஸ்கர் ஒரு மாதிரி...''

''ஒரு மாதிரின்னா...?''

''பாஸ்கரைப் பற்றி இதுவரை வந்த மாடல் பொண்ணுக நல்ல அபிப்பிராயம் சொல்லலை...''

''அது தப்பா கூட இருக்கலாமே...''

''தென்.. ஓ.கே..!'' டெய்ஸி தோளைக் குலுக்கினாள். ''உன் விருப்பப்படியே பாஸ்கரை ட்ரெய்னரா ஏற்பாடு பண்றேன். ஆனா...''

''சொல்லுங்க...''

''ட்ரெய்னர்ன்னா... மாடல் கோச்சிங்குக்காக் பாஸ்கரோட சில வெளியிடங்களுக்கும் செல்ல வேண்டியிருக்கும்...'' டெய்ஸி அவள் மாறிவிடமாட்டாளா என்ற நப்பாசையில் இழுத்தாள்.

''நான் பார்த்துக்கறேன்...'' என்றாள் நந்தனா.

டெய்ஸியிடம் இருந்து அகலும்போது 'சரியான குரங்கு குணம் போல...' என அவள் முணுமுணுப்பது நந்தனாவின் முகத்தில் புன்னகையை வரவழைத்தது.

இவளுக்கே இப்படி கோபம் வருகிறதென்றால்... சரவணனுக்கு எப்படி வரும்...?

வரட்டும்... நன்கு வரட்டும்.

★ ★ ★

நந்தனா காத்திருந்தாள். பாஸ்கர் வரும் நேரம்தான்.

அன்றைய தினம்... ஆரம்ப நிலை பயிற்சிக்கான நடை ஒத்திகை தான் பார்க்க வேண்டும். ஸ்டேஜில் ஒய்யாரமாய், மிடுக்காய் அதே சமயம் அழகும் நளினமும் மிளிர நடக்க வேண்டும். அன்றைய பயிற்சியும் அதுதான்.

அது... ஹோட்டல் ஒன்றின் பெரிய விஸ்தாரமான மெரிடியன் ஹால் விதவிதமான வண்ணத்துப்பூச்சிகளின் படையெடுப்பு போல மாடல் பெண்கள். சரவணனின் கம்பெனியைப் போல் பத்து கம்பெனிகள் இந்த மாடலிங் அணிவகுப்பில் பங்கேற்கிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் சேலை, சுடிதார், மிடி, நைட்டி, கவுன்

என பொருட்களுக்கேற்ப நவீன டிசைனிங்குடன் மாடல் பெண்களை வைத்து தங்களது துணிகளை அறிமுகப்படுத்து வார்கள். அலங்கார அணிவகுப்பை பார்வையிட்டு ஒரு நடுவர் குழு சிறந்த உற்பத்தி பொருளைத் தேர்வு செய்யும். சான்றிதழ்களை வழங்கும். இதுவே 'மாடல் ஷோ'வின் பின்னணி.

நந்தனா பார்வையால் மற்ற மாடல் பெண்களையும் அவர் களுக்கு கற்றுத்தரும் டிரெய்னர்களையும் அதிசயமாய்ப் பார்த்தாள்.

எல்லாப் பெண்களுமே இயற்கை அழகை நம்பாமல் செயற்கை அழகில் மயங்கி விதவிதமான அழகுச் சாதனங்களை உடம்பில் நிறைத்திருந்தனர். ஆடை விஷயத்திலும் மேற்கிந்திய பாணியை பின்பற்றி குட்டைப் பாவாடையுடன் பளபள உரித்த வாழைத் தண்டு கால்கள் தெரிய நடமாடினர்.

அவளை மேலும் சிந்திக்க விடாதபடி யாரோ தோள்களைத் தட்ட திடுக்கிட்டுப் பார்த்தாள்.

பாஸ்கர் நின்றிருந்தான்.

''ஹாய் நந்தனா...'' என்றபடி அத்தனை பல்லையும் காட்டிய வன் அப்படியே அவள் உடலை ஊடுருவும்படி மேலிருந்து கீழ்வரை ஒரு பார்வை பார்க்க அவளுக்கு எரிச்சலாகத்தான் இருந்தது.

இருந்தாலும் பதிலுக்குப் புன்னகைத்து 'ஹாய்' சொன்னாள்.

''நந்தனா என்னை உங்க ட்ரெய்னரா தேர்வு செய்ததுக்கு ரொம்பவும் நன்றி. எனக்கு இந்த மாடலிங் கோச்சில் பத்து வருஷ அனுப்வம் இருக்கு. எப்படியும் இந்த கேம் ஷோவில் உங்களைத் தான் சிறந்த மாடல் பெண்ணாய் தேர்ந்தெடுக்கும்படி பண்ணி டுவேன்...''

''அப்படியா? ரொம்ப நன்றி...!''

பதில் சொல்லியபோது அவனது கோழிக் கண்கள் முகத்தில் இருந்து நழுவி அவளது நெஞ்சுப் பகுதியை முறைப்பது அவளை உறுத்தியது.

எரிச்சலானவள் மறுகணமே தன்னை மீறி என்ன நடந்து விடும் எனற நினைப்புடன் நிமிர்ந்து கொண்டாள். பாஸ்கரை ஒரு கணம் அளவெடுத்து பார்த்தாள். கறுத்த நிறமும், ஒல்லி உடம்புக்காரனாய் டைட் ஜீன்ஸும் டீ-சர்ட்டுமாய், சிக்கென இருந்தான். முடியை படிய வாரியிருந்தாலும் தெற்றுப் பற்கள் முகத்தை வசீகர மில்லாமல் செய்திருந்தன. கண்கள் மூலம் திருட்டுத்தனமாய் வருடும் பார்வையில் அவனது வக்கிரத்தனம் அப்பட்டமாய் தெரிந்தது. ஆனால் அவன் அதையெல்லாம் உணர்ந்ததாய் தெரியவில்லை. வழக்கம்போல் அவனுக்கும் அந்த 'மன்மத' நினைப்புதான்!

பின்னால் நந்தனா நடந்து வர ஸ்டைலான ஒய்யார நடை போட்டு ட்ரெய்னர் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான். அந்த பெரிய ஹாலில் பாலிமர் தடுப்பு போட்டு ஒவ்வொரு கம்பெனிக்கும் பயிற்சி இடத்தை ஒதுக்கியிருந்தார்கள்.

பாஸ்கர் அந்த தடுப்பு இடத்திற்குள் நுழைய... பின்னால் இவளும் நுழைவதை தூரத்தில் எழுந்து நின்று டெய்ஸி பார்த்துக் கொண்டிருப்பதை நந்தனா உணர்ந்தாள். அனேகமாய் இன்னும் கொஞ்ச நேரத்தில் சரவணன் வந்து விடுவான். டெய்ஸி முதல் வேலையாய் இதைத்தான் அவனிடம் சொல்லக் கூடும். நன்றாக சொல்லட்டும்.

நந்தனா ரூமினுள் நுழைந்ததும் அக்கறையாய் 'மாடல்' பாடத்தை ஆரம்பித்து விட்டான் பாஸ்கர். மாடலிங் பற்றி அவனுக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் ஒரு சிறிய பிரசங்கமே செய்தான். அதன் வழிமுறைகள், இதற்கு முன் தேர்வு

பெற்ற பெண்களின் விபரங்கள் என எல்லாவற்றையும் சொல்லி முடித்தான்.

முடிந்ததும், 'இனி நடை பயிற்சி செய்யலாம்' என ஸ்டேஜில் அழகாக நடந்து வருவதைப் பற்றி விளக்க ஆரம்பித்தான்.

நந்தனா எழுந்து அவன் சொன்னபடி நடந்து காட்டினாள்.

''ரைட்...! அப்படித்தான்...! ஒய்யாரமாய்... நளினமான நடை உங்களுக்கு...!'' என்றபடி அவள் அனுமதியில்லாமலே அவள் கரம் பற்றி உடன் நடந்து காட்டினான்.

சொல்லிக் கொடுப்பது போலவே முன்புறமும் பின்புறமுமாய் அவளை பார்வையால் துளைத்தான். ஒரிரு சமயம் தற்செயல் போல் அவளது தோள்களில் அவனது கரம் பட்டபோது வேகமாய் தட்டிவிட்டாள் நந்தனா.

இப்படியே ஒரு அரைமணி நேரம் பயிற்சி நடந்ததும் அன்றைய ஒத்திகை முடிந்து விட்டதாய் அறிவிக்கப்பட்டது. நந்தனா கிளம்ப ஆரம்பித்தாள். கூடவே அவளது கண்கள் சரவணனைத் தேடியது.

இதற்குள் வந்திருப்பானே... என்னாயிற்று? டெய்ஸி சொல்ல வில்லையா?

நினைப்புடன் ஹேண்ட் பேக்கை மாட்டியபோது பாஸ்கர் தயாராய் நெளிந்தான்.

''நந்தனா... நான் உங்க ஹோட்டல் வழியாகத்தான் போறேன். நான் ட்ராப் பண்றேன்...''

நந்தனா யோசித்தாள். வேண்டாம் என சொல்ல நினைத்தாள்.

அதற்குள் ஹாலுக்குள் சரவணன் நுழைவது தெரிந்தது. அவன் வருவது தெரிந்ததும் அவளது மறுப்பு மின்னலாய் மாறியது.

"ஓ.கே.... வர்றேன்... பாஸ்கர் வண்டியை எடுங்க...!" என்றாள்.

சரவணன் தூரத்தில் இருந்தே அவளையும் பக்கத்தில் பாஸ்கர் நின்று பேச்சுக் கொடுப்பதையும் கவனித்து விட்டான்.

நெருங்க... நெருங்க... நந்தனாவும் உரிமையாய் பாஸ்கரிடம் சிரித்துப் பேசியது அவனை துணுக்குறச் செய்தது.

அவனை அதிசயப்படுத்தும் விதமாய் இருவரும் சேர்ந்து நடந்தபடி ஹாலை விட்டு வெளிவந்தனர்.

பாஸ்கர் ஸ்டாண்டில் இருந்து பைக்கை எடுத்தான். தலையாட்டும் பூனைக்குட்டியாய் நடந்து அவனுக்கு பின்னால் உட்கார்ந்தாள் நந்தனா.

உட்கார்ந்த நந்தனா சரவணன் ஹாலின் ஜன்னல் வழியாய் தங்கள் இருவரையும் 'ஸ்தம்பித்து' பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

உணர்ந்ததும் அவளது இறுமாப்பு மேலும் கூடியது. வேண்டுமென்றே தனது கரங்களால் பாஸ்கரின் தோளை அழுந்த பற்றிக் கொண்டாள்.

சரவணனின் முகம் கறுத்து கண்கள் தீயாய் ஜொலிப்பதை மனம் குளிர பார்த்தபடி அகன்றாள்.



10

சரவணன் முகம்,சிறுத்து துடித்ததை பார்த்தபோது நந்தனாவுக்கு இனம் புரியா குதூகலமாய்த்தான் இருந்தது. எதையோ பழிவாங்கிவிட்ட உணர்வு எழும்பி அவளை சந்தோஷப்பட வைத்தது.

அவளைவிட பைக் ஓட்டிய பாஸ்கர் சந்தோஷத்தில் முகம் வெடித்துவிடும் அளவுக்கு ஆகிக் கொண்டிருந்தான். எல்லாம் நந்தனாவின் மென்மையான மலர்க்கரங்கள் அவன் தோளைத் தொட்டுக் கொண்டிருந்ததே காரணமாகும்.

வேண்டுமென்றே பைக்கை வேகமாய் ஓட்டியவன், வளைவுகளிலும், பள்ளங்களிலும் வேகத்தை குறைக்காமலே வண்டியை ருதி போட வைத்தான். அந்த வண்டி தடுமாற்றத்தில் நந்தனா பூக்குவியல் போல் தன் மேல் வந்து முட்டுவாள் என்பது அவனது எண்ணம்.

ஆனால் நந்தனாவோ அவனது எண்ணத்தை உணர்ந்து தவிர்த்து விட்டவள், முதல் வேலையாய் அவன் தோளைப் பற்றியிருந்த தனது கரங்களை விலக்கினாள். பைக்கின் பக்கவாட்டில் தெரிந்த பிடிப்பு கம்பியை இறுக பிடித்துக் கொண்டாள், மேடு பள்ளங்களில் அதிர்வுகளில் விரல் நுனி படாத அளவுக்கு தன்னை பாதுகாத்துக் கொண்டாள்.

பாஸ்கருக்கு இது ஏமாற்றமாய் இருந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் வண்டியை ஓட்டினான். வழி நெடுக... தான் பார்த்த சினிமா காதல் கதை ஒன்றை வரிவிடாமல் சொல்லிக் கொண்டு வந்தான். நந்தனா அதை கவனியாமல் வெறும் உம் கொட்டியவள் மனம் முழுக்க சரவணனைப் பற்றிய நினைப்பில் இருந்தாள்.

இந்நேரம்... இந்த கண்கொள்ள காட்சியைப் பார்த்த சரவணன் கொதித்துக் கொண்டு இருப்பான். நன்றாக கொதிக்கட்டும். நம்மை எப்படியெல்லாம் இம்சித்து நோகடித்தான். அதற்குப் பழிக்குப் பழியாய் இதை அவன் அனுபவிக்கட்டும்...

நந்தனா உள்ளுக்குள் நினைத்தபடிதான் நிலைமையும் இருந்தது. சரவணன் பாஸ்கருடன் நந்தனா செல்வதைக் கண்டு

மின்சாரத்தை தொட்டது போல் அதிர்ந்துதான் விட்டான். அதுவும் பாஸ்கரின் பைக் பின்னால் ஏறி அவன் தோளை அணைத்துப் பிடித்தது அவனைக் கடும் எரிச்சலடையச் செய்தது.

அதே கோபத்தோடு டெய்ஸியின் முன் போய் நின்று கேட்டான்.

டெய்ஸி புரிந்து கொண்டாள்.

''ஸார்... நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன் நந்தனா கேட்கலை...''

''கேட்கலையா?''

''ஆமா... பாஸ்கர்தான் ட்ரெய்னரா வேணும்னு பிடிவாதம் பிடிச்சாங்க...''

'அப்படியா சங்கதி...?' என முகம் இறுகியவன் பதில் பேசாமல் திரும்பி நடந்தான். தன் அறைக்கு போனான்.

இங்கு... பாஸ்கரோ நந்தனாவின் ஹோட்டலை அடைந்து பைக்கை நிறுத்தினான். நந்தனா இறங்கிக் கொண்டு அவனுக்கு புன்னகையுடன் விடை கொடுத்தாள்.

பாஸ்கர் பதிலுக்கு இளித்தபடி, ''நந்தனா இன்னிக்கு ஈவினிங் நீங்க ப்ரீதான்?'' என்றான்.

''எதுக்கு கேட்கிறீங்க?''

''இன்னிக்கு சாயங்காலம் பார்ட்டி ஒண்ணு இருக்கு...''

''ஐயோ! பார்ட்டியெல்லாம் எனக்குப் பிடிக்காது...''

முகம் சுளித்தாள் நந்தனா.

பாஸ்கர் படபடத்தான். ''நந்தனா, இது சாதாரண பார்ட்டியல்ல, டெக்ஸ்டைல் முதலாளிகளா சேர்ந்து நடத்துற பார்ட்டி. உங்க சரவணன் சார் கூட கலந்துக்குவாரு...''

சரவணன் பெயரைக் கேட்டதும் ஸ்விட்ச் போட்டது போல் நின்றாள். மறுநிமிடமே, ''பார்ட்டிக்கு... வருகிறேன்...'' என்றாள்.

அவள் சம்மதம் சொல்லியதும் பாஸ்கருக்கு தலைகால் புரியவில்லை. எம்பிக் குதிக்காத குறையாய் அவளைப் பார்த்தவன், ''பார்ட்டி பெரிய ஸ்டார் ஹோட்டலான மெஜஸ்டிக்குல நடக்கு. சரியா அஞ்சு மணிக்கு ஆரம்பிக்கும். நான் நாலுமணிக்கே வந்து உங்களை கூட்டிட்டுப் போறேன் ஓ.கே.யா?''

பதிலுக்கு நந்தனா தலையாட்டியதும் பாஸ்கர் பைக்கை திருப்பி விடைபெற்றுச் சென்றான்.

நந்தனா ரூமை நோக்கி நடந்தாள்.

அப்படியே ரூமைத் திறந்து பொத்தென சோபாவில் சாய்ந்தாள்.

தொலைபேசி சிணுங்கியது.

எடுத்தாள். மறுமுனையில் சரவணன்!

''ஹலோ, நந்தனாவா?''

''நந்தனாதான்...! சொல்லுங்க...'' என்றாள் எவ்வித உணர்ச்சியும் இல்லாத குரலில்.

''நான் சரவணன் பேசுகிறேன்...'' என்றபடி ஆரம்பித்தவன் தயங்குவது தெரிந்தது.

இவள் ஒரு வார்த்தை மேற்கொண்டு பேசாமல் மௌனமாகவே ரிசீவரை பிடித்துக் கொண்டாள்.

''நந்தனா... ஒரு முக்கியமான விஷயம்...''

''சொல்லுங்க...''

''பாஸ்கர்... பாஸ்கர் பற்றி...''

''ஏன்... அவருக்கென்ன.. ? எனி... ப்ராப்ளம்?''

''ப்ராப்ளம் ஒண்ணுமில்லை. பாஸ்கர் பற்றி ஒரு முக்கியமான தகவலை சொல்லியாகணும்...''

''தகவலா?''

''ஆமா .. அவனோட நட்பு உனக்கு வேண்டாம். அவனோட பழக்கத்தை துண்டிச்சிரு...!'' சரவணனின் குரல் மாறியது.

''எதுக்கு சொல்றீங்க?'' என்றாள் நந்தனாவும் குரல் உயர்த்தி.

''உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்..''

''எது நல்லதுன்னு எனக்குத் தெரியும். மற்றவங்க சொல்ல ணும்னு அவசியமில்லை .''

''இல்ல... நந்தனா பிடிவாதம் பிடிக்காத. இது வேற மாதிரி. ''

''வேறு மாதிரின்னா...?''

''பாஸ்கர் மாதிரி ஒரு ஆளை உலகத்திலே பார்க்க முடியாது...''

''அவ்வளவு விசேஷமானவரா ..?'' வேண்டுமென்றே சீண்டினாள்.

''இல்ல.. அப்படிப்பட்ட அயோக்கியன்.. . பொறுக்கி...''

''என்ன இது. கீறல் விழுந்த ரிக்கார்ட் பிளேயர் மாதிரி டெய்ஸி சொன்னதையே நீங்களும் சொல்றீங்க...''

''உண்மை அதான்! அதனாலதான் எல்லோரும் சொல்றோம். உன்னை எச்சரிக்கிறோம்.. ''

''உங்க எச்சரிக்கைக்கு நன்றி..''

''அவ்வளவுதானா....? நான் சொல்றதை கேட்க மாட்டியா?'' ஆதங்கமாய் அவன் குரல் ஒலித்தது இருந்தும் அவள் மசிய வில்லை.

''ஸாரி மிஸ்டர் சரவணன், எனக்கு நிறைய வேலைகள் இருக்கு. நீங்க பிறகு பேசறீங்களா?''

அவள் ரிசீவரை வைக்கப் போவதற்குள் டொக்கென கோபமாய் போனை வைத்தான் சரவணன். அவனது ஆத்திரம் நந்தனாவின் இதழ்களில் புன்னகையை வரவழைத்தது.

11

நந்தனாவும் வேறு எது பற்றியும் நினைக்கவில்லை. சரவணனின் கோபம் அந்த ஆத்திரம் அவளுக்கு இனிப்பாய் தித்தித்தது. ஏதோ தன்னை ஆளுகைப்படுத்தி அடிமைப்படுத் தியது போல் அல்லவா முன்பிருந்தே நடந்து வந்தான் இப்போது புரிந்து கொள்வான். இந்த நந்தனா யார்...? எப்படிப்பட்டவள் என்று .?

ஆத்திரமாக நினைத்தவள் அதே நினைப்புடன் மாலை மெஜஸ்டிக் ஹோட்டலில் நடக்க இருக்கும் பார்ட்டியில் கலந்து கொள்ள ஆயத்தமாகவும் செய்தாள். சிறுமலர் மொட்டுக்களால் நெய்யப்பட்டிருந்த பச்சை நிற பட்டுச் சேலை சூட்கேஸில் இருந்து எடுத்து தேர்வு செய்தாள் உடம்பை இறுக கற்றி சிக்கென இருக்கும். பார்ப்பவர்களை சுண்டி கவரும்படி ஒருவித அழகு எல்லோரும் அவளைப் பார்த்து மிரள வேண்டும். குறிப்பாக சரவணன் ...

உடல் முழுவதும் மாவும் எண்ணையும் தடவி அலுப்பு தீர குளித்தாள். குளித்த ஈரக் கூந்தலை நன்கு உலர்த்தி ட்ரையரால் வாரி ஒரு க்ளிப் போட்டு விரிய விட்டாள். ஷாம்பூ பளபளப்புடன் கூந்தல் பரந்து முதுகுப்பக்கம் விரிந்தது.

கண்ணாடி முன் நின்று அழகு பார்த்தபோது பளிச்சென்ற சேலை இவளது சிவப்பு நிறத்தை, கச்சிதமான உடம்பழகை எடுத்துக்காட்டியது. அவள் நினைப்பு மாதிரியே ஒப்பனையும் அலங்காரமும் அமைந்து விட்டதில் அவளுக்கு முழு திருப்தியும் ஏற்பட்டது.

காத்திருக்க ஆரம்பித்தாள்.

சரியாக நாலு மணிக்கு சொன்னபடியே பாஸ்கர் பைக் ஹாரனை அழுத்தியபடி வந்து விட்டான்.

தோல் போன்ற ஜெர்கின்ஸ் சட்டையும் புழுதி படிந்த டைட் ஜீன்ஸும் போட்டிருந்தான். மாடியிலிருந்து இறங்கி வந்த அவளை விழுங்குவது போல் பார்த்தான். ''வாவ்...! தேவதை போல் என்ன ஒரு அழகு...!'' என வாய் பிளக்க அதிர்ந்தவள், ''நந்தனா நீங்க பட்டத்து இளவரசி போல அழகா ஜொலிக்கிறீங்க...!'' என்றான் அசடு வழிய.

நந்தனா அவனையோ, அவனது பேச்சு பற்றியோ கவனியாமல் பார்ட்டியைப் பற்றிய நினைப்பிலே இருந்தாள். அவள் இப்படி அழகில் ஜொலிப்பதை அவன் சரவணன் பார்க்க வேண்டும். வாய் பிளந்து வியக்க வேண்டும். அது போதும் அவளுக்கு!

பைக்கை ஸ்டார்ட் செய்த பாஸ்கரின் பின்னால் அமர்ந்து கொண்டாள். வழிநெடுக பாஸ்கர் ஏதேதோ பேசி வீண் ஜம்பம் அடித்துக் கொண்டிருந்தான். அதையெல்லாம் கொஞ்சமும் கவனியாமல் இடை இடையே உம் கொட்டிக் கொண்டு வேறு நினைப்பிலே வந்தாள் நந்தனா.

அரை மணி நேரத்தில் இருவரும் ஹோட்டலை அடைந்து விட்டார்கள்.

பிரம்மாண்ட ஹோட்டல் அது. பல மாடிகளையும் குளிரூட்டப் பட்ட பெரிய பெரிய ஹால்களையும் கொண்டிருந்தது. பார்ட்டி நடக்கும் ரேயன் ஹாலுக்கான கிரானைட் படிக்கட்டில் இருவரும் ஏறினார்கள். பாஸ்கர் இதுதான் சமயம் என நந்தனாவின் பூ விரல்களோடு தனது கரங்களை மெல்ல கோர்த்து நடந்தான்.

கம்பளிப் பூச்சி ஊர்வது போல நந்தனா உணர்ந்து உதறப் போனாள். ஆனால், அதற்குள், ஹாலின் முகப்பில் பெரிய மலை போல் ஆஜானுபாகுவாய் கைகளை கட்டியபடி அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் சரவணன் தெரிந்து விட்டான்!

தூரத்திலிருந்து பார்த்தாலும் சிவப்பாய் பளபளக்கும் அவன் கண்களில் தான் என்ன ஒரு ஜுவாலையின் ஜொலிப்பு! அப்படியே சுட்டெரித்து விடுவது போல் அல்லவா அவளைத் துளைக் கிறது...

இவனுக்கென்ன வந்தது? யாருடன் யார் கையை பிடித்துக் கொண்டு போனால் இவன் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்?

மிடுக்கு குறையாமல் அதே ஒய்யாரத்துடன் பாஸ்கரின் கரங்களை பற்றியபடி அவனைத் தாண்டி நடந்து போனாள். அவனை கொஞ்சமும் சட்டை செய்யக்கூடாது என அவள் நடந்தாலும் ∴புல்பிரவுண் நிற கோட் சூட்டில் முதல் முறையாய் சரவணனை அப்போதுதான் அவளும் பார்க்கிறாள். பெரிய தொழிலதிபருக்குரிய கம்பீரத்துடன் ஆண்மை பொங்க நிற்கும் அவனைப் பார்த்த கண்கள் ஓரிரு நிமிடங்கள் படபடத்ததை அவளும் உணர்ந்தாள்.

சரவணன் நடப்பதை நம்ப முடியாதவன் போல் கடந்து போகும் நந்தனாவையும் பாஸ்கரையும் அதிர்ச்சி விலகாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பச்சை நிற சேலையில் தங்க நிற அழகாய்

தேவதை போல் மின்னி ஜொலிப்பவள். கருங்குரங்கு போலிருக்கும் ஒரு பொறுக்கியின் கைகளைப் பிடித்துக் கொண்டு நடக்கிறாளே... என ஆற்றாமையானான்.

நந்தனாவோ உள்ளே நுழைந்தாலும் அவளது ஓரக் கண் விழிகள் சரவணனையே பார்த்து அளவெடுக்க முயன்றது. தன்னை பாஸ்கருடன் பார்த்து அதிர்ந்து போய் விட்டான் என்பதை கண்டுபிடித்து விட்டாள். அதுவே அவளுக்கு இனம்புரியா குதூகலத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து பாஸ்கருடன் நடந்து பார்ட்டி நடக்கும் இடத்திற்குச் சென்று விட்டாள்.

பார்ட்டி நடக்கும் ஹாலின் நடுநாயகமாக மியூசிக் ட்ரூப் ஒன்று மெல்லிய இன்னிசையை தொடர்ந்து இசைத்துக் கொண்டிருந்தது. வரிசையாய் உட்காருவதற்கு வசதியாய் வட்ட வட்ட இருக்கைகள் விதவிதமான பெரிய மனிதர்கள். நகரின் முக்கியமான தொழிலதிபர்கள். அவர்களுக்கு தெரிந்த வேண்டப்பட்ட வி.ஐ.பிக்கள்... மாடலிங் இளம் பெண்கள்... என ஹால் முழுக்க கூட்டத்தால் நிரம்பி வழிந்தது.

மிக ருசியான பல தரப்பட்ட உணவுப் பதார்த்தங்கள் ஹாலின் இருபுறமும் பஃபே முறையில் சாப்பிடுவதற்கு வசதியாய் படைக்கப்பட்டிருக்க... பாஸ்கர் நந்தனாவை ஓரமான இருக்கை ஒன்றில் உட்கார வைத்தான். ''நந்தனா இருங்க.. முதல்ல நாம் சாப்பிடுவோம். உணவு வகைகளை கொண்டு வர்றேன்...'' என எழுந்து போனான்.

நந்தனா தலையாட்டியபடி சுற்றும் முற்றும் பார்க்க ஆரம்பித்தவள் தூரத்திலிருந்து சரவணன் நேராய் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள்.

அவளுள் ஒருவித படபடப்பு கூடியது.

சரவணன் அவளையே உறுத்துப் பார்த்தப்படி நடந்து வந்தான். முறைக்கிறானா.. என்ன.. என்ற சினத்தில் இவளும் பதிலுக்கு தனது மை விழிகளை உருட்டி சிறுபிள்ளைத்தனமாய் முறைத்தாள்.

சரவணன் வேகமாய் வந்தவன் அவள் இருக்கைக்கு ரொம்பவும் நெருக்கமாய் வந்து சட்டென எதிரான மற்றொரு இருக்கையில் உட்கார்ந்தான். அவன் அப்படி உட்கார்ந்த இருக்கையில் பக்கமாய் ஏற்கெனவே ஒரு இளம் பெண் சின்ன ஸ்கர்ட்டும் பனியனுமாய் அரைகுறையாய் உட்கார்ந்திருப்பதை நந்தனா கவனித்தாள்.

அவளை மேலும் ஆச்சரியப்படுத்தும் விதமாய் சரவணன் அவள் பக்கத்தில் அமர்ந்தவன், அந்தப் பெண்ணின் இடையை பற்றி தன் பக்கம் சாய்த்து அவளைத் தழுவுவது போல நெருக்கமாய் உட்கார்ந்து கொண்டான்.

நந்தனா இதை சற்றும் எதிர்பாராதவள் அப்படியே திகைத்துப் போனாள். யார் இவள்? காதலி போல் சரிந்து.. கட்டித்தழுவுகிறான் என்று அவள் நினைக்கும்போதே சரவணன் அந்தப் பெண்ணின் கன்னத்தில் முத்தமிட ஆரம்பித்து விட்டான். நந்தனாவால் அந்தக் காட்சியை சகிக்க முடியவில்லை. கடும் எரிச்சல் கொண்டவளாய் முகத்தை திருப்பி வைத்துக் கொண்டாள்.

அதற்குள் பாஸ்கர் இரண்டு பெரிய பீங்கான் தட்டுகளில் வகை வகையான உணவுப் பதார்த்தங்களை சுமக்க முடியாமல் சுமந்து மேஜை மீது வைத்தான். தான் கொண்டு வந்த உணவு வகைகளைப் பார்த்து அவள் முகம் மலர்வாள் என்று எதிர்பார்த்தவனுக்கு நந்தனா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க திரும்பியது ஆச்சரியமாயிருந்தது.

''என்ன... என்னாயிற்று நந்தனா?'' என்றான் பதற்றமாய்.

''ஒன்றுமில்லை...!'' எரிந்து விழுந்தாள் நந்தனா. அவளது கண்கள் எதிரில் சரவணனையே பார்த்துக் கொண்டிருந்தது. சரவணன் தழுவியது போதாதென்று இப்போது அந்த இளம் பெண்ணும் சரவணனின் கழுத்தை வளைத்து தோளோடு தழுவிக் கொண்டிருந்தாள்.

''என்ன நந்தனா... சாப்பிடுவோமா?'' என்றான் பாஸ்கர் அவள் நிலைமை புரியாமல்.

''சாப்பாடும் வேண்டாம்... ஒன்றும் வேண்டாம்...!''

''வேண்டாமா... என்ன நந்தனா?''

''எனக்குப் பசிக்கவில்லை...!'' என்றாள் எரிச்சலாய்.

''பசிக்கவில்லையா... ஏன்...?''

''இல்லையென்றால்... இல்லைதான்... விட்டுவிடுங்கள்...!''

அதற்குள் சரவணனை கழுத்தோடு வளைத்து அவனைத் தழுவிய அந்தப் பெண் மெல்ல சரவணன் கன்னத்தில் முத்தமிட... ஆரம்பிக்க... அவ்வளவுதான்... அதற்குமேல் நந்தனாவால் பொறுக்க முடியவில்லை.

பார்க்க சகிக்க முடியாதவளாய் படக்கென எழுந்து விட்டாள்.

பாஸ்கர் புரியாமல் விழித்தான்.

''என்ன நந்தனா... என்னாயிற்று...?'' என்றபடி பாஸ்கர் பதற நந்தனா விறுவிறுவென நடக்க ஆரம்பித்து விட்டாள். பாஸ்கர் தலையை பரபரவென ஆட்டியபடி புரியாமல் பின் தொடர்ந்தான். நந்தனா நேராய் அங்கிருந்து மியூசிக் ட்ரூப் இருந்த பக்கம் சென்றாள். ட்ரூப்பில் புதிய பழைய திரைப்பட பாடல்களை இன்னிசைத்து பாடிக் கொண்டிருந்தார்கள்.

நந்தனா அந்த இன்னிசையைக் கேட்பது போல் அங்கு கிடந்த இருக்கைகளில் ஒன்றில் அமர்ந்தாள். பக்கத்தில் பூனைக்குட்டியாய் பின் தொடர்ந்த பாஸ்கரும் உட்கார்ந்தான். ''எனக்கும் இதுபோன்ற மெல்லிய இன்னிசை கேட்கப் பிடிக்கும்...'' என்றான் நந்தனாவைப் பார்த்து அசட்டுப் புன்னகையை வழிய விட்டவாறு. அவனுக்கு எல்லாவற்றையும் விட எங்கே நந்தனா கோபித்துக் கொண்டு விருட்டென போய்விடக்கூடாதே... என்ற பயமே பெரிதாய் எழும்பி ஆட்டிப் படைத்தது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் சென்று விடக்கூடாது... என்பதற்காக வாலைச் சுருட்டிக் கொண்டு பொறுமையாய் உட்கார்ந்திருந்தான்.

நந்தனா மெய்மறந்து இன்னிசையைக் கேட்பது போல் முகபாவத்தை வைத்துக் கொண்டாலும் உள்ளுக்குள்ளே குமைந்தாள். கூடவே, சரவணன் என்ன செய்தால் என்ன...? எந்தப் பெண்ணுடன் சரஸமாடினால் என்ன...? நமக்கு ஏன் கோபம் வருகிறது? என வெறுப்பாகவே நினைத்தாள்.

ஆனாலும் அவள் நெஞ்சு தணிந்தபாடில்லை. என்ன தைரியம் அவனுக்கு... நம் கண் முன்னால் இன்னொரு பெண்ணை தொட்டுத் தழுவிக் கொண்டு...? இதில் கன்னத்தில் முத்தம் வேறு..? பதிலுக்கு பதில் செய்கிறனோ? பாஸ்கருடன் தான் பழகுவதால் வெறுப்பேற்ற இப்படிச் செய்கிறானா...? அப்படிப் பார்த்தாலும் அவள் பாஸ்கருடன் வெறும் பேச்சும் நட்பும் தானே வைத்திருக்கிறாள்? அவனைப் போல் கட்டித்தழுவிக் கொண்டா நடமாடுகிறாள்? என்ன நினைத்து விட்டான் இந்த சரவணன்?

வெகுண்டு போனவளாய் நெஞ்சு விம்மித்தாழ வெகுநேரம் யோசித்தாள். பதிலுக்கு எதாவது செய்து சரவணன் முகத்தில் கரியைப்பூச வேண்டும். அவன் திமிரை அடக்க வேண்டும் என்றே அவளது மனம் எண்ணியது.

பாஸ்கருக்குத்தான் நடப்பவை ஒன்றும் புரியவில்லை. நந்தனாவின் போக்கு புரியாமல் திருதிருவென விழித்தான். திடீரென இவளுக்கு என்னவாயிற்று என்று குழம்பவும் செய்தான்.

நந்தனா கொதிப்பு அடங்காமல், அதற்கு மேல் உட்காரப் பிடிக்காமல் அங்கிருந்து எழுந்தாள். விறுவிறுவென வலதுபுற ஓரமான ஹாலுக்கு சென்றாள். பாஸ்கரும் பூனைக்குட்டியாய் அவளை பின் தொடர்ந்தான். அந்த ஹாலில் டிஸ்கோ இசை அலறிக் கொண்டிருக்க...

அதற்கேற்ப ஆணும் பெண்ணும் நடனமாடிக் கொண்டிருந்தனர். நந்தனா முகம் சுளித்தவளாய் திரும்பப் போனவள்.. தற்செயலாய் ஒரு தம்பதியின் மீது பார்வை பட விக்கித்து நின்றாள்.

அது... சரவணன் தான்! கூட அந்த அரைகுறை இளம் பெண்! சரவணன் கைகளால் வளைத்து அவள் இடுப்பை பிடித்திருக்க... அவள் சரவணனின் தோள்களை தழுவியிருக்க... சே....! என்ன ஒரு கன்றாவி...! வெட்கமில்லாமல் டிஸ்கோ நடனம் வேறா...?

மறுபடியும் எரிச்சலாகி திரும்பி நடந்தாள். பாஸ்கர் புரியாமல் முன் வந்து, ''நடனம் ஆட வேண்டுமா நந்தனா?'' என்றான்.

''ச்சீ...'' என்றபடி நந்தனா நடந்தாள்.

அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இந்த ஆத்திரம், கோபம், வெறுப்பு எல்லாம் சரவணனை இன்னொரு பெண்ணுடன் பார்த்தவுடன் ஏன் தனக்கு வருகிறது...? சரவணன் எப்படிப் போனால் நமக்கென்ன? என்ற நினைப்பும், திடீரென அவளுள் எதையோ இழந்து விட்டது போல் பரபரப்பாய் நின்றாள். உட்கார்ந்தாள். எழுந்தாள். என்னென்னவோ செய்தாள்... எதிலுமே அவளுக்கு லயிப்பில்லை.

மேலும் பத்து நிமிடம் சென்றிருக்கும். ஹோட்டலின் மறு முனைப் பகுதியை சுற்றிப்பார்ப்பது போல் விறுவிறுவென நடந்து அடைந்தாள்.

அங்கு விஸ்தாரமான புல்தரையுடன் அழகான சிறுசிறு செடிகளை வைத்து தோட்டம் போல் வைத்திருந்தார்கள். அங்கு கொஞ்ச நேரம் மனதை அமைதிப்படுத்த நின்றாள். விதவிதமான செடிகள், அழகழகான வண்ணங்களில் பூக்கள், உடலை வருடும் மெல்லிய தென்றல் என அந்தச் சூழ்நிலையே அவளுள் ஒருவித நிதானத்தை உண்டு பண்ணியது.

அதற்குள் பின்னாலே வால் பிடித்து வந்த பாஸ்கரும் அவள் செடிகளின் விதவிதமான மலர்களை ரசிக்கிறாள் என்ற எண்ணத்தில் படக்கென ஒரு ரோஜா மலரை கிள்ளி பெரிய ரோமியோ போல் நீட்ட தலையசைப்பிலே மறுத்தபடி நடந்தாள் நந்தனா.

இம்முறை பாஸ்கரும் எரிச்சலானான். நந்தனாவுக்காக தனது வில்லத்தனமான சுபாவத்தை மாற்றி நல்லவன் போல் நடிப்பது அவனுக்கு பெரும் கஷ்டமாய் இருந்தது. இருந்தாலும் நந்தனாவின் அழகிற்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு நடந்தான்.

நந்தனா அப்படியே நடந்து ஹோட்டலின் பின்புற வாசலை அடைந்து விட்டாள். அதன்படி வழியாக இறங்கப் போனவளின் கண்களில் அந்தக் காட்சி பட்டு விட்டது.

பின்புற கார் பார்க்கிங் இடத்தில் சரவணன் தனது காருக்குப் பக்கத்தில் நின்று கொண்டு, பக்கத்தில் நின்ற, தன்னுடன் ஆடிய அந்த குட்டைப் பாவாடை பெண்ணிற்கு பர்ஸிலிருந்து பணத்தை எடுத்து நீட்டிக் கொண்டிருந்தான்.

நந்தனாவுக்கு மெல்ல எல்லாம் புரிய ஆரம்பித்துவிட்டது.

ஆக... சரவணன் முத்தமிட்டது. அவன் ஆடியது... எல்லாம் தெரிந்த பெண்ணோ... காதலியோ அல்ல... வாடகைப் பெண்! பணத்திற்காக நெருக்கமாக இருப்பது போல் நடித்திருக்கிறாள்!

நந்தனா பெரும் நிம்மதி அடைந்தாலும், எதற்காக அவன் இப்படிச் செய்தான் என்பதை நினைக்கும் போது அவளுள் சினம் அதிகமாயிற்று.

12

நந்தனா ரூமிற்கு திரும்பி விட்டாள். ஒருகணம் என்ன செய்வதென்றே புரியவில்லை. நந்தனாவுக்கு நேராகச் சென்று இருவரையும் கையும் களவுமாய் பிடித்திருக்கலாமோ என்று கூட நினைத்தாள்.

ஆனால் இப்படி சரவணன் வாடகைப் பெண்ணுடன் காதல் சரஸமாடுவது எதற்காக? யாரை ஏமாற்றுவதற்காக?

நந்தனா யோசித்தபோது அவளுக்கு எல்லாம் புரிந்தது.

தனக்கும் பாஸ்கருக்கும் உள்ள பழக்கம் பிடிக்காமல் சரவணன் செய்த ஏற்பாடு இது.

அதற்காக இப்படியொரு நாடகம்!

நினைத்தபோது அவள் கோபம் அதிகமாகி உதட்டை அழுந்த கடித்தாள். விடக்கூடாது... சரவணனை இன்னும் வெறுப்பேற்ற வேண்டும். நம்மைச் சீண்டும் அவனைப் பழிவாங்க வேண்டும்.

அதற்கு வழி...?

இருக்கிறது... பாஸ்கர்.. பாஸ்கர்தான்! பாஸ்கருடன் இன்னும் நெருக்கமாக பழக வேண்டும். அப்படி பழகினால்தான் சரவணனின் முகத்தில் கரியைப் பூசினது போலிருக்கும்.

நந்தனா யோசித்து முடிவெடுத்தவள் மறுநாளில் இருந்து தனது திட்டத்தை செயல்படுத்த ஆரம்பித்தாள்.

வேண்டுமென்றே தினம் பாஸ்கரை தனது ஹாஸ்டலுக்கு வரச் செய்து, அவனுடன் பைக்கின் பின்னால் உட்கார்ந்து கொண்டு நடன ஒத்திகைக்கு கிளம்பினாள் நந்தனா.

ஹோட்டல் கட்டிடத்தை நெருங்கும்போது வேண்டுமென்றே அவனது தோளில் கைவைத்துக் கொள்வாள். அவள் நினைப்பது போலவே கட்டிட வாசலில் கைகளைக் கட்டியபடி தயாராய் இருப்பான் சரவணன். அவளைக் கண்டதும் அந்த நிலையில் பார்த்ததும் அவன் முகம் கறுத்து விடும். முறைத்தபடியே அவளையும் பாஸ்கரையும் விழுங்குவது போல் பார்ப்பான்.

அவள் நந்தனா அசால்ட்டாய் நடந்து அவனை கடந்து செல்வாள். இப்படியாக இரண்டு மூன்று தினங்கள் நகர்ந்தது. இது போதாதென்று, சரவணனை வெறுப்பேற்ற அவளது ஒத்திகை ரூமிற்கு அவன் வரும் போதெல்லாம் பாஸ்கருடன் விழுந்து விழுந்து பேச ஆரம்பித்தாள்.

அப்படி பாஸ்கருடன் பேசுவதும் அவளுக்கு சுளுவான விஷயமாகவே இருந்தது. எதாவது ஒரு விஷயத்தை ஆரம்பித்து விபரம் தெரியாதது போல் கேட்டால் போதும்... பாஸ்கர் மடை திறந்த வெள்ளம் போல் சளசளவென பேச ஆரம்பித்து விடுவான். நந்தனா வெறும் தலையை ஆட்டியபடி எதிரே அங்குமிங்கும் அவளைப் பார்த்தபடி நடமாடும் சரவணனின் முகக்குறிப்பை ஆராய முற்படுவாள். அவன் முகம் இறுகி நடமாடுவது அவளுள் ஆனந்தத்தை உண்டு பண்ணியது.

மேலும் அந்த வாரம் முழுவதும் மாடலிங் நடனத்துக்காக கடுமையான ஒத்திகை பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எந்த முறையும் இல்லாது இந்த முறை மாடல் ஷோவில் சிறு நடன நிகழ்ச்சியும் சேர்த்திருந்தார்கள். மேல் நாட்டு வெஸ்டர்ன் இசைக்கேற்ப மாடல் பெண்கள் சிறுசிறு நடன அசைவுகளுடன் ஆடுவது போன்ற ஏற்பாடு.

அதற்கான ஒத்திகை அன்றிலிருந்து ஆரம்பமானது. நந்தனா வெள்ளையும் பிங்க்கும் கலந்த பூவிதழ் சல்வார் ஒன்றை தனது உடையாய் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அந்த உடை மாற்றிப் போட்டுக் கொண்ட போது சல்வார் உடம்பை ஒட்டியபடி சிக்கென இருந்தது. இறுக்கமான அமைப்பு முன்புற அழகுகளை எடுத்துக் காட்டுவது போல் தெரிய கறுப்பு நிற துப்பட்டாவால் நெஞ்சுப் பகுதியை மறைத்து சுருக்கிட்டாள்.

ஒப்ப்னை அறையிலிருந்து வெளிவந்து நடன ஒத்திகையை உடனே ஆரம்பித்து விட்டாள். பாஸ்கர் அதற்குள் விதவிதமான மியூசிக்குகளை ஓடவிட்டு நல்ல இசை ஒன்றை தேர்ந்தெடுத்திருந் தான். நந்தனாவிற்கும் அந்த இசை பிடித்துப் போக... அதற்கேற்ப நடன அசைவுகளை ஏற்படுத்துவது என இருவரும் முடிவு செய்தார்கள்.

பாஸ்கர் சபல புத்திக்காரனாய் இருந்தாலும் நடன விஷயத்தில், உடை விஷயத்தில் ஓரளவு விஷய ஞானம் இருந்தது. டக் டக்கென வெவ்வேறு நடன அசைவுகளை செய்து காண்பித்து நந்தனாவை ஆச்சரியப்பட வைத்தான். அவனது ஒல்லியான உடல்வாகு அதற்கேற்ப வளைந்து நெளிந்து அசைவுகளுக்கு ஒத்துப் போனது.

நந்தனா அவன் சொல்லிக் காட்டிய நடன அசைவுகளை அப்படியே மனதில் பதிய விட்டு அதற்கேற்ப செய்து பார்த்தாள். விரல் அபிநயமும் கை அசைவும் கரெக்டாக இசைக்கேற்ப

ஒத்துப்போக... இடுப்பை ஒரு சின்ன சுழல் ஆட்டம் போடும் விதம் அவளுக்கு பிடிபடவில்லை. மறுபடி மறுபடி செய்து பார்த்தாள். எவ்வளவு முயன்றும் பாஸ்கர் செய்வது போல் இடுப்பை ஒரு அழகான வளைப்பு வளைத்து திருப்ப அவளால் முடியவில்லை.

"டோன்ட் வொரி, நான் சொல்லித் தாரேன்..." என்றபடி பாஸ்கர் முன் வந்து அவளது கைகளையும் இடுப்பையும் பற்றி அணைத்துப் பிடித்தான். அவனது தொடுகை அவளுக்கு எரிச்சலாய் இருந்தாலும் நடன அசைவை புரிந்து கொள்ள அவன் சொல்லித் தர வேண்டிய அவசியமும் புரிய பற்களை கடித்து அமைதி காத்தாள்.

பாஸ்கர் அவள் இடுப்பை அணைத்து பிடித்தபடி அந்த நடன அசைவை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தான். அந்த நேரம் பார்த்து சரவணன் அங்கு நுழைய, பாஸ்கரும் நந்தனாவும் இருந்த காதலர் போன்ற கோலத்தைப் பார்த்த அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. விருட்டென கோபமாய் வெளியேறினான் சரவணன்.

13

நந்தனா சரவணன் திடீரென அங்கு வந்ததையோ, அவர்கள் இருவரையும் பார்த்து விட்டு கோப மாய் வெளியே சென்றதையோ கொஞ்சமும் கவனிக்கவில்லை. அவள் பாட்டுக்கு அன்றைய நடன ஒத்திகையை முடித்து விட்டு ரூமிற்கு திரும்பி விட்டாள்.

ரூமில் வழக்கம் போல அலுப்பு தீர குளித்து உடை மாற்றி மெல்லிய நைட்டிக்குள் நுழைந்து அப்படியே படுக்கையில் சாய்ந்த

போதுதான் யாரோ படபடவென கதவைத் தட்டும் ஓசை கேட்டது.

யார் இப்படி தட்டுவது? என எழுந்து திறந்தவள் வெளியே நின்றவனைக் கண்டு அதிர்ந்தாள்.

அங்கு கண்கள் ஜொலிக்க எரிமலையாய் நின்று கொண்டிருந்தது சரவணனேதான்!

அவன் ஆத்திரமாக நிற்பதை மை விழிகளை விரித்துப் பார்த்தவள் என்ன விஷயமாயிருக்கும்... என யோசிக்க முயன்றாள்.

ஆனால் அதற்கெல்லாம் பொறுமையில்லாதவனாய் அவளைத் தள்ளாத குறையாய் புயல் போல் ரூமிற்குள் நுழைந்தான் சரவணன்.

இரை தேடும் சிங்கம் போல் கண்களில் தீப்பொறி பறக்க அவன் ஆவேசப்படுவதை இப்போதுதான் முதல் முறையாய் பார்க்கிறாள் நந்தனா.

ஆச்சரியமும் அதிர்வுமாய் அவனைப் பார்க்க வெடித்தான் சரவணன். ''என்ன பார்க்கிறாய்...? உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் நான் இவ்வளவு சொல்லியும் கேட்காமல், என் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்காமல் நீ பாட்டுக்கு அலைந்து கொண்டிருப்பாய்?'' என்றான் சரவணன் ஆவேசமாய்.

அமைதியாய் இருப்பவன் காட்டுக்கத்தல் போடுவதைக் கண்டு அதிர்ந்து, ''என்ன சொல்கிறீர்கள்...? எனக்குப் புரியவில்லை...?'' நந்தனா எந்த வித உணர்ச்சியுமில்லாமல் குழப்பமாய் கேட்டாள். சரவணன் மேலும் ஆத்திரமானான்.

கோபம் அடங்காதவனாய் அவன் முன் வந்து அவளது தோள்களை அழுந்தப் பற்றியவன், ''ஓஹோ... அது கூட தெரியாதா... இல்லை மறந்தது போல் நடிக்கிறாயா? உன்னை...

உன்னை..'' என்றபடி கைகளை எடுத்து அவள் கழுத்தை நெறிப்பது போல் கொண்டு வந்து நிறுத்தியவன், ''அந்தத் தடியன் பாஸ்கரைப் பற்றி கேட்கிறேன்? யாரடி அவன்? நேற்று வந்த அவனுடன் உனக்கு என்ன தொடர்பு? ஏன்.. தினம் தினம் அவனுடன் கூத்தடிக்கிறாய்?''

அவனது முரட்டுத்தனம் அவளுக்கு புதிராயிருந்தது. சரவணனை முறைத்தப்படி பீறிடத்துடித்த கோபத்தை அடக்கிக் கொண்டாள் நந்தனா.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றாள். அதே உணர்ச்சியற்ற தொனியில் அவன் கைகளை தட்டி விட்டபடி. ஆனால் சரவணன் அவளை ஒரு உலுக்கு உலுக்கி கண்களால் முறைத்தவன், ''ஒன்றுமில்லை என்றால் விட்டு விடுவேனா..? பதில் சொல்... அப்படியென்ன அந்த தடியனோடு ரகசியம் இருக்கிறது? எல்லாவற்றையும் நான் பார்த்து விட்டேன். எல்லாம்தான் வெட்ட வெளிச்சமாகி விட்டது. நீ தினம் அவனோடு சரஸமாடுகிறாய். அதற்கு பதில் சொல்...!'' என்றான்.

மீண்டும் அவனைத் தள்ளி விலக்கியவள், ''ஏன் ஆவேசப் படுகிறீர்கள்? நீங்கள் நினைப்பது போல் ஒன்றும் இல்லை!'' என்றாள் நந்தனா திடமான குரலில்.

அவளுக்கு அவனது கடுமையான பேச்சு புதிராகவே இருந்தது.

ஆனால் சரவணன் அதற்கும் வேறு அர்த்தம் கற்பித்தான்.

''ஆமாம்... நான் நினைப்பது போல் இல்லை... அதை விட நீ படு மட்டமாய் இருக்கிறாய்... உன்னைப் போன்ற ஈனப் பிறவியை நான் பார்த்ததில்லை...''

சரவணன் கைவிரல்களை ஏளனமாய் வீசிக்காட்டினான்.

அதற்கும் அவள் பதில் சொல்லாமல் இருக்கவே மறுபடியும் அவளைக் குத்தினான்.

''அப்படி என்னதான் அவனிடம் இருக்கிறது? தினம் தினம் அவனுடன் இந்த ஆட்டம் போடுகிறாய்? ம்...ம்... பதில் சொல்... சொல்லுடி!''

''உங்கள் அற்பமான கேள்விக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது...''

''என்ன அற்பமா? என்னடி பசப்புகிறாய்...? உன் குட்டு உடைந்து விட்டதும் என்ன செய்வதென்று தவிக்கிறாயா?'' அப்போதுதான் அவன் 'டி' போட்டு ஏகபோகமாக பேசுவதை நந்தனா ஆத்திரமாக உணர்ந்தாள்.

''மிஸ்டர்... கொஞ்சம் மரியாதையாய் பேசுங்கள்...'' என்றாள் அதே ஆத்திரத்துடன்.

''என்ன... மிஸ்டரா? அதற்குள் என் பெயர் மறந்துவிட்டதா? அது சரி... தினம் அந்த பாஸ்கர் தடியனுடன் கூத்தடித்தால் என் பெயர் மறந்து தான் போகும்...!''என்றான் சரவணன் இகழ்ச்சியாக.

''என்ன உளறுகிறீர்கள்?'' என்றாள் நந்தனா ஆவேசமாக.

''நான் ஒன்றும் உளறவில்லை. எனக்கு எல்லாம் புரிந்து விட்டது...''

''என்ன புரிந்தது?''

''உன்னால் அடக்க முடியவில்லை...''

''என்ன... அடக்க முடியவில்லையா?''

''ஆமாம்... உன் உடம்பு உணர்ச்சிகளை உன்னால் அடக்க முடியவில்லை. அதான் அவிழ்த்துப் போட்டு ஆடாத குறையாய் கண்டவனுடன் சுற்ற ஆரம்பித்து விட்டாய்...''

''ச்சீ... உங்கள் அசிங்கமான கற்பனைகளை நிறுத்துங்கள்..!'' என்றாள் நந்தனா காதை பொத்திக் கொண்டு.

''நிறுத்துகிறேன்... ஆனால் அதற்கு நீ ஒன்று செய்ய வேண்டும்...'' என்றான் சரவணன்.

மறுபடியும் என்ன சொல்லப் போகிறான். வார்த்தையால் என்ன குத்து குத்தப் போகிறான் என்று பயந்தே நந்தனா பார்த்தாள்.

அவள் நினைத்தது போலவே சரவணன் ஓங்கி இதயத்தில் குத்தினான்.

''இதோ பார்... நந்தனா, உன்னைக் கோபுரமாய் நினைத்து மனதில் பூஜித்து விட்டேன். ஆனால் நீ குப்பை மேடு என்று இப்போது புரிந்து விட்டது. அதனால்... என்ன... பரவாயில்லை... நீ.. விரும்புவது போல் அந்த உடல் உணர்ச்சியை உடம்பு சுகத்தை வேறு எவனோ தருவதற்குப் பதில் நானே தருகிறேன்! அதுவும் இப்போதே... இங்கு... வைத்தே! வா! வருகிறாயா...? அந்த இன்பக் கடலை நாம் இருவரும் சேர்ந்தே கடப்போம்..'' என்றபடி நந்தனாவை அப்படியே கீழே தள்ளி... மேலே சாய்ந்து அவளை... அணைக்க முயன்றான்.

நந்தனாவுக்கு வந்ததே ஆத்திரம்.

உடல் பலம் முழுவதையும் திரட்டி அவனை ஓங்கித் தள்ளிவிட்டாள்.

எகிறிப் போய் விழுந்தான் சரவணன்.

''ச்சீ...! என் கண் முன் நிற்காதீர்கள்...! போங்கள்...!'' என்றாள் நந்தனா கத்தியபடி. கோபத்தில் ஆத்திரத்தில் அவளுக்கு மூச்சு வாங்கியது அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

''உங்களின் அசிங்கமான கற்பனைகளை உங்களுடனே வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பெண்ணிடம் என்னதான் பேச

வேண்டும் என்ற வரைமுறை தெரியாத நீங்கள் நல்லவரா?... இல்லை! அற்பப்புத்தி... உங்களுக்குத்தான்! நீங்கள் தான் மோசமான ஆள்! உங்களை விட அந்த பாஸ்கர் எவ்வளவோ மேல் தான்...!'' என்றவள் ஆவேசம் குறையாமல் தொடர்ந்தாள்.

''இப்போது சொல்கிறேன். நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் துளைத்து துளைத்து கேட்டீர்களே... பாஸ்கருக்கு எனக்கும் என்ன தொடர்பு என்று? அது என்னவென்று இப்போது முடிவு செய்து விட்டேன்... இந்த நொடியில் இருந்து பாஸ்கர்தான் என் காதலர்... அவரைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். போதுமா?''

திடமான உறுதியான வார்த்தைகளில் இடிபோல் முழங்கினாள் நந்தனா. அவள் சொல்வதைக் கேட்டு அப்படியே அதிர்ந்து சிலையான சரவணன் விக்கித்துப் போய் விறுவிறுவென அங்கிருந்து வெளியேறினான்.

14

நந்தனாவுக்கு எப்படித்தான் அவ்வளவு கோபம் வந்தது. எப்படித் தான் அப்படி ஒரு முடிவு எடுக்க துணிந்தாள் என்று தெரியாது. வீராப்பாய் சொல்லியவள் அதுவே சரியானது என நினைப்புடன் நடக்கவும் ஆரம்பித்து விட்டாள். அடுத்து வந்த இரண்டு நாட்களும் அவளும் சரவணன் முகத்தில் விழிக்க விரும்பவில்லை. சரவணனும் அவள் முகத்தில் விழிக்க விரும்பவில்லை.

தவிர்த்த படியே நடந்தனர். எதிர் எதிரே வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் முகத்தை திருப்பியபடியே கடந்தனர். பாஸ்கர் தான்

நந்தனாவின் நடவடிக்கைகளை சரவணனின் செய்கைகளை உற்றுப் பார்த்தவன் விஷயத்தை கண்டுபிடித்து விட்டான்.

ஏற்கெனவே நந்தனாவும், சரவணனும் தெரிந்தவர்கள். காதலர்கள் போல் நன்கு பழகியவர்கள். ஏதோ பிரச்சினை ஏற்பட்டு பிரிந்து ஒருவர் மேல் ஒருவர் கோபமாய் இருக்கிறார்கள். இதுதான் இவர்களது மர்மமான நடவடிக்கைகளுக்கான விஷயம்...

பாஸ்கர் கண்டுபிடித்ததும் நிதானமாய் ஒரு நாள் முழுக்க உட்கார்ந்து யோசித்து பிளானும் செய்தான். நந்தனா விஷயத்தில் இனி அவசரப்படக்கூடாது. சில்லரை சில்மிஷங்கள் செய்யாமல் நல்லவன் போல் நடிக்க வேண்டும். அலைபாயும் நந்தனா மனதை அப்போதுதான் வீழ்த்தி நம் வசப்படுத்த முடியும். மனதிற்குள் அப்படி ஒரு திட்டத்தை உருவாக்கினான் பாஸ்கர்.

அதற்கேற்றாற்போல் நந்தனாவும் அவனோடு பழக்கத்தை நெருக்கமாக்க முயல, பாஸ்கர் தனது 'தொடுதல்' சில்மிஷத்தை அறவே விலக்கி, நல்ல பிள்ளையாய் நடமாடினான். நடன ஒத்திகையின் போதும், மாடலிங்கின் முக்கிய அங்கமான 'கேட் வாக்' சொல்லிக் கொடுக்கும்போதும் தனது நடவடிக்கையில் கண்ணியத்தை காட்டினான்.

அனாவசியமாய் நந்தனாவுடன் பேசி லெக்சர் அடிப்பதைக் கூட குறைத்துக் கொண்டான். தன் வேலையுண்டு தான் உண்டு என்பது போல் யோக்யனாய் ஆகிவிட்டான். நந்தனாவுக்கே ஒரே ஆச்சரியம்...! பாஸ்கர் எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் மாறி விட்டான் என அதிசயித்தாள்.

கூடவே சரவணன் மீது ஏற்பட்டிருந்த தீராத கோபம் ஆவேசமாக மாறி பாஸ்கருடன் அவளை நெருங்கி பழகச் சொல்லிற்று. அவளே வலியப் போய் பாஸ்கருடன் பேச

ஆரம்பித்தாள். ஷாப்பிங் செல்வதற்கு வேண்டுமென்றே அவனைத் துணைக்கு அழைத்தாள்.

அவள் அழைப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டு பாஸ்கரும் உடன் சென்றான். சனிக்கிழமை மாலை நேரங்களில், 'போரடிக்குமே நந்தனா...' என அவளுக்கு அழைப்பு விடுத்து பீச்சுக்கு கூட்டிப் போனான்.

அப்படி ஒரு நாள் பாஸ்கரும் நந்தனாவும் பீச்சுக்கு சென்ற சமயம் பார்த்து, தற்செயலாய் சரவணனும் பீச்சுக்கு வந்திருந்தான். கடற்கரை பீச் மணலில் காலாற நந்தனாவும், பாஸ்கரும் நடந்து வர... எதிரே... அலைகளை ரசித்தபடி வந்த சரவணனும் நேருக்கு நேராய் வந்து விட்டான்.

நடந்து வந்த இருவரும் பக்கத்தில் வந்ததும்தான் திடுக்கென உணர்ந்தார்கள். ஷாக் அடித்தது போல் நின்றார்கள்.

சரவணன் எரித்து விடுவது போல் நந்தனாவைப் பார்த்தான். அவனது தீயான பார்வையைக் கண்டு வெகுண்ட நந்தனா அவனை மேலும் ஆத்திரமூட்ட பக்கத்தில் நின்ற பாஸ்கரின் கரங்களோடு தன் கைகளை கோர்த்தாள்.

சரவணனுக்கு ஜிவ்வென எகிறியது. இகழ்ச்சியான புன்முறுவலுடன் அவர்களைப் பார்த்தவன், ''என்ன காதலர்கள் காற்று வாங்க பீச் வந்திருப்பது போல் தெரிகிறதே...!'' என்றான் வெறுப்பான பார்வையோடு.

பாஸ்கர் இருவருக்கும் உள்ள மோதலை உணர்ந்தவன் வேண்டுமென்றே மௌனம் காக்க, திமிறும் குதிரையாய் சீறினாள் நந்தனா.

''ஆமாம்... காற்று வாங்கத்தான்...! காதலர்கள் தான்...! பார்த்தால் தெரியவில்லை?'' என்றாள் மூச்சு வாங்க.

சரவணனும் விடவில்லை. கோபத்தில் மேலும் அவளை சீண்டினான்.

''பார்த்தால்... காதலர்கள் என்று புரிந்து கொள்ள வேண்டுமென்றால்... இந்த நெருக்கம் போதாது இன்னும் கொஞ்சம் நெருக்கம் வேண்டும்...!'' என்றான் ஆத்திரமாக.

''ஓஹோ...'' என்று தலையைச் சிலுப்பிய நந்தனா விடாமல், ''இன்னும் கொஞ்சம் நெருக்கம் என்றால் எப்படி? இந்த பாஸ்கரின் கழுத்தை நான் வளைக்க வேண்டுமா... இல்லை... கட்டியணைக்க வேண்டுமா? அதையும் செய்யத்தயார்...!'' என்றாள் பொங்கி கொதித்தவளாய்.

அவளின் பதில் கேட்டு ஒருகணம் சிலைபோல் சரவணன் அதிர்ந்து நின்றவன் அவளை ஒரு அற்பப்புழு போல் பார்த்தான்.

''செய்யத்தயார்.. என்ன? நீ கண்டிப்பாய் செய்வாய்...! உனது குறி ஆண்கள் உடம்புதானே...? அதற்காக... அந்த உடம்பு ஆசைக்காகத்தானே இந்தக் காதல் நாடகம் போடுகிறாய்...? நன்றாக போட்டுக் கொள்..உன் ஆசையை தீர்த்துக் கொள்...!''

ஆவேசமாய் முழங்கி விட்டு மேலும் அங்கு நிற்கப் பிடிக்காமல் வேகமாய் அங்கிருந்து அகன்றான் சரவணன்.

நந்தனா கொதித்தவள் பதிலுக்கு வெடிப்பதற்குள் விறுவிறுவென சரவணன் சென்று விட்டான். நந்தனா மூச்சு வாங்க தவித்துப் போனாள். என்ன சொன்னான்?

உடம்பு ஆசையா...? அவளுக்கா...? மறுபடியும் அதே கீழ்த்தர வார்த்தையை தன்னைப் பார்த்து உபயோகிக்கிறான்... என்ன ஒரு திமிர் இவனுக்கு? என்ன ஒரு ஆணவம் இவனுக்கு?

இவனை சும்மா விடக்கூடாது!

பதிலுக்கு பதில் செய்தாக வேண்டும்...!

அவன் முகத்தில் கரியைப் பூசி அந்த ஆணவத்தை அடங்கா திமிரை அழிக்க வேண்டும்.

எப்படி?

நந்தனா ரூமிற்கு வந்து தீவிரமாய் யோசித்தாள். அவளுள் அந்த விபரிதமான வழி புலப்பட்டது.

15

நந்தனா அப்படி ஒரு முடிவை ஏன் எடுத்தாள்...? என அவளுக்கே தெரியாது. ஆனால் தான் எடுத்த முடிவு உறுதியான நிலைப்பாடு என்ற நிலைமைக்கு கொஞ்ச நேரத்திலே அவள் மனம் மாறி வந்து விட்டாள். தீர்மானமாகவும் ஆகிவிட்டாள்.

அவளது ஒரே குறி சரவணன்தான்! அவன்தான் அவளது முடிவை அவளது செய்கையைக் கண்டு அதிர வேண்டும். அப்படியே நொந்து நூலாக வேண்டும்.

அப்படி சரவணன் மனம் நொந்து நூலாக அவள் தேர்ந்தெடுத்த வழி கல்யாணம்!

பாஸ்கரை கல்யாணம் செய்து கொள்வது...! அதுவும் இங்கு பெங்களூரில் வைத்தே... சரவணன் பார்க்கும்படி அவளது கல்யாணம் நடக்க வேண்டும்... அதுதான் அவளது திட்டம் தீர்மானமான முடிவு...!

மனதில் உறுதியாய் முடிவெடுத்ததும் முதல் காரியமாய் பாஸ்கரைத் தேடிப் போனாள். பிளாட் ஒன்றில் தூங்கி எழுந்து

சோம்பல் முறித்துக் கொண்டிருந்த பாஸ்கர் காலையிலே தன்னைத் தேடி வந்த நந்தனாவை ஆச்சரியமாய்ப் பார்த்தான். அவள் விஷயத்தை சொன்னதும் நம்ப முடியாதவனாய் வாய் பிளந்தே விட்டான்.

''என்ன நாம் இருவரும் கல்யாணம் செய்து கொள்வதா? நிஜமாகவா சொல்கிறாய்?''

அதிசயித்துக் கேட்டவனிடம் அமைதியாய் தலையாட்டினாள் நந்தனா.

''நம் கல்யாணம் சீக்கிரமாகவும் நடக்க வேண்டும்..'' என்றாள் நந்தனா பரபரப்பைக் காட்டியவளாய்..

''சீக்கிரமாக என்றால்...?'' தனது சுருங்கிய நெற்றியை மேலும் சுருக்கினான் பாஸ்கர்.

''மாடல் பேஷன் ஷோ இன்னும் ஐந்து நாட்களில் நடக்க இருக்கிறது. அதற்குள் நாம் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். நடக்க இருக்கும் மாடல் ஷோவில் நாம் கணவன் மனைவியாகவே கலந்து கொள்ள வேண்டும். அதுவே எனது ஆசை...''

நந்தனா சொல்லி முடித்து தலையைச் சிலுப்பினாள். அது அவளது ஆசை மட்டுமல்ல. பழிக்குப் பழி. தன்னை அசிங்கமாய் கேவலமாய் பேசிய சரவணனின் திமிரை அடக்கப் போகும் வழியாகவும் நினைத்தாள். தன்னையும் பாஸ்கரையும் கணவன் மனைவியாய் மாடல் ஷோவில் சரவணன் பார்த்தால்... அவன் முகம் என்னாகும் என்பது இப்போதே நந்தனாவின் மனதில் ஓடி அவளை மகிழ்ச்சிபடுத்தியது.

திடீர் ஜாக்பாட் அடித்தது போல் பாஸ்கரும் குஷியாகி விட்டான். இருந்தாலும் தன் சந்தேகத்தை எல்லாம் தெளிவுபடுத்த கேள்விகளாய் கேட்டான்.

''நந்தனா... நீங்கள் சொல்வது நிஜம்தானே?''

''நிஜம்தான்...''

''உங்கள் முடிவு உறுதியானது தானே?''

''உறுதியானதுதான்...''

''நீங்கள் உங்கள் முடிவில் இருந்து பின்வாங்க மாட்டீர்களே?''

''நிச்சயமாக பின் வாங்க மாட்டேன்...''

''இன்னும் மூன்று நாளில்... அதாவது வருகிற சனிக்கிழமை நம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாமா...?''

''வைத்துக் கொள்ளலாம்...''

''நம் திருமணத்தை சிம்பிளாக எளிமையாக வைத்துக் கொள்வோமா?''

''அதுதான் என் ஆசை... பாஸ்கர்...''

''அப்படியானால் கோவிலில் வைத்து நண்பர்கள் முன்னிலையில் தாலி கட்டிக் கொள்வோம்... சரியா?''

''சரி...'' பலமாய் தலையாட்டினாள் இவள். பாஸ்கரோ தனது விபரீத மூளையால் விபரீதமாகவே பிளான் செய்ய ஆரம்பித்தான்.

''நந்தனா...''

''என்ன பாஸ்கர்?''

''உங்களது... பேரண்ட்ஸ்... உறவினர்கள்...''

''எனக்கு உறவு என்று சொல்ல தந்தை ஒருத்தர்தான் பாஸ்கர் அவருக்கு விஷயத்தை தெரிவித்து அனுமதி வாங்கிவிடுவேன். அவர் முன்னிலையில் நாம் திருமணம் செய்து கொள்ளலாம்...''

''நல்லது... நல்லது... நந்தனா...''

இம்முறை அத்தனை பல்லையும் இளித்தபடி பாஸ்கர் பலமாய் தலையாட்டினான். அவன் மூளையில் நந்தனாவை வைத்து என்னென்ன செய்ய வேண்டும் என்ற புதுத்திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. பொதுவாக 'கல்யாணம் செய்து கொள்வது' என்பதே அவனுக்குப் பிடிக்காத. அவனது வாழ்க்கை அகராதியில் இல்லாத ஒரு விஷயம்! நந்தனா விஷயத்திலும் பாஸ்கருக்கு அந்த நிலைப்பாடு கொஞ்சமும் மாறவில்லை. அவனது குறி உடம்பு தான். நந்தனாவின் அழகை ஆசை தீர பருக வேண்டும் என்பது தான்... அவனது வெறி!

கூடவே அவனுள் இன்னொரு விபரீத ஆசையும் உருவாகியது. நந்தனாவை ஆசை தீர அனுபவித்து பருகுவதை அப்படியே வீடியோவில் படக்காட்சியாய் பதிவு செய்து அதன் மூலமாகவும் பணம் சம்பாதிக்க.. விசித்திர திட்டமொன்றை அப்போதே அவன் மனதுள் உருவாக்கவும் ஆரம்பித்தான்.

நந்தனாவோ இது எதுபற்றியும் அறியாமல் கல்யாணம் அழைப்பிதழ் விரைவாய் அடிக்க வேண்டிய சூழ்நிலையை பேசிக் கொண்டிருந்தாள்.

அதற்குள் பாஸ்கர் விட்டுக்கொடுக்காமல் தன் நண்பர் ஒருவன் ப்ரிண்டிங் பிரஸ் வைத்திருப்பதாயும் மறுநாளே அடித்துக் கொடுத்து விடுவான் என்பதையும் உறுதியாய் கூறினான். நந்தனா தன் பிரச்னை எல்லாம் தீர்ந்தது போல நீள மூச்சு விட்டாள்.

அவளுக்குத் தேவை அந்த கல்யாண அழைப்பிதழ்கள்தான்!

அதைக் கொண்டு போய் சரவணனின் முகத்தில் எறிய வேண்டும். அது போதும் அவளுக்கு!

16

நந்தனா அதற்கு அடுத்து வந்த நாட்களில் தாமதிக்காமல் வேகம் காட்டினாள்.

முதல் காரியமாய் தந்தைக்கு போன் செய்து விபரம் சொன்னாள். தந்தை சிவராமும், 'கல்யாணமே வேண்டாம்' என்று சொன்னவள் இப்படி திடுதிப்பென்று கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணி விட்டாளே... என்ற ஆச்சரியத்தில் உடன் சம்மதம் தெரிவித்தார்.

அடுத்து நந்தனா பாஸ்கருக்கு போன் செய்து, 'அழைப்பிதழ் தயாராகி விட்டதா? சீக்கிரம் கொண்டு வாருங்கள்...!'' என்று நச்சரிக்க ஆரம்பித்தாள்.

அன்று மாலையே பாஸ்கர் சொன்னபடி அழைப்பிதழ்களை கொண்டு வந்து விட்டான்.

அழைப்பிதழ்களை வாங்கியவள் அவைகள் எப்படி அமைந்திருக்கின்றன என்பதைக் கூட பார்க்காமல் கிளம்ப ஆரம்பித்தாள். முதலில், சரவணனுக்கு கொடுக்க வேண்டும். அதைப் பார்த்து அவன் புழுவாய் துடிப்பதை ரசிக்க வேண்டும்...

''கிளம்புங்கள் பாஸ்கர்...'' என்றாள்.

''கிளம்பவா...? முதலில் இன்விடேஷனை திறந்து பார் நந்தனா... மெரூன் கலரில் எப்படி அழகாய்..''

''ம்ஹூம்... அதெல்லாம் பார்த்து விட்டேன். முதலில் கிளம்புங்கள்...'' என்றாள் அவசரப்படுத்தியவாறு.

பாஸ்கர் புரியாமல் விழித்தான். இன்விடேஷனை கூட திறந்து பார்க்காமல் எதற்கு அவசரப்படுகிறாள் என அவனுள் திகைப்பு கூடியது.

''நந்தனா எங்கு கிளம்ப வேண்டும்? எனக்கு ஒன்றும் புரியவில்லை...''

''நீங்கள் கிளம்புங்கள் பாஸ்கர். நம் கல்யாண அழைப்பிதழின் முதல் பத்திரிகையை முக்கியமான ஒரு வி.ஐ.பி.க்கு முதலில் கொடுக்க வேண்டும்...''

''வி.ஐ.பி.யா...? யார் அது நந்தனா?''

''நீங்கள் கிளம்புங்கள் சொல்கிறேன்...''

நந்தனா மேலும் அவசரப்படுத்த பாஸ்கர் வேறு வழி இல்லாமல், கேள்வி கேட்காமல் கிளம்பினான். பைக்கில் அவளை ஏற்றிக் கொண்டு அவள் சொன்னபடி ஓட்டினாள்.

நந்தனா சொன்னபடியே பாதையில் சென்ற பைக் ஓரிடத்தில் வந்ததும் நின்றது. நந்தனா நிறுத்தச் சொன்னாள். அது... கெஸ்ட் ஹவுஸ்! அங்குதான் சரவணன் தங்கியிருக்கிறான்!

கையில் அழைப்பிதழ்களுடன் பாஸ்கரையும் கூட்டிக் கொண்டு மிடுக்காய் உள்ளே நுழைந்தாள் நந்தனா.

அவளை எதிர்பார்ப்பது போல் உள்ளே... முகப்பு ஹாலில் சேர் போட்டு சரவணன் ஏதோ பேப்பரை பார்த்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான்.

இருவரும் தன்னை நோக்கி வருவதைப் பார்த்த அவன் கண்களில் அதிர்ச்சி தலைதூக்கியது.

நந்தனா நிமிர்ந்த தலையும் கெலிப்பு பார்வையுமாய் அவன் பக்கத்தில் போனாள்.

கையில் தயாராயிருந்த அழைப்பிதழை எடுத்தாள்.

''மிஸ்டர் சரவணன்...'' என்று அழுத்தந்திருத்தமாய் நந்தனா உச்சரித்தபோது சரவணன் அதிரத்தான் செய்தான். இருந்தும் எவ்வித உணர்ச்சியையும் காட்டாது சேரை விட்டு எழுந்தான்.

''என்னுடைய கல்யாண அழைப்பிதழ். உங்களுக்குத்தான் முதல் பத்திரிகை...'' என்றபடி அவன் கைகளில் வேகமாய் இன்விடேஷனை திணித்தாள் நந்தனா.

சரவணன் குனிந்து இன்விடேஷனை பார்த்தான். 'பாஸ்கர் வெட்ஸ் நந்தனா' என பளபளத்த எழுத்துக்கள் அவன் இதழ்களில் ஒரு வினோத புன்னகையை வரவழைத்தது.

''மிஸ்டர் பாஸ்கர் தான் அந்த அதிர்ஷ்டசாலியா?'' என்றபடி புன்முறுவலை பெரிதாக்கி பாஸ்கர் கையைப் பிடித்து குலுக்கினான். ''உங்கள் இருவருக்கும் எனது மனப்பூர்வமான அட்வான்ஸ் வாழ்த்துக்கள்...'' என்றான் சிரிப்பு மாறாமல்.

அவன் அதிர்வான்... அரண்டு... இருண்டு போவான் என்றெல்லாம் எதிர்பார்த்த நந்தனா அவன் இயல்பாய் பேசி சிரிப்பது கண்டு திகைத்தாள்.

என்னாயிற்று இவனுக்கு? நம் கல்யாண அழைப்பிதழை நீட்டுகிறோம்... இவனோ... கொஞ்சமும் அதிர்ச்சி காட்டாமல் வாழ்த்துக்கள் என்கிறான்.

அப்படியே அதிர்ச்சியில் சிலையாகி... நொந்து போய் விடுவான் என்று நினைத்தால்... இப்படி இடித்த புளியாய் நிற்கிறானே...?

ஒருவேளை நடிக்கிறானா? தன் ஏமாற்றத்தை தோல்வியை நான் உணர்ந்து விடக்கூடாது என எதையும் வெளிக்காட்டாத ஒரு நடிப்பு நடிக்கிறானா?

புரியாமல் அவள் திகைக்க அவள் மன ஓட்டத்தை அறிந்தவன் போல் சரவணன் பார்த்தான். ''நந்தனா இதில் ஆச்சரியம் ஒன்று

மில்லை. நான் எதிர்பார்த்ததுதான்...!'' என்றான். அவன் திகைப்பை அதிகமாக்கியபடி.

நந்தனாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தனது கல்யாண அழைப்பிதழைக் கண்டதும் அதிர்வான். புழுவாய் துடிப்பான் என்று எதிர்பார்த்தவளுக்கு இது பெரும் ஏமாற்றமாயிருந்தது.

இருந்தும், அவளும் எதையும் வெளிக்காட்டாமல் திரும்பி விறுவிறுவென நடக்கப் போனாள்.

''நந்தனா... ஒரு நிமிடம்...'' என்றான் சரவணன்.

நந்தனா நின்றாள்.

''உனக்கும் ஒரு அதிர்ச்சியான ஆச்சரியம் காத்திருக்கிறது. நாளை உனக்குப் புரியும்...''

சரவணன் சொல்லிவிட்டு வினோதமாய் சிரிக்க நந்தனா திகைப்பு விலகாமல் நடக்க ஆரம்பித்தாள்.

17

நந்தனா சரவணனின் கெஸ்ட் ஹவுசை விட்டு வெளிவந்தாள். அவள் முகத்தில் நுழையும்போது இருந்த பரபரப்பு, எதிர்பார்ப்பு, சந்தோஷம் எல்லாம் காணாமல் போயிருந்தது.

அவள் செயலுக்கு சரவணன் துளி கூட அதிரவில்லையே...!

அவன் முகத்தில் ஒரு சின்ன அதிர்ச்சி கூட இல்லையே!

ஏன்...இப்படி?

இன்விடேஷனை பார்த்ததும் கொஞ்சமும் திகைக்காமல் என்ன சொன்னான்? மனப்பூர்வமான வாழ்த்துக்களாம்...! அவன் பாஸ்கரை திருமணம் செய்து கொள்வதை மனம் குளிர வாழ்த்துக்கிறானாம். பாஸ்கருடன் பழகுவதையே பொறுக்க முடியாமல் தாம் தீம்மென குதித்தவன் இதற்கு எப்படி மனம் கனிய வாழ்த்த முடியும்?

யாரை ஏமாற்றுகிறான்...? தனது அதிர்ச்சியை, தோல்வியை வெளிக்காட்டாமல், ஒன்றும் பாதிக்காதது போல் நடிக்கப் பார்க்கிறானா? அப்படித்தான் இருக்க வேண்டும்! கீழே விழுந்தும் மீசையில் மண் ஒட்டாதது போல் சரவணன் நடிக்கிறான்! யோசனையுடன் நின்றவளை பாஸ்கர் அவசரப்படுத்தினான்.

''நந்தனா நாம் கிளம்புவோம்... நம் நண்பர்களுக்கெல்லாம் இன்விடேஷனை கொடுத்து விடுவோம்.. வாருங்கள்..'' என்றான்.

''வேண்டாம் பாஸ்கர்...'' என்றாள் நந்தனா.

''வேண்டாமா...? எதற்கு?''

''எனக்கு தலைவலி போல் இருக்கிறது. நாளை பார்த்துக் கொள்ளலாம்...'' என்றபடி நந்தனா கிளம்பி விட்டாள். வேறு வழியில்லாது அவளை ரூமில் இறக்கிவிட்டு விட்டு பாஸ்கர் விடைபெற்றுச் சென்றான்.

நந்தனா ரூமில் அப்படியே மெத்தையில் கவிழ்ந்து யோசித்தாள். சரவணன் கொஞ்சமும் அதிர்ச்சிக் காட்டாததை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. எப்படி அவனால் இருக்க முடியும்... இருக்க முடிந்தது? என திகைத்தாள்.

கூடவே அவன் சொன்ன இன்னொரு விஷயமும் அவள் ஞாபகத்திற்கு வந்தது. உனக்கும் ஒரு ஆச்சரியமான அதிர்ச்சி காத்திருக்கிறது.. என்றானே? அது என்ன? என்னவாக இருக்கும்...?

யோசித்தவள் விடை காண முடியாமல் ரொம்பவும் குழம்பினாள். நிம்மதியில்லாதவள் போல் தவித்தாள். கடைசியில் அப்படியே தூங்கிப் போனாள்.

மறுநாள் விடிந்தது.

காலையிலே வாடகைக் கார் ஒன்றைப் பிடித்துக் கொண்டு பாஸ்கர் வந்து விட்டான்.

நந்தனா புரியாமல் விழித்தாள்.

''என்ன... நந்தனா...? நாளை விடிந்தால்... நமக்குக் கல்யாணம். ஏற்பாடுகள் செய்ய வேண்டாமா? அழைப்பிதழ்களை முக்கியமான நண்பர்களுக்கு கொடுக்க வேண்டாமா? அதனாலே செலவைப் பார்க்காமல் கார் ஏற்பாடு செய்து விட்டேன்... கிளம்புவோம்...!'' என்றான்.

நந்தனா சுரத்தில்லாமலே கிளம்பினாள். அழைப்பிதழ் அடித்ததே சரவணனுக்காகத்தான் அவனே அதிரவில்லை. இனி மற்றவர்களுக்கு கொடுத்தால் என்ன? கொடுக்காவிட்டால் என்ன?

மனதில் ஒரு எரிச்சலான எண்ணம் தோன்ற நந்தனா காருக்குள் ஏறினாள். பாஸ்கர் அன்றைய புரோகிராமாய் ஒரு பெரிய லிஸ்டே வைத்திருந்தான். நீள சீட்டு ஒன்றில் எழுதி வைத்திருந்ததை அவளிடம் காட்டினான். கோயில் குருக்களில் இருந்து, மாலை இன்னிசை விருந்து, தடபுடல் சாப்பாடு என எல்லாவற்றையும் கரெக்டாக ஏற்பாடு செய்து குறித்திருந்தான்.

நந்தனா அதை சுவாரஸ்யமில்லாமல் பார்த்துவிட்டு அவனிடமே நீட்டினாள்.

அழைப்பிதழை வரிசையாக தெரிந்தவர்களுக்கு, மாடலிங் ஷோவில் கலந்து கொள்ள இருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுக்க முடிவு செய்திருந்தனர்.

கார் ஒவ்வொருவர் இருப்பிடமாய் செல்ல பாஸ்கர் கொண்டு போய் கொடுத்தான். தன் அத்தனை பற்களையும் காட்டி அழைப்பு விடுத்தான். ஒவ்வொரு முறையும் வேறு யாருக்கோ கல்யாணம் நடக்கப் போகிறது போல் நந்தனா கைகளை கட்டிக் கொண்டு எங்கேயோ பார்த்தாள்.

அப்படியே... அழைப்பிதழ் கொடுத்தவாறு சரவணனின் உதவியாளியான டெய்ஸி வீட்டுக்கும் பாஸ்கர் வர... டெய்ஸியின் முகத்தை நிமிர்ந்து பார்க்க தைரியமில்லாதவளாய் குனிந்தாள் நந்தனா.

ஆனால் டெய்ஸி முகம் மலர இருவரையும் வரவேற்றாள். தனது வாழ்த்தை சொன்னவள் கூடவே அந்த அதிர்ச்சியான செய்தியையும் சொன்னாள்.

''உனக்கு விஷயம் தெரியுமா நந்தனா? நம் சரவணன் சாருக்கு இன்று திருமணம். சொந்த அத்தை மகளை மணக்கிறார். காலையில் திருப்பதியில் கல்யாணம். மாலை அசோகா ஓட்டலில் ரிசப்ஷன்...!''

நந்தனாவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

''என்ன சரவணனுக்கு கல்யாணமா? என்ன சொல்கிறீர்கள்...? திடுதிப்பென்று அவர் ஏன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்?'' என்றாள் பரபரப்பாய்.

டெய்ஸி சிரித்தாள்.

''நந்தனா, நம் சரவணன் சார் எல்லாவற்றிலும் வேகம்தான்! ஆனால் ஏற்கெனவே அவரது குடும்பத்தில் அத்தை பெண்ணை கட்டும்படி நச்சரித்துக் கொண்டிருந்தார்கள். சரவணன் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தவர் திடீரென சம்மதம் சொல்லிவிட்டார். திருமணத்தை உடனே நடத்தும்படி ஆணையும் போட்டு விட்டார். நேற்று முழுக்க அலுவலகம் மூலம் அனைத்து ஏற்பாடுகளையும்

நான் தான் செய்தேன். இன்று காலைதான் சரவணன் பிளைட் பிடித்து திருப்பதி சென்றார்...''

டெய்ஸி சொல்லச் சொல்ல இடி விழுந்தது போல் இருந்தது. நந்தனாவுக்கு அப்படியே விக்கித்துப் போய் விட்டாள். யாரை அதிரச் செய்ய வேண்டும், யார் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என்று நினைத்தாளோ.. அது முடியாமல் போயிற்றே...!

சரவணன் தனக்கு முன் இன்னொரு பெண்ணை திருமணம் செய்து அதிர்ச்சியை அவளுக்கு கொடுத்து விட்டானே!

நொந்து போனவளாய் தளர்வான நடையுடன் காருக்குள் வந்து உட்கார்ந்தாள்.

பாஸ்கர் அவள் முகமாற்றத்தையே உற்று கவனித்தவன், ஒரு முடிவு செய்தான்.

எதிரே இருந்த கடை ஒன்றிலிருந்து கூல் ட்ரிங்ஸ் பாட்டில் ஒன்றை வாங்கி அவளிடம் நீட்டினான்.

நந்தனா மறுப்பில்லாமல் வாங்கி குடித்தவள் அப்படியே மயங்கிச் சாய்ந்தாள்.

18

நந்தனா மறுபடி கண்விழித்த போது சூழ்நிலை வினோதமாய் இருந்தது. ஏதோ ஓர் அறையின் மெத்தை விரிப்பில் படுக்க வைக்கப் பட்டிருக்க.. அந்த அறைக்கு வெளியே தடித்த பேச்சுக் குரல்கள்.

அவள் மெல்ல தலையைப் பிடித்தவாறு எழுந்தாள். அவளுக்கு நிலைமை கொஞ்சம் கொஞ்சமாய் புரிய ஆரம்பித்தது.

பாஸ்கர் கொடுத்த கூல்ட்ரிங்ஸை குடித்ததும் தான் மயக்க மானது அவளது ஞாபகத்திற்கு வந்தது. அப்படியானால் அந்த கூல்ட்ரிங்ஸில் ஏதோ கலந்திருக்க வேண்டும். யார் கலந்தது? பாஸ்கரா?

அவள் திகைக்கும் முன்பே... வெளியே இருந்த அடியாள் தடியன் ஒருவன் நந்தனா மயக்கம் தீர்ந்து எழுந்து விட்டதை பாஸ்கரிடம் அவசரமாய் சொன்னான்.

பாஸ்கரும் அவனது வில்லத்தனமான மூன்று நண்பர்களும் அனாவசியமாய் சிகரெட்டை ஊதியபடி உள்ளே நுழைந்தனர். அவர்களில் ஒருவனின் கையில் அந்த வீடியோ கேமிரா வேறு!

கலைந்த தலையும், தண்ணியடித்த முகமுமாய் அசல் சினிமாப்பட வில்லனாய் பாஸ்கர் மாறியிருந்தான். நுழைந்து அவளைப் பார்த்து அசிங்கமாய் அத்தனை பற்களையும் காட்டி சிரித்தான். ''என்ன நந்தனா... முகூர்த்த நேரம் வந்து விட்டது கல்யாணம் செய்து கொள்வோமா..?'' என்றான்.

''பாஸ்கர் நீ...நீ... கூல்ட்ரிங்ஸில் மயக்க மருந்து கலந்து...''

''அதெல்லாம் இருக்கட்டும். முதலில் கேட்டதற்குப் பதில் சொல். கல்யாணத்திற்கு நீ.. நீ.. தயாரா...?''

கைகளை விரித்தபடி விகாரத்துடன் அவன் பக்கத்தில் வந்தபோது, 'ச்சீ இந்த மூஞ்சியையா கல்யாணம் செய்து கொள்ள இருந்தோம்...?' என தன்னைத்தானே நொந்தவளாய் அவனை மிரட்சியுடன் பார்த்தாள்.

''பதில் சொல்... ம்ம் ..'' மிரட்டலாய் உறுமினான் பாஸ்கர்.

''இல்... இல்லை.... வேண்டாம்.. நான் யோசிக்க வேண்டும்..''

அவள் பதிலைக் கேட்டு பாஸ்கர் அதிராமல் சிரித்தான்.

''தெரியும்! நீ இப்படியெல்லாம் பின் வாங்குவாய் என்று தெரியும்! உனக்கு முக்கியம் சரவணன் தானே? அவனுக்காகத் தானே என்னைக் கட்டிக் கொள்வது போல் எல்லாம் நாடகம் போட்டாய்? அந்த சரவணனும் நீயும் முன்னாள் கல்லூரியில் காதலித்த ரோமியோக்களாமே? நேற்றுதான் இந்த விஷயம் எனக்குத் தெரிந்தது. உடனே தான் உண்மையையும் புரிந்து கொண்டேன். நீ, சரவணன் உன்னைத் தேடி வந்து மறுபடியும் காதலிக்க, கல்யாணம் செய்து கொள்ளத்தான் என்னை வைத்து இப்படியொரு நாடகமாடினாய் என்று எனக்கு புரிந்து விட்டது...''

பாஸ்கர் சொல்லச் சொல்ல நந்தனாவுக்கு தலையில் சம்மட்டி யால் அடிப்பது போல் உரைத்தது. பாஸ்கர் சொல்வது உண்மை தானோ...? உண்மையிலே அப்படித்தான் நடந்திருக்கிறதோ...? சரவணன் மீது எழுந்த கோபத்தில், அவனை மேலும் ஆவேசப் படுத்தவே பாஸ்கருடன் பழகியிருக்கிறாள். திருமணம் செய்வது வரை போயிருக்கிறாள். ஆனால் சரவணனுக்கு கல்யாணம் என்றதுமே புத்தி பேதலித்தது போல் மனம் அப்படியே நின்று விட்டது. உண்மையில் அவள் யாரை விரும்புகிறாள்? யார் அவள் மனதில் இருக்கிறார்? என்பதெல்லாம் இப்போது தான் அவளுக்கே புரிகிறது..?

அவள் திகைத்து யோசித்தது பாஸ்கரை மேலும் கோபப் படுத்தியது.

பக்கத்தில் வந்தவன் சுளீரென அவளது செவிட்டில் கைகளால் ஓங்கி அறைந்தான். ''என்னடி முழிக்கிறாய்? நீ செய்வதை யெல்லாம் வேடிக்கை பார்க்க நான் என்ன இளிச்சவாயன் என்று நினைத்தாயா?'' என்றபடி கண்களை உருட்ட... வலியில் கத்தியபடி கன்னத்தைப் பிடித்தவள் மிரட்சியோடு அவனைப் பார்த்தாள்.

பாஸ்கர் மறுபடியும் பக்கத்தில் வந்து கொத்தாய் அவள் தலைமுடியைப் பற்றியவன், ''இப்போது என்ன செய்யப்

போகிறேன் தெரியுமா? கல்யாணம் இல்லை. நேரிடையாக முதலிரவு.. அதான் சாந்தி முகூர்த்தம். நம் இருவருக்கும் நடக்கப் போகிறது. அந்த அற்புதமான காட்சியை என் நண்பர்கள் வீடியோ வில் பதிய செய்யப் போகிறார்கள். வெளிநாட்டு கம்பெனி ஒன்றிற்கு நல்ல விலைக்கு விற்க திட்டம் போட்டிருக்கிறோம். அப்படியே உன்னையும் அனுபவித்து விட்டு வடநாட்டு சேட் ஒருவனிடம் உன்னை நல்ல விலைக்கு விற்க...''

பாஸ்கர் பேசிக் கொண்டிருந்தவன் நிறுத்தினான். அவன் மேற்கொண்டு சொல்ல முடியாதபடி அறைக்கதவை படபடவென இடிபட ஆரம்பித்தது. எல்லோரும் திகைத்துப் போய் பார்க்க... கதவை உடைத்துக் கொண்டு ஆஜானுபாகு உடம்புடன் உள்ளே நுழைந்தது சரவணன் சரவணனேதான்...!

19

சரவணனைக் கண்டதும் தான் நந்தனாவுக்கு உயிரே வந்தது. மின்னல் வேகத்தில் நுழைந்து தனது திடகாத்திர மான பலத்தால் பாஸ்கரின் கூட்டாளி களை புயலாய் அடித்து துவைத்தான் சரவணன்.

திமிறிக் கொண்டு வந்த பாஸ்கர் முகத்திலும் ஓங்கி குத்து விட்டான். மின்னல் வேகத்தில் கையையும் காலகளையும் சுழற்றி அவன் அடித்த விதத்தில் ஆள் ஆளுக்கு ஒரு புறமாய் போய் கீழே விழுந்தனர்.

குடி போதையில் வேறு இருந்ததால் தள்ளாட்ட உடம்புடன் அவர்களால் எழும்பக் கூட முடியவில்லை.

சரவணன் நிமிர்ந்து நேராய் நந்தனாவைப் பார்த்தான்.

அவனை நிமிர்ந்து பார்க்க திராணியற்றவளாய் கூனிக் குறுகிப் போய் குனிந்திருந்தாள் நந்தனா.

சரவணன் இதழ்களில் குறும்புப் புன்னகையொன்று படர... அவள் பக்கம் போனவன் அவளை அப்படியே வாரியெடுத்து நெஞ்சார அணைத்தான். எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் பசை போல் அவன் மார்பில் ஒட்டிக் கொண்டாள் நந்தனா.

மார்பில் ஒட்டிக் கொண்டவளால் சும்மா இருக்க முடியவில்லை. கண்களில் நீர் தாரையாய் பெருகிற்று. அவன் மார்பையே கண்ணீராய் நனைத்தாள். ''நான் தப்பு பண்ணிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் சரவணன்...'' என நிலை கொள்ளாமல் அரற்ற ஆரம்பித்து விட்டாள்.

''ச்சூ... என்ன இது சிறுபிள்ளைத்தனமாய்?'' என செல்ல மான கோபிப்புடன் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான் சரவணன்.

இருந்தும் நந்தனாவால் பொறுக்க முடியவில்லை. தான் செய்த ஒவ்வொரு விஷயத்தையும் நினைத்து பிழியப் பிழிய அழுதாள். அவளைத் தேற்றி ஆறுதலாய் அணைத்தபடி அந்த ரூமை விட்டு வெளிவந்தான் சரவணன்.

''போலீஸுக்கு போன் செய்து விட்டேன். அவர்கள் இந்த பொறுக்கிகளை பார்த்துக் கொள்வார்கள். நாம் போகலாம்...'' என்றபடி நந்தனாவுடன் தனது காரில் ஏறி கிளம்பினான் சரவணன். ஒரு கையால் ஸ்டியரிங்கை பிடித்தபடி மறுகையால் அவளைத் தோளோடு அணைத்தான். கோழிக்குஞ்சாய் ஒட்டிக் கொண்டாள் நந்தனா.

நந்தனா தோளில் சாய்ந்தவள் திடும்மென ஞாபகம் வந்தவ ளாய் துடித்து எழுந்தாள்.

''சரவணன் உங்கள்... உங்களுக்கு கல்யாணம்... என்ன... என்னாயிற்று?'' பதட்டமாய் கேட்டவளை இறுக அணைத்து ஆசுவாசப்படுத்தினான் சரவணன்.

''பதறாதே... கல்யாணம் என்று நான் சொன்னதெல்லாம் வெறும் கப்ஸாதான்..!''

''கப்ஸாவா?''

''ஆம்... நானும் டெய்ஸியும் சேர்ந்து போட்ட நாடகம்! உனது உண்மை நிலையை புரிந்து கொள்ள போட்டுக் கொண்ட திட்டம்...!''

''என்ன சொல்கிறீர்கள்? நிஜம்மா... நீங்கள் சொல்வது?''

''நிஜம்தான்! சொல்லப் போனால் எனக்கு அத்தையே கிடையாது. பின் அத்தைப் பெண் எங்கிருந்து முளைக்க முடியும்? மேலும் நீ தடாலடியாய் பாஸ்கருடன் கல்யாணம் என்று முடிவெடுத்ததை நிறுத்தவே இப்படியொரு பிளான் போட்டேன்...''

சரவணன் சொல்ல கண்களை அகல விரித்து மை விழிகளால் அவனைப் பார்த்தவள் அப்படியே மருகினாள். ''உண்மைதான் சரவணன் நீங்கள் உங்கள் கல்யாண செய்தியைக் கேட்டதும் தான் பேதலித்துப் போயிருந்த என் மூளைக்கு நிஜம் உரைத்தது. மெல்ல புத்தி வர ஆரம்பித்தது. என்னை மன்னித்து விடுங்கள் சரவணன்...''

அவளது கெஞ்சலைக் கண்டு, ''ச்சூ விடு. அதை எத்தனை முறை மன்னிப்பு மன்னிப்பு என கேட்டுக் கொண்டிருப் பாய்...?''என்று செல்லமாய் அதட்டியவன் அப்படியே அவளை தோளில் சாய்த்தபடி அவள் கூந்தலை வருடினான்.

''நந்தனா, உனக்குத் தெரியுமா? உன்னை முதன் முதலாய் அந்த மாடலிங் ஹாலில் பார்த்தபோது எவ்வளவு சந்தோஷப்பட்டேன் தெரியுமா? மூன்று வருடமாய் உன்னைப் பிரிந்து நான் தவித்த

தவிப்பிற்கு பலன் கிடைத்து விட்டது போல் பரவசப்பட்டேன்... உள்ளுக்குள் உனக்காக உருகினேன்...''

''ஆனால் எதையும் நீங்கள் வெளிக்காட்டாமல் இருந்தீர் களே?'' எதிர்கேள்வி கேட்டவளை புன்னகையுடன் பார்த்த சரவணன் செல்லமாய் அவள் காது மடல்களை ஆட்டி அதிர வைத்தான். ''எல்லாம் உன் நிலை அறியத்தான் அமைதி காத்தேன்...'' என்றான்.

''நிலை அறியவா?'' என்றாள் அவள் புரியாதவளாய்.

''ஆம்... கண்மணி... உண்மையில் உனக்கு என் மேலான கோபம் தீர்ந்துவிட்டதா... அல்லது இந்த மூன்று வருடப் பிரிவில் என் மீது இருந்த காதலே தீர்ந்து போய் விட்டதா... என்று அறியத்தான்... மௌனமாகவே உன்னைப் பார்த்தேன். எதையுமே வெளிக்காட்டாமல் உள்ளுக்குள் உருகினேன்...''

''நானும் அப்படித்தான்...'' என்றாள் அவள் முகம் சிவக்க. நாணி குங்குமமாய்ச் சிவந்த அவளது முகத்தை நிமிர்த்தி, அந்த அவளது வெட்கப் புன்னகையை அழகு பார்த்தவன், ''இனி உன்முறை நீதான் சொல்ல வேண்டும்...'' என்றான்.

ஒருகணம் அவன் சொல்வது புரியாமல் நந்தனா விழிக்க, அவளது கன்னத்தில் தனது இதழ்களை ஒற்றி அவளை மேலும் சிவக்க வைத்தவன், ''என் மேல் நீ கொண்டிருந்த காதல் பற்றி சொல்லச் சொல்கிறேன்...'' என்றான் குறும்புப் பார்வையுடன்.

நந்தனா வெட்கம் படர நாணிக் குனிந்தவள் மெல்ல தலை நிமிர்த்தினாள். ''உங்களை முதன் முதல் பார்த்ததும் எனக்குப் பரவசம்தான். ஆனால் பயத்தைக் கொடுத்தது. டெய்ஸியிடம் உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா இல்லையா என்பதை யெல்லாம் விசாரித்து உண்மையை தெரிந்து ரொம்பவும் திருப்தி யடைந்தேன். உங்கள் மீதான காதலை மறுபடி புதுப்பித்து

தொடரலாம் என்று பார்த்தால்... நீங்கள் கல்லுளிமங்கனாய் நடமாடிக் கொண்டிருந்தீர்கள்...''

''என்ன நான் கல்லுளிமங்கனா?'' அவள் சொல்வதைக் கேட்டு செல்லக் கோபத்துடன் அவள் நிமிர முதல் முறையாய் அவன் கழுத்தை வளைத்தவள் தன் கன்னத்தை அவன் கன்னத்தோடு வைத்து மென்மையாக உரசினாள்.

கோபம் தீர்ந்து புன்னகைத்தவளிடம், ''அப்படி நீங்கள் எதையும் வெளிப்படுத்தாத கல்லுளி மங்கனாய் இருந்ததால்தான் பாஸ்கர் மீது பழக்கம் இருப்பது போல் நடித்து உங்களைச் சீண்டினேன். என் நடவடிக்கையைக் கண்டு வெகுண்டு உங்களது ஆளுமையை நீங்கள் என் மீது வைத்திருந்த காதலை மெல்ல வெளிப்படுத்த ஆரம்பித்தீர்கள். அதை முழுமையாய் புரிந்து கொள்ள நானும் விடாது நடித்தேன். ஆனால் அதுவே பாஸ்கருடன் கல்யாணம் என்ற விபரீதம் வரை போய் பெரும் ஆபத்தில் என்னை மாட்டி விட்டு விட்டது. நல்லவேளை என்னை காப்பாற்றி விட்டீர்கள். அந்த பாஸ்கரை இப்போது நினைத்தாலும் பயமாய் இருக்கிறது...''

உடம்பு குலுங்க நடுங்கியவளை அப்படியே தன்னோடு சாய்த்து அணைத்தான் சரவணன்.

ஆனாலும் நந்தனா விடாமல் குற்ற உணர்வில் துவண்டாள். ''இப்போது நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாய் இருக்கிறது சரவணன். நான் எவ்வளவு மடத்தனமாய் புத்தியில்லாமல் நடந்திருக்கிறேன்... அந்த பாஸ்கர் எப்படிப்பட்ட பொறுக்கி... அவனைப் போய் விரும்புவதாய் குழம்பி... கல்யாணப் பத்திரிகை வேறு அடித்து...

மருகி கண் கலங்கியவளை நிமிர்த்தி விழியோர நீர்த்துளிகளை துடைத்தவன், ''அதற்கு நீ மட்டும் காரணமல்ல, கண்மணி நானும்தான்...!'' என்றான்.

''நீங்களுமா... என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம்.. கண்மணி..! நானும் வேண்டுமென்று உன்னையும் பாஸ்கரையும் வைத்து அசிங்கமாய் உன்னிடம் பேசினேனே.. அதுவும் தவறுதானே? உன்னை உடம்பு ஆசை... வெறி என்றெல்லாம் தவறாய் வர்ணித்தேனே அது... அதெல்லாம் பெரிய தப்புதானே? அந்த தப்பான வார்த்தைகள்தான் உன் கோபத்தைச் சீண்டி உன்னை அப்படியெல்லாம் செய்யும்படி வைத்து விட்டது. இதற்கு ஆங்கிலத்தில் பொஸஸிவ்னெஸ் என்றொரு அழகான வார்த்தையை சொல்வார்கள்...''

''அது என்ன பொஸஸிவ்னெஸ்?''

''அதாவது ஒருவர் மீது ஒருவர் தீராத அன்பு, ஆளுமை கொண்டிருந்தால் அவர்கள் மீது ஒரு அதீத உரிமை ஏற்படுமே அதுதான் இந்த பொஸஸிவ்னெஸ். சுருக்கமாகச் சொன்னால் ஒரு பொருளையோ ஒரு நபரையோ அது தனக்குத்தான் சொந்தம் வேறு யாருக்கும் அது கிடையாது... உரிமையில்லை என்றெல்லாம் அதீத உரிமை கொண்டாடுவது இந்த 'பொஸஸிவ்னெஸ்'. அந்த பொஸஸிவ்னெஸ் தான் நம் இருவருக்கும் வந்து இவ்வளவு பெரிய ஊடலை ஏற்படுத்தி விட்டது...''

''அப்படியா சொல்கிறீர்கள்?'' என்றபடி மாலையாய் கழுத்தில் கைகோர்த்தவளை அப்படியே தன்னோடு இறுக்கி அவள் செவ்விதழ்களில் மென்மையாய் முத்தமிட்டான்.

''இன்னொரு முக்கியமான விஷயம் கண்மணி... உன் தந்தை பெங்களூர் வந்து விட்டார். ஸ்டேஷனில் வைத்தே அவரிடம் எல்லா விஷயங்களையும் சொல்லி சம்மதம் வாங்கிவிட்டேன். நாளை நம் இருவருக்கும் ரெஜிஸ்டர் ஆபீசில் கல்யாணம்...''

அவன் சொல்லச் சொல்ல அப்படியே நெகிழ்ந்து தன் அழகான தலையைச் சிலுப்பி காதுமடல்கள் அதிர அவனைப் பார்த்தவள்,

''எல்லாவற்றையும் முன்பே செய்து விட்டீர்களா? என் மீது அவ்வளவு நம்பிக்கையா?'' என்றாள் கண்களில் நீர் தளும்பும் ஆதங்கத்துடன்.

''இருக்காதா பின்னே...? நீ... என் நந்தனாவாயிற்றே...?'' என்றபடி புன்முறுவலுடன் அவளை இறுக அணைத்து, தன்னோடு ஐக்கியப்படுத்தி தனது தீராத அன்பை சரவணன் வெளிப்படுத்தினான். அந்த இறுக்கமான அணைப்பில் கட்டுண்டு, தன் வசமிழந்தவளாய் வெட்கம்படர கண்களை மூடி, கனவுலகில் சஞ்சரிக்க ஆரம்பித்தாள் நந்தனா.

உன் காதல் கண்ணிலா...

1

காதுகளில் சிறிய பிளாஸ்டிக் தொங்கட்டான்களை மாட்டிக் கொண்டு கண்ணாடியில் பார்த்தாள் நிர்மலா. தலையை மெல்ல அங்கும் இங்கும் அசைத்தபோது அவளது அழகிய விழிகள் சற்று அகல விரிந்தது.

அவள் எதிர்பார்த்த அடக்கமான அமர்த்தலான அழகு அப்படியே இருந்தது.

புன்னகையுடன் எழுந்தவள் ஹேண்ட் பேக்கையும், சர்டிபிகேட்கள் அடங்கிய பைலையும் எடுத்துப் பத்திரப்படுத்தியவாறு கிளம்பினாள்.

அப்பா பார்த்துப் பார்த்து கட்டிய அந்த சிறு வீட்டின் சிறு ஒப்பனை அறையை விட்டு வெளியே வந்தபோது தங்கை சுபா எதிர்பட்டாள்.

''அக்கா, இண்டர்வியூவா...?'' என்றாள் கண்கள் மின்ன.

நிர்மலா பெரிதாய் தலையசைக்க, 'ஆல் த பெஸ்ட்' என வேகமாய் அவள் கைகளைப் பிடித்துக் குலுக்கினாள். ப்ளஸ் டு படிக்கும் பிரிய தங்கையின் அன்பை எண்ணி நெகிழ்ந்தவள் அவள் தலையை செல்லமாய் ஒரு தட்டு தட்டியவாறு முன்புறம் வந்தாள். அம்மா தயாராய் கோயில் பிரசாதத்துடன் நிற்க, அம்மாவிடம்

ஆசீர்வாதம் வாங்கி நெற்றியில் சின்ன விபூதித் திலகத்துடன் அவள் கிளம்பியபோது மணி ஒன்பதைத் தொட்டிருந்தது.

பத்து மணிக்கு இண்டர்வியூ என தெரிவித்திருந்தார்கள்.

மினர்வா கன்சல்டன்ஸி எனப்படும் நகரின் பெரிய வர்த்தக நிறுவனம் இது.

பஸ் பிடித்து, அரை மணிநேர அலுக்காத பயணத்தோடு ஒப்பனை கொஞ்சமும் கலையாமல் ஸ்டாப்பிங்கில் இறங்கி அவள் நடந்தபோது எதிரே பிரம்மாண்டமான மினர்வா டவர்ஸ் தெரிந்தது.

நடையின் வேகத்தைக் கூட்டியவள் கண்கள் படபடக்க தலைசாய்த்து அந்தக் கட்டிடத்தையே உற்றுப் பார்த்தாள்.

அகன்ற சலவைக் கல் என்று சொல்லப்படும் மார்பிள் பளபளப்பில் அந்த ஐந்து மாடிக் கட்டிடம், நவீன டிசைனிங் வேலைப்பாடுகளுடன் பிரமிக்க வைக்கும் அலங்கார முகப்புடன் இருந்தது.

இங்கு வேலை கிடைத்து, தினம் தினம் இங்கு வந்து வேலை பார்த்தால் எப்படி நன்றாக இருக்கும் என நினைப்பு ஓடும்போதே புன்னகையும் இதழ்களில் ஓடியது.

எம்.பி.ஏ. டிகிரியை வாங்கிக் கொண்டு வேலைக்காக இப்படித்தான் ஒவ்வொரு முறை இண்டர்வியூ போகும்போது நினைப்பது வாடிக்கையாய் இருக்கிறது. இது பத்தாவது முறை. இம்முறையாவது...?

படபடவென கிரானைட் படிகளில் குதி நடையுடன் ஏறியவள் அதே விரைசலுடன் நடந்து ரிசப்ஷனை நெருங்கினாள்.

ரிசப்ஷன் பெண் ரெடிமேட் புன்னகையுடன் அவளுக்கு வழிகாட்டினாள். லிப்ட் வழியாக இரண்டாவது ப்ளோரை

ஏடைந்து நடந்தாள். வரிசையான பாலிமர் இருக்கைகளுடன்)ண்டர்வியூ ஹால் தெரிந்தது.

அவளைப் போலவே மூன்று நான்கு பெண்கள் கூடவே ஐந்து ஆண்கள். நிர்மலா மெல்லிய புன்னகை படர இருக்கையொன்றில் போய் அமர்ந்தபோது எல்லாரும் நிமிர்ந்து அவளை ஒரு பார்வை பார்த்தனர். திரும்பிக் கொண்டனர்.

ஒரு சிறு புன்னகைக்கூட இவர்களுக்கு வராதா என ஏமாற்றத்துடன் தோளைக் குலுக்கியவாறு திரும்பியபோது தான் நிர்மலா முதன் முதலாய் அவனைப் பார்த்தாள்.

சற்றுத் தள்ளிய இருக்கையொன்றில் அவளுக்கு மற்றவர்களிட மிருந்து விலகி அமர்ந்தபடி முகத்தில் தீவிர சிந்தனையுடன் அவன்.

நிர்மலா சற்றே அவனை உற்றுப் பார்த்தாள்.

நெடு நெடு உயரம். சுருளான முடி தவழும் பரந்த நெற்றி. முறுக்கி விடப்பட்டிருக்கும் அடர் மீசை. வேல் விழியாய் குத்தும் கருவிழிகள். ஆஜானுபாகுவான உடற்பயிற்சி உடம்பு. ஒருவித வசீகரத்தன்மையுடன் மற்ற ஆண்களிடம் இருந்து மாறுபட்டிருந்தது அவனது சுபாவம். நிர்மலாவைக் கவனிக்க வைத்தது.

நிர்மலா அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தபோதே அவனும் சட்டென தற்செயலாய் திரும்பியவன் நிர்மலாவைப் பார்த்து விட்டான். அவனது வேல்விழி கருவிழிகள் அப்படியே நிர்மலாவை ஊசியாய் துளைத்தது. அவனது இறுக்கமான உதடுகள் தளர்ந்து மெல்லிய சிரிப்பு உதிர்ந்தது.

நிர்மலா பதிலுக்கு ஸ்னேகமான சிரிப்பு செய்தாள். அவன் புன்னகை விலகாமலே அங்கிருந்து எழுந்து நிர்மலாவின் பக்கத்து இருக்கைக்கு வந்தான். கண்களாலே அனுமதி பெற்று உட்கார்ந்தான். "ஐ ஆம் சரவணன்.." என்றான்.

"ஐ ஆம் நிர்மலா..." என்றாள் நிர்மலா பதிலுக்கு.

அவனது அடுத்த கேள்வியே அவளைத் திடுக்கிட வைத்தது.

"இந்த இண்டர்வியூவை அட்டெண்ட் செய்யப் போகிறீர்களா மிஸ் நிர்மலா?"

அவள் நிமிர்ந்து புதிராய் பார்த்தாள்.

"அதற்குத்தானே வந்திருக்கிறேன். என்ன கேள்வி இது?"

அவன் தோள்களை அசட்டையாய் குலுக்கினான்.

"நோ... யூஸ்.. இந்த இண்டர்வியூ வெறும் கண் துடைப்புதான். ஏற்கெனவே ஆட்களைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள்..."

நிர்மலா தலை சாய்த்து அவனைப் பார்த்தாள்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நன்றாகத் தெரியும். என்னிடமும் பேரம் பேசினார்கள். ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தால் வேலையைத் தருவதாய் உதவி மானேஜர் மூலம் சொல்லிப் பார்த்தார்கள். நான் மறுத்து விட்டேன்..."

"இது நான் கேள்விப்படாத ஒன்றாய் இருக்கிறதே...?"

"கேள்விப்படாத ஒன்றுதான். ஆனால் சிறிது நேரத்தில் இண்டர்வியூவில் உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளைப் பார்த்தால்... நான் சொன்னது உண்மை என்று புரிந்து விடும்..."

"அப்படி என்ன கேட்கிறார்கள்?"

நிர்மலா மறுபடியும் கண்கள் விரிய பார்க்க அவனது பார்வை தீர்க்கமானது.

"இதுவரை மூன்று பேர் உள்ளே சென்று விட்டு வெளியேறி வார்கள். அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வி பெரும் நகைப்புக்குரியது..."

"அப்படி என்ன நகைப்பாய்... சொல்லுங்கள், பார்ப்போம்..." நிர்மலா காது மடல்கள் அதிர கேட்க பதிலுக்கு அவனும் வேகமாய் தலையசைத்தான்.

"சொல்கிறேன்... மண்டோதரி யார்? யாருடைய மகள் அவள்? என்று கேட்டிருக்கிறார்கள் தெரியுமா?"

"என்ன சொல்கிறீர்கள்... மண்டோதரி பற்றியா?"

நிர்மலா வாய் பிளக்கும் அதிசயத்துடன் திகைக்க அவன் புன்முறுவலோடு தொடர்ந்தான்.

"இதே... இதேதான். உங்களுக்கு ஏற்படும் இந்த வியப்புதான் எனக்கும் ஏற்பட்டது. இராமாயண, ராவணன் மகள் மண்டோதரிக்கும் எம்.பி.ஏ. படித்து விட்டு மார்க்கெட்டிங் ஆபீஸர் வேலையைத் தேடி வந்திருக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? வேண்டுமென்றே நக்கலடிப்பது போல் இப்படியெல்லாம் கேட்கிறார்கள். அதனால்தான் கேள்விப்பட்ட பண விஷயம் உண்மை என்று நம்பத் தோன்றுகிறது..."

அவன் சொன்ன அனைத்தையும் கேட்டுக் கொண்டு நிர்மலா பேசாமல் இருந்தாள்.

"என்ன யோசிக்கிறீர்கள்... இன்னும் இண்டர்வியூவிற்காக உள்ளே செல்லலாம் என்று தோணுகிறதா? இல்லை செல்ல வேண்டாம் என்று தோணுகிறதா... இல்லை, ஒரேயடியாய் குழப்பமாக இருக்கிறதா?"

நிர்மலா மேலும் மௌனம் சாதிக்க அவன் தொடர்ந்தான்.

''எதுவானாலும் சரி, மிஸ். நிர்மலா நான் இப்படி விளக்கம் சொல்லித் தடுப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கிறது. அதையும் சொல்லிவிடட்டுமா?'' என்றான்.

நிர்மலா புதிராய் நிமிர்ந்தாள்.

''என்ன காரணம்... சொல்லுங்கள்'' என்றாள்.

''அது.... அது... காரணம் என்றுகூட சொல்ல முடியாது. ஒரு ஐடியா... வித்தியாசமான முயற்சி என்றுகூட சொல்லலாம். இங்குள்ள அனைவரிடமும் அதுபற்றி கேட்டு விட்டேன். யாருக்கும் துணிச்சல் இல்லை. வாழ்க்கையில் ரிஸ்க் எடுக்கும் தைரியமில்லை. நீங்களாவது..''

அவன் வார்த்தைகளை முடிக்கும் முன் அவள் குறுக்கிட்டாள்.

''அது என்ன வித்தியாசமான முயற்சி? முதலில் அதைச் சொல்லுங்கள்...'' என்றாள்.

அவள் காட்டிய ஆர்வத்தில் அவன் புருவம் உயர்ந்தது.

ஆர்வமாய் தன் முகத்தை முன்னால் கொண்டு வந்தான்.

''மிஸ் நிர்மலா... நமது எம்.பி.ஏ. படிப்பிற்கு பேங்க்கில் மூன்று லட்ச ரூபாய் லோன் தருகிறார்கள். இப்படி ஐந்தாயிரம் ஆறாயிரம் சம்பள ரூபாய்க்காக நாயாய் நாம் ஒவ்வொரு பில்டிங்காய் படியேறி அலைந்து திரிவதை விட, நாம் இருவரும் சேர்ந்து, அதாவது பேங்க் லோன் மூலம் கிடைக்கும் ஆறு லட்ச ரூபாய் முதலீட்டில் சொந்தமாய் ஒரு கன்சல்டன்ஸி நிறுவனத்தைத் தொடங்கி வாழ்க்கையில் முன்னேற முயற்சித்துப் பார்த்தால் என்ன...?''

2

நிர்மலா ஒரு கணம் அதிசயித்துத்தான் போனாள்.

அவன் கேட்டது சரியான கேள்வி.

எல்லோரும் வேலை வேலை என்று அலைந்து கொண்டு மாதச் சம்பளத்திற்காக குண்டு சட்டியிலே குதிரை ஓட்டிக் கொண்டிருந்தால் எப்படி? கொஞ்சம் வித்தியாசமாய் தன்னம்பிக்கையுடன் முயற்சி எடுத்துப் பார்த்தால் என்ன?

இது அவளுக்குள் அடிக்கடி எழுந்த சிந்தனைதான். அப்படி சிந்தனை எழும்போதே நாமாவது தனியே தொடங்குவதாவது... என்ற பயமான சாக்குப் போக்குடன் எண்ணத்தை நிறுத்திவிடுவாள்.

ஆனால் இன்று?

அவன் கேட்ட கேள்வி சத்தான டானிக்கை குடித்தது போல் அவளுள் உற்சாகத்தைக் கிளப்பியது.

''என்ன சொன்னீர்கள்?'' என்றாள் திரும்பவும்.

அவள் ஆர்வமாகிவிட்டதை உயர்ந்த அவனும் விளக்கமாய் கதை போல் சொல்ல ஆரம்பித்தான்.

''இதோ பாருங்கள் மிஸ் நிர்மலா, நான் வெறும் பேச்சாக இதையெல்லாம் சொல்லவில்லை. பிராஜக்ட் ரிப்போர்ட் போல் சொந்தமாய் கன்சல்டன்ஸி ஒன்று தொடங்க தேவைப்படும் விஷயங்களை எல்லாம் ரெடி செய்து எழுதி வைத்திருக்கிறேன். முதலில் இந்த பைலைப் பாருங்கள். உங்களுக்குப் புரியும்...'' என்றபடி கையிலிருந்த இரண்டு பைல்களில் ஒன்றை நீட்டினான்.

நிர்மலா பைலை வாங்கிப் புரட்டினாள்.

அவன் சொன்னது சரி.

சொந்தமாக கன்சல்டன்ஸி ஆரம்பிப்பதற்கு தேவையான திட்ட விபரங்கள், செலவுகள் என வரிசைப்படுத்தி விரிவான கணக்குகள் அதில் இருந்தது. மொத்த நிகரச் செலவு, தேவைப்படும் மூலதனம் என ஆறு லட்ச ரூபாயை கணக்கிட்டு சிவப்பு மையால் கோடிட்டிருந்தான்.

பார்த்தபடி நிமிர்ந்த அவளிடமும் அதையே சுட்டிக் காட்டினான்.

''பாருங்கள், அதில் தேவைப்படும் மூலதனம் ஆறு லட்சம் என்று வருகிறதல்லவா... அதற்குத்தான் இன்னொரு பார்ட்னரை தேடிக் கொண்டிருக்கிறேன். உங்களுக்கு சம்மதம் என்றால்...''

அவன் வார்த்தைகளை முடிக்காமல் இழுக்க நிர்மலா மறுபடியும் தலையைச் சிலுப்பியபடி பார்த்தாள்.

''பேங்க் லோன் என்று சொன்னீர்களே... எப்படி? மூன்று லட்சம் உடனே கிடைத்துவிடுமா? உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?''

''ம்ம்... கண்டிப்பாக கிடைத்து விடும். என் தந்தையின் நண்பர் ஒருவர்தான் பேங்க் மேனேஜராய் பணியாற்றி வருகிறார். அவரிடம் இது விஷயமாக நிறைய முறை பேசி விட்டேன். உரிய சர்டிபிகேட்டுகளையும், டாக்குமெண்ட்களையும் காட்டினால் உடனே சாங்ஷன் செய்து, பணம் கிடைக்க ஏற்பாடு பண்ணுவதாய் உறுதி கூறியிருக்கிறார்..''

அவன் பேசி முடித்ததும் பெரிய அமைதி ஒன்று நிலவியது.

நிர்மலா கொஞ்ச விநாடிகள் கன்னத்தில் கை வைத்து தலைசாய்த்தவாறு அவனையே பார்த்தாள்.

அவனும் ஓரிரு நிமிடங்கள் மௌனமாகவே அவளைப் பார்த்தவன், ''புரிகிறது...'' என்றான்.

நிர்மலா புருவங்களை உயர்த்தினாள்.

''புரிகிறதா...? என்ன புரிகிறது...?''

''மிஸ் நிர்மலா நீங்கள்...'' என்று அவன் ஆரம்பிக்க நிர்மலா அகுயையாய் முகத்தை வெட்டினாள்.

''முதலில் இந்த மிஸ்ஸை நிறுத்துங்கள். நிர்மலா என்றே கூப்பிடுங்கள்...''

''ம்ம்... சரி...''

அவன் தலையசைத்தவாறு பற்களைக் காட்டினான்.

''சரி... சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்...''

''ம்ம்... சொல்கிறேன்; நிர்மலா நீங்கள் தயங்குவது யோசிப்பது புரிகிறது. திடுதிப்பென்று இண்டர்வியூவிற்கு வந்த இடத்தில் முன்பின் தெரியாத நான் சொல்வதை ஏற்றுக் கொள்வது முறையில்லைதான். ஆனால்...''

''சொல்லுங்கள்...''

''முன்பின் தெரியாத நான் தெரிந்தவனாகி விட்டால்...?'' என்றபடி அவன் நிறுத்திவிட்டு மறுபடியும் புன்னகை புரிய அவள் விசித்திரமாய் அவனைப் பார்த்தாள். அவன் சிரிப்புடன் தொடர்ந்தான்.

''அதாவது நிர்மலா, முதலில் நீங்கள் என் வீட்டிற்கு வாருங்கள். என் தந்தையை என் பிரியமான அம்மாவை, சுட்டித் தங்கையை என எல்லோரையும் அறிமுகம் செய்து வைக்கிறேன். பின் நானும் உங்கள் வீட்டிற்கு வருகிறேன். உங்கள் தந்தையிடம் இந்த கன்சல்டன்ஸி பற்றி விரிவாய் பேசுகிறேன். இப்படி நம் இருவர் குடும்பத்திற்கும் பரஸ்பர அறிமுகம் ஏற்பட்டு விட்டால் நாம் ஒன்று சேர்ந்து பார்ட்னர்களாகத் தொழில் தொடங்க எவ்விதப்

பிரச்சினையும் இருக்காது. என்ன சொல்கிறீர்கள்...? எப்படி என் யோசனை?''

அவன் சொல்வதைக் கேட்டு நிர்மலா அதிரவும் அதிசயிக்கவும்தான் செய்தாள்.

எவ்வளவு தெளிவாக யோசிக்கிறான். பேசுகிறான். எப்படி இது சாத்தியம்?

அவனது தீர்க்கமான பார்வை, உறுதியான பேச்சு எல்லாமே அவளைத் தட்டிக் கழிக்க முடியாத நிலைக்கு கொண்டு போயிற்று.

''இன்று என் வீட்டிற்கு வாருங்கள். நாளை உங்கள் வீட்டிற்கு வருகிறேன்...'' என்று அவன் சொன்னபோது அவளையறியாமல் தலையை மேலும் கீழும் ஆட்டினாள்.

சரவணன் அத்தோடு நில்லாமல் ஒரு சிறு பேப்பரில் தனது விலாசத்தைக் குறித்து அவளிடம் நீட்டினான்.

''சரியாக மாலை ஐந்து மணிக்கு உங்களை எதிர்பார்க்கிறேன்...'' என்றபடி புன்னகையுடன் விடை பெற்றான்.

நிர்மலா பதிலுக்குப் புன்னகைத்தபடி விறுவிறுவென அகலும் அவனது நடையழகை வியந்து பார்த்தாள். அவளும் இனி இண்டர்வியூ தேவையில்லை என எழுந்து கொண்டாள்.

அன்று வீட்டிற்கு வந்து, மதிய உணவருந்தும் வேளையில் அப்பாவிடம் சொன்னபோது அப்பாவும் அதிசயிக்கத்தான் செய்தார்.

''வேலை... வேலை... என்று அலைந்து திரிவதற்கு பதில் இப்படியொரு முயற்சி எடுப்பது நல்லதுதான். அவர் பெயர் என்ன சொன்னாய்?'' என்றார்.

''ச... சரவணன்'' என்றாள் நிர்மலா. அப்படி அவன் பெயரை உச்சரிக்கும்போதே ஒருவித இனிமை புதிதாய் அவளுள் ஓடிற்று.

''சரி.. சரிம்மா... நீ இன்று அவர் வீட்டுக்குச் சென்றுவா. அவர் விருப்பப்படியே நாளை அவரை நான் சந்தித்துப் பேசுகிறேன். எல்லாம் சரியாக எனக்கு திருப்தியாக அமைந்து விட்டால் நீ தாராளமாக அவருடன் சேர்ந்து கன்சல்டன்ஸி நிறுவனத்தைத் தொடங்கலாம். போதுமா... உனக்கு சந்தோஷம்தானே...?''

தந்தையின் கேள்விக்கு பொங்கும் சிரிப்புடன் உற்சாகமாய் தலையசைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள் நிர்மலா.

அன்று மாலை ஐந்து மணிக்கு தங்கையின் மொபட்டை வாங்கியபடி சரவணனின் வீடு நோக்கி கிளம்பி விட்டாள் நிர்மலா.

சரவணனின் வீடு நகரின் நூற்பாலையை ஒட்டிய மில்லர்புர காலனியில் இருந்தது. பத்து நிமிட பயணத்திற்கு வீட்டு விலாசத்தைக் கண்டுபிடித்து மொபட்டை நிறுத்தினாள்.

வாசல் கேட்புறம் கைவைத்தபடி தயாராய் அவளுக்காக காத்திருந்தான், சரவணன்.

''நிர்மலா..வாங்க'' என்றபடி வெளீர் நிற சட்டையில் பளீரென புன்னகைத்தான்.

அவனது அழகான வரிசைப் பற்களைப் பார்த்தவாறே பதிலுக்குப் புன்னகைத்தவள் வீட்டை நோக்கினாள்.

சிறிய வீடு என்றாலும் பளீச்சென சிறுசிறு அறைகளுடன் அழகாக இருந்தது. முன்புறம் விஸ்தாரமான புல்தரை. காற்றோட்டமான திறந்தவெளி. குரோட்டன்ஸ், மணி பிளாண்ட், ரோஜா என வீட்டைச் சுற்றி விதவிதமான செடிகள் வைத்து வெளிப்புறம் பூந்தோட்டம்போல் இருந்தது. உயரமான தென்னை மரங்களும், கிணற்றடியும் கிராமத்து சூழ்நிலையை அவளுக்கு உணர்த்தின.

எல்லாவற்றையும் ரசித்துப் பார்த்தபடி நிர்மலா நடக்க உள்ளிருந்து சிரித்தபடி பாவாடை தாவணியும், இரட்டைச் சடையுமாய் வெளிவந்தாள் தங்கை.

''இது... என் தங்கை நித்திலா. ப்ளஸ் டூ படிப்பில், குறும்பில் கட்டி...'' என அவளை அறிமுகப்படுத்தினான் சரவணன்.

''வாங்க...'' என சிரிப்புடன் வரவேற்றவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு உள்ளே நடந்தாள் நிர்மலா. சரவணனின் தந்தை குருநாதர் ஓய்வு பெற்ற தமிழாசிரியர். தாய் அன்னபூரணி. லக்ஷ்மிகரமாய் இன்முகத்துடன் இருக்க எல்லோரையும் அறிமுகப்படுத்தினான் சரவணன்.

பதிலுக்கு கைகூப்பி நமஸ்கரித்தாள் நிர்மலா.

அவர்கள் எல்லோரையும் நிர்மலாவிற்கு பிடித்துப் போயிற்று. அவர்களுக்கும் நிர்மலாவைப் பிடித்துப் போய் விடாது பேசினர். அதிலும் சரவணனின் தங்கை நித்திலா நிர்மலாவையே சுற்றி வந்தாள்.

நிர்மலா தன் நீளமான கூந்தலை வாரி க்ளிப்பிங் செய்த டாப்ஸி டெய்ல் அலங்காரத்தை அக்கறையாய் கேட்டாள். தங்க நிற பூனம் சாரியில் புதுமலராய் பளீரிட்ட நிர்மலாவின் அழகும், நளினமான அவளது வசீகரத் தன்மையும் நித்தியாவை ரொம்பவும் கவர்ந்தன.

''ப்யூட்டி டிப்ஸ் எதாவது கொடுங்க...'' என்று அவள் சொன்னபோது தன் முத்துப்பற்கள் தெரிய அடக்க முடியாமல் சிரிக்கத்தான் செய்தாள் நிர்மலா.

அந்த சிரிப்பில் சரவணனும் கலந்து கொண்டு, ''இல்லை நிர்மலா தங்கை கேட்பது சரிதான். நிஜமாகவே நீங்கள் அழகுதான்..'' என்றபோது அவளுக்கும் மெய்சிலிர்த்தது. கண்கள் தாழ வெட்கப்பட்டவள் சொல்லிய சரவணனின் முகத்தை உற்றுக்

கவனித்து அவனும் நிஜமாகத்தான் சொல்கிறான் என்பதையறிந்த போது சொக்கித்தான் போனாள் அவள்.

3

மறுநாள் முன்பே திட்டமிட்டபடி சரவணனும் வீட்டிற்கு வந்து நிர்மலாவின் தந்தையை சந்தித்தான். சொந்த கன்ஸல்டன்ஸி தொடங்குவதற்கான ஆவணங்களை மதிப்பீட்டு விபரங்களை எல்லாம் காட்டி விவரமாகப் பேசினான்.

நிர்மலாவின் தந்தை ரகுராமிற்கு சரவணனை ரொம்பவும் பிடித்துப் போயிற்று. உடன் நீங்கள் இருவரும் சேர்ந்து நிறுவனத்தைத் தொடங்குங்கள் என பச்சைக் கொடி காட்டி விட்டார்.

அடுத்தாற்போல் இருவரும் பேங்க் மேனேஜரை சென்று சந்தித்தார்கள். தேவைப்படும் பாரங்களை எல்லாம் பூர்த்தி செய்து கொடுத்தார்கள். ஒரு வாரத்தில் லோன் சாங்ஷன் ஆகி பணம் வந்துவிடும் என மேனேஜர் கூற மகிழ்ச்சியோடு அவரிடம் விடை பெற்று வெளிவந்தனர்.

நிர்மலா வெளிவந்தவள் யோசனை தோன்ற சரவணனையே பார்த்தாள்.

''என்ன நிர்மலா?''

''லோன் ஓ.கே.யாயிற்று. இடம்... அலுவலகம் எங்கு வைப்பது சரவணன்?''

''அதற்கும் இடம் பார்த்து ரெடியாய் வைத்திருக்கிறேன்... நிர்மலா. என் நண்பன் ஒருவனுக்கு சொந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்

ஒன்றில் ஒரு சிறிய அறையைச் சொல்லி வைத்திருக்கிறேன் அதையும் பார்த்து விடுவோமா?''

நிர்மலா தலையாட்டினாள்.

இருவரும் ஆட்டோ பிடித்து பத்து நிமிட பயணத்திற்குப் பின் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸை அடைந்தனர். சரவணன் சொல்லிய அதை முதல் ப்ளோரில் கீழ்தளத்தை ஒட்டி இருந்தது. அதற்கும் சம்மதம் சொன்னாள்.

அறையின் வாடகை மூவாயிரம் என்பது அவளை வாய் பிளக்க வைத்து பயத்தைக் கொடுத்தது. ''முடியுமா சரவணன்... மாதா மாதம் மூவாயிரம் கொடுத்து... எவ்வித அனுபவமும் இல்லாமல் நம்மால் தாக்குப் பிடிக்க இயலுமா?'' என்றாள் சந்தேகத்துடன்.

அவளது சந்தேகத்திற்கு ரெஸ்டாரண்ட் ஒன்றில் உட்கார்த்தி வைத்து நீண்ட லெக்சர் கொடுத்தான் சரவணன்.

''இதோ பார் நிர்மலா. முதலில் நம் மீது நமக்கு அளவு கடந்த நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் ஜெயிக்க முடியும்...'' என்றான்.

''சரி வைத்துக் கொள்கிறேன்...'' என்றாள் நிர்மலா.

''அடுத்தாற்போல் நாம் செய்யும் கன்ஸல்டன்ஸி தொழில். அதைப்பற்றி. அதில் முக்கியமாக நாம் செய்யப் போகும் ஒரு விஷயத்தை உனக்குத் தெளிவுப்படுத்துகிறேன்...''

''சொல்லுங்கள்...''

''நமது கன்ஸல்டன்ஸியின் முக்கிய வேலையே பெரிய சிறிய தொழில் நிறுவனங்களுக்கு திட்ட அறிக்கையை உருவாக்கி கொடுப்பதுதானே...?''

''ஆ...மா..ம்..''

''அந்தத் திட்ட அறிக்கையே நாம் தயாரித்து கொடுக்க... ரொம்ப குறைந்த அளவு தொகையையே சர்வீஸ் சார்ஜாக நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என் ஐடியா. ஏனென்றால் இப்போது நன்றாக இயங்கி வரும் கன்ஸல்டன்ஸி நிறுவனங்கள் எல்லாம் அதிகப்படியான கட்டணத்தை வசூலித்து வருகின்றன. அவர்களுடன் போட்டி போட வேண்டுமென்றால் நாம் குறைத்துதான் கட்டணத்தை வைக்க வேண்டும். மேலும்...''

''சொல்லுங்கள்...''

''நமது நிறுவனத்திற்கு க்ளையண்ட்களைப் பிடிக்க பெரிய நிறுவனங்களை குறி வைக்காமல், புதிதாய் சந்தையில் இறங்கும் சிறு சிறு நிறுவனங்களை குறி வைத்து இயங்க வேண்டும் என்பதே எனது திட்டம். அப்படி சிறு நிறுவனங்களுக்கு தேவையான விபரங்களை திட்ட அறிக்கைகளை சரியாக நாம் செய்து கொடுத்தால் அவர்களுக்கு மட்டுமல்ல... நமக்கும் பெரிய வளர்ச்சி ஏற்படும். நல்ல பெயர் கிடைக்கும்...''

''அப்படி நிஜமான திட்ட அறிக்கையைக் கொடுத்தால் நமது கிளைண்டிற்கு அவர்களது புதிய தயாரிப்பான மலர் சோப்பை சந்தைப்படுத்த எளிதாய் இருக்கும். மேலும் நமது திட்ட அறிக்கை சரியான கணிப்பாய் இருந்தால் அந்த வழிமுறைகளைப் பின்பற்றி அவர்களும் மார்க்கெட்டிங் செய்து விற்பனையில் வெற்றி பெற்றுவிட்டால் அது அவர்களுக்கு மட்டுமல்ல... நமக்கும் வெற்றிதானே...?''

''அதேதான் எனது பாயிண்டும்...'' என்றாள் நிர்மலா முழு உற்சாக குரலில்.

''ம்ம்... நல்லது நிர்மலா... இன்னும் இரண்டொரு நாளில் அந்த அறையை நம் அலுவலகமாய் மாற்ற ஏற்பாடு செய்து விடுகிறேன். அதற்குப் பின் நாம் நமது பணியைத் தொடங்கி கடுமையாக உழைக்க ஆரம்பித்து விடுவோம்...'' என்றான்.

அடுத்து வந்த சில தினங்களில் அலுவலகம் ரெடியாகி கன்ஸல்டன்ஸிக்கு என்ன பெயர் வைப்பது என்ற விவாதம் வந்தது

அவளும் தன் பங்குக்கு ஏதேதோ பெயர்களை யோசித்தாள் பின் சரவணனே யோசனையுடன் சிந்தித்து நிமிர்ந்தவன், ''வேண்டுமானால் நிம்மி என்று வைத்துக் கொள்வோமா? நிம்மி கன்ஸல்டன்ஸி பெயர் எப்படி இருக்கிறது?'' என்றான்.

நிர்மலாவுக்கும் அந்தப் பெயர் ரொம்பவும் பிடித்திருந்தது. ஏனென்றால் அவளை வீட்டில் எல்லோரும் அழைப்பது நிம்மி என்றுதானே? அதையே சரவணன் உச்சரிக்கும்போது அவளை யறியாமல் பரவசம் ஏற்பட்டு திக்குமுக்காட வைத்தது. வீட்டில் தன்னை அப்படி அழைப்பது சரவணனுக்குத் தெரிந்திருக்குமோ என்று கூட சந்தேகித்தாள்.

''என்ன நிர்மலா நிம்மி கன்ஸல்டன்ஸி என்றே வைத்து விடுவோமா?'' என திரும்பவும் சரவணன் கேட்கவும் வெட்கம் பொங்கவே தலையசைத்தாள் நிர்மலா.

ஆனால் கன்ஸல்டன்ஸி திறப்பு விழாவின்போது சரவணனின் தங்கை நித்திலா நிர்மலாவின் பக்கம் வந்தவள், ''என்ன அலுவலகப் பெயர் நிம்மி கன்ஸல்டன்ஸியா? அண்ணன் இன்னும் நிம்மியை மறக்கவில்லை போலவே...'' என்றபோது நிர்மலா அதிர்ந்துதான் போனாள்.

4

நிர்மலாவுக்கு நித்திலா சொன்ன விஷயம் உறுத்திக் கொண்டிருந்தாலும் அடுத்து வந்த சில நாட்கள் அது பற்றி யெல்லாம் சரவணனிடம் கேட்க முடியாத படி சூழ்நிலை இருந்தது.

'நிம்மி கன்ஸல்டன்ஸி' என்ற அழகான பெயர்ப் பலகையுடன் நிறுவனம் தொடங்கிய முதல் நாள் முதலே, வேலைகளிலும் சுறுசுறுப்பு காட்ட வேண்டியிருந்தது. சரவணன் தன் வீட்டிலிருந்து கம்ப்யூட்டர் சிஸ்டத்தைக் கொண்டு வந்து அலுவலகத்தில் பொருத்தினான்.

நிர்மலா அதில் நகரின் அத்தனை வியாபார, தொழில் நிறுவனங் களின் பெயரையும் முகவரியையும் லோட் செய்ய வேண்டி யிருந்தது. சரவணன் அறிவுறுத்தலின்படி அந்த நிறுவனங்களுக்கு நிம்மி கன்ஸல்டன்ஸி பற்றிய விபரங்களை எல்லாம் இமெயில் வழியாக மெஸேஜும் அனுப்பி வைத்தாள்.

சரவணன் அத்தோடு விடவில்லை. ''நிர்மலா, நாம் தினம் இரண்டு மணி நேரம் ஒதுக்கி பெரிய பெரிய தொழில் நிறுவனங் களை நேரிடையாய் சந்திக்க வேண்டும்...'' என்றான்.

''எதற்காக?'' என்றாள் நிர்மலா புரியாதவளாய்.

சரவணன் சிரித்தான். ''என்ன நிர்மலா இப்படிக் கேட்கிறாய்?'' கடையை விரித்தாயிற்று. வியாபாரம் செய்ய வேண்டாம். நமக்கு கிளையண்ட்ஸ் எனப்படும் வாடிக்கையாளர்களை பிடிக்க வேண்டும். அதற்கு சில உத்திகளையும் நாம் கையாள வேண்டும் புரிகிறதுதானே?''

சரவணன் சொன்னதோடு நிற்காமல் மறுநாளே அவளை கூட்டிக் கொண்டு இரண்டு மூன்று தொழில் நிறுவனங்களுக்குச் சென்றான். கம்பெனியில் மானேஜிங் டைரக்டர், சிஇஓ என பெரிய பெரிய அதிகாரிகளுடன் லாவகமாய் பேசும் அவன் திறமையைக் கண்டு நிர்மலா வியக்கத்தான் செய்தாள்.

''எவ்வளவு லாவகமாய் சாதுர்யமாய் பேசி ஆர்டர் பிடித்தீர்கள். இந்த அறிவு, இந்த சாதுர்யம் நிச்சயமாய் எனக்கு

இல்லை சரவணன்...'' என்றாள் வியப்பு நீங்காமல். சரவணன் தோள்களை குலுக்கியபடி சிரித்தான்.

''நிர்மலா... நா சொந்தமாய் ஒரு கன்ஸல்டன்ஸி நிறுவனம் தொடங்க வேண்டும் என எவ்வளவு வெறியாய் அலைந்தேன் தெரியுமா? எத்தனை பேர்களிடம் பார்ட்னராக சேருவது பற்றி பேசியிருப்பேன் தெரியுமா? யாரும் செவி சாய்க்கவில்லை. எல்லோரும் மாத வேலை, சம்பளம் என ஒரு குறுகிய வட்டத்திலேயே ஓட விரும்பினார்கள். ஆனால் நீ... நீங்கள்... ஒருவர்தான் துணிச்சலாய் நின்று சம்மதம் சொன்னது. அதனால் உங்களுக்குத்தான் எனது நன்றியை நான் முதலில் சொல்லியாக வேண்டும்... நன்றி... நிர்மலா...'' என்றபோது நிஜமாகவே அந்தப் புகழுரையில் மெய்சிலிர்த்தது நிர்மலாவுக்கு.

முன் நெற்றியில் தலைமயிர் கேசம் படர.. அழகாக புன்னகைத்தபடி பேசும் அவனை கண் கொட்டாமல் பார்த்தாள். அவளை, அவன் மரியாதை கொடுத்து பேசுவது உறுத்தவே... அதையும் சொல்லிவிட்டாள் நிர்மலா.

''இந்த நீங்க.. போங்கவை விடுங்க சரவணன். ஒருமையிலே அழையுங்கள். அதுதான் நன்றாக இருக்கிறது..'' என்றாள்.

சரவணன் அதற்கு புன்னகையோடு சம்மதித்தவன் தொடர்ந்து, ''நிர்மலா இன்னொரு முக்கியமான விஷயம் உன்னிடம் சொல்ல வேண்டும். நான் இவ்வளவு நாள் சொல்லாமல் இருந்ததே தப்பு. சொல்லி விடட்டுமா?'' என்றபோது நிர்மலாவிற்கு மனதில் ஏதோ நெருடியது. நிமிர்ந்து அதிசயமாய் அவனைப் பார்த்தாள்.

''என்ன விஷயம் சரவணன்?''

''நான் இப்படி வெறியாய் அலைந்து நமது சொந்த பிஸினஸ் முயற்சியில் எப்படியும் வெற்றி பெற்று விட வேண்டும் என

துடிப்பதற்கு நிஜமாய் இன்னொரு காரணமும் இருக்கிறது நிர்மலா...''

''காரணமா? என்ன காரணம் சரவணன்?''

நிர்மலா கேட்டதும் சரவணனின் முகம் மெல்ல மாறியது.

''ஒரு பெண். அவள் பெயர் நிம்மி... அவள்தான் காரணம்...''

முகம் இறுக சரவணன் சொல்ல திகைத்துப் போனவளாய் அவனையே உற்றுப் பார்த்தாள் நிர்மலா.

''நிம்மியா...? யார் அந்த நிம்மி சரவணன்?''

''நிம்மி... என் காதலி...'' என்றான் சரவணன் நீளமான மூச்சுடன் அவளை அதிர வைத்தபடி...

5

'நிம்மி என் காதலி...' என்று சர்வ சாதாரணமாய்ச் சொன்னான் அவன். அவன் நிம்மி என அழுத்தமாய் உச்சரித்த விதமும், காதலி என பாசப் பரிவாய் விளித்த விதமும் அவளை அதிர்வோடு திடுக்கிடச் செய்தது.

அப்படியே கண்கொட்டாமல் அவனைப் பார்த்தாள். இந்தக் காதல் கண்றாவி வேறு... என அவள் எரிச்சல்பட அவன் அதை உணராமல் கதை போல் சொல்ல ஆரம்பித்தான்.

''அது... ஒரு பெரிய கதை நிர்மலா... விரிவாகச் சொல்கிறேன்...'' என்று தொடங்கியவன், ''நிர்மலா நான் எம்.பி.ஏ. படிப்பு முடிந்ததும் முதன் முதலாய் மேனேஜ்மெண்ட் ட்ரெய்னியாக ஆறு மாதங்கள் ஒரு கம்பெனியில் வேலை பார்த்தேன். அந்தக்

கம்பெனியின் பெயர் ஆர்.கே.கார்மெண்ட்ஸ். அந்த நிறுவனத்தின் முதலாளிதான் இந்த நிம்மி...''

அவன் நிறுத்த... அவசரமாய் குறுக்கிட்டு, ''அப்படியானால் முதலாளியையா காதலித்தீர்கள்?'' என்றாள் சற்று கேலி பொங்க.

பதிலுக்கு அவன் சீரியஸாய், ''காதலித்தேன்' இல்லை நிர்மலா 'காதலித்தோம்' என்றுதான் சொல்ல வேண்டும்'' என வார்த்தைகளைத் திருத்த அவளுள் எரிச்சல் கூடவே செய்தது.

''அப்படியானால்... என்ன கண்டதும் காதலா?'' என்றாள் மீண்டும் அதே கேலி செய்யும் கோபத்தில்.

அதற்கு மறுப்பு செய்யாமல் பலமாய் தலையாட்டினான் சரவணன்.

''கரெக்டாகச் சொல்லி விட்டாய். அதேதான் நிர்மலா. இருவரும் ஒருவரையொருவர் பார்த்த அந்த முதல் சந்திப்பில்... முதல் கணத்தில்... எங்களுக்குள் என்னவோ ஆகிவிட்டது. பயங்கர ஈர்ப்பு ஏற்பட்டு மனதை பறிகொடுத்து விட்டோம். காதல் என்றால் அப்படியொரு காதல்...!''

சரவணன் சொல்ல நிர்மலா கைகளைத் தட்டியவள், ''சரிதான்... ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜுலியட் நாடகம் தான் ஞாபகம் வருகிறது. அதில்தான் ரோமியோவைப் பார்த்த முதல் சந்திப்பிலே ஜுலியட் மனதை பறி கொடுப்பாள். பெரிய மன்மதக்குஞ்சாய் ரோமியோவும் பறி கொடுப்பான். இருவருக்கும் காதல் ஸ்டார்ட் ஆகிவிடும். அப்படித்தானா உங்கள் கதையும்...?'' இகழ்ச்சியும் கேலியுமாய் அவள் கேட்க... வெட்கப்படாமல் சிரித்த சரவணன், ''நீ சொல்வது சரி நிர்மலா, நான் உன்னைப் போலத்தான் ஷேக்ஸ்பியரின் நாடகத்தை நினைத்து, நாம் என்ன ரோமியோ ஜுலியட்டா கண்டதும் காதல் வர... என திகைத்துதான் யோசித்

தேன். ஆனால் நிஜத்தில் உண்மையாய் கண்டதும் காதல் வந்தது. இருவருக்கும் மெய்யாய் அன்பு வந்தது...''

'வரும்... வரும்... கொள்ளிக்கட்டைதான் வரும்...' ஆத்திரத்தோடு அவள் உதடுகளுக்குள் அரிசிப் பற்களை கடித்து அரைத்ததை உணராமல் சரவணன் தொடர்ந்து கொண்டிருந்தான்.

''நிர்மலா இந்தக் காதல் ஏற்பட்டதில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயத்தையும் கண்டுபிடித்தேன். அது...''

''சொல்லுங்கள். அப்படி நிம்மியுடன் காதல் ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த விஷயம் என்னவோ...?'' மறுபடியும் துடுக்குடன் கேலி செய்தாள் அவள்.

அவன் அதை கொஞ்சமும் உணராமல் அவளை சீரியஸாகப் பார்த்தவன், ''நிர்மலா... நீ திருக்குறள் படித்திருக்கிறாய்தானே...?'' என்றான்.

''ம்ம்.. படித்திருக்கிறேன். ஆனால் அதில் உங்கள் காதல் நிம்மியைப் பற்றி வள்ளுவர் ஏதும் குறள் இயற்றியதாய் ஞாபகம் இல்லையே...!''

அவள் வேண்டுமென்றே சீண்டலாய்ப் பேசி பழி தீர்க்க அவனோ நெற்றியைத் தேய்த்தபடி மேலும் சுவாரஸ்யமானான்.

''அது... சரிதான் நிர்மலா. வள்ளுவர் நிம்மியைப் பற்றி சொல்ல வில்லை. நிம்மியின் காதல் பார்வையை அவள் என்னைப் பார்த்த ஆழமான ஒருவித பார்வையை. ஒரு இரண்டு வரிகளில் என்னமாய் அழகாக சொல்லியிருக்கிறார் தெரியுமா?''

நிர்மலாவினுள் பரிகாசம் கூடியது. ''அட... வள்ளுவர் உங்களுக்காக அந்தக் காலத்திலேயே குறள் பாடியிருக்கிறாரா? பேஷ்... பேஷ்.... தெய்வீகக் காதல்தான் போங்கள்!''

அவள் பரிகாசத்தைப் பாராட்டாய் எண்ணிக் கொண்ட சரவணன், ''நிர்மலா அந்தக் குறள் வரிகளைச் சொல்கிறேன். அப்போதுதான் அப்படி நான் சொல்வது எவ்வளவு அர்த்தமான உண்மை என்பது புரியும்...'' என்றபடி குறளைச் சொல்ல ஆரம்பித்தான்.

''நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.

அதாவது நிர்மலா, தலைவன் மையல் கொண்டு பார்த்ததும், தலைவியும் காதல் கொண்டு அப்படியொரு பார்வையைத் திரும்பப் பார்க்கிறாளாம். அந்தப் பார்வை ஆயிரமாயிரம் படைகள் சேனையோடு வந்து தாக்குவது போல் இருக்கிறதாம். தலைவியின் அந்தப் பார்வைக்கு அப்படி ஒரு மகத்தான சக்தியாம்!

''அப்படியொரு பார்வை அந்தத் தலைவி நிம்மி உங்களைப் பார்த்தாளாக்கும். நீங்களும் மன்மதக் குஞ்சாய் மயங்கிவிட்டீர்களாக்கும்!'' நிர்மலா தாள முடியாத எரிச்சலுடன் ஏற்றி இறக்கி கிண்டலாய்ச் சொல்ல... அதற்கு தலையாட்டி நிஜமாய் ஆமோதித்தான் சரவணன்.

''ஆமாம்... நிர்மலா... உண்மையில் அதுதான் நடந்தது. அந்த நிம்மிக்கு உன்னைப்போல் சற்றுப் பெரிதான விழிகள். நீ மை வைத்திருப்பது போல்தான் அவளும் கண்களில் அழகாய் மை வைத்திருப்பாள். அதுபோல்...''

சரவணன் மேற்கொண்டு ஏதோ சொல்லப் போக, அதற்கு மேல் நிம்மி புராணம் கேட்கப் பிடிக்காதவளாய் கைகளை உயர்த்தினாள்.

''புரிகிறது... சரவணன், உங்கள் இருவருக்கும் காதல் வந்தாயிற்று. நீங்கள் காதலித்தீர்கள். அதற்குப் பின் என்ன நடந்தது. அதைச் சொல்லுங்கள்...''

அதற்கும் பவமாய் தலையாட்டினான் சரவணன்.

''சொல்கிறேன்.. நிம்மியும் நானும் பார்த்து சந்தித்த ஒரு வாரத்திலே காதல் வந்துவிட்டது. இருவரும் அலுவலகத்தை மறந்து பார்க், பீச், ஹோட்டல் என சுற்றினோம்'' என்றான் ஏதோ ஞாபகம் வந்தவனாய், ''ஏன்... இந்த ரெஸ்டாரண்டிற்கு கூட இப்போது உன்னுடன் வந்ததுபோல் நிம்மியைக் கூட்டிக் கொண்டு எத்தனை முறை வந்திருப்பேன் தெரியுமா?'' எனவும் நிர்மலாவின் முகத்தில் தாங்க முடியாத எரிச்சல் பரவியது.

அசூயையாய் முகத்தை வெட்டியவள், ''மேலே சொல்லுங்கள்...'' என்றாள் பற்களைக் கடித்தபடி.

''ம்ம்... அப்படியெல்லாம் வளர்ந்த எங்களது காதல் ஒருநாள் நிம்மியின் தந்தைக்கு தெரிந்துபோயிற்று. விடுவாரா அவர்? எந்த தந்தையாவது தனது கோடீஸ்வர மகள் தன்னிடம் வேலை பார்ப்பவனை காதலித்தால் ஒத்துக் கொள்வாரா? அவரும் அப்படித்தான். பெரிதாய் குதித்து தாண்டவமாடி விட்டார்..''

''அப்படியா... அப்புறம் என்ன நடந்தது?''

''அப்புறம்... என்ன? நிம்மி என்னிடம் ஓடி வந்தாள். தந்தையின் பேச்சை தன்னால் மீற முடியாது என்று சொன்னாள். மேலும்...''

''காதலை மறந்துவிடு.. என்று சொல்லியிருப்பாளே?'' நிர்மலா ஆர்வமாய் கேட்க பலமாய் தலையை வெட்டி மறுத்தான் சரவணன்.

''அப்படி இல்லை... நிர்மலா!''

''பின் எப்படி?''

''அதற்குப் பதில் இன்னொரு அருமையான வழி சொன்னாள்...''

''அது... என்ன வழியோ...?''

நிர்மலாவின் கேலியை உணர்ந்து கொள்ளாமல் சீரியஸாகவே பேசினான் சரவணன்.

''நிர்மலா, நிம்மியின் தந்தை எங்களது காதலை மறுப்பதற்கு முக்கிய காரணம் 'ஸ்டேட்டஸ்' தானாம். நானும் அவர்களைப் போல் பெரும் பணக்காரனாய் கோடீஸ்வரனாய் இருந்தால் பிரச்சினை இல்லையாம் அதனால்...''

''உங்களையும் பணம் சம்பாதித்து கோடீஸ்வரனாக மாற சொல்லியிருப்பாளே...?''

''ஆமாம்... சரியாகச் சொன்னாய்! நிர்மலா எப்படி இது உனக்குத் தெரியும்?'' என்றான் ஆச்சரியம் பொங்கியவனாய்.

நிர்மலா அசட்டையாய் தோள்களை குலுக்கினாள்.

''ஹுஹும்... இது என்ன பெரிய விஷயமா? எல்லா பணக்கார வீட்டுப் பெண்களும் காதலித்துவிட்டு கடைசியில் சொல்கிற வழக்கமான டயலாக்தானே...''

''ஆனால் நிம்மி அப்படிப்பட்டவள் இல்லை நிர்மலா...''

''அப்படியா?''

''எனக்காக வருத்தப்பட்டாள். வேதனையோடு கண்ணீர் விட்டாள்.''

சரவணன் சொன்னதற்கு, 'த்ஸோ.. த்ஸோ...' என போலியாய் உச்சக் கொட்டியவள், ''அந்தக் கண்ணீரை நீங்கள் துடைத்து விட்டீர்கள்தானே?'' என்றாள் கிண்டல் பொங்க,

அப்போதுதான் அவள் கேலியாய் தன்னை எள்ளி நகையாடுவதை முதன் முறையாய் சரவணன் உணர்ந்தான்.

''நிர்மலா, நான் என் காதல் கதையை சீரியஸாக சொல்லி வருகிறேன். நீ என்னவென்றால்...'' பொய்க் கோபத்துடன் சரவணன் முறைக்க, அடக்க முடியாத சிரிப்புடன் ''நானும் சீரியஸாகத்தான் கேட்டுக் கொண்டு வருகிறேன்...'' என போலியாய் பவ்யம் காட்டி மீண்டும் சிரித்தாள் நிர்மலா.

''அதற்குப் பின் என்ன நடந்தது தெரியுமா?''

பெரிய புதிர் போல் அவன் கேட்க, அவள் மறுபடியும் அடங்காத சிரிப்பு சிரித்தாள்.

''அத்தோடு நீங்கள் நிம்மியைப் பிரிந்து விட்டீர்கள். உங்கள் காதல் செத்துவிட்டது. அப்படித்தானே?''

அவள் சொன்னதற்கு வேகத்துடன் மறுப்பாய் தலையசைத்தான் சரவணன்.

''பின்... என்னவாம்?'' என்றாள் அவள் துடுக்காய்.

''நான் நிம்மியை விட்டுப் பிரிந்தது உண்மைதான். ஆனால்... ஆனால்.... எங்கள் காதல் சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறது...''

''அது வேறா...?'' மறுபடியும் கேலி செய்தாள்.

அவன உணராமல் மறுபடியும் சீரியஸாகி தீர்க்கமாய் பேசினான்.

''நிர்மலா, நானும் நிம்மியும் எங்களது காதல் ஜெயிக்க ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கிறோம். அதன்படி நான் இப்படித் தனியே நின்று, தொழிலில் சம்பாதித்து பெரும் கோடீஸ்வரனாகும் வரை, அவள் நிம்மி எனக்காக காத்திருப்பாள். நானும் அவளுக்காக காத்திருப்பேன். நான் ஜெயித்து எனது கோடீஸ்வர இலக்கை அடைந்ததும் எங்கள் காதல் கை கூடி நாங்கள் திருமணம் செய்து கொள்வோம்...!''

இம்முறை அவன் பேசியதைக் கேட்டு அப்படியே வாயடைத்துதான் போனாள் நிர்மலா.

6

அன்று இரவு முழுவதும் நிர்மலாவால் தூங்க முடியாமற் போயிற்று. வீட்டுக்கு வந்து படுக்கையில் படுத்தவள் புரளத்தான் செய்தாள்.

என்னென்னவெல்லாம் சொல்லி விட்டான்! நிம்மியாம் காதலிக்கிறானாம்! உன்னிடம் பணமில்லை என்று உதறியவனை ச்சீ! போ என உதாசீனப்படுத்தாமல் பெரிய ரோமியோ போல் அவளை அடைய பணம் சம்பாதித்து கோடீஸ்வரனாகப் போகிறானாம்.

இந்தச் சரவணனுக்கு சூடு சொரணை என்பதெல்லாம் கொஞ்சமும் கிடையாதுதான் போலும்.

எவ்வளவு கேவலமாய் அலட்சியத்துடன் இவனை தூக்கி யெறிந்திருக்கிறாள். அவளைப் போய் வெட்கமில்லாமல் காதலி என்று இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறானே... இவனை என்னதான் செய்வது?

சிந்தித்தவள் அதற்கு மேல் கொதிப்பு அடங்காதவளாய் எழுந்தே உட்கார்ந்து விட்டாள். இதில் திடீரென அவன் நிறுவனத் திற்குப் பெயராய் நிம்மி கன்ஸல்டன்ஸி என பெயரை முன் மொழிந்தது ஞாபகத்திற்கு வர அவள் கொதிப்பு அதிகமாகியது.

என்ன தைரியமிருந்தால்... காதலியின் பெயரைக் கொண்டு நம் நிறுவனத்திற்கு வைப்பான்? என அரிசிப் பற்கள் கடிபட...

ரௌத்திரமாய் நினைத்தவள் அப்படியே சிந்தித்தபடி ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாள்.

கடைசியில், நாளை எல்லாவற்றையும் சரவணனிடம் கேட்டு அவனை உண்டு இல்லை என பண்ணி விடுவது... என்ற மனநிலையிலேயே படுத்தவள், அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள்... விடிந்ததும் குளித்து முடித்து தயாராகிக் கொண்டிருந்தவளை அழைத்துச் செல்ல சரவணனே வீட்டிற்கு வந்து விட்டான்.

அதிசயமாய் பார்த்தவளின் புதிரை அவனே நீக்கவும் செய்தான்.

''என்ன நிர்மலா... மறந்து விட்டாயா? இன்று மலர் சோப் மார்க்கெட்டிங் செய்வது சம்பந்தமாய் சில விபரங்களை நாம் சேகரிக்க வேண்டுமே..'' என்று ஞாபகப்படுத்த நிர்மலா பலமாய் தலையாட்டினாள்.

''ஆமாம்... ஆமாம்... ஞாபகமிருக்கிறது..''

''ம்ம்... அப்படியானால் கிளம்பு சீக்கிரம்..'' என விழிகள் பளபளக்க பேசியவனை ஆர்வமாய்ப் பார்த்தாள் நிர்மலா. அவனது தொழில் உற்சாகம் அவளை மகிழ்ச்சியாக்கி, அவளுக்கும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

ஐந்தே நிமிடத்தில் ஒப்பனை முடித்துவிட்டு கிளிப்பச்சை வண்ண சேலையில் அவள் வெளிவந்தபோது தனது கண்களை அகல விரித்து அதிசயிக்கத்தான் செய்தான் சரவணன்.

அவன் தனது சேலையையும், உடல் நளினத்தையும் ஆசை யாய்ப் பார்த்து அப்படி பார்வையால் பருகுவதை உணர்ந்தவள், வேண்டுமென்றே அவன் முன் நிதானமாய் நின்று ஒவ்வொன்றாய் செய்ய ஆரம்பித்தாள்.

சரியாய் இருக்கும் ஹேண்ட் பேக்கை சரிபார்ப்பது போல் கடிகாரத்தை ஒழுங்குபடுத்துவது போல் எல்லாம் வேண்டுமென்றே அவன் முன்னின்று போஸ் கொடுத்தாள்.

ஒருகணம் ஏன் இப்படியெல்லாம் செய்கிறோம்... எதற்காக இந்த விநோத ஆசை என்றெல்லாம் கேள்விகள் குமிழியாய் எழுந்து அவளைத் துளைக்க அந்தக் கேள்விக் குமிழிகளை யெல்லாம் பதில் சொல்லாமல் உடைத்தாள்.

அவன் பைக்கை ஸ்டார்ட் செய்தபோது வேகமாய் பில்லியனில் ஏறி உட்கார்ந்து மலர்க்கரங்களால் அவனது தோள்களை அழுந்தப் பற்றினாள். அன்று முழுவதும் அலைந்து மலர் சோப் கம்பெனிக்கு திட்ட அறிக்கை தயாரித்துக் கொடுத்தார்கள்.

இதென்ன... கூத்து? விட்டால் இவனது ஆசையில் தலையை விரித்து போட்டுக் கொண்டு ஆட... ஆரம்பித்து விடுவோமா? என்ற பயத்தோடு எண்ணங்களைக் கட்டுப்படுத்தினாள்.

இருவரும் எதிர்பார்த்தபடியே மலர் சோப் கம்பெனி உரிமையாளர்களுக்கு அவர்கள் தயாரித்துக் கொடுத்த திட்ட அறிக்கை ரிப்போர்ட் ரொம்பவும் பிடித்து போயிற்று. அதனால் மகிழ்ந்து அவர்கள் பதிலுக்கு கூடுதலான சர்வீஸ் சார்ஜாக பத்தாயிர ரூபாயை வழங்கினர்.

முதன் முதலாய் 'கன்ஸல்டன்ஸி' தொழில் சம்பாதித்த அந்த நூறு ரூபாய் கட்டை நிர்மலாவும் சரவணனும் தலையில் வைத்துக் கூத்தாடாத குறையாய் பார்த்தனர்.

தொடர்ந்து பல நிறுவனங்கள் தங்களுக்கு கன்ஸல்டன்ட்டாக பணியாற்றி திட்ட அறிக்கை தயாரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ள ஆரம்பித்தன. 'நிம்மி கன்ஸல்டன்ஸி'க்கு மெல்ல ஆர்டர்களும் வாடிக்கையாளர்களும் குவிய ஆரம்பித்தனர்.

சரியாக ஆரம்பித்த மூன்று மாதங்களில் பெரும் வளர்ச்சியை கண்டு விட்டது நிம்மி கன்ஸல்டன்ஸி. நிர்மலா தங்களது முதல் முயற்சியே இப்படி பெரும் வெற்றியைத் தந்திருப்பதை எண்ணி சந்தோஷப்பட... அவளை மேலும் சந்தோஷக் கடலில் திக்கு முக்காடும்படி அன்று அலுவலகம் வந்த சரவணன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

7

நிர்மலாவால் ஒரு கணம் நம்பமுடிய வில்லை.

''என்ன சொன்னீர்கள்?'' என்றாள் பயங்கர ஆச்சரியம் கொண்டவளாய்.

சரவணன் நேருக்கு நேர் முகத்தைப் பார்த்து அவள் மைவிழிகளை சந்தித்தான்.

''உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனக்குச் சம்மதமா நிர்மலா?''

திரும்பவும் அழுந்தந்திருத்தமான குரலில் அவள் சொன்னதும் தான் அவன் சொல்வது உண்மை நிஜமாகத் தான் கேட்கிறான் என்பது உரைத்தது.

இப்படி ஒரு வார்த்தைகளை அவள் விரும்பியதுதான். சொல்லப் போனால் நிம்மி மயக்கத்தில் இருந்து மீண்டு தன்னைப் பார்த்து அவன் கேட்க மாட்டாளா என அவள் ஏங்கியதும் இதைத்தான்.

ஆனால்... இப்படி திடுதிப்பென்று கேட்கிறானே... என்ன காரண மாய் இருக்கும்?

அவள் யோசனையைப் புரிந்து கொண்டவனாய் அவன் பேசினான்.

''நிர்மலா, நான் இப்படித் திடீரென உன்னிடம் கேட்பது உனக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால்... இப்போது எனக்கிருக்கும் சூழ்நிலையில் நான் உடனடியாக கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். என்னை ஏமாற்றிய அந்த நிம்மி முகத்தில் கரியைப் பூச வேண்டும்.''

அவன் படபடப்புடன் ஆத்திரமாகச் சொல்ல அப்போதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது.

''என்ன... நிம்மி உங்களை ஏமாற்றி விட்டாளா?'' என்றாள் வியப்பு விலகாமல்.

சரவணன் முகம் மாறி சோகமாய் தலையசைத்தவன் ஓரிரு நிமிடங்கள் பேசாமல் உதடுகளை இறுக்கியபடி இருந்தவன் மெல்ல ஆரம்பித்தான்.

''நிர்மலா, நான் முன்பே சொல்லியிருக்கிறேன். உன்னிடம் நிம்மியின் காதலைப் பற்றி எங்கள் இருவருக்கும் உள்ள காதல் ஒப்பந்தம் பற்றி...''

''ஆமாம்... சொன்னீர்கள். நீங்கள் பணம் சம்பாதித்து கோடீஸ்வரராகும்வரை பணக்கார நிம்மி காத்திருப்பாள் என்று... அப்படித்தானே..''

''ஆமாம்.. நிர்மலா... அதுதான் எங்களது ஒப்பந்தம் ஆனால்... ஆனால்.. நிம்மி இப்போது அந்த ஒப்பந்தத்தை மீறி விட்டாள். என்னை உதறித் தள்ளிவிட்டு, வேறொரு கோடீஸ்வர மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டாள். வருகிற பன்னிரெண்டாம் தேதி அவளுக்கு கல்யாணமாம்.''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு தொபுக்கென சந்தோஷ வெள்ளத்தில் விழுந்தது போலத்தான் ஒருகணம் மகிழ்ச்சியில் தலை கிறுகிறுத்தது.

ஆனாலும் சரவணனின் சோகமயமான சூழ்நிலையைக் கண்டவள் எதையும் வெளிக்காட்டாது அவனைப் பார்த்தாள்.

''என்ன சொல்கிறீர்கள் சரவணன்... நிம்மி உங்களை உதறித் தள்ளிவிட்டாளா? நீங்கள் இருவரும் உயிருக்குயிராய் காதலித்தீர்களே...?'' என்றாள் குரலில் மேலும் வியப்பு காட்டி.

சரவணன் அதற்கு வேகமாய் தலையசைத்தவன், ''எல்லாம் சரியாகத்தான் நடந்து கொண்டிருந்தது. ஆனால் இப்படி எங்கள் காதல் முறிந்ததற்கு நிம்மியின் தந்தைதான் காரணம்...'' என்றான்.

''நிம்மியின் தந்தையா?''

''ஆமாம்... அவர் பெயர் குணசேகர். பரம்பரை பணக்காரராய் வந்தவர். அவருக்கு என்னை, நிம்மியை நான் காதலிப்பது எல்லாம் சுத்தமாய் பிடிக்காத விஷயம். நிம்மிக்காக எங்கள் காதலை ஏற்றுக் கொள்வது போல் இவ்வளவு நாள் நடித்திருந்தவர் சரியான சந்தர்ப்பம் வந்தபோது தன் வேலையைக் காட்டி நிம்மி மனதை மாற்றிவிட்டார். பண ஆசையைக் காட்டி பெரும் கோடீஸ்வரர் ஒருவரை நிம்மிக்கு மாப்பிள்ளையாக்கி விட்டார்...''

''அதற்கு நிம்மி சம்மதித்து விட்டாளா?''

''நிம்மி முதலில் சம்மதிக்கவில்லை. ஆனால், கல்லும் கரையும் என்பது போல் தொடர்ந்து நிம்மியிடம் பணம் பற்றி கோடி கோடியாய் பணத்தில் புரள்வது பற்றி பேசியே... அவளது மனத்தை மாற்றியிருக்கிறார். தற்போது பிசினஸில் தோல்வி ஏற்பட்டதால் வேறு நிம்மியின் தந்தைக்கு நிறைய நஷ்டம். பல இடங்களில் கடன் வாங்கி கடனில் தத்தளிக்கிறார். அதனால் வேறு வழியில்லாமல் நிம்மியும் மனம் மாறி விட்டாள். என்னிடம் நேருக்கு நேர்

இதையெல்லாம் சொல்லி, "நம் காதல் முறிந்து விட்டது. என்னை மன்னித்து விடுங்கள். என்னை மறந்து விடுங்கள்..." என முகத்திலடித்தாற் போல் டயலாக் வேறு பேசுகிறாள்..."

"அப்படியா...?" என நிர்மலா வியக்க, சரவணன் கோபமும் ஆத்திரமுமாய் தனது பற்களைக் கடித்தான்.

"என்னையும் எனது காதலையும் இப்படி துச்சமாய் தூக்கியெறிந்து என்னை அவமானப்படுத்திய அந்த நிம்மியை சும்மா விடக்கூடாது. அவளைப் பழி வாங்க வேண்டும். அவள் கல்யாணம் செய்யும் அதே நாளில் நானும் கல்யாணம் செய்து அவளது மூக்கை உடைக்க வேண்டும். அதற்கு... அதற்குத்தான்..." என்ற சரவணன் சட்டென குரலில் கடுமையைக் குறைத்து அவளைப் பார்த்தான்.

"அதனால்தான்... நிர்மலா உன்னிடம் கேட்கிறேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன். உனக்கு சம்மதமா என்று..."

சரவணன் பேச்சை முடித்துவிட்டு ஆவலாய் அவள் முகத்தைப் பார்த்தான்.

நிர்மலா ஓரிரு நிமிடம் பற்களால் உதடுகளை அழுந்தக் கடித்து யோசித்தவள், "ஒருநாள் எனக்கு அவகாசம் கொடுங்கள்" என்றாள்.

8

நிர்மலா சரவணன் கேட்டதும் உடனே சம்மதம் என்று சொல்லிவிடத்தான் துடித்திருந்தாள்.

ஆனால் சரவணன் கேட்ட விதம், அந்தத் தொனி நிம்மியை பழி வாங்குவதற்

காகவே அப்படியொரு முடிவை அவன் எடுத்திருப்பதாக உணர்த்தியது.

அப்படியானால் அவனுக்கு நிஜமாகவே நிர்மலாவை மண முடிக்க ஆசை இல்லையா?

எந்த வேலையும் ஓடாமல் இரண்டு மூன்று மணி நேரம் அதுபற்றியே யோசித்தவள் அடங்க மாட்டாதவளாய் மாலையில் அவனிடமே கேட்டு விட்டாள்.

அவள் அப்படிக் கேட்டதும், "என்ன அப்படிக் கேட்டு விட்டாய் நிர்மலா?" என பதற்றத்துடன் பார்த்த சரவணன், "நிர்மலா முதலில் ஒரு விஷயம் உனக்கு விரிவாய் தெளிவுபடுத்தி விடுகிறேன். நிம்மி என்னை ஏமாற்றி விட்டதால் நிம்மியை பழி வாங்கும் ஒரே காரணத்திற்காக மட்டும் உன்னிடம் கேட்கவில்லை நிர்மலா. நிஜமாகவே எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. அப்படி ஒரு மணமுடிக்கும் எண்ணமும் உன்னை முதன் முதலாய் பார்த்த கணத்தில், லேசாய் என் மனதில் உண்மையாகவே துளிர்த்தது. இப்போது அதற்கான சரியான சந்தர்ப்பம் தானாக வருகிறபோது முழுவதுமாக என் மனம் உன்னை நாட ஆரம்பித்து விட்டது. மற்றபடி இந்த விஷயத்தில் நீ என்ன முடிவெடுத்தாலும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்..."

அவன் விளக்கமாக சொல்லி முடித்துவிட்டு கண்கள் விரிய ஏங்கிப் பார்த்தபோது அதற்கு மேலும் தாங்க மாட்டாதவளாய் தன் பதிலை முகம் மலரச் சொன்னாள்.

சரவணன் இன்பமாய் அதிர்ந்தான்.

"என்ன...சம்மதம்மா?" என்றபடி நம்ப முடியாமல் அவள் கைகளைப் பிடித்து சந்தோஷமாய் குலுக்கினான்.

நிர்மலாவுக்கும் ஒரே மகிழ்ச்சிதான். நிம்மி மேல் வைத்த காதலை சரவணன் இவ்வளவு சீக்கிரத்தில் உடைத்து, தன்னை நாடுவான் என அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லையே...

அதே மகிழ்ச்சிக் கடலில், அன்று முழுவதும் சந்தோஷமும் பூரிப்புமாய் திக்குமுக்காடினாள். இருவர் வீட்டிலும் இந்த விஷயத்தை சொன்னபோது, அவர்கள் இதை ஏற்கனவே எதிர்பார்த்திருந்ததால் உடனே பச்சைக் கொடி காட்ட அவள் சந்தோஷம் அதிகரித்தது.

கல்யாண பத்திரிகை அடிப்பதிலிருந்து மற்ற வேலைகள் எல்லாம் வெகு விரைவாய் மளமளவென்றுதான் நடந்தன.

அழைப்பிதழ்கள் வந்ததும் முதல் பத்திரிகையை தூக்கிக் கொண்டு போய் நிம்மியிடம் வீசிவிட்டு வந்தான் சரவணன். அதற்குப் பின்தான் அவனுடைய வேகமும், ஆவேசமும் தணிந்து நிதானத்திற்கு வந்தான் என்று சொல்ல வேண்டும்.

கூடவே நிம்மியிடம் அவன் அழைப்பிதழைக் கொடுக்கச் சென்ற செய்கை நிர்மலாவை சிறிது கலவரப்படுத்த அவள் கைகளைப் பிடித்து சத்தியம் செய்யாத குறையாய் பேசினான்.

''நீ எதற்கும் பயப்பட வேண்டாம் நிர்மலா. அந்த நிம்மி அத்தியாயம் இத்தோடு முடிந்துவிட்டது. அவளை முழுவதும் தலை முழுகிவிட்டேன். இனி ஒருபோதும் அவளை சந்திக்க மாட்டேன்'' என குளுரைக்கவும் செய்தான்.

ஆயிற்று. ஒரு வழியாய் பத்து பன்னிரெண்டு நாட்கள் மின்னல் வேகத்தில் ஓடி முகூர்த்த நாளும் வந்தது.

உறவினர்கள், நண்பர்கள் புடைசூழ, அலங்கரிக்கப்பட்ட மணவறையில் சிவந்த முகமாய் வெட்கத்தில் குனிந்திருந்த நிர்மலாவுக்கு தாலி கட்டினான் சரவணன்.

இனிதே திருமணம் முடிந்து, சுப நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாய் அரங்கேறிக் கொண்டிருந்தது.

மாலை அலுவலக நண்பர்களுக்காக 'வரவேற்பு' ஏற்பாடு செய்யப்பட்டு, இன்னிசை முழங்க, அதுவும் ஆரம்பமானது.

அப்போதுதான் நண்பன் மூலமாய் அந்தச் செய்தி சரவணனின் காதுகளுக்கு வந்தது.

அதே தேதியில் அன்று நடக்கவிருந்த நிம்மியின் திருமணம் நடக்கவில்லையாம். முகூர்த்த நேரத்தில் நிம்மி எழுந்து வந்து கல்யாணத்தை நிறுத்தி விட்டாளாம். காரணம் காதலனான சரவணனை மறக்க முடியாததுதானாம்.

செய்தியைக் கேட்டு அப்படியே இடிந்து போனான் சரவணன்.

9

திருமணம், முதலிரவு எல்லாம் ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் எவ்வளவு முக்கிய விஷயங்களாய் மறக்க முடியாதபடி ஆகிவிடும் என்பதையெல்லாம் நிர்மலா உணர்ந்திருந்தவள்தான்.

ஆனால் மாலை வரவேற்பின்போது நிம்மி பற்றிய அந்தச் செய்தியைக் கேட்டபின் சரவணனின் நிலை அடியோடு மாறி விட்டதே...!

ஆத்திரமும், ஆவேசமுமாய் நிம்மியைப் பழிவாங்க அவளை கல்யாணம் செய்து கொண்டவன் இப்போது அவசரப்பட்டு விட்டோமா... என நினைக்க ஆரம்பித்து விட்டான்.

அன்றைய முதலிரவு சடங்குக்கு பெண்கள் அழகு ஒப்பனை செய்தபோது மனமே இல்லாமல் சிலைபோல்தான் உட்கார்ந்திருந்தாள் நிர்மலா.

''என்ன நிர்மலா அதற்குள் கனவில் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டாயா? இன்று இரவு நீ தூங்கவே முடியாது.''

கிண்டல்கள் கேலிப் பேச்சுக்கள் எல்லாம் அவள் காதில் கொஞ்சமும் உரைக்கவே இல்லை.

எந்தவித சலனமுமில்லாமல்தான் பால் தம்ளருடன் அந்த அறைக்குள் நுழைந்தாள்.

மலர்கள் அலங்கரிக்கப்பட்ட அறை. பட்டு மெத்தை, கட்டில் நறுமண திரவியங்கள். இனிப்புப் பதார்த்தங்கள்.

அவள் எல்லாவற்றையும் பார்த்தபடி சரவண்னைத் தேடினாள்.

அறையின் ஓரமான நாற்காலி ஒன்றில் எந்தவித சுவாரஸ்யமும் இல்லாமல் கண்களை மூடியபடி தலையைக் கவிழ்ந்திருந்தான் சரவணன்.

அவள் நினைத்து எதிர்பார்த்த காட்சிதான்.

இருந்தாலும் மனதோரத்தில் புதுப்பெண்ணாய் உள்ளே நுழையும் தன்னை முகம் மலர கொஞ்சமாவது நிமிர்ந்து வரவேற்பான் என்று நினைத்திருந்தாள். அதிலும் ஏமாற்றமே மிஞ்சியது.

மெல்ல பால் தம்ளரை பக்கத்தில் இருந்த ஸ்டூல் ஒன்றில் வைத்தவளின் பார்வை எதிரே இருந்த நிலைக்கண்ணாடியில் சென்றது.

நன்கு அலங்கரித்து, அழகுக்கு அழகு சேர்க்கும் மணப் பெண்ணாய் அவள்.

இந்தக் கோலத்தைப் பார்த்தால் சரவணன் என்ன நினைப்பான்.

'உன் மனநிலை எப்படி இருந்தாலும் என்ன நடந்தாலும் சரி எனக்கு அது 'தேவை' என முதலிரவிற்காக அவள் ஏங்குவதாக அல்லவா நினைத்து விடுவான்.

நினைப்பு ஓட... கொஞ்சமும் ஓசை வராமல் தன் மேலிருந்த செயற்கை ஒப்பனைகளை அவசரமாய் கழற்றினாள். குலுங்கிய ..க வளையல்களைக் கூட எடுத்து விட்டாள்.

அவள் வந்த அரவம், ஏற்பட்ட சிறு சிறு ஓசைகள் எல்லாம் அவன் காதில் விழாமலா இருந்திருக்கும்?

கண்டிப்பாகக் கேட்டிருக்கும். அறையினுள் தான் வந்ததை நிச்சயம் உணர்ந்திருப்பான்.

இருந்தும் நிம்மியை நினைத்து கல்லுளிமங்கனாய் மருகிக் கொண்டிருக்கிறானே...

கொஞ்சம் எரிச்சலாகவே நினைத்தவள் மறுகணமே அதை உதறிவிட்டு புன்னகை முகமாகவே அவன் பக்கம் போனாள்.

மெல்ல அவள் தோள்களில் கை வைத்தபோது திடுமென நிமிர்ந்தான் அவன்.

கண்கள் சிவக்க களைத்திருந்த அவனது முகம் அவனது தீவிரமான சிந்திப்பை உணர்த்தியது.

நிம்மியை நினைத்து இவ்வளவு உருக்கமோ...

அவன் எதுவும் பேசிவிடும் முன்தான் சொல்லிவிட வேண்டும் என அவசரம் காட்டியவள் அதே புன்னகை முகத்துடன், ''உங்களது சூழ்நிலை எனக்குப் புரிகிறது சரவணன். எது பற்றியும் கவலை கொள்ளாமல் இன்றிரவு நிம்மதியாய் தூங்குங்கள். எல்லாம் சரியாகிவிடும்'' என்றாள்.

அவள் வேண்டுமென்றே இன்றிரவு என வார்த்தைகளில் அழுத்தம் கொடுத்தது அவனுக்கு நன்று உரைத்திருக்க வேண்டும். மனதில் நிம்மியை நினைத்துக் கொண்டு அவளுடன் என்ன பேச... என்றுதானே அவனது கவலை? அதற்குத்தானே தலைகவிழ்ந்த இந்த உரத்த சிந்தனை?

இந்த நல்ல வார்த்தைகளை அவனே அவன் வாயால் சொல்லி அவள் தலையில் சம்மட்டியால் அடிப்பதைவிட தானே தன் தலையில் குட்டிக் கொள்ளலாமே!

அவன் நினைத்தபடியே அவள் அப்படிச் சொன்னதும் சரவணன் முகத்தில் ஒருவித பயம் நீங்கி நிம்மதியான பெருமூச்சு வெளிப்படுவதை கவனித்தாள்.

ஆக... அவள் சந்தேகம், நினைப்பு சரிதான். அந்த நிம்மிக்காத் தான் இந்த கவலை... இப்படி தீவிர சிந்தனை அந்த நிம்மி நினைப்பில் அவள் உலகத்தில் தான் நுழைந்து விடக்கூடாது என்று தானே பயப்பட்டிருக்கிறான்?

அந்த நிம்மி என்ன அவள் படத்தை இவன் மனதில் ஆணி அடித்து வைத்தா மாட்டியிருக்கிறான். அவளை நினைத்து இந்த உருகு உருகுகிறானே...

அவள் மேற்கொண்டு எதுவும் பேசாது உதடு கடித்து நிற்பதைப் பார்த்த சரவணன் மெல்ல நிமிர்ந்தான்.

''நிர்மலா...'' என்று அவன் விளித்தபோது நிமிர்ந்தவள் ஆவலாகவே அவனைப் பார்த்தாள்.

அவனோ முகத்தை வேறு பக்கம் வைத்தவாறே பேசினான். ''நிர்மலா, இந்தத் திருமணம் உண்மையானதுதான் நிலையானது தான். அதனால் நீ எது பற்றியும் பயம் கொள்ளத் தேவையில்லை. ஆனால்...''

அப்படியே நிறுத்திவிட்டு அவள் பக்கம் திரும்பினான். நேருக்கு நேர் அவள் கண்களைச் சந்தித்தான்.

''நிம்மியின் நினைப்பு என்னை வாட்டுகிறது. என் மனத்தை ஒன்றுபடுத்த எனக்கு அவகாசம் தேவை புரிந்து கொள்'' என்றார் சலனமற்ற குரலில்.

''எனக்குப் புரிகிறது...'' என்றாள் அவளும் குரலில் எந்த உணர்ச்சியுமில்லாமல்.

நிமிர்ந்து அவனையே பார்த்தபோது அவன் ஏதோ அவளைப் பார்க்கவே கூடாததுபோல் சட்டென முகத்தைத் திருப்பிக் கொள்ள அவளுக்கு எரிச்சலாய் வந்தது.

முகத்தை திருப்பும் அளவுக்கு அவள் வேண்டாதவளாகி விட்டாளா?

அடக்க முடியாமல் கேட்டே விட்டாள் அவள்.

''இப்போது உங்களுக்கு என்னை பிடிக்கவில்லையா சரவணன்? என்னைப் பார்த்தாலே வெறுப்பாய்... அருவெறுப்பாய் எதுவும் உங்களுக்குத் தோன்றுகிறதா?'' என அவள் நேருக்கு நேர் கேட்கவும் அவன் திகைத்துப் போனான்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றான் அவன் அவசரமாக அவள் கண்களை நோக்கியபடி.

அவன் ஒருவித பதற்றத்துடன் சொல்லிய விதம் அவளை சற்றே ஆறுதல்படுத்தி ஆசுவாசம் கொள்ள வைத்தது.

ஆக... ஒரேயடியாய் அல்ல. தற்சமயம் நிம்மியினால் ஏற்பட்ட பாதிப்பினால்தான்.

அதற்குப்பின் ஒன்றும் பேசாமல் இருந்த பெரிய படுக்கை மெத்தையில் ஆளுக்கொரு புறமாய் படுத்துக் கொண்டனர்.

நிர்மலா விழிகளை விரிய வைத்து ரொம்ப நேரம் தூங்காமல் இருந்தவள், கடைசியில் அயர்ச்சியுடன் தூங்கியும் போனாள்.

மறுநாள் காலை கண் விழித்தபோது, அவளுக்கு முன்பே எழுந்து வெளியே சென்றிருந்தான் சரவணன்.

அவன் அப்படி அவசரமாய் எழுந்து சென்றது நிம்மியைப் பார்க்கத்தான் என்பது பின்னால் தெரிந்தபோது அவள் கோபம் பன்மடங்காகியது.

10

மறுநாள் விழித்தவளுக்கு சரவணன் அருகில் இல்லாதது எரிச்சலாக இருந்தாலும் தங்கை நித்திலா தானாக முன்வந்து பேச்சுக் கொடுத்து அவளையே சுற்றி வந்தது ஆறுதலாய் இருந்தது.

நித்திலா சளசளவென பேச்சுக்காரி. விடாது எதாவது அவளிடம் பேசிக் கொண்டிருந்தாள். வீட்டில் பழைய போட்டோ ஆல்பங்களை எல்லாம் எடுத்து ஒவ்வொன்றாய் காட்டிக் கொண்டிருந்தாள்.

நிர்மலாவுக்கு அது ஆவலாய்த்தான் இருந்தது. சரவணனின் சிறு வயது புகைப்படம், ஸ்கூல் யூனிபார்மில் சாரணர் இயக்கத்தில் கோடை சுற்றுலாவில் நண்பர்களுடன் என விதவிதமான பருவங்களில் தெரிந்த சரவணனின் அழகை ரசித்தாள்.

பிற்பகல் நேரத்தில் அப்பாவும் அம்மாவும் வந்துவிட்டுப் போனார்கள். அவர்கள் முன் எதையும் வெளிப்படுத்தாது மகிழ்ச்சியுடன் இருப்பதுபோல் நடமாடினாள்.

மாலை நித்திலா தோட்டத்துப் பக்கம் கூட்டிப் போய் மா, பலா, நெல்லி என வரிசையாய் அமைந்திருந்த மரங்களைக் காட்டினாள். நிர்மலா மறுத்தும் பிடிவாதமாய் கொடுக்காப் புளி மரத்தில் லேசாக ஏறி கிளைகளைப் பிடித்து உலுக்கினாள் நித்திலா.

பொலபொலவென உதிர்ந்த காய்களையும், பழங்களையும் ஆவலாய் இருவரும் பொறுக்கித் தின்றனர்.

நேரம் போவதே தெரியாமல் இருவரும் பேசிக் கொண்டிருந்த போதுதான் நித்திலா அந்த விஷயத்தைச் சொன்னாள்.

''அண்ணி அண்ணனைப் பற்றி ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்...'' என இழுக்க... அவளைப் புதிராய் பார்த்தாள் நிர்மலா.

''என்ன விஷயம் நித்திலா?''

''நிம்மி... நிம்மி... விஷயம்..''

நிம்மி என்ற வார்த்தைகளை கேட்டதும் நிர்மலாவின் முகம் அப்படியே வாடியது.

அதைப் புரியாமல் நித்திலா தொடர்ந்து கொண்டிருந்தாள்.

''அண்ணி.. அந்த நிம்மி... பெரிய கைகாரி... அண்ணனை அப்படியே சொக்குப்பொடி போட்டாற்போல் பேச்சில் மயக்கி விடுவாள். அவளை அண்ணன் சந்திக்கவே கூடாது. ஆனால் இன்று...''

மறுபடியும் நித்திலா நிறுத்த.. துடிப்பாய் நிமிர்ந்தாள் நிர்மலா.

''இன்று என்னாயிற்று நித்திலா?'' என்றாள் ஆவலாய்.

''இன்று காலை போன் அடித்து ஏதோ புளுகியபடி அண்ணனை அழைத்து விட்டாள். அண்ணனும் அதனால்தான் காலை அவசரமாய் நிம்மியைப் பார்க்க சென்று விட்டார்'' என்று நித்திலா அமைதியாய்ச் சொல்ல நிர்மலா திடுக்கிட்டாள்.

''என்ன நிம்மியைப் பார்க்கச் சென்றாரா?''

நித்திலா பலமாய் தலையசைக்க... அதற்குமேல் நிர்மலாவால் எதையும் சிந்திக்க முடியவில்லை. நித்திலா சொன்ன மற்ற எதுவும்

அவள் காதில் விழவில்லை. அப்படியே சிலை போல்தான் கல்லாய் நின்று கொண்டிருந்தாள்.

அன்று இரவு சரவணன் வரும்போது சரவணனிடம் கேட்க வேண்டும். நிம்மியை ஏன் போய் சந்தித்தீர்கள்? என கேள்விகளால் வாங்கு வாங்கென்று வாங்க வேண்டும் என்றெல்லாம் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள்.

ஆனால்... அதற்கெல்லாம் அவசியமில்லாமல் இரவு அவள் பக்கத்தில் வந்து அமர்ந்தவன் அவனாகவே நிம்மி பற்றிய பேச்சை ஆரம்பித்துவிட்டான்.

''நிர்மலா... இந்தச் சூழ்நிலையில் நான் இப்படிச் சொல்வது உனக்குப் பிடிக்காததுதான். ஆனால் நிம்மி பற்றி சில விஷயங்களை நான் தெளிவுப்படுத்த வேண்டியிருக்கிறது'' என்ற பீடிகையோடு ஆரம்பித்து விட்டான்.

நிர்மலா ஒன்றும் பேசாமல் பற்களால் உதடுகளை அழுந்தக் கடித்துக் கொண்டு அவனையே பார்த்தாள்.

''நிர்மலா, இன்று காலையில் என்னை வரச் சொல்லி நிம்மி போனில் அழைத்தாள். நான் நேரில் சென்றதும் நடந்த அவ்வளவு விஷயத்தையும் கொட்டி விட்டாள்...''

''ம்...'' என்றாள் நிர்மலா.

''நிர்மலா... நிம்மி அப்படி அவளது கல்யாணத்தை கடைசி நிமிடத்தில் நிறுத்தியதற்கு காரணம் என்ன தெரியுமா?''

சரவணன் நிறுத்த மறுபடியும் ஒரு அழுத்தமான 'ம்' கொடுத்தவாறு சலனமில்லாமல் நிர்மலா பார்த்தாள்.

''நிர்மலா, அவளுக்கு அந்த கடைசி நேரத்தில், கடைசி நொடியில் கொண்டிருந்த வீராப்பு எல்லாம் போய் நான் இல்லாத

ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை யாம். அதனால்தான் நான் கணவனாய் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. இன்னொருவரை நிச்சயமாய் கணவனாய் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற திடமான எண்ணத்தில் கல்யாணத்தையும் நிறுத்தி விட்டாளாம்...''

'அப்படியா?' என்று அவள் வியப்பாய் கேட்பதற்குள், ''அவளுக்கு ரொம்ப நல்ல மனசு நிர்மலா...'' என சரவணன் விளித்தவன், ''இல்லையென்றால் என் மீது அவ்வளவு காதல் இருந்தும் எல்லாவற்றையும் தன்னுள் புதைத்துக் கொண்டு... நீங்களாவது சந்தோஷமாய் இருங்கள் சரவணன்... என்று சொல்வாளா?'' என அவன் பெரிய் ஆச்சரியத்துடன் சிலாகிக்க அட... அற்பப் பதரே...அவள் இப்படியெல்லாம் பேசி உனக்கு வலை விரிக்கிறாள் என்பது கூடவா உனக்குப் புரியவில்லை என தனக்குள் மாய்ந்து கொண்டு அவனையே விசித்திரமாய் பார்த்தாள் நிர்மலா.

ஆனால் சரவணனோ விடாது நிம்மி புராணம் பாடினான்.

நிர்மலா அவனையே உறுத்துப் பார்த்தவாறு யோசித்தாள்.

கல்லூரித் தோழி ஒருத்தி முன்பு சொன்னது அவள் ஞாபகத்தில் ஓடியது.

இல்வாழ்க்கை என்று வந்து விட்டால் அதில் வள்ளுவர் பாலிசியை ∴பாலோ பண்ணனும் நிர்மலா என்பாள்.

''வள்ளுவர் பாலிசியா.. அது என்ன?''

''வேறென்ன அன்பும் அரவணைப்பும்தான் வரப்போகிற கணவன் எப்படிப்பட்ட குரங்கனாய் இருந்தால் கூட அவனிடம் அன்பு காட்டி, அரவணைத்து நம் வசப்படுத்தி விட வேண்டும்.''

தோழி சொன்னது ஞாபகத்திற்கு வர நிர்மலா ஒன்று செய்தாள்.

தன் பக்கத்தில் நிம்மி புராணம் பாடிக் கொண்டிருந்த சரவணனை அப்படியே அரவணைத்து அவனது தலையைத் தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டாள்.

திடுக்கிட்டுப் பார்த்த சரவணனிடம், ''நீங்கள் பாட்டுக்கு சொல்லுங்கள் சரவணன். இப்படி இருந்தால்தான் நம் இருவருக்கும் ஒருவித நிம்மதி ஏற்படும்'' என்றாள். அவனை அணைத்த பிடியை விலக்காமல்.

11

நிர்மலாவுக்கு அப்படிச் செய்ய கூச்சமாய்த்தான் இருந்தது. ஆனால் அதே கல்லூரித் தோழி வசந்தியை அவள் கல்யாணத்திற்குப் பின் பார்த்தபோது அதே அரவணைப்பு விஷயத்தைத்தான். அவள் மறுபடியும் ஞாபகப்படுத்தினாள்.

நிர்மலா நான் சொன்ன அரவணைப்பு டெக்னிக்கை விட்டு விடாதே. மாப்பிள்ளையாய் வரும் எந்த குரங்குப் பயலையும் இந்த நெஞ்சார்ந்த அணைப்பு அஸ்திரத்தால் நாம் சரி பண்ணி விடலாம். இது என் சொந்த அனுபவம் என்று வசந்தி சொன்ன போது விழுந்து விழுந்து சிரிக்கத்தான் செய்தாள் நிர்மலா.

ஆனால் இப்போது அவள் சொன்னது நிஜமா என நினைக்கத் தோன்றிற்று.

பேசிக் கொண்டிருந்த சரவணனை கைகளால் வளைத்து தன் நெஞ்சினில் சாய்த்தபோது அவன் எந்தவித எதிர்ப்பும் காட்டாதது அவளை ஆச்சரியப்படுத்தியது.

ஒருகணம் கண்களால் லேசாய் திடுக்கிட்டுப் பார்த்தவன் அவள் சொன்ன பதில் கேட்டு சமாதானமடைந்தவனாய் நெஞ்சில் புதைந்து கொண்டான்.

ஆனால் நிர்மலாவுக்குத்தான் என்னவோபோல் இருந்தது.

கட்டிய கணவனையே தாஜா செய்வது போல் மயக்குவது போல் இதென்ன கூத்து என நினைத்தாள்.

ஆனால் அவள் அப்படிச் செய்த அரவணைப்பு செய்கை அவனுள்ளும் ஒருவித தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதைக் கவனித்தாள்.

விடாது பேசிக் கொண்டிருந்தவன் சட்டென நிறுத்தி அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். ''தொடர்ந்து நிம்மியைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது உனக்கு எரிச்சலாய் போரடிப்பதாய் இருக்கிறதா?'' என்றான் அக்கறையாய்.

அவள் காது மடல்களை வேகமாய் அசைத்து மறுப்பாய் தலையசைக்கவும் நீளமான பெருமூச்சுடன் அவனே தொடர்ந்தான்.

''நிர்மலா, நான் ஏன் இப்படி நிம்மியைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறேன் என்றால்... அதற்குப் பின்னணி நான் செய்து கொண்ட பயங்கர கற்பனைகள்தான்...''

''கற்பனைகளா..?''

''ஆமாம் நிர்மலா. நிம்மிக்கும் எனக்கும் காதல் ஆரம்பித்த உடனே எனது கற்பனைகளை விரித்து பல கனவுக் கோட்டைகளை மனசுக்குள் கட்டியிருந்தேன். நானும் நிம்மியும் கல்யாணம் செய்து கொண்டு ஜாலியாய் ஊர் ஊராய் சுற்றுவதுபோல் நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு அந்த மழலைகளோடு பேசி விளையாடி நேரம் போவது தெரியாமல் கொட்டமடிப்பது போல் இன்பம் ஒன்றே எங்களது வாழ்க்கை என்பதுபோல் அலைவது

என்றெல்லாம் பல விஷயங்களை தினம் தினம் கற்பனை செய்து ரசித்திருந்தேன். ஆனால் இப்போது எல்லாமே நேர்மாறாக நடந்து விட்டதால் அந்தக் கனவு-கோட்டைகளிலிருந்து வெளிவருவது சற்று சிரமமாயிருக்கிறது''

அவன் அப்படிச் சொல்லச் சொல்ல அவன் தலையில் ஓங்கிக் குட்டலாம் போல் அவளுக்கு இருந்தது.

குத்துக் கல்லாய் உட்கார்ந்து அவனை நெஞ்சினில் தாங்கிப் பிடித்திருக்கும்-அவள் ஞாபகம் மட்டும் ஏன் அவனது இந்த மண்டைக்குள் வர மறுக்கிறது என கொதிப்பாய் நினைத்தாள்.

ஆனால் தொடர்ந்து சரவணனின் முகம் ஆழமான சோகத்தை பிரதிபலித்ததும் அவள் தனது கோபத்தை எல்லாம் விட வேண்டியதாயிற்று.

கதைகளில், சினிமாப் படங்களில் சொல்வது போல் ரோமியோத்தனமாய் நிம்மியை நினைத்து இவன் நிறைய காதல் கோட்டைகள் கட்டியிருக்கிறான். அந்த நினைவுகளிலிருந்து வெளிவர அவனுக்கே சிரமமாய்த்தான் இருக்கிறது என்பதும் அவளுக்குப் புரிந்தது.

எதையோ நினைத்தவள், அவனைத் தொடர்ந்து பேச விட்டால் அப்படியே நிம்மியை நினைத்தே உருகிக் கொண்டிருப்பான் என்று உணர, அப்படி அவனை நெஞ்சோடு மேலும் இறுக்கமாய் பிடித்துக் கொண்டு, ''கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அப்படியே இருங்கள்...'' என்றவள் அவன் தொடர்ந்து ஏதோ சொல்ல வந்ததும் தனது பிஞ்சு விரல்களை மென்மையாய் அவன் உதட்டில் வைத்து, ''எனக்காக ப்ளீஸ்...'' என்றாள் கெஞ்சலுடன்.

சரவணன் அவள் சொல்வதைக் கேட்டு பெட்டிப் பாம்பு போல் கண்களை மூடி அப்படியே இருந்தான். மௌனமாய் கடந்த அந்த

நிமிடங்கள் இருவருக்கே புதிதாய் விநோதமான அமைதி யொன்றை ஏற்படுத்தியது.

பளபளப்பான சிகையுமாய் அசாத்திய ஆண்மையும், பெரும் நிம்மதி கிடைத்ததுபோல் தன் நெஞ்சில் சாய்ந்து கண்களை மூடிக் கிடக்கும் அவனையே வாஞ்சையுடன் பார்த்தாள். வாழ்நாள் முழுவதும் இந்த சுகமான அரவணைப்பிலே மெய்மறந்து இருந்து விடலாம் என்று கூட அவளுக்குத் தோன்றிற்று.

அவள் அப்படி நினைத்துக் கொண்டிருக்கையிலே சரவணன் கண்களை விரித்தவன் மெல்ல நிமிர்ந்தான்.

''நிர்மலா...''

இம்முறை அவன் தன் பெயரை விளிப்பதிலே ஒருவித இனிமை தெரிவதை அவள் உணர்ந்தாள். மை விழிகளை விரித்து அவள் படபடத்துப் பார்த்தபோது அவன் அவள் முகத்தையே ஆழமாய்ப் பார்த்தான்.

''நிர்மலா... நீயும் அழகுதான்... அழகு என்றால் எப்படித் தெரியுமா? ரதி போல் அழகு என்பார்களே, அப்படி ஓர் அழகு. உன்னுடைய அழகான மை விழி கண்களையும் துடித்து மலரும் மென்மையான சிரிப்பையும் நான் ரொம்பவும் ரசித்திருக்கிறேன் தெரியுமா?'' என்றபோது அவனை நம்ப முடியாமல்தான் பார்த்தாள்.

சும்மா ஒப்புக்காக சொல்கிறான் இவன் என்ற அவளது பார்வையின் அர்த்தம் உணர்ந்தவன் போல் சரவணன் சிரித்தவன் ''என்ன நம்ப முடியவில்லையா நிர்மலா? நீ நம்பும்படியாய் சில விஷயங்களைச் சொல்கிறேன். உன்னால் புரிந்து கொள்ள முடியும்...'' என்றான் அதே சிரிப்புடன் தொடர்ந்தான்.

''நிர்மலா... நான் முதன் முதலாய் உன்னை அந்த அலுவலகத்தில் இண்டர்வியூ அறையில் பார்த்தபோது நீ ரோஸ் நிற ஜரிகை பார்டர் சேலை ஒன்றை கட்டியிருந்தாய் சரிதானே?''

இதையெல்லாம் இவ்வளவு உன்னிப்பாய் கவனித்து ஞாபகம் வைத்திருக்கிறானா? என அவள் இனிமையாய் திகைப்பதற்குள் தொடர்ந்தவன், ''உன்னுடன் அறிமுகமாகிய மறுநாள், நீ வந்தபோது கறுப்பு வண்ண சேலையில் உன் தங்க நிற அழகு மிளிர தேவதை போல் வந்தது. என்னைப் பார்த்ததும் முகம் மலர சந்தோஷமாய் உன் முத்துப் பற்களைக் காட்டிச் சிரித்தது எல்லாமே எல்லாமே சுகமான தென்றல் போல் பரவசமாய் என்னுள் ஓடிக்கொண்டு இனிமையாய் என்னுடைய ஞாபகத்தில் இருந்து கொண்டு தான இருக்கிறது நிர்மலா...''

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு தட்டாமாலை சுற்றி அப்படியே ஒரே தூக்காய் இன்பக் கடலில் தள்ளிவிட்டது போல் ஆயிற்று. இவனா... இப்படியெல்லாம் பேசுகிறான்...? இவனா நம்மை இப்படியெல்லாம் ரசித்திருக்கிறான்...?

என்றெல்லாம் பரவசத்துடன் நினைத்தவள், தன்னை மீறி சிவந்த முகத்தையும், ஏற்பட்ட அளவற்ற பூரிப்பையும் அவன் முன்னால் மறைக்க சிரிப்புடன் தலைகவிழ்ந்து ரொம்பவும் தான் சிரமப்பட்டாள்.

சரவணன் சொல்ல இன்னும் நிறைய விஷயம் வைத்திருப்பது போல் தொடர்ந்து கொண்டிருந்தான்.

''நிர்மலா இதையெல்லாம் ஏன் உன்னிடம் சொல்கிறேன் என்றால் நீயும் என் மனதில் இருக்கிறாய். அதுவும் ஆழமாய் என்பதை உனக்கு உணர்த்தத்தான். மேலும் நீ இப்போது மனைவியாகி விட்டாய். நம் கணவன், மனைவி பந்தம் பிரிக்க முடியாத ஒன்று. ஆனால்...'' இழுத்தவன் சிறிது நேரம் நிறுத்திவிட்டு அவனே தொடர்ந்தான்.

''நிம்மி விஷயம் வேறு... அவள் மேல் மோகமோ எந்தவித மயக்கமோ எனக்கு இந்த நிமிடம் கூட கிடையாது. என்ன ஒருவித குற்ற உணர்ச்சி அடிக்கடி வாட்டுகிறது. என்னால் மனம் அலைகழிந்து ஒரு பெண்ணின் வாழ்க்கை சீரழிவாகி விட்டதே என்ற மனம் பதைக்கிறது. அப்படி மனம் பதைக்கும்போது பழைய காதல் நினைவுகள் எல்லாம் நீரூற்றாய் பீறிட்டுக் கிளம்பி என்னை திணற வைக்கிறது. இதுதான் இப்போது என்னுள் நடந்து கொண்டிருக்கிறது நிர்மலா...''

சத்தியப் பிரமாணம் போல் அவன் அனைத்தையும் சொல்லி முடிக்க அவனை திரும்பவும் நெஞ்சினில் சாய்த்து இறுக்கியவள் சிவப்பேறிய கன்னங்களோடு அவன் உதடுகளை நோக்கி குனிந்தாள்.

12

மறுவாரம் முழுவதும் ஒரு முக்கியமான பெரிய ஆர்டர் கிடைத்து விட்டதால், அதற்கான திட்ட அறிக்கையை தயார் பண்ண தனது இரண்டு உதவியாளர்களுடன் வேலை வேலை என்று இரவு பகல் பாராமல் அலைந்தான் சரவணன்.

நிர்மலாவும் தன் பங்குக்குக் கூடமாட வேலைகளில் ஒத்தாசை செய்தாள். தேவையான கம்பெனி குறிப்புகளை நெட்டிலிருந்து டவுன்லோடு செய்வது, சேகரித்த டேட்டா விவரங்களை சரிபார்த்து ஒப்பிடுவது, உடனுக்குடன் தகவல்களை இமெயில்கள் மூலம் அனுப்புவது என வீட்டிலிருந்தபடியே சிஸ்டத்தை இயக்கி வேலைகளைச் செய்தாள்.

பரபரவென அந்த வாரம் முழுவதும் சரவணன் அலைந்ததால் நிம்மி பற்றிய நினைப்போ பேச்சோ அவனிடம் கொஞ்சமும் வரவில்லை.

ஆனால் மறுவாரம் ஆரம்பமானதும் நிம்மி விஷயம் ஒரு புதுவடிவத்தில் பெரிய தலைவலியாய் வந்து அலைக் கழிக்கும் என இருவரும் கொஞ்சமும் நினைக்கவில்லை.

அன்று அலுவலகம் திறந்த கொஞ்ச நேரத்திலேயே சரவணனைத் தேடி அங்கு வந்து விட்டாள் நிம்மி. அழுது சிவந்த கண்களுடன் கர்ச்சீப்பை நனைத்தபடி அவள் சொல்லச் சொல்ல ஆடித்தான் போனான் சரவணன்.

சரவணனைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியவில்லையாம். அவன் நினைவு வாட்டுகிறதாம். அதனால் பார்க்க ஓடிவந்து விட்டாளாம்.

பிழியப் பிழிய அழுவதுபோல் கண்களை கசக்கிக் கொண்டு நிம்மி சொல்லும்போது சரவணன் ஒருகணம் ஆடித்தான் போனான்.

நல்ல வேளையாய் அந்நேரம் பார்த்து நிர்மலாவும் அலுவலகத்தில்தான் இருந்தாள்.

நிம்மி... நெளிந்து குனிந்து, தளுக்கி மினுக்கி சொன்ன விதத்திலே இவள் பெரிய சாகஸக்காரி, ஏதோ திட்டத்துடன்தான் இப்படியெல்லாம் நாடகமாடுகிறாள் என்பதை புரிந்து கொண்டாள் நிர்மலா.

ஆனால் அதை கொஞ்சமும் உணராமல், அவள் வேதனையில் துடிக்கிறாள் என்றெண்ணி அவளை பரிதவிப்புடன் நோக்கும் சரவணன் நிலையைக் கண்டு அவளுக்கு எரிச்சலே வந்தது.

துடைப்பக் கட்டையை எடுத்து இரண்டு சாத்து சாத்தினால் இது போன்ற நட்டு கழன்ற கேஸ்களுக்கு புத்தி வந்துவிடும். அதைவிட்டு விட்டு சரவணன் அவளுக்காக வருந்துகிறானே என குமைந்தாள்.

இந்த விஷயத்தில்தான் தலையிடாமல் இருப்பதே மேல் என்ற எண்ணத்துடன் இம்மென்று இறுக்கமாய் உதடுகளை மூடிக் கொண்டாள்.

கண்களை மட்டும் அகல விரித்து நிம்மி இன்னும் என்ன பண்ணத்தடிக்கப போகிறாள் என கவனித்தாள்.

நிம்மியும் அந்நேரம் பார்த்து நிர்மலா அலுவலகத்தில் இருந்ததை எதிர்பார்க்காததால் அவளுக்கு நிர்மலா முன்னிலையில் சரவணனை கெஞ்சும் தொனி அவமானமாகவும் இருந்தது.

அரை மணி நேரம் பிழியப் பிழியப் பேசி ஒருவாறு தன் சோகக் கதையெல்லாம் சொல்லி முடித்து, மூக்கைச் சிலுப்பி, கர்ச்சீப்பால் கண்களை அழுத்திக் கொண்டு நிம்மி கிளம்பி விட்டாள்.

போகும்போது மறக்காமல் சரவணனை கெஞ்சல் பார்வை பார்த்தவள், ''சரவணன் இன்று மாலை அவசியம் நீங்கள் என்னைப் பார்க்க வர வேண்டும். இல்லாவிட்டால் மனமுடைந்து நான் என்ன செய்து கொள்வேன என்று எனக்கே தெரியாது...'' நிம்மி சொல்ல, சரவணன் பலமாய் தலையாட்டியபடி, ''கண்டிப்பாய் வருகிறேன் நிம்மி..'' என உறுதியும் கொடுத்தான்.

நிர்மலாவுக்கு அப்போதே அவளது கழுத்தை நெறித்து, துவைத்து தொங்கவிட்டு விடலாம் போல் இருந்தது. என்ன தைரியமிருந்தால் கட்டிய மனைவி பக்கத்தில் இருக்கும்போதே மாலையில் என்னைப் பார்க்க வா.. என சரவணனுக்கு அழைப்பு விடுப்பாள். இப்படியும் வெட்கமில்லாமல் சில ஜென்மங்கள் அலைகிறதே என கொதிப்பாய் நினைத்தாள்.

அதற்குள் சரவணன் எழுந்து நிர்மலா பக்கம் வந்து சோகமான முகத்துடன் அமர்ந்தான்.

''இந்த நிம்மி பாவம்.. நிர்மலா அவளுக்கு எவ்வளவு வேதனைகள் பார்...'' என ஆரம்பித்ததும், ''அடாடா... இப்படியொரு சூப்பர் இளிச்சவாய்த்தனமா... இவனுக்கு?''என அதிசயத்துடனே அவனைப் பார்த்தாள் நிர்மலா.

''அப்படியானால் மாலை சென்று நிம்மியை சந்திக்கப் போகிறீர்களா சரவணன்..?'' என்றாள்.

அவள் பயந்தது போலவே தலையசைத்தவன். ''ஆமாம் நிர்மலா... அவளை சந்திக்கப் போகிறேன். ஆனால் தனியாக அல்ல... நீயும் என்னுடன் வருகிறாய்...'' என்றபோது அவளுக்கு கொஞ்சம் நிம்மதியாகவும் இருந்தது.

அதற்குப் பின் சரவணன் எழுந்து அலுவலக வேலைகளில் ஆழ்ந்து விட்டான்.

நிர்மலாவின் மனதோ பெரிதாய் விழித்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்து விட்டது.

இந்த நிம்மி விஷயத்தை இப்படியே விடக்கூடாது. ஏதாவது செய்தாக வேண்டும். இல்லாவிட்டால் பெரும் ஆபத்தில் போய் முடிந்துவிடும்'' என தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தாள்.

அவள் சிந்திக்க சிந்திக்க அவள் மனதில் அருமையான வழி ஒன்றும் புலப்பட்டது.

13

நிர்மலா நிம்மியின் சுயரூபத்தை சரவணனுக்கு உணர்த்த முதல் வேலையாய் நிம்மியினால் கல்யாணம் நிறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட கல்யாண மாப்பிள்ளையைத் தேடிப் போனாள்.

சேகர் எக்ஸ்போர்ட்ஸ் என்று சொல்லப் படும் ஏற்றுமதி நிறுவனம் ஒன்றின் உரிமை யாளராய் அந்த மாப்பிள்ளை இருந்தான். அவன் பெயர்தான் சேகர்.

நிர்மலா தேடிச் சென்றபோது அந்த எக்ஸ்போர்ட் அலுவலகம் ஆட்கள் யாருமில்லாமல் வெறிச்சோடி இருந்தது. ஒரே ஒரு வயதான குமாஸ்தா லென்ஸ் கண்ணாடி வழியாய் கண்களை இடுக்கிக் கொண்டு கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நிர்மலா அவரிடம் போய் பணிவாய் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

நிதானமாய் பேச்சுக் கொடுத்து நிம்மி, சேகரின் கல்யாண விஷயத்திற்கு வந்தாள்.

கல்யாணம் ஏன் நின்று போனது. அதன் உண்மையான காரணம் என்ன என்று விசாரித்தாள்.

குமாஸ்தா முதலில் கொஞ்சம் தயங்கியவர், நிர்மலாவின் கள்ளங்கபடமற்ற மென்மையான சிரிப்பைப் பார்த்து படபடவென சொல்ல ஆரம்பித்து விட்டார்.

''அது வேற ஒண்ணுமில்லேம்மா.. எங்கள்து முதலாளி சேகருக்கு எக்ஸ்போர்ட் பிஸினஸில் ஏற்பட்ட பெருத்த நஷ்டம்தான் அவர் கல்யாணத்தையே நிறுத்திவிட்டது.''

''என்ன நஷ்டமா...?''

''ஆமாம்மா... வெளிநாட்டுக்கு அனுப்பிய சரக்குகள் எல்லாம் தட்ப வெப்ப சூழ்நிலை காரணமாக அழுகிவிட்டது. அதனால் சரக்குகளுக்கு உரிய பணத்தை வெளிநாட்டுக் கம்பெனி எங்களுக்குத் தர மறுத்துவிட்டது. அதனால் ஒரே நாளில் பெருத்த நஷ்டம் ஏற்பட்ட எங்களது எக்ஸ்போர்ட் கம்பெனியே மூடும் அளவுக்கு போய் விட்டது. இந்த விஷயமெல்லாம் கல்யாண நாளன்றுதான் மணப்பெண் நிம்மிக்கு தெரிய வர, நிம்மி கொஞ்சமும் யோசிக்காது உடனே கல்யாணத்தை நிறுத்தும்படி சொல்லிவிட்டார். உடனே கல்யாணமும் நின்று போனது. இதுதான் கல்யாணம் நின்று போனதற்கான உண்மையான காரணம்...''

அவர் சொல்லச் சொல்ல நிர்மலாவுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

கட்டிக்கப் போகிறவன் கோடீஸ்வரன் அல்ல... ஒட்டாண்டியாகப் போகிறான் என்பது தெரிந்ததும் இந்த பணத்தாசை பிடித்த நிம்மி உடனே கல்யாணத்தை நிறுத்தியிருக்கிறாள்.

எல்லாவற்றையும் விட முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் இந்த விஷயத்தை மறைத்து, சரவணனிடம் காதல் வேதனையைத் தாங்க முடியாமல் கல்யாணத்தை நிறுத்தியதுபோல் நாடகமல்லவா போட்டிருக்கிறாள்.

எவ்வளவு பெரிய சாகஸக்காரி இந்த நிம்மி...?

நிர்மலா கொதிப்பாய் நினைத்தவள், தகவல்கள் தந்த அந்தப் பெரியவருக்கு அன்பு கனிய நன்றி கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

அவளுக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்து விட்டது.

நிம்மியின் குறி... சரவணன் அல்ல, பணம்தான்!

சரவணனைவிட பெரிய பணக்காரன் ஒருவன் அவள் வலையில் விழுந்தால் போதும் அவள் கவனம் மாறிவிடும். சரவணனை விட்டுவிட்டு அவனைப் பிடித்துக் கொள்வாள். அப்படியானால்...?

இதற்கு என்ன செய்ய?

நிர்மலா தீவிரமாய் யோசித்தாள்.

யோசிக்க... யோசிக்க... அவளுக்கு நாடகக்குழு ஒன்று வைத்து நடத்தும் பள்ளித்தோழி மீனாவின் ஞாபகம் வந்தது.

மீனாவின் கணவரும் நாடக நடிகர்தான். இருவரும் கலை நிகழ்ச்சிகளும், சபாக்களில் சமூக விழிப்புணர்வு நாடகங்கள் நடத்துவதை தொழிலாய்க் கொண்டிருந்தனர்.

லயன் டவுனில் இருக்கும் திருமகள் காலனியில் அவர்களது வீடு இருக்க, அவர்களைத் தேடிப் போனாள் நிர்மலா.

மீனாவைச் சந்தித்து நிம்மி விஷயத்தைச் சொன்னபோது, அதற்கு ஒரு அருமையான வழியைச் சொன்னாள் மீனா.

14

ஒரு வாரம் கழிந்தது.

நிம்மி வழக்கமாக செல்லும் அந்த ஐந்து நட்சத்திர ஓட்டல் முன் அந்த பளபளப்பான லான்ஸர் கார் நின்றது.

உள்ளிருந்து உயர்ரக ஆடைகளுடன் அந்த இளவயதுக்காரன் இறங்கினான். வேகமாய் நடந்து பார்ட்டிகள், கூத்துக்கள் நடக்கும் டிஸ்கோத்தே ஹாலுக்குச் சென்றான்.

கோட் சூட்டுடன் கம்பீரமாய் கண்ணாடிக் கதவுகளைத் திறந்து டிஸ்கோத்தே ஹாலுக்குள் நுழைந்தபோது அனைவரின் கண்களும் அவனைப் பார்வையால் மொய்த்தன.

அவன் மெல்ல தன் விழிகளால் தேடி சற்று ஓரமாய் இருந்த இருக்கையொன்றில் போய் அமர்ந்து கொண்டான்.

அவனை மொய்த்த அத்தனை கண்களும் பார்வையைத் திருப்பிக் கொள்ள... ஒரே ஒரு ஜோடிக்கண்கள் மட்டும் தொடர்ந்து அவனைப் பார்த்தது. அவனது கம்பீரத்தை பார்வையால் பருகி மயங்கியது.

அது... நிம்மியுடைய கண்கள்...

நிம்மி அவனையே உற்றுப் பார்த்தாள். அவனது பகட்டான ஆடைகளும், அசாத்திய அலட்சியமான ஆண்மையும் அவன் பெரிய பணக்காரன் என்பதை உணர்த்தியது.

தனது மயக்கும் விழிகளை மேலும் அகலமாய் விரித்தவள் அதற்கு மேல் அடங்க மாட்டாதவளாய் வலிய அவனைத் தேடிப் போனாள்.

தன் அத்தனை பற்களையும் காட்டி இளித்தபடி அவனது பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

தனது உடம்பை நெளித்து சுளித்து குழைந்தாள். வெட்கமில்லாமல் பேச்சுக் கொடுத்தாள்.

அவன் அவளை கொஞ்சமும் சட்டை செய்யாமல் இருந்தவன் நிம்மி தொடர்ந்து பேச்சுக் கொடுக்க மெல்ல அவள் பக்கம் பார்த்தான்.

அவ்வப்போது அவனும் ஏதாவது பேசினான்.

நிம்மி அவன் எது சொன்னாலும் பெரிய ஹாஸ்யத்தைக் கண்டதுபோல் விழுந்து விழுந்து சிரித்தாள்.

இருவரும் அரை மணி நேரத்தில் நன்றாகப் பேசிப் பழகி இரவு டின்னரை ஒன்றாகச் சாப்பிடும் அளவுக்கு நெருக்கமாகி விட்டனர்.

அவன் தன் பெயர் வாசு எனவும் கோயம்புத்தூரில் நிறைய நூற்பாலைகள் வைத்திருப்பதாய் சொல்ல, பெரும் அதிசயமாய் அதைக் கேட்டு வாய் பிளந்தாள் நிம்மி.

அவனது பணக்காரத்தனமும் தாராளமாய் அவன் கைகளில் புழங்கிய கரன்ஸிகளையும் கண்டு அவள் அதிரத்தான் செய்தாள்.

இவன் சரியான புளியங்கொம்பு. இவனை விடக்கூடாது என அவளது மூளையில் உரைத்திருக்க வேண்டும்.

தொடர்ந்து அவன் பின்னாலேயே அலைந்தாள். அவளை மயக்கி தன் வலையில் விழ வைக்க தன்னை விதவிதமாய் அலங்கரித்து செயற்கை அழகுடன் அவனுக்கு போஸ் கொடுத்தாள். அவனுக்காக உருகுவது போல் பசப்பு வார்த்தைகளை அள்ளி வீசினாள். எல்லாம் நிம்மி எதிர்பார்த்த மாதிரியே நடந்தது.

அவள் எதிர்பார்த்தபடி நடந்து தொழிலதிபன் வாசு அவளது காதல் வலையில் விழுந்ததும், மெல்ல அடுத்த வலையான கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள் நிம்மி.

வாசு, 'கல்யாணமா... அதெல்லாம் எதற்கு?' என முதலில் மறுத்தவன், நிம்மியின் வற்புறுத்தலால் மெல்ல சம்மதிக்கவும் செய்தான்.

ஒருவழியாய் எல்லாம் பேசி முடித்து கல்யாண தேதியும் குறித்தாயிற்று.

'வாசு வெட்ஸ் நிம்மி...!'

நாட்கள் குறிக்கப்பட்டு கல்யாண அழைப்பிதழ்கள் அடிக்கப்பட்டு வேலைகள் மளமளவென தொடங்கியது.

நிம்மி சரவணனைவிட பெரும் பணக்காரனைப் பிடித்து விட்ட மகிழ்ச்சியில், முகமே வெடித்து விடும் அளவு சந்தோஷத்துடன், முதல் பத்திரிகையை சரவணனிடமே கொடுக்க வந்தாள்.

சரவணன் முகம் மலரும் புன்னகையுடன் அதை வாங்கி நிஜமாகவே சந்தோஷப்பட்டான். பெரும் பிரச்சினை தீர்ந்த சந்தோஷத்தில் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

ஆனால், வாசுவுடன் நடக்கவிருக்கும் அந்தக் கல்யாணமும் நின்று போகும் என்று நிம்மி அப்போது உணரவில்லை. ஆனால் தோழி மீனா உதவியுடன் வாசுவிற்கு தொழிலதிபர் வேஷம் செய்திருந்த நிர்மலா அதை நன்கு உணர்ந்திருந்தாள்!

15

சரவணனுக்கு நிம்மி இப்படி மனம் மாறியது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

காதல் வேதனை... மறக்க முடியவில்லை. பார்க்காமல் இருக்க முடியவில்லை. அது இதுவென பேசி டயலாக்குகளால் டபாய்த்தவள் திடீரென எப்படி மனசு மாறினாள்?

சரவணன் திகைத்துப் போய் குழம்ப, அவன் குழப்பத்தை போக்குபவளாய் பக்கத்தில் சிரித்த முகத்துடன் வந்து அமர்ந்தாள் நிர்மலா.

புரியாமல் விழித்த சரவணனிடம், ''நீங்கள் நினைப்பது போல் நிம்மி உங்களைக் காதலிக்கவில்லை. உங்கள் பணத்தைத்தான் காதலிக்கிறாள். அதனால்தான் உங்களைவிட பெரிய பணக்காரர் கிடைத்ததும் உங்களை உதறிவிட்டு வாசுவைப் பிடித்துக் கொண்டாள். ஆனால்...''

நிர்மலா பீடிகையுடன் நிறுத்த சரவணன் புரியாமல் பார்த்தான்.

''ஆனால் அவள் நிம்மிக்கும் வாசுவுக்கும் ஒருபோதும் கல்யாணம் நடக்கப் போவதில்லை சரவணன்...'' என்றாள்.

தீர்க்கமாய் நிர்மலா சொல்ல சரவணன் அப்படியே திடுக்கிட்டுப் போனான்.

''என்ன சொல்கிறாய் நிர்மலா....?'' என அவன் அதிர்ந்து கேட்க, தான் மீனாவுடன் சேர்ந்து போட்ட வாசுவின் பெரும் தொழிலதிபர் திட்டத்தை விவரிக்க ஆரம்பித்தாள் நிர்மலா.

நிம்மியின் வீடு.

தற்செயலாய் வீட்டு முன்புறம் வந்த நிம்மி வீட்டின் கிரில் கேட்டைத் திறந்தபடி நுழைந்த அந்த மூவரைப் பார்த்து அதிசயிக்கத்தான் செய்தாள்.

அது... சரவணன், நிர்மலா கூடவே 'தொழிலதிபர்' வாசு.

சரவணன் நிர்மலாவுடன் சிரித்தபடியே வரும் வாசுவைக் கண்டு திகைக்கவே செய்தாள்.

இவர் எப்படி இவர்களுடன் சேர்ந்தார்? முன்பே பழக்கமா என்றெல்லாம் குழம்பத்தான் செய்தாள்.

ஆனால் சிரித்தபடியே நிம்மியை நெருங்கிய மூவரும் அவள் முன்னால் போய் கைகளைக் கட்டிக் கொண்டனர்.

சரவணன் நிம்மியையே உறுத்துப் பார்த்தான்.

''நிம்மி, நீ கல்யாணம் செய்ய சம்மதித்திருக்கும் இந்த வாசு தொழிலதிபர் இல்லையென்றால், கோடீஸ்வரர் இல்லையென்றால் என்ன செய்வாய்... சொல்லு!''

சரவணன் சொல்ல, அதிர்ந்து போய் பார்த்தாள் நிம்மி.

''என்ன சொல்கிறீர்கள் சரவணன்?''

''உண்மைதான் நிம்மி! நீ நினைப்பதுபோல் வாசு பெரும் தொழிலதிபர் இல்லை. சாதாரண நாடக நடிகர். உனது பேராசையான உண்மையான சுயரூபத்தை வெளிக்கொண்டு வர நிர்மலா நடத்திய நாடகம். உன்னுடைய காதல் வேஷம். என்னை ஏமாற்றியது எல்லாம் கலைந்து விட்டது நிம்மி!'' சரவணன் தீர்க்கமான குரலில் சொல்லச் சொல்ல அப்படியே அதிர்ந்து உச்சக்குரலில் அலற ஆரம்பித்தாள் நிம்மி.

16

புயலடித்து ஓய்ந்தது போல் எல்லாம் முடிந்து தெளிவு பெற்றிருந்த சரவணன், தன் முகத்தை எங்கே கொண்டு வைப்பது என்ற அசட்டு அழகுடன் நிர்மலா முன் நின்று கொண்டிருந்தான்.

அவனை அப்படியே அரவணைத்து அவனது தலையை தனது நெஞ்சோடு சாய்த்தாள் நிர்மலா.

''நிர்மலா... நான்...'' என்று ஏதோ பேச ஆரம்பித்தவனின் உதடுகளில் தனது பிஞ்சு விரல்களை மென்மையாய் வைத்தவள், ''ப்ளீஸ்... எனக்காக கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அப்படியே இருங்கள்...'' என்றபடி அவனை மேலும் இறுக்கமாய் பிடித்துக் கொண்டு தன் நெஞ்சுக்குள் பொதிய வைத்தாள்.

சரவணன் அவள் சொல்வதைக் கேட்டு பெட்டிப் பாம்பு போல் கண்களை மூடி அப்படியே இருந்தான். மௌனமாய் கடந்த அந்த நிமிடங்கள் இருவருக்குமே வினோதமான அமைதியொன்றை ஏற்படுத்தியது.

நிர்மலா... மெல்ல பிடிகளைத் தளர்த்தி அவன் முகம் நிமிர்த்தினாள். குறும்பும் குறுகுறுப்புமாய் அவனைப் பார்த்தபடி ''மன்மதக் குஞ்சே!'' என்றாள்.

சரவணன் கண்களை விரித்துப் பார்த்தான். தன்னைக் கேலியுடன் பார்க்கும் அவளைக் கண்டு அழகாக வெட்கப்பட்டான். நிர்மலா தொடர்ந்தாள்.

''மன்மதக் குஞ்சே... நிம்மியின் மேலான காதல் தீர்ந்து விட்டதா மன்மதக் குஞ்சே? இல்லை இன்னும் இருக்கிறதா மன்மதக் குஞ்சே...'' ராகத்துடன் பாடி அவள் கிண்டல் செய்ய... ஒருவித குறுகுறுப்புடன் நெளியத்தான் செய்தான் சரவணன்!

மறுபடியும் அவளை நேருக்கு நேர் பார்க்க முடியாதவனாய் தலையைத் தாழ்த்தப் போக தனது மருதாணி விரல்களால் அவசரமாய் அவன் முகம் நிமிர்த்தி, ''இந்த வெட்கமெல்லாம் என்னிடம் ஆகாது. பதில் சொல்லுங்கள்...!'' என்றாள் பொய்க் கோபத்துடன்.

அவன் நிமிர்ந்து முகத்தை லேசாய் திருப்பியபடி ஏதோ சொல்ல வர, ''ம்ஹூம்... இப்படியல்ல நேருக்கு நேராய் என் முகத்தை என் கண்களைப் பார்த்து...'' என்றாள் அவசரமாய் அதட்டல் செய்தவாறு.

சரவணன் அவளது அதட்டலை வெகுவாய் ரசித்து சிரித்தவன், ''நிர்மலா, நிம்மி மயக்கம் எனக்கு எப்பவோ தெளிந்து விட்டது. போயும் போயும் இப்படி ஒரு பெண்ணைக் காதலித்து காதல் பித்துப் பிடித்துப் போய் அலைந்திருக்கிறோமே... என்ற குற்ற உணர்வுதான் என்னை வாட்டுகிறது'' என்றவன் நிமிர்ந்து, ''நீயே சொல் நிர்மலா, அவளெல்லாம் ஒரு ஜென்மமா...? எப்படியெல்லாம் என்னை ஏமாற்றியிருக்கிறாள்...?'' என்றான் ஆதங்கமாய்.

நிர்மலாவோ பதிலுக்குப் புருவம் உயர அவனைக் குறுகுறுப்பாய் பார்த்தாள்.

''அவள் ஏமாற்றியது இருக்கட்டும். ஆனால்...''

''சொல் நிர்மலா...''

''அந்தக் குரங்கு மூஞ்சியை, இந்த மன்மத மூஞ்சி காதலித்தது. ஏங்கியது எப்படி அதுதான் புரியவில்லை...'' என்றாள்.

''என்ன சொன்னாய் குரங்கு மூஞ்சியா...? நல்ல பெயர்தான் அவளுக்கு'' என சரவணன் அதை ரசித்தவன் மெல்ல தனது கரங்களால் அவளது காது மடல்களை ஆட்டி வெட்கத்தோடு, ''ப்ளீஸ் பழசையெல்லாம் கிளறாமல் அப்படியே விட்டு விடேன் நிர்மலா. இப்போது புதிதாய் புத்தம் புதிதாய் இந்த மன்மத மூஞ்சு ஒருவரை காதலிக்க ஆரம்பித்திருக்கிறது தெரியுமா...'' என்றான்.

''யாராம் அது...?'' வேண்டுமென்றே உதட்டைச் சிலுப்பி தெரியாததுபோல் முகத்தை வைத்துக் கொண்டு அவள் கேட்டாள்.

''அவள் பெரிய அழகியாம்.... ரதிபோல் அழகு அவளுக்காம் கண்களில் அழகாக மை வைத்திருப்பாளாம். கன்னக்குழி சிரிப்பால் பார்ப்போரை மயக்குவாளாம். இன்னும்...''

அவன் தொடர படபடவென செல்லமாய் அவன் தலையை குட்டி அலை அலையாய் படர்ந்த அவனது சிகையை கலைத்தவள் ''இந்த ஐஸ் வேலையெல்லாம் இங்கு வேண்டாம்... '' என்றாள் பொய்க் கோபமாய்.

''ஐயோ, நிஜம் நிர்மலா! நிஜமாகவே... நீ கொள்ளை அழகு, உன்னை இந்த நிமிடம் முதல் தீவிரமாய் காதலிக்க ஆரம்பித்து விட்டேன். உனக்கு சந்தேகமிருந்தால் என் கண்களைப் பார். அது உன்னுடன் பேசும். உனக்கு ஒரு சேதி சொல்லும்...''

அவன் உறுதியான குரலில் சொல்ல, ''அப்படியா? இது என்ன புதுக்கதை?'' என்றபடி நிர்மலா தன் மைவிழிக் கண்களால் அவனது விழிகளை உற்று நோக்கினாள்.

படபடத்த இமைகளுடன் கூடிய அவளது முகம்தான் அதில் தெரிந்தது. சரவணன் தொடர்ந்து, ''நிர்மலா நீ என் கருவிழிகளின் கண்மணியுள் எவ்வளவு அழகாய் தெரிகிறாய் பார்த்தாயா? இனி நீதான் என் கண்ணின் நிலா என் காதல் கண்ணிலா...'' என்றான்.

அவன் சொன்னதும் தன் அழகான தலையை சிலுப்பி, ''அடாடா... பெரிய கவிஞர் போல் வர்ணனை வேறு...'' என அவன் காதுகளைக் கிள்ளியவள் திடுமென ஞாபகம் வந்தவளாய் துடித்து நிமிர்ந்தாள்.

குனிந்து கைகளால் தொங்கிக் கொண்டிருந்த தாலிச் சரடை எடுத்து அவன் முன் காட்டினாள்.

''இப்படி ஒன்றை என் கழுத்தில் கட்டி ஐயா தொங்க விட்டிருப்பது ஞாபகமிருக்கிறதா... இல்லை அதுவும் மறந்து போயிற்றா...?''

கேலியும் கிண்டலுமாய் அவள் கேட்க, சட்டென முகம் மலர்ந்த வணன், மாலையாய் கழுத்தில் கை கோர்த்திருந்தவளை ப்படியே தன்னோடு இறுக்கி அவள் செவ்விதழ்களில் மென்மை க முத்தமிட்டவன், ''அட... ஞாபகமில்லாமலா...? இரவு வரை பொறுத்திருப்பாய் என நினைத்தேன். உனக்கு அவசரமென்றால் ப்போதே...'' என்றபடி சரவணன் நெருங்கினான்.

அவன் நெருங்க, குங்குமமாய்ச் சிவந்த முகத்துடன் வெட்கம் டர, கண்களை மூடிக் கொண்டாள் அவனது அன்பு மனைவி ர்மலா!

மலர்விழி மயக்கம்

1

மதுராவுக்கு அன்று ஒரே பரபரப்பாக இருந்தது. என்னவென்று தெரியவில்லை. ஏதோ ஓர் உணர்வு. எதையோ பறி கொடுத்து விட்ட தவிப்பு.

காலை அவசர அவசரமாய் வேலை களை முடித்து கிளம்பியவள். தோழி நீலா அந்த விஷயத்தைச் சொன்னதும் அப்படியே உட்கார்ந்து விட்டாள். தன் அரிசிப் பற்கள் அத்தனையும் கடிபட கொதித்துப் போனாள்.

அவளால் கொஞ்சமும் அந்த விஷயத்தை ஜீரணிக்க முடிய வில்லை.

நம்ப முடியாமல் காது மடல்கள் அதிர பார்த்தவளை நீலாவும் அதிசயமாய்ப் பார்த்தாள்.

''நான் சொல்வதெல்லாம் உண்மை மதுரா...'' என்றாள் திரும்பவும் அழுத்தமாக.

''என்னால் கொஞ்சமும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... மேடம் அவர்களுக்கு இந்த விஷயம் தெரியுமா?'' என்றாள் மதுரா பிரயாசையுடன்.

நீலா சிரித்தவள், ''இந்த ஏற்பாட்டை செய்திருப்பதே மேடம் அவர்கள்தான்'' என்றாள் சிரிப்பு மாறாமல்.

''என்ன மேடம்தான் இதைச் செய்தார்களா?'' மருதாணி விரல்களை பிசைந்தபடி மதுரா சிவந்தாள்.

நீலா மதுராவின் சிவந்த அழகு முகத்தையும் இருபது வயது மங்கச் சிலையாய் பளீரிடும் அவளது வனப்பான உடல் அழகையும் ஒருகணம் மெய் மறந்து ரசித்தவள், 'இவள் பயப்படுவதில் அர்த்தம் இருக்கிறது...' என தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டு அகன்றாள்.

மதுரா மறுபடியும் தவித்தாள்.

எப்படி இதற்கு மேடம் ரங்கமணி அம்மாள் ஒத்துக் கொண்டார்கள்? என்ற ஆச்சரியம் கேள்வியாய் எழுந்து அவளை வாட்டியது.

மதுரா பயப்படும் விஷயம் இதுதான்.

அவளது அன்பு அனாதை இல்லத்திற்கு பெரும் பணக்காரரும் இல்ல பராமரிப்பிற்கு நிறைய பணம் மற்றும் நன்கொடைகள் அளிப்பவருமான குருநாதர் தனது மகனுடன் வர இருக்கிறாராம். பெரியவர் குருநாதருக்கு தனது மகனுக்கு மனைவியாய் வருபவள் அன்பு இல்லத்திலிருந்து வர வேண்டும் என்ற ஆசையாம். அதனாலே தன் மகனை கையோடு கூட்டி வந்து மகனை வைத்தே 'செலக்ட்' செய்யப் போகிறாராம். அன்பு இல்லத்து பெண்களை எல்லாம் வரிசையில் நிறுத்தி சந்தையில் மாடு பிடிப்பது போல் அவர்களில் ஒருத்தியை குருநாதருடைய மகன் தேர்ந்தெடுக்கப் போகிறானாம். என்ன ஒரு அடாவடித்தனம்? இதை மேடம் அவர்களும் அனுமதித்து ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். என்ன ஒரு அநியாயம்?

அதற்கு மேல் பொறுக்க முடியாதவள் போல் நேராய் ரங்கமணி அம்மாளையே தேடிச் சென்று விட்டாள் மதுரா.

மேடம் ரங்கமணி அம்மாள் தனது அலுவலக அறையில் மூக்குக் கண்ணாடியை இடுக்கியபடி கணக்குகளை பார்த்துக் கொண்டிருந்தவள் மூச்சு வாங்க மதுராவைக் கண்டதும் நிமிர்ந்தாள்.

அவளுக்கு எப்போதும் மதுரா மேல் பரிவும், தனிப் பாசமும் உண்டு. தனது கணத்த அறுபது வயது சரீரத்தின் நோவுகளையும் பொருட்படுத்தாமல் அவசரமாய் எழுந்து வந்து மதுராவை பிடித்துக் கொண்டாள்.

''என்ன கண்மணி ஆயிற்று?'' என ரங்கமணி அம்மாள் கனிவாய் வினவியதும் மதுராவிற்கு தன்னை அசுவாசப்படுத்திக் கொள்ள ஒரு நிமிடம் ஆயிற்று.

''ஒன்றுமில்லையம்மா...'' என்று ஆரம்பித்து பதட்டத்தை குறைத்தவள், ''அம்மா, இன்று நம் இல்லத்திற்கு யாரும் வர இருக்கிறார்களா?'' என்றாள் சாதாரண குரலில்.

ரங்கமணி அம்மாளும் பதட்டம் நீங்கி மூச்சு விட்டவள். ''ஆமாம் மதுரா. உனக்குத் தெரியாதா? இன்று நம் இல்லத்திற்கு பெரியவர் குருநாதரும் அவரது மகன் சத்யனும் வர இருக்கிறார்கள்...'' என்றாள் முகம் மலர்ந்தவளாய்.

''சத்யனா?''

''ஆமாம் மதுரா; பெரியவரின் தொழிற் கூடங்களை அவரது பிஸினஸை கவனித்துக் கொண்டிருக்கும் அவரது ஒரே வாரிசு. ஒரே மகன்!''

''எதற்கு வருகிறார் அம்மா?''

மதுரா கேட்டுவிட்டு கேள்விக்குறியோடு பார்க்க ரங்கமணி அம்மாவின் கனிவுப் புன்னகை மேலும் பெரிதாகியது.

''மதுரா, அவர்களது கம்பெனி நிர்வாகப் பிரிவிற்கு நம்பிக்கையான ஆள் ஒன்று தேவையாம். அதற்காக நமது அன்பு இல்லத்திலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பெரியவரின் விருப்பம். அதற்காகவே நமது இல்லத்திற்கு இன்று வர இருக்கிறார்கள்...''

''அவ்வளவுதானா?''

''அவ்வளவுதான். ஆனால்...'' என்று ரங்கமணி அம்மாள் இழுத்தது அவளை மேலும் வியப்பாக்கியது.

''சொல்லுங்கள் அம்மா...''

''பெரியவர் சத்யனுக்கு மணம் முடித்து வைக்க பெண்ணும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவேளை அவர் கம்பெனிக்கு தேர்ந்தெடுக்கும் பெண் அவரது எதிர்பார்ப்பு படி அமைந்து விட்டால் அந்தப் பெண்ணையே தனது மருமகளாக்கிக் கொள்ள உள்ளூர விருப்பமிருப்பதாகவும் பெரியவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் அதுவும் அந்தப் பெண் விரும்பினால்... அவள் சம்மதத்துடன்தான்...''

ஒருவாறு ரங்கமணி அம்மாள் சொல்லி முடித்து விட்டாள்.

மதுராவிற்கு எல்லாம் புரிந்து விட்டது.

தோழி நீலா சொல்லி அவள் கேள்விப்பட்ட அந்த அடாவடித் தனமான 'சந்தையில் மாடு பிடிக்கும்' விஷயத்தைத்தான் இவ்வளவு நாசூக்காய் ரங்கமணி அம்மாள் சொல்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டாள்.

ஆனால் தோழி நீலாவிடம் பேசுவதுபோல் எடுத்தெறிந்து அன்பும் கருணையும் கொண்ட ரங்கமணி அம்மாளிடம் பேச முடியாது... பேசுவது மதுராவின் வழக்கமும் அல்ல. இயன்றவரை அம்மாளிடம் அவளும் நாசூக்காகவே சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் ரங்கமணி அம்மாள் விடாப்பிடியாக, ''நீ ஒன்றும் கவலை கொள்ள வேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன் கண்மணி...'' என்று உறுதிபட பேசியபோது அதற்கு மேல் அவளால் ஒன்றும் சொல்ல முடியாமல் போயிற்று.

பலியாடு போல வழியில்லாமல் சம்மதித்தாள் மதுரா.

ஆயிற்று. ஒரு வழியாய் கொஞ்ச நேரத்தில் பெரியவரின் கார் அன்பு இல்லத்திற்குள் நுழைந்தது. ரங்கமணி ஆவலாய் வரவேற்க ஓடினாள்.

உள்ளிருந்து பெரியவருக்கு பதில் கம்பீரமாய் தனது ஆஜானுபாகுவாய் தோற்றத்துடன் இறங்கியது சத்யன் மட்டுமே!

வந்தவன் வேகவேகமாய் அன்பு இல்லத்தை பார்வையிட ஆரம்பித்தான். சத்யன் வந்ததும் அன்பு இல்ல ஆயாவிலிருந்து மாணவிகள் வரை அவனை விழுந்தடித்துக் கொண்டு பார்க்கப் போனது மதுராவுக்கு எரிச்சலையூட்டியது.

''பெரிய மகாராஜா வந்து சுயம்வரம் நடக்கப் போகிறது. போய் முக அழகை காட்டுங்கள்...'' என்று இகழ்ச்சியாய்த்தான் அதீத உதட்டுச் சாயத்துடன் கிளம்பிய மீனாவை நோக்கிச் சொன்னாள்.

மனச் சலனம் ஏதுமின்றி கர்மமே கண்ணாய் ரங்கமணி அம்மாளின் அலுவலக அறையில் அமர்ந்து தனது வேலையைத் தொடங்கினாள். அன்பு இல்ல வரவு செலவுகள், டோனர்களுக்கு தெரிவிக்க வேண்டிய கணக்குகள், சேவக நிறுவனங்களுக்கு நிதி கேட்டு கடிதங்கள், என ஒவ்வொன்றாய் கவனம் செலுத்தி மதுரா தயாரித்தாள்.

அப்படியே வேலைகளில் ஆழ்ந்திருந்தவள் தற்செயலாய் நிமிர்ந்தபோது, எதிரே கைகளைக் கட்டியபடி குறுகுறுப்பாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டு ஒரு கணம் திடுக்கிட்டு விட்டாள்!

ஆறடி உயரமாய் மேல் நோக்கி வாரிய முடியுடன் திடமான புஜங்களுமாய் மலைக்க வைக்கும் கம்பீரத்துடன் தனது காந்தக் கண்களை வீசிப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்!

''யார் நீங்கள்...?''

மதுரா துணுக்குற்று கேட்டதும் அவனது முறுக்கேறிய மீசையின் கீழிருந்த உதடுகள் இறுக்கத்தை விடுவித்து மின்னலாய் பற்களைக் காட்டியது. ''நான்தான் சத்யன்...!'' என்றான் சத்யன் புன்னகை மாறாமல்.

'ஓ.. அந்த சுயம்வர மகாராஜாவா...?' என உள்ளுக்குள் நகைத்தபடி மதுரா நினைக்கும்போதே, சத்யன் குறுஞ்சிரிப்புடன், ''அன்பு இல்ல மாணவிகள் எல்லோரையும் பார்த்து விட்டேன். எனக்குப் பிடித்தது... நான் விரும்புவது யாரைத் தெரியுமா?''

சிரித்தபடி தன் சுட்டு விரலை மதுராவை நோக்கிக் காட்டினான் சத்யன்.

2

மதுரா பயந்தபடியே நடந்தது.

சத்யன் தன் ஒற்றை விரலால் மதுராவைத்தான் சுட்டிக் காட்டினான்.

''எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. உன்னைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்...'' என சொல்லவும் செய்தான்.

மதுரா தன் அரிசிப்பற்களை கடித்தபடி கோபமாய்ப் பார்த்தாள்.

''எனக்கு உங்களை சுத்தமாய் பிடிக்கவில்லை...'' என்றாள் ஆக்ரோஷமாக.

''அது பற்றி எனக்கு கவலையில்லை...'' சத்யன் உரக்கச் சொல்லி சிரித்தவன். ''சந்தையில் மாடு பிடித்து வாங்குகிறவர்கள் ஒருபோதும் மாட்டிடம் அபிப்பிராயம் கேட்பதில்லை. கேட்க வேண்டியவர்களிடம் கேட்டால் போதும்...''

அவன் தன்னை மாட்டுடன் ஒப்பிட்டுப் பேசுவது கண்டு மதுரா வெகுண்டு போனாள்.

கோபம் துடிக்க மேலும் மேலும் சிவந்த அவளது முகத்தை, சத்யன் வெகுவாய் ரசித்தான்.

''அடாடா... நல்ல அழகுதான்...! சிவந்த முகமும் செவ்விதழுமாக பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் அல்லவா இருக்கிறது''.

மேலிருந்து கீழ்வரை ரசித்து அவளது அழகில் பார்வையை ஓட்டியபடி சத்யன் பேச தன்னை முன்பின் தெரியாத அந்நியன் ரசிப்பதைக் கண்டு உதடு துடித்து வெடித்துவிடப் போனாள் மதுரா

நல்லவேளையாய் அதற்குள் ரங்கமணி அம்மாள் ரூமிற்குள் நுழைந்து விட்டாள்.

''மிஸ்டர் சத்யன் நீங்கள்...'' என்று இழுத்தபடி ரங்கமணி அம்மாள் நுழையவும் மதுரா சாந்தமாகி நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

சத்யனும் தன்னை பவ்யமாக்கிக் கொண்டான். ''நான் தேர்ந்தெடுத்து விட்டேன் அம்மா...'' என்றான் தெளிவான குரலில்.

''தேர்ந்தெடுத்து விட்டீர்களா? யார் அது?''

ரங்கமணி அம்மாள் ஆவலாய் கேட்க சத்யன் பதில் சொல்லாமல் வேண்டுமென்றே அஃறிணை பொருள் போல் மதுராவைக் காட்டினான்.

மதுராவுக்கு சினம் எகிறிய அதே சமயம் ரங்கமணி அம்மாள், ''மதுராவையா சொல்கிறீர்கள்? நான் நினைத்தது சரிதான்...!'' என சொல்லியது மதுராவை திடுக்கிடச் செய்தது.

''என்ன நினைத்தீர்கள் நீங்கள்?''

''சத்யன், இந்த அன்பு இல்லத்தில் சுறுசுறுப்பும் அறிவுத் திறமையும் கொண்ட பெண்களில் மதுராவுக்குத்தான் முதலிடம் நான் நினைத்தபடியே அறிவாளி அவள்தான்...!

ரங்கமணி அம்மாள் கொடுத்த சர்டிபிக்கேட்டுக்கு சத்யன் பலமாய் தலையாட்டினான்.

''ஆமாம்... ஆமாம் அறிவாளிதான்! பார்த்தாலே நிறைய அறிவு இருப்பது தெரிகிறது...'' சத்யன் வேண்டுமென்றே இகழ்ச்சியாய் குறுகுறுப்புடன் மதுராவின் தலைப்புறம் பார்த்தவாறு பேசினான்.

மதுராவால் அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை.

''அம்மா நீங்கள் இவரிடம்...'' என்று வெடிக்கப் போனவளை ரங்கமணி அம்மாள் தடுத்தாள். ''நீ கொஞ்சம் பொறு மதுரா, நான் பார்த்துக் கொள்கிறேன்...'' என்று அம்மாள் கை உயர்த்திச் சொன்னதும் மதுராவால் ஒன்றும் பேச முடியாமல் ஆயிற்று.

ஆயினும் உதடு துடிக்கும் கோபத்துடன் அரிசிப்பற்களை கடித்தபடி சத்யனையே முறைத்தாள்.

சத்யன் அவளது படபடப்பையும் துடிப்பையும் வெகுவாய் ரசித்துவிட்டு ரங்கமணி அம்மாள் பக்கம் திரும்பினான்.

''பாருங்கள் அம்மா, நீங்கள் எது பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. அலுவலகம் அருகிலே கம்பெனியின் 'கெஸ்ட் ஹவுஸ்' ஒன்று இருக்கிறது. நிறைய பெண் ஊழியர்கள் தங்கியிருக்கிறார்கள். அங்கே மதுராவும் தங்கிக் கொள்ளலாம். நல்ல

வேலை, நிறைய சம்பளம், பிரச்சினை ஒன்றும் வராது. எதற்கும் நீங்கள் யோசித்துக் கொள்ளுங்கள்...''

சத்யன் இப்படிச் சொன்னதும் ரங்கமணி அம்மாள் ஏறக்குறைய பதறியே விட்டாள்.

''ஐயோ, இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது? உங்களது அலுவலகத்தில், உங்கள் கண்காணிப்பில் வேலை செய்ய மதுரா புண்ணியம் செய்திருக்க வேண்டும். தாராளமாய் நீங்கள் மதுராவை கூட்டிப் போகலாம்...''

ரங்கமணி அம்மாள் சொல்லிக் கொண்டே போக மதுரா திகைப்பின் உச்சிற்கே சென்று விட்டாள்.

அதைவிட, சத்யன் அவள் முன் பவ்யமாய் இருப்பதும் தன்னைச் சீண்டுவதுமான அவனது நடிப்பை கொஞ்சமும் ரங்கமணி அம்மாள் உணராமல் இருக்கிறார்களே... என வருந்தவும் செய்தாள்.

ஆயிற்று. ஒரு வழியாய் சத்யன் ரங்கமணி அம்மாளிடம் பேசி விட்டு எழுந்தான். ''மதுராவை தயாராக இருக்கச் சொல்லுங்கள். நாளை வந்து அழைத்து போகிறேன்'' என்றபடி மதுராவைப் பார்த்து விஷமச் சிரிப்பு சிரித்தவாறு விடைபெறப் போனான் போனவனை ரங்கமணி அம்மாள் நிறுத்தினாள்.

''சத்யன், அன்பு இல்ல போட்டோ ஆல்பம் ஒன்றை பெரியவர் போன முறையே பார்க்கக் கேட்டார்கள். தருகிறேன் கொடுத்து விடுகிறீர்களா?''

''கொடுங்கள் அம்மா...''

''இதோ எடுத்து வருகிறேன்...'' என ரங்கமணி அம்மாள் அங்கிருந்து அலுவலக அறையை நோக்கிப் போனாள்.

தன்னை பலியாடு போல கசாப்புக் கடைக்காரனான சத்யனிடம் ரங்கமணி அம்மாள் விட்டுவிட்டு செல்வது கண்டு மதுரா எரிச்சலடையத்தான் செய்தாள்.

சத்யன் அவள் நினைத்தது போலவே குறும்புச் சிரிப்பும், கெக்கலிப்பு பார்வையுமாய் அவள் பக்கம் வந்தான்.

''பிடிக்கவில்லை... பிடிக்கவில்லை... என்றாயே... இப்போது என்ன நடக்கிறது பார்த்தாயா?''

''நான் வரமாட்டேன். கண்டிப்பாக வரமாட்டேன்...!'' என்றாள் மதுரா உறுதியான குரலில்.

சத்யன் அலட்சியமாகச் சிரித்தான்.

''உன் அபிப்பிராயத்தை யார் கேட்டது? வா என்றால் வர வேண்டும், போ என்றால் போக வேண்டும் அதுதான் உன் கதி...''

''முடியாது... ஒரு போதும் நான் வரமாட்டேன்...''

''மாட்டேன் என்றால் விட்டு விடுவேனா?''

''பின் என்ன செய்வீர்களாம்?''

சத்யன் குனிந்து கோபம் கொப்பளித்த அவள் முகத்தை நேருக்கு நேராய் பார்த்தான்.

''உன் தலை முடியை பிடித்து தரதரவென இழுத்துச் சென்று விடுவேன். நாளை நீ வரமாட்டேன் என்று அடம்பிடித்தால் அதுதான் நடக்கப் போகிறது...''

சொல்லிவிட்டு சத்யன் அலட்சியமாய் சிரித்தான்.

மதுராவுக்கு ஒரே அதிர்ச்சி! என்ன சொன்னான்?

தலைமுடியைப் பிடித்து தரதரவென...

அதுவும்... மதுராவையா...

3

மதுரா நெருப்புக் கணலாய் தகதகத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கொதிப்பு அடங்க ரொம்ப நேரமாயிற்று. மருதாணி விரல்களை பிசைந்தபடி யோசித்தாள்.

என்ன ஒரு திமிர், தலைமுடியை பிடித்து தரத்தரவென இழுத்துச் சென்று விடுவானாம்... அவனை சும்மாவிடக் கூடாது... நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்வி கேட்க வேண்டும்... அவனது கோணல் புத்தியை சரி பண்ண வேண்டும்.

ஆக்ரோஷமாய் உள்ளுக்குள் கர்ஜித்தவளை யாரோ உலுக்குவது கண்டு நினைவுக்கு வந்தாள்.

எதிரில் புன்சிரிப்புடன் ரங்கமணி அம்மாள்.

''என்ன மதுரா யோசனை?''

''ஒன்றுமில்லை அம்மா...''

''நீ ஒன்றும் பயப்படத் தேவையில்லை. அவர்கள் ரொம்ப நல்லவர்கள். உன்னை நன்றாக கவனித்துக் கொள்வார்கள் மதுரா...''

மதுராவிற்குதான் பயந்தபடியே நடப்பது கண்டு அதிர்ச்சியாகத் தான் இருந்தது. இருந்தாலும் அம்மாளிடம் பேசி எப்படியாவது சத்யனோடு போவதை நிறுத்தி விடலாம் என்ற நம்பிக்கையும் துளிர்த்தது.

''அம்மா...''

''சொல் மதுரா...''

''எனக்கு உங்களை, அன்பு இல்லத்தை விட்டு பிரிந்திருப்பது... நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று அதனால்...'' மதுரா மெல்ல தயங்கியவள், ''புரிந்து கொள்ளுங்கள் அம்மா, நான் பேசாமல்

இங்கே இப்படியே இருந்து விடுகிறேன்?'' கெஞ்சும் குரலில் மதுரா கேட்டாள்.

பேரார்வத்துடன் பெரும் பிரயாசையாய் ரங்கமணி அம்மாளைப் பார்த்தாள். ரங்கமணி அம்மாளும் நெகிழ்ந்து போனவளாய் கண்கலங்க அவளை இறுக அணைத்துக் கொண்டாள்.

''புரிகிறது கண்மணி. எனக்கு மட்டும் உன்னைப் பிரிந்து இருக்க முடியுமா என்ன?''

ஒருகணம் உணர்ச்சிப் பிரவாகத்தில் தத்தளித்த ரங்கமணி அம்மாள் துளிர்த்த நீர்த்துளிகளை துடைத்துவிட்டு,

''ஆனாலும் நம் சூழ்நிலை இப்படியெல்லாம் செய்யத் தோன்றுகிறதம்மா...'' என்று பெருமூச்சு விட்டாள்.

''சூழ்நிலையா என்ன சொல்கிறீர்கள் அம்மா?''

''ஆமாம் மதுரா. நாளுக்கு நாள் ஏறி வரும் விலைவாசியில் நமது அன்பு இல்லத்திற்கு தேவையான பொருளாதார தேவைகளும் அதிகரித்துக் கொண்டே போகிறது. நமக்கு வரும் நன்கொடைகளையும், ஸ்பான்ஸர்களையும் வைத்து இல்லத்தைப் பராமரிப்பது சிரமமான விஷயமாகிறது. இந்நிலையில்....''

''சொல்லுங்கள் அம்மா...''

''நம் இல்லத்திற்கு நன்கொடைகளும் பெரும் உதவிகளும் செய்து வருபவர் சத்யனின் தந்தை குருநாதர்.

அவர் மனம் வருந்தும்படி நாம் கொஞ்சமும் நடந்து கொள்ளக்கூடாது என்றே தோன்றுகிறதம்மா... மேலும்...''

திகைப்புடன் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மதுராவை ஒருகணம் நோக்கிவிட்டு ரங்கமணி அம்மாள் தொடர்ந்தாள்.

"இம்முறை பெரியவரே நேராய் நம் இல்லத்திற்கு வந்து அவரது பெரும் உரத் தொழிற்சாலை நிர்வாகப் பிரிவிற்கு நம்பிக்கையான திறமையான ஆள் தேவை. நமது அன்பு இல்லத்திலிருந்து நீங்கள்தான் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அதனால் நீயே யோசித்துப் பார். நமது அன்பு இல்ல வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கும் அவரது விருப்பத்தை நாம் புறக்கணிக்கலாமா? அதனால்தான் வேறு வழியில்லாமால்...?"

சொல்லிய ரங்கமணி அம்மாள் மதுராவின் குழப்பமான முகத்தைப் பார்த்ததும் பேச்சை டக்கென நிறுத்தினாள். பக்கத்தில் போய் பரிவுடன் அவள் தலையைக் கோதினாள்.

"என்ன மதுரா, இதில் உனக்கு விருப்பமில்லையா?"

மதுராவிற்கு ஒருகணம் என்ன சொல்வதென்று தெரியவில்லை. ரங்கமணி அம்மாள் சொல்லும் அன்பு இல்லச் சூழ்நிலை புரிந்தது. மறுபுறம் தன்னை தலைமுடியை பிடித்து இழுத்துச் சென்று விடுவேன் என திமிராய் சவால் விட்ட சத்யனின் முகம் தோன்றி வர்ட்டியது.

முடிவு எடுக்க முடியாமல் மதுரா ஒரு கணம் திணறினாள். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, "அப்படியெல்லாம் ஒன்று மில்லையம்மா. எனக்கு விருப்பமிருக்கிறது..." என்றாள் ஒப்புக்கு.

ரங்கமணி அம்மாள் அதை வேறுவிதமாக புரிந்து கொண்டாள்.

"எனக்குப் புரிகிறது கண்மணி, எங்களோடு இவ்வளவு காலம் இருந்து விட்டு திடீரென புதுச்சூழ்நிலையில் கொண்டு போய் விட்டால் எப்படியிருக்குமோ... என அஞ்சுகிறாய். அப்படித் தானே? ஆனால் நீ கொஞ்சமும் கவலைப்படத் தேவையில்லை. அவர்கள் ரொம்பவும் நல்லவர்கள். உன்னை தங்கள் வீட்டு பெண் போல் பார்த்துக் கொள்வார்கள்..."

ரங்கமணி அம்மாள் விடவில்லை. என்னென்னவோ சொன்னாள். அவள் மனதை மாற்ற எல்லாவித முயற்சிகளையும் செய்தாள். மதுராவிற்கும் புரியத்தான் செய்தது. மதுராவிற்கு வேறு வழியில்லை. விதியும் இல்லை.

கடைசியில் பலியாடு போல தலையாட்டினாள். அன்பு இல்லத்தை பிரிந்து மறுநாள் சத்யனுடன் செல்ல அரைமனதுடன் சம்மதித்தாள்.

4

மறுநாள் காலை விடிந்ததும் அன்பு இல்லத்தில் சத்யனின் குரல்தான் ஓய்யாரமாய் கேட்டது. 'கடன்காரன் காலையிலே வந்து விட்டானா...?' என்ற பதைப்புடன் தான் மதுரா எட்டிப் பார்த்தாள்.

அலுவலக ரூமில் ரங்கமணி அம்மாளுடன் உற்சாகமாய் சத்யன் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவனுக்கும் சந்தோஷம்தான். உற்சாகம்தான்... சந்தையில் மாட்டை விலைக்கு வாங்கிப் போவது போல் அல்லவா அவளை வாங்கிப் போகிறான்...?

ஆனால் மதுராவிற்கு...?

அவனுடன் போவதைக் காட்டிலும், பிறந்தது முதல் இவ்வளவு வருடம் வளர்ந்த அன்பு இல்லச் சூழ்நிலையை, தோழிமார்களை பிரிவது மதுராவிற்கு கவலையைக் கொடுத்தது. அவளைப் பொறுத்தவரை அவளது சொந்த பந்தங்கள் உடன் பிறப்புகள் அவர்கள்தானே! அவர்களை எல்லாம் பிரிந்து தனியான

சூழ்நிலையில் எப்படி இருக்கப் போகிறோம்... என வாடவும் செய்தாள்.

போதாக்குறைக்கு உயிர்த்தோழிகள் கலா, மைதிலி, புவனா எல்லோரும் ஓடிவந்து, அழாத குறையாய் அவளைக் கட்டிக் கொண்டனர். ''மதுரா எங்களையெல்லாம் மறந்துவிடமாடாயே?'' என அவர்கள் அங்கலாய்த்ததும் மதுராவிற்கு கலங்கத்தான் செய்தது.

''என்ன சொல்கிறீர்கள்? உங்களையெல்லாம் மறப்பதா? உங்களை ஒருபோதும் பிரியமாட்டேன். வாரம் ஒரு முறை உங்களை சந்திக்க கண்டிப்பாய் இங்கு வந்து விடுவேன்.. கவலைப்படாதீர்கள்..'' என மதுரா சமாதானப்படுத்தவும் செய்தாள்

மதுரா இப்படி சொல்லி முடித்ததும்தான் தாமதம் பின்னாலிருந்து ''வாரம் ஒருமுறையல்ல, வருடத்திற்கு ஒருமுறை...'' அவளை திருத்தியபடி கணீர்க்குரல் கேட்டது. துணுக்குற்று கோபம் பொங்க மதுரா திரும்பினாள்.

பின்னால் கர்ஜித்தபடி சத்யன்.

சத்யனைக் கண்டதும் மற்ற தோழிகள் பயமான மரியாதை கொண்டவர்களாய் விலகிவிட மதுரா மட்டும் தூண்டில் மீன் போல் மாட்டிக் கொண்டாள்.

சத்யன் கெக்கலிக்கும் பார்வையுடன் அவள் பக்கம் வந்தான்.

''நேற்று என்னமாய் சவடால் அடித்தாய்... பார்... இன்று குதி போட்டுக் கொண்டு கிளம்பிவிட்டாய்?'' என்றான் இகழ்ச்சியாக.

''நான் ஒன்றும் குதி போட்டுக் கிளம்பவில்லை....'' என்றாள் மதுராவும் ரோஷமாக.

''பின்?''

''மேடம் சொன்னார்கள் என்பதற்காக மட்டும் வருகிறேன்...'' சொன்னவள் சத்யனிடம் தொனித்த கம்பீரத்தையும் மிடுக்கையும் வியப்பாகவே பார்த்தாள். அவன் கண்களில் காந்தமும், உடம்பில் ஒருவித ஈர்ப்பும் இயல்பாய் ஓடுவது அவளை திகைக்க வைத்தது.

அவள் உணராமல், ''ஓஹோ...'' என்றான் சத்யன் அலட்சியமாய்.

மறுபடியும் சிலிர்த்தாள் மதுரா.

''ஆனால் ஒன்று நிச்சயம்...''

''என்ன?''

''எனக்குப் பிடிக்கவில்லை என்றால் உடன் அடுத்த நிமிடமே இங்கு திரும்பி வந்து விடுவேன்..''

மதுரா சொன்னதும் சத்யன் சிரிப்பை பெரிதாக்கினான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''அது நடக்காத காரியம்...''

''ஏன்?''

''உன்னை விட்டால்தானே?''

மதுரா முறைக்க சத்யன் சிரிப்பைக் கூட்டினான்.

''என்னிடம் வந்த பெண்கள் அவ்வளவு சுலபத்தில் தப்பித்ததாக சரித்திரம் கிடையாது...''

''அதையும் பார்த்து விடுவோம்...'' என்றாள் மதுரா விடாப்பிடியாக.

''ம்ம்... பார்த்து விடுவோம்...!'' மர்மச் சிரிப்பொலி மாறாமல் சத்யன் நகர்ந்தான்.

மதுராவிற்கு முதல் முறையாய் பயமான கிலி பரவியது.

'என்னிடம் வந்த பெண்கள் தப்பித்ததில்லை...' என்று சொன்னானே சரியான பெண் பித்தனாய் இருப்பானோ?

நகம் கடித்தபடி யோசித்தவளை மேற்கொண்டு யோசிக்க விடாதபடி ரங்கமணி அம்மாள் வந்து விட்டாள்.

''உன் உடைமைகள் எல்லாவற்றையும் பேக் செய்து விட்டாயா மதுரா?''

''ஆமாம் அம்மா...'' என்றபடி மதுரா தன் பெட்டிகளை காட்டினாள். கூடவே அவளுள் நப்பாசை துளிர்க்க ரங்கமணி அம்மாளை கெஞ்சலுடன் பார்த்தாள்.

''அம்மா...''

''சொல் மதுரா...''

''நான் கண்டிப்பாக போக வேண்டுமா? வேறு வழியே இல்லையா?''

கெஞ்சும் குரலில் கேட்ட மதுராவை ஒருகணம் திகைத்து நோக்கிய ரங்கமணி அம்மாள் அவள் தங்களையெல்லாம் விட்டுப் பிரிந்திருக்க மனம் கலங்குகிறாள் என்றே நினைத்தாள்.

''மதுரா, நீ எதற்கும் பயப்பட வேண்டாம்...''

ஆறுதலாய் அவள் பக்கத்தில் வந்து அணைத்தாள் ரங்கமணி அம்மாள்.

''மதுரா, நீ எத்தனை நாளைக்குத்தான் இந்த அன்பு இல்லத்திலே சிறைபட்டிருக்க முடியும்? உனக்கும் ஒரு நல்ல ஒளிமயமான எதிர்காலம் வேண்டாமா? அதற்குத்தான் இந்த ஏற்பாடு...!''

''ஒளிமயமான எதிர்காலமா? என்னம்மா சொல்கிறீர்கள்?'' மதுரா துணுக்குற்றுக் கேட்டாள். ரங்கமணி அம்மாளின் பேச்சு அவளுக்கு எதையோ உணர்த்துவது போல் இருந்தது.

ஆனால் மதுரா திகைத்துக் கேட்டதும் ரங்கமணி அம்மாள் சுதாரித்துக் கொண்டாள்.

''அது ஒன்றுமில்லை கண்மணி. எல்லோருடைய வாழ்க்கையிலும் திருப்பு முனையாக ஏதாவது ஒன்று நிகழும். அப்படி ஒன்று நிகழ்ந்தால் அதுவே அவர்களது பிரகாசமான எதிர்காலத்திற்கு வழிகாட்டியாய் அமையும். அதைத்தான் நான் சொல்ல வந்தேன்...'' என்று சமாளிக்கவும் செய்தாள்.

மதுராவிற்கு தோழிகள் முன்பு சொன்னது திடுமென ஞாபகத்திற்கு வந்தது.

'பெரியவர் அன்பு இல்லத்திலிருந்து வெறும் வேலைக்காக ஆளை தேர்ந்தெடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கும் பெண் பிடித்துவிட்டால் அவளையே தன் வீட்டு மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்பதும் அவரது திட்டம்...' தோழிகள் கூற்றுப்படி ரங்கமணி அம்மாள் சொன்ன ஒளிமயமான எதிர்காலம் இதுவாகத்தான் இருக்குமோ?

அப்படி வேலைக்குப் போய் சத்யனை மணந்து கொள்வதுதான் டர்னிங்பாயிண்ட்டாய் அவளது பிரகாசமான வாழ்க்கைக்கு வழிகாட்டுமா?

நிச்சயமாய் இராது. அந்த திமிர்க்காரனுக்கு கழுத்தை நீட்டுவதற்கு பதில் ஏதாவது ஒரு கழுதைக்கு கழுத்தை நீட்டலாம்.

'மேலும் யாரோ முடிவெடுத்து யாரோ தாலிகட்ட மதுரா ஒன்றும் தலையாட்டி பொம்மை இல்லை. அவளுக்கு மூளை என்று ஒன்று இருக்கிறது அதை வைத்து யோசிப்பாள், யோசித்து முடிவெடுப்பாள்...?'

மதுரா தனக்குத்தானே பேசியவள் கடைசி வாக்கியங்களை உரக்கவே உச்சரித்து விட்டாள்.

பக்கத்திலிருந்த ரங்கமணி அம்மாள் திடுக்கிட்டு உலுக்கி, 'என்ன யோசனை? என்ன முடிவு.. மதுரா?' என கேட்கவும்தான் அவளுக்கு உணர்வே வந்தது.

''அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா...'' என்று அவசரமாய் சமாளித்தாள்.

''சரி கிளம்பு மதுரா. சத்யன் உனக்காக காத்துக் கொண்டிருக்கிறார்...''

ரங்கமணி அம்மாள் மதுராவை துரிதப்படுத்தியதோடு அவள் கிளம்புவதற்காக ஒத்தாசைகளையும் செய்தாள்.

ஆயிற்று. ஒருவழியாய் மதுரா ரங்கமணி அம்மாளிடம் தோழிகளிடம் கண்ணீர் மல்க விடைபெற்று சத்யனுடன் கிளம்பினாள். சத்யன் தனது பளபள காரில் அவளை ஏற்றிக் கொண்டான். கார் கிளம்பியது.

கார் அன்பு இல்ல காம்பௌவுண்டை விட்டு வெளியேறி முன்னேற... திரும்பித் திரும்பி அன்பு இல்லத்தை பார்த்த மதுரா வின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர் பெருகி வழிந்தது.

... அதை உற்றுக் கவனித்த சத்யன்; ''அடடா, என்ன ஒரு நடிப்பு!'' என்றான் அலட்சியமாக.

5

சத்யனின் கிண்டல் குரல் கேட்டதும் தான் மதுராவிற்கு சுருக்கென்றது. இப்படி ஒரு திமிர்க்காரனுடன் பயணம் செய் கிறோம் என்ற உணர்வே வந்தது.

என்ன சொல்கிறான்... நடிப்பா? இவ்வளவு வருடம் பிறந்து வளர்ந்து

அவள் உயிரோடு கலந்து விட்ட அன்பு இல்லத்தை, அவள் துயரத்தோடு பிரிய முடியாமல் பிரிந்து வருவது அவனுக்கு நடிப்பாகத் தெரிகிறதா?

கோபம் பொங்கியவளாய் அவன் பக்கம் திரும்பினாள்.

''உணர்வற்ற மரக்கட்டைகளுக்கு உணர்ச்சிகளில் தவிப்பது நடிப்பாய்த்தான் தெரியும்...'' என்றாள் ஆக்ரோஷமாக.

''ஆமாம், நான் மரக்கட்டைதான்...'' என்றபடி கைகளை விரித்து சத்யன் சிரித்தான். ''மரக்கட்டைகள் ஒருபோதும் கண்களை கசக்குவதில்லை, பிழியப்பிழிய அழுவதில்லை...''

மறுபடி தான் அழுததை அவன் கிண்டலடிப்பது கண்டு மதுரா அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''கர்ச்சீப் வேண்டுமா?''

அவசரமாய் பாக்கெட்டுக்குள்ளிருந்து கர்ச்சீப் எடுத்து கரிசனமாய் நீட்டினான்.

மதுரா முறைக்கவும் சிரித்தபடி உள்ளே வைத்தவன் ''அட இப்போதுதான் உன் முகம் பளிச்சென பிரகாசமாக இருக்கிறது....'' என்றான் சிரிப்பு மாறாமல்.

மதுராவிற்கு அவனிடம் பேச்சைக் கொடுத்தால் வம்பு என்று தோன்றியது. பேசாமல் காரின் வெளியே பராக்கு பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

அவள் மனநிலையை சத்யன் புரிந்து கொண்டானோ என்னவோ அவனும் ஒன்றும் பேசாமல் காரை செலுத்தினான்.

கொஞ்ச நேரம் சென்றிருக்கும்.

மதுரா ஞாபகம் வந்தவளாய் திரும்பி, ''இன்னும் எவ்வளவு நேரமிருக்கிறது?'' என்றாள்.

சத்யன் கடிகாரத்தைப் பார்த்தவன். ''எண்பது கிலோ மீட்டர்கள் ஏறக்குறைய இரண்டு மணி நேரம் ஆகலாம்...'' என்றான் அதே தொனியில்.

''ஆனால்... வழியெல்லாம் மனித நடமாட்டமில்லாத காட்டுப் பகுதியாய் அல்லவா தெரிகிறது?'' என்றாள் தன் வியப்பைக் காட்டியபடி.

''ஆமாம்... காட்டுப்பகுதிதான். முட்கள், புதர்கள், காட்டுச் செடிகள் என வழி நெடுக அவைகள்தான். வழியில் சின்ன ஊரோ, கிராமமோ கூட கிடையாது....''

சத்யன் சொன்னதோடு நிறுத்தாமல் அவளை உற்றுப் பார்த்தான்.

''உனக்கு பயமாக இருக்கிறதா?''

''என்ன பயம்?''

மதுரா தோள்களை குலுக்கிக் கொண்டாள்.

சத்யனின் இதழ்களில் குறுஞ்சிரிப்பு அரும்பி விரைந்தோடியது.

''தனிமையான இடம் காட்டுப்பகுதி. உன்னை நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.''

''ஓஹோ...'' என்றபடி திரும்பி சத்யனைப் பார்த்தவள் தெரிந்த அவனது பளபளப்பான சிகையில் தனது விரல்களை அலைய ஆசைப்படுவதைக் கண்டு தனக்குத்தானே அதிர்ந்தாள்.

''என்ன ஓஹோ?''

''நான் ஒன்றும் பயந்தவள் அல்ல. என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்குத் தெரியும்...''

''அப்படியா?''

சத்யனின் குரல் ஏளனமாய் ஒலிக்கவும், ''கராத்தே ஓரளவு பயின்றிருக்கிறேன். கைப்பையில் சிறிய பேனாக் கத்தி இருக்கிறது. தேவைப்பட்டால் அதற்கு வேலை கொடுத்து விடுவேன்..'' என்றாள் மதுரா வெடுக்கென்று.

''அட...!''

சத்யன் தோள்களை குலுக்கி பெரும் வியப்பு காட்டினான்.

''ஆமாம்.... உன் பெயர் என்ன சொன்னாய்?''

''அதற்குள் மறந்து விட்டதா? என்ன ஒரு ஞாபக சக்தி...''

மதுரா இகழ்ச்சியாய் சொன்னதைச் சொல்வதைக் கூட சத்யன் வெகுவாய் ரசித்தான்.

''மோசமான ஞாபக சக்திதான்...! ம்ம்... சொல். உன் பெயரென்ன?

''மதுரா...''

தெளிவாய் நிதானமாய் அவள் உச்சரித்து முடித்தும் சத்யனும் திரும்ப, 'ம...து..ரா...' என உச்சரித்துப் பார்த்தான்.

''மதுரா..மது... அழகான பெயர்.. கிக்கான போதை. எனக்கு ரொம்பவும் பிடித்தமான விஷயம்...''

அவன் சொன்னதின் அர்த்தம் மதுராவிற்கு உரைத்தது.

''ஓ... அந்த பழக்கம் வேறு உண்டா?'' என்றாள்.

''உண்டு. சிகரெட், மது எனக்கு தினமும் வேண்டும். அது இல்லாமல் என்னால் ஒருநாள் கூட இருக்க முடியாது.'' அவன் பெரும் ஜம்பமடித்து சொல்ல மதுராவுக்கு வந்ததே கோபம்.

''எல்லாம் பணத்திமிர்..!'' என்றாள் ஆவேசமாக.

''ஆமாம் பணத்திமிர்தான். கொழுப்புதான்! இல்லாவிட்டால் அன்பு இல்லத்திலிருந்து உன்னை அடிமையாய் இப்படி வாங்கிச் செல்வேனா...?''

''நான் ஒன்றும் உங்கள் அடிமையில்லை...'' என்றாள் மதுரா இகழ்ச்சியாக.

சத்யன் பதில் சொல்லாமல் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''நீ அடிமைதான். உனக்கு விலங்கு கையில் பூட்டப் போவதில்லை. கழுத்தில் தாலி என்ற பெயரில் பூட்டப் போகிறேன்..!''

''அப்படி நீங்கள் செய்தால் என் கை ஒன்றும் பூப்பறித்துக் கொண்டிருக்காது...''

''பின் என்ன செய்யுமாம்?''

''கொலையே செய்யும்...!'' மதுரா தன் பிஞ்சு விரல்களை அனைத்தும் விரித்துக் காட்டினாள்.

''கொலையா? இந்தக் கைகளா? அதுவும் என்னையா?'' என்றபடி சத்யன் வெடுக்கென அவளது விரல்களை பிடித்தான். சர்வ சாதாரணமாய் தன் இடக்கை விரல்களோடு இறுக்கி பிணைத்துக் கொண்டான். திடுமென ஏற்பட்ட அவனது ஸ்பரிசம் மதுராவின் உடல் முழுவதும் அதிர்வாய் பரவியது.

மூளை அவசரமாய் கட்டளையிட்டும் சத்யனின் கை பிணைப்பை விலக்க மனமில்லாமல் ஒரு கணம் மெய் மறந்து விட்டாள் மதுரா.

6

மதுராவிற்கு ஒருகணம் உணர்வே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

உணர்வு வந்தபோது கார் சாலை ஓரமாய் நின்றிருப்பதும் சத்யன் குறுஞ் சிரிப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதும் புரிந்தது. இன்னமும் மதுராவின் விரல்கள் சத்யனின் பிணைப் பிலிருந்து விடுபடவில்லை. சத்யன் விடுவிக்கவும் இல்லை.

என்ன இது... காதலன் போல் கை கோர்த்துக் கொண்டு...? முழு நினைவு வந்த மதுரா கையை வெடுக்கென பிடுங்கிக் கொண்டாள். தன் நிலை மறந்து விட்ட அவமானமும் கோபமுமாய் வெகுண்டு அவனைப் பார்த்தாள்.

''ஏன் காரை நிறுத்திவிட்டீர்கள்?''

சத்யன் சிரித்தான்.

''நான் தொட்டதும் உனக்கு ஷாக் அடித்தது. நீ ஒரு மாதிரியாய் ஆகிவிட்டாய். அதான் நிறுத்திவிட்டேன்..''

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..''

அவசரமாய் சொன்னாலும் மதுராவை அவன் கண்டுபிடித்து விட்டான் என்ற அவமான உணர்வு பிடுங்கித் தின்றது. எதனால் அப்படி நிகழ்ந்தது? முதல் முறையாக அவளது கையில் ஒரு ஆணின் ஸ்பரிசம் பட்டதாலா? இல்லை சத்யனைப் பற்றி அவளையறியாமல் அவளுள் ஏற்பட்ட 'உணர்வுகளாலா'?

'அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...' என்று தனக்குத்தானே அவசரமாய் சொல்லிக் கொண்டவள், ''முதலில் காரை எடுங்கள்...'' என்றாள் கோபமாக.

''எடுக்க மாட்டேன்...''

சத்யன் அடம்பிடித்தது மதுராவை எரிச்சல்படுத்தியது.

''இப்போது எடுக்கப் போகிறீர்களா... இல்லையா?'' மதுரா மிரட்டினாள்.

''முதலில் ஒன்றைப் புரிந்து கொள். காரை உனக்காக நிறுத்தவில்லை...'' என்றான் சத்யன் புதிரை விடுவிப்பது போல்.

''பின் எதற்காக?''

சத்யன் அமைதியாய் காரின் சீதோஷ்ண மீட்டரைக் காட்டினான். ''அதன் முட்களைப் பார். நடுப்பகுதியைத் தாண்டிவிட்டது. அப்படியென்றால் காரின் எஞ்சின் சூடாகி விட்டது என்று அர்த்தம்...''

''அப்படியானால் காரை எடுக்க முடியாதா?''

''எடுக்க முடியும் சிறிது நேரம் எஞ்சினுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். ஓய்வு கொடுத்தால் உஷ்ணம் குறைந்து எஞ்சின் சரியாகிவிடும்.... காரை எடுத்து விடலாம்...''

சொல்லியபடி சத்யன் கார் கதவை திறந்து வெளியே இறங்கினான். மதுராவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இறங்கவா... வேண்டாமா? என்று ஒரு கணம் யோசித்தாள்.

பின்... என்ன தயக்கம்? என்பது போல் விருட்டென அவளும் இறங்கினாள்.

சாலையின் இருபுறமும் பெரிய பெரிய மரங்கள் இடைவெளியின்றி சூழ்ந்திருக்க, அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் இருப்பது போன்ற உணர்வையே ஏற்படுத்தியது. விநோதமான பறவைகளின் ஒலிகளும், வண்டுகளின் ரீங்காரமும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது.

அதையெல்லாம் ரசித்துப் பார்த்தபடி சத்யனை நோக்கி திரும்பிய மதுரா துணுக்குற்றாள். அவள் இயற்கையை ரசித்தது போல் சத்யன் அவளை மேலிருந்து கீழ்வரை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மதுராவிற்கு சினம் எகிறிற்று. இங்கு என்ன பார்வை? என்பது போல் முறைத்தாள்.

அவளை ரசித்துப் பார்த்த சத்யன் சிரித்தான். ''நிஜமாகவே நீ அழகிதான்...! பேரழகி!'' தேன் தடவிய குரலில் முணுமுணுத்தான்.

மதுராவிற்கு ஜிவ்வென பறப்பது போல் இருந்தது. அவன் சொன்ன 'பேரழகி' வார்த்தை உடம்பில் இனிமையாய் புகுந்து அவளை ஒரு ஆட்டு ஆட்டியது. ஆனாலும் மற்றொரு மனம் சிலிர்த்துக் கொண்டது.

இவன் என்ன ரசிப்பது? இவன் என்ன சொல்வது? என்பது போல் மேலும் அவள் முறைக்கவும் சத்யன் பார்வையை திருப்பியவன் எதிரே சற்றுத் தள்ளி மரங்களுக்கிடையே தெரிந்த புராதானக் கோவிலைக் காட்டினான்.

''அதோ தெரிகிறது பார், புராதானக் கோவில் ஒன்று. பல நூறு ஆண்டுகளுக்கு முந்தையது. பல அற்புதமான சிற்பங்கள் அதில் இருக்கின்றன. வா பார்த்து வரலாம்....''

சொல்லிவிட்டு சத்யன் முன்பு நடந்தான்.

மதுராவிற்கு ஒன்றும் தோன்றவில்லை. அப்படி என்ன இருக்கப் போகிறது... என்றுதான் பின் தொடர்ந்தாள்.

இருவரும் ஒற்றையடிப் பாதை வழியாக நடந்து கோவிலை அடைந்தபோது சத்யன் சொன்னது எவ்வளவு உண்மை என்பது புரிந்து கொண்டாள். கோவில் முழுக்க நுண்ணிய வேலைபாடு

களுடன் பலவித அழகான சிற்பங்கள். தூண்களில் விதவிதமான சிலை வடிவங்கள்.

ஒருகணம் அவைகளின் கலைத்தன்மையை மெய்மறந்து பார்த்த மதுரா, ''எவ்வளவு அழகாக இருக்கிறது? இங்கு அடிக்கடி வந்திருக்கிறீர்களா? '' என்றாள்.

சத்யன் அவளுக்கு முன்பாக நடந்து பெரிய பாறை ஒன்றில் செதுக்கியிருந்த பழைய தமிழ் எழுத்துக்களை பார்த்துக் கொண்டிருந்தவன், ''வந்திருக்கிறேன். எனக்கு சிற்பக்கலையில் நாட்டம் உண்டு. மேலும் சங்ககாலத் தமிழ் பற்றி ஆராய்ச்சி ஒன்றும் செய்து கொண்டிருக்கிறேன்...'' என்றான் அவளை அதிர வைத்தவாறு.

மதுரா திகைத்துத்தான் போனாள்.

'சங்கத் தமிழ் ஆராய்ச்சியா? என்ன சொல்கிறான்? பேசுவது சத்யன்தானா?' என்பது போல் வியப்புடன் அவனைப் பார்க்க... பக்கத்தில் வரும்படி சைகை செய்தான் சத்யன்.

''பார்... அந்தக் கால தமிழ் கல்வெட்டுக்கள்... இதில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?''

''என்ன எழுதியிருக்கிறது?''

''பொறிமயில் ஆலின பொங்கர் எழிலி, சிறுதுவலை சிந்தின...'' என்ற சங்கப்பாடலை இதில் எழுதியிருக்கிறார்கள்...''

''அப்படியானால்?''

மதுராவின் அழகிய நெற்றி புரியாமல் சுருங்குவதை கவனித்த சத்யன், ''இரு அர்த்தம் சொல்கிறேன். 'மயில்கள் ஆடின. அடர்ந்த சோலையில் மேகங்கள் சிறு நீர்த்துளிகளை சிந்தின. முல்லைப் பூக்கள் அரும்பின. தலைவன் வரும் கார்காலம் இது என தலைவி புரிந்து கொள்கிறாள்...''

''...''

''மதுரா, இந்த சங்கப்பாடல்களில் தலைவன் தலைவி காதலைப் பற்றி அவர்கள் கொள்ளும் ஊடலைப் பற்றி எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? அது என்னை ரொம்பவும் கவர்ந்து விட்டது. அதனால் அது பற்றி உடன் புத்தகங்களை வாங்கி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிட்டேன்...''

''நல்ல ஆராய்ச்சிதான்...''

மதுரா இகழ்ச்சியாய் சொல்ல.... பதிலுக்கு சத்யன் அடக்க முடியாத சிரிப்பு சிரித்தான்.

''என்ன ஒரு சிரிப்பு! பார்த்து... முகம் வெடித்துவிடப் போகிறது?''

மதுரா மறுபடியும் கிண்டல் தொனியில் சொல்ல சத்யன் அதை பொருட்படுத்தாது நேருக்குநேராய் அவளைப் பார்த்தான்.

''மதுரா, என்னுடைய தலைவன் தலைவி காதல் பற்றிய ஆராய்ச்சி உன் விஷயத்தில் எனக்கு ரொம்பவும் உபயோகமாக இருக்கிறது...''

''என் விஷயத்திலா?''

மதுரா துணுக்குற்றுப் பார்க்க.. சத்யன் மெல்ல புதிர் விடுவித்தான்.

''உன் உள்மனதில் என்னைப் பற்றி என்ன ஓடுகிறதென்று தெரியும்...''

''என்ன ஓடுகிறது?''

''வேறென்ன? என்னுடைய நினைவு. என்னுடைய முகம். என்னை பற்றிய கனவு...!''

''மண்ணாங்கட்டி...!''

சொல்லியபடி பற்களைக் கடித்தாள் மதுரா. என்ன ஒரு கர்வம்! என்ன ஒரு அகம்பாவம்? இவனை கண்டு தலையை விரித்துப் போடாத குறையாய் நான் நிற்கிறேனாக்கும்!

''மண்ணாங்கட்டிதான்! அழகான மண்ணாங்கட்டி!'' சத்யன் அவளது பாணியிலே விளக்கம் கொடுத்தான்.

''ஊர் உலகத்தில் பார்க்காத ஆண் நீங்கள் அதான் சொல்லி விட்டேன் சொக்கி!''

அதற்கு மேல் மதுரா அங்கு நிற்கவில்லை. விடுவிடுவென காரை நோக்கி நடந்தாள்.

''கண்டுபிடித்து விட்டேன் என்றதும் வேகத்தைப் பார்!''

சிரிப்பு மாறாமல் முணுமுணுத்தபடி சத்யன் பின் தொடர்ந்தான்.

மதுரா பேசாமல் காரிலேறி உட்கார்ந்து கொண்டாள்.

சத்யனும் ஒன்றும் பேசாமல் காரில் ஏறி ஸ்டார்ட் செய்தான்.

கொஞ்சதூரம் சென்றதும் சத்யன் ஏதோ நினைத்தவனாய் அவள் பக்கம் திரும்பினான்.

''உன்னைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?''

''என்னைப் பற்றியா?'' மதுரா துணுக்குற்றுப் பார்த்தவள் நெற்றியைச் சுருக்கினாள்.

''ஆம் உன் பெற்றோர் பற்றி .. உன் பூர்வீகம் பற்றி...?'' சத்யனின் குரல் தயக்கமாய் ஒலிக்க கடகடவென சிரித்தாள் மதுரா.

''என்னைப் பற்றி சொல்ல ஒன்றும் இல்லை... நான் ஓர் அனாதை. பெற்றோர் யார் என்று தெரியாமலே அன்பு இல்லத்தில் வளர்ந்துவிட்ட அனாதை அவ்வளவுதான்!''

''ஐ...ஆம்...ஸாரி...''

முதல் முறையாய் அவனது முகத்தில் கனிவும் இரக்கமும் படுவதை மதுரா கவனித்தாள். ஆனால் அவளுக்காக யாரும் இரக்கம் கொள்வது அவளுக்குப் பிடிக்காத விஷயமாயிற்றே! சட்டென அவனைப் பார்த்தவள். ''இதில் வருத்தம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. பெற்றவர்களை மதிக்காத இந்த காலத்து பிள்ளைகளை விட நாங்கள் அனாதைகள் எவ்வளவோ மேல். மேலும் எங்கள் மேடம் ரங்கமணி அம்மாள் காட்டிய அன்பிற்கு எதுவும் ஈடாகாது... அதனால் நாங்கள் சந்தோஷமாகத்தான் வளர்ந்தோம்...''

அவள் பேச்சிற்கு ஆமோதிப்பவனாய் தலையாட்டினான் சத்யன்.

மதுராவிற்கும் திடும்மென ஞாபகம் வந்தது.

''ஆமாம் உங்களைப் பற்றி... உங்கள் குடும்பம் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?'' என்றாள்.

''நானா...? நான் சரியான மரக்கட்டை!'' என்றான் சத்யன் கொஞ்சமும் சிரிப்பு மாறாமல்.

7

சத்யன் மரக்கட்டை என்றதும் மதுரா தன்னையறியாமல் சிரிக்கத்தான் செய்தாள். அதற்குள் கார் சத்யனின் ஊரை அடைந்திருந்தது.

'அழகுநகர்' ஊர் சிறியதாய் இருந்தாலும் நகரம் போல் அதிக வளர்ச்சியடைந்திருந்தது. ஊரின் நடுநாயகமாக

சத்யனின் அலுவலகமும், தொழிற்சாலையும் சுற்றிலும் குவார்ட்டர்ஸ் வீடுகள். பச்சை வயல்கள், பெரிய பெரிய ஆலமரங்கள், நீண்ட அழகான புல்வெளிகள் ஓடியாடிப் பறக்கும் வெண்ணிறப் பறவைகள். பின்னணியில் நீலமான வானம்.... என பார்க்கும் காட்சிகள் எல்லாம் ரம்மியமாய் மதுராவுக்கு ரொம்பவும் பிடித்துப் போனது.

சத்யன் காரை நேராக தன் பங்களாவை நோக்கியே ஓட்டினான். அவன் முகத்தில் அசாத்திய சுறுசுறுப்பு வந்து ஒட்டிக் கொண்டது.

"மதுரா, இன்று முழுவதும் என் வீட்டில், என் குடும்பத்தாரோடு தான் நீ தங்குகிறாய். நாளை முதல்தான் உனக்கு குவார்ட்டர்ஸ் வாசம்..."

மதுரா அவன் சொல்வதைக் கேட்டு சங்கடமாய் நெளிந்தவள், "எதற்கு வீண் சிரமம்..." என முணுமுணுத்தாள்.

"இது பெரியவரின் உத்தரவு..." என சொல்லி அவளது வாயை அடைத்தான் சத்யன்.

சத்யனின் பங்களா தொழிற்சாலைக்கு வலது கோடியில் பல ஏக்கர் பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தது. நடுவில் பங்களா. சுற்றிலும் அடர்ந்த சோலை போல் மரங்கள். விதவிதமான மலர்ச்செடிகள். புல்வெளித் தோட்டங்கள். சத்யனின் தந்தை நல்ல ரசனை உள்ளவர் போலும்... என மதுரா வியக்க... அவளை மேலும் மேலும் வியக்க வைத்தவாறு... பங்களா வாசலிலே அவள் வருகைக்காக காத்திருந்தார் குருநாதர்.

பெரியவர் என சொல்லப்படும் சத்யனின் தந்தை குருநாதரை அவள் பலமுறை அன்பு இல்லத்தில் பார்த்திருக்கிறாள். பேசியிருக்கிறாள். எப்போதும் அவர் முகத்தில் ஓடும் கனிவும் அன்பும் அவளை வியக்க வைத்திருக்கிறது.

பெரிய கோடீஸ்வரராய் இருந்தாலும் கொஞ்சமும் பண கர்வம் இல்லாமல் எல்லோரையும் மதித்து பேசும் அவரது பண்பு, அன்பு இல்லத்து மேல் அவர் காட்டும் அதீத அக்கறை எல்லாம் மதுராவிற்கு குருநாதர் மேல் உள்ள மரியாதையை ரொம்பவும் கூட்டியிருந்தது.

தன்னை வீட்டிற்கு வரவேற்க அவர் வாசலிலே காத்திருப்பது கண்டு ஒருகணம் மெய்சிலிர்த்துதான் போனாள் மதுரா. கைகூப்பி வணக்கம் சொல்லியபடி இறங்கிய மதுராவை முகம் மலர வரவேற்றார் குருநாதர்.

"வாம்மா... சத்யன் எல்லாவற்றையும் சொன்னான். நிஜமாகவே நீ லக்ஷ்மிகரமாய் மகாலக்ஷ்மி மாதிரிதான் இருக்கிறாய்... வா....வா...!"

வாய் நிறைய குருநாதர் சொல்ல... மதுரா ஒருகணம் துணுக்குற்று சத்யனைப் பார்த்தாள். என்ன தான் லக்ஷ்மிகரமாய் இருப்பதாய் சத்யன் சொன்னானா? என்பது போல் திரும்பி அவனைப் பார்த்தாள்.

சத்யனோ தந்தை முன் பயப்படும் பிள்ளையாய் பவ்யமாக நடமாடிக் கொண்டிருந்தான். என்ன ஒரு நடிப்பு! வியந்தபடி மதுரா நுழைந்தாள்.

சத்யனின் பங்களா அவள் நினைத்திருந்ததை விட பெரிதாகத் தான் இருந்தது. பெரிய பெரிய அறைகள், விசாலமான ஜன்னல்கள், விதவிதமான அலங்காரப் பொருட்கள், விளக்குகள், என நிறைந்திருக்க... எல்லாவற்றையும் பிரமிப்புடன் பார்த்தபடி மதுரா நடந்தாள்.

குருநாதர் அவளை உள்ளே அழைத்துச் சென்று சோபாவில் உட்காரச் சொன்னார்.

பணியாளிடம் சைகை செய்ய... அவன் தயாராய் உள்ளிருந்து பழச்சாறு எடுத்து வந்து மதுராவிடம் நீட்டினான். தயக்கமாய் குருநாதரை பார்த்தாள் மதுரா.

''களைப்பு நீங்க... குடித்துக் கொள்ளம்மா...''

மதுரா பழச்சாறை வாங்கிக் கொண்டாள். சத்யனை அதற்குள் காணவில்லை. விறுவிறுவென உள்ளுமிற்கு சென்று விட்டானோ போலும்!

சுற்றிலும் தன் பார்வையை ஓட்டிய மதுராவின் மனதில் திடுமென சந்தேகம் துளிர்த்தது. சத்யனும் குருநாதரையும் தவிர அந்த வீட்டில் வேறு யாரும் இருப்பது போல் தெரியவில்லையே!

மதுராவின் துணுக்கு பார்வையை வைத்தே அவளது நினைப்பை குருநாதர் கண்டுபிடித்துவிட்டார். ''இருக்கிறார்கள். எனது மனைவி மங்களமும் சுட்டிப்பெண் வசுதாவும் கோயில் பூஜைக்கு சென்றிருக்கிறார்கள். இப்போது வந்து விடுவார்கள்!'' என்றார் அவள் புதிரை நீக்குவது போல்.

கொஞ்ச நேரத்தில் அவர் சொன்னது போலவே மனைவியும் மகளும் வந்துவிட மதுராவை அவர்களுக்கு குருநாதர் அறிமுகப் படுத்தி வைத்தார். அவர்களுடைய அன்பிலும் உபசரிப்பிலும் மனமகிழ்ந்து ஒருகணம் திணறித்தான் போனாள் மதுரா.

8

மறுநாள் தனக்காக ஒதுக்கப்பட்ட ஹாஸ்டல் ரூமிலிருந்து சீக்கிரமாக விழித்து சீக்கிரமாகவே கிளம்பிவிட்டாள் மதுரா. 'குருநாதர் குரூப்ஸ் இன்டஸ்ட்ரியல் அண்ட் எக்ஸ்போர்ட் யூனிட்' என்ற எழுத்துக்கள் மின்ன இருந்த பிரம்மாண்ட கட்டிடத்திற்குள் நுழைந்தாள்.

ரிசப்ஷனில் அவள் பெயரைச் சொன்னதும் ஆவலாய் வந்து இன்முகமாய் வரவேற்றாள் அந்த நடுத்தரப்பெண். ''நீ...நீ... மதுராதானே? முதலாளி எல்லாவற்றையும் நேற்றே சொல்லி விட்டார். வா... உனக்கு வேலை தயாராயிருக்கிறது..'' என்றவளை மதுரா வியப்பாய் பார்த்தாள்.

''என்ன பார்க்கிறாய்? நான் கவிதா, லேபர் அசோசியேஷன் செகரட்டரி...'' என்று தன்னையும் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அதற்குப் பின் கவிதா மதுராவிற்கு கம்பெனி பற்றிய எல்லா விவரங்களையும் விலக்கினாள்.

''நம் கம்பெனி மூன்று யூனிட்களாக, பிரிவுகளாக இயங்குகிறது. முதல் பிரிவு கைவினைப் பொருட்கள் உற்பத்திப் பிரிவு. பல குடிசைத்தொழில் கலைஞர்களின் நெடுநேர உழைப்பில் உருவான கலைநயமிக்க வேலைப்பாடுகளை வாங்கி சேகரித்து அப்படியே வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம். மற்றொரு பிரிவு நாமே வேலையாட்களை, பணி நிபுணர்களைக் கொண்டு விதவிதமான ரெடிமேடு துணிகளை உற்பத்தி செய்யும். பிரிவு. இப்பிரிவில் கவுன்கள், சிறுவர் சிறுமியருக்கான சட்டைகள் என பலதரப்பட்ட ரெடிமேட் பொருட்களை உருவாக்குகிறோம். மூன்றாவது முழுக்க முழுக்க ஏற்றுமதிப் பிரிவு. வியாபாரிகள் தாங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொடுக்கிறோம்... ஆக இப்படி மூன்று யூனிட்களாக செயல்படுகிறது நம் கம்பெனி...''

கவிதா மூச்சு விடாமல் சொல்லி முடித்தவள் மதுரா வியப்புடன் விழிப்பதை அலுவலகத்தை கண்டு மிரண்டு விட்டாள் என எண்ணித் கொண்டவள், ''எதையும் பார்த்து மிரண்டு விடாதே. இதிலெல்லாம் உனக்கு எவ்வித சம்பந்தமும் இல்லை. உனது பிரிவு அக்கவுண்டிங் செக்ஷன்தான். அங்குதான் முதலாளி உனக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்கிறார். வா...!'' என்றபடி கவிதா

அழைத்துச் செல்ல முத்துப்பல் சிரிப்புடன் மதுரா அவளைப் பி... தொடர்ந்தாள்.

முன்னால் நடந்த கவிதா நடக்கும் மதுராவின் இயற்கையா... அழகை பிரமிப்பாய் பார்த்தாள். இருபது வயதிலும், பதினா... வயது கவர்ச்சியாய் அந்த முகம், நளினமான உடலமைப்பு, செக்... செவேல் என்று சொல்லும்படி நிறம், ஒருமுறை பார்த்தாலே அக... விடாதபடி சிறை போட்டிடும் அந்த படபடக்கும் மான் விழிகள்... நொடிக்கொருதரம் தவழ்ந்தோடும் அந்த முத்துப் பல் வரிசையி... அழகுப் புன்னகை, அந்த மதுராவின் அடக்கமான எளிமையா... இயற்கை அழகைக் கண்டு வியந்தவள் நிச்சயம் இவ... பேரழகிதான்... என முணுமுணுத்தும் கொண்டாள்.

பின் கவிதா அக்கவுண்டிங் செக்ஷனில் மதுராவுக்கு வேலை... யைச் சொல்லி அவளை இருக்கையில் உட்கார்த்தி வைத்தாள். மதுரா வேலையைக் கண்டு மலைக்கவில்லை. சுளுவாய்த்தா... இருந்தது.

வழக்கமான முன்பு படிப்பு முடிந்ததும் சில கம்பெனிகளில் தற்காலிகமாய் அவள் செய்த கணக்கு குமாஸ்தா வேலைதான். ஒவ்வொரு நாள் வரவு செலவு கணக்குகளை குறிப்பேட்டில் பதிவு செய்து, இறுதியில் அன்றைய கணக்குகளை 'டேலி' ஆகும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது என அவளுக்கு அத்துப்படியாகிப் போன சமாச்சாரங்கள்தான்.

காது மடல்கள் அதிர, தான் சொல்வதற்கு படபடவென அழகாக தலையாட்டியவளை கவிதா புதிராய்ப் பார்த்தாள். ''என்ன இதெல்லாம் உனக்குத் தெரிந்து போன விஷயங்கள்தானா?'' என்று கவிதா வியக்க, ''நான் ஒரு ஆடிட்டரிடம் கொஞ்ச நாள் உதவியாளராய் பணி புரிந்திருக்கிறேன்...'' என்று கூறி அவளை மேலும் மலைக்க வைத்தாள் மதுரா.

அன்று ஒருவாறு வேலை கற்றுக் கொள்வதில், அலுவலகத்தைப் பிரமிப்பாய் பார்ப்பதிலே மதுராவுக்கு பொழுது கழிந்துவிட்டது. வேலையும் அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

அவளது அக்கவுண்டிங் செக்ஷனில் கவிதாவும் இரண்டு பெண்களும்தான். அவர்களை விட கவிதாதான் அவளுடன் நன்கு பழகினாள். அடிக்கடி பேச்சுக் கொடுத்தாள். ஒருகணம் கவிதாவைப் பார்க்கையில் அவள் நன்றியுடன் நினைக்கும் சிறுவயதில் பாடம் சொல்லிக் கொடுத்த வேலம்மாள் டீச்சர் ஞாபகம்தான் மதுராவிற்கு வந்தது. அதேசாயல்... சுறுசுறுப்புடன் அவளது நடை உடை பாவனை இருந்தது. ஒரு கணம் பழைய பால்ய நினைவுகளில் மூழ்கிப் போனவள் சட்டென சுதாரித்து உணர்வுக்கு வந்தாள். வேலைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தாள்.

இரண்டு நாள் மதுராவுக்கு எவ்வித பிரச்சினையுமில்லாமல் கழிந்தது. அவளை விரட்டி குதிரையேறத் துடிக்கும் சத்யன் கூட வரவில்லை. எங்கே இந்த செக்ஷனிற்கு சத்யன் வரவே மாட்டானோ? என்ற தவிப்பு கூட அவளையறியாமல் எழுந்து விட்டது.

பொறுத்துப் பார்த்தவள் அடக்க முடியாமல் கவிதாவிடம் கேட்டே விட்டாள்.

''என்ன. நீ... எம்.டி. சத்யன் சாரைப் பற்றி கேட்கிறாயா? அவர் விஷயமே தனி!'' என்றாள்.

''தனி என்றால்...?'' மதுரா இழுத்தபடி பார்த்தாள்.

''ஆள்... பயங்கர சுறுசுறுப்பு, ஒரு இடத்தில் நிற்க மாட்டார். கடும் உழைப்பாளி....'' என்றவள் விடாது, ''அவரது முயற்சியால் மட்டும் கம்பெனிக்கு சென்ற வருடம் கூடுதலாய் ஐந்து கோடி லாபம் என்றால் பார்த்துக் கொள்ளேன்....!'' என்று கூறி மதுராவை வியக்கவும் வைத்தாள்.

மதுராவிற்கு ஒருகணம் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அவளை எள்ளி நகையாடி சீண்டாத குறையாய் பேசும் சத்யன் மறுபுறத்தி கடும் உழைப்பாளியாய் பெரும் சாம்ராஜ்யத்தை உருவாக்கு பவனா? என்று மலைக்கவும் செய்தாள்.

''அதோ... அந்த கண்ணாடி பளபளப்பில் இருக்கும் ஏ.சி அறைதான் சத்யன் சாருடையது. அவர் குஷன் ஸீட்டில் கம்பீரமாய உட்கார்ந்திருக்கும் அழகே அழகு...'' என்றெல்லாம் கவிதா சொல்லி மதுராவின் பரபரப்பை நிஜமாகவே அதிகமாக்கிவிட்டாள் மதுராவையும் சத்யனைப் பற்றிய நினைப்பிலே அன்று முழுவதும் ஆழ்ந்திருந்தாள்.

மதுரா அதே பரபரப்புடன் மீனுக்காக காத்திருக்கும் கொக்கு போல இருக்க கொங்கணராய் அவளைத் தேடி வந்தான் சத்யன். வந்தவன் ஸீட்டில் உட்கார்ந்ததும் முதல் வேலையாய் மதுராவை அழைத்து, ''என்ன என்னைக் காணாமல் ரொம்பவும் தவித்து விட்டாயாமே!'' என்றான் கிண்டல் குரலில்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றாள் மதுரா சிலிர்த்துக் கொண்டவளாக.

''எனக்கு தகவல் வந்தது...''

விடாப்பிடியாய் சத்யன் சொல்லவும் மதுரா குழம்பினாள். தான் விசாரித்ததை கவிதா ஒருபோதும் இவனிடம் சொல்லியிருக்க மாட்டாள். பின் யார் சொன்னது?

''சொன்னது வேறு யாருமல்ல... உன் முகம்தான்!'' என்று அதற்கு பதில் சொன்னான் சத்யன்.

''என்ன... என் முகமா?''

வியந்த மதுராவிடம், ''ஆமாம்... என்னைக் கண்டதும்தானே கூம்பிப் போன உன் முகம் சூரியனைக் கண்டது போல் பிரகாசிக்க

...ம்பித்தது. அதை வைத்துத்தான் எல்லாவற்றையும் கண்டு ...த்தேன்...!'' என்றான் பெரிய புதிர் விடுவிப்பவன் போல்.

மதுரா உள்ளுக்குள் கண்டுபிடித்துவிட்டானே... என்று ...த்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவளாய் ...ங்கிருந்து அகல முயன்றாள். ''சார்... வேலை இருக்கிறது.... ...ம்புகிறேன்...!'' என்றபடி அங்கிருந்து அகன்றாள்.

9

அடுத்து வந்த நாட்கள் வேலையில் கறுகறுப்பாகி மதுராவுக்கு அது ரொம்ப வும் பிடித்துப் போயிற்று. ரங்கமணி அம்மாளும் போன் போட்டு அவளுடன் பேசினாள்.

''என்ன மதுரா வேலை பிடித்திருக் கிறதா? குழ்நிலை எப்படி இருக்கிறது?'' என்றெல்லாம் கவலையோடு விசாரித்த அம்மாளுக்கு உற்சாகமாய் தலையாட்டியபடி பதில் சொன்னாள் மதுரா.

அதற்கு அடுத்த நாள் பெரியவர் குருநாதரே மதுராவைத் தேடி வந்தார்.

''என்ன வேலை பிடித்திருக்கிறதா? எதுவானாலும் என்னிடம் சொல் அம்மா?'' என்று கனிவாய் விசாரித்தார்.

கைகூப்பிய மதுராவும் அவருக்கு தன் நன்றியைத் தெரிவித்தாள்.

பின் குருநாதர் திரும்பி சத்யனை அவள் முன்னிலையிலே அழைத்து, ''சத்யன், மதுராவுக்கு கம்பெனி பற்றி சகல விஷயங் களையும் கற்றுக் கொடுக்க வேண்டியது உன் பொறுப்பு...'' என கட்டளையிடவும் செய்தார்.

மதுராவைப் பார்த்து மர்மப் புன்னகையை புரிந்து கொண்டே "கண்டிப்பாக..." என்றான் சத்யன்.

தந்தை முன் அவன் காட்டும் பவ்யமரியாதை அவளை வியப்படைய வைத்தது.

குருநாதர் சென்று விட்டார்.

தன் இருக்கைக்குத் திரும்பிய மதுரா வேலைகளில் கவனம் செலுத்தினாள். இடையிடையே அவளையறியாமல் அவளது பார்வை சத்யனின் ரூமை நோக்கிச் சென்றது.

கண்ணாடிக் கதவுகளின் உள்ளே சத்யன் விறுவிறுவென பைலை புரட்டுவதும்... நொடிக்கொருதரம் சிணுங்கும் போனில் பேசுவதுமாய் இருக்கும் அவனது 'பிஸியான' வேகத்தை கண்டாள்.

சந்தேகமில்லை. சத்யன் கடின உழைப்பாளிதான். தன்னை சீண்டி விளையாடி அடிக்கடி மனதை நோகடித்தாலும் அவனது மறுபுறம் குணத்தின் மறுபக்கம் வித்தியாசமாய்த்தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள்.

மதுரா, வேலைகளில் ஆழ்ந்து கவனிக்காத சமயம் சத்யன் அவளுக்குத் தெரியாமல் கவனித்தான். சிரததையாய் அவள் வேலை பார்க்கும் அழகை ரசித்து விட்டுப் போனான்.

மதுரா அன்று வேலை முடிந்ததும் அவளாக முந்திக் கொண்டு சத்யனிடம், "நான் பஸ்ஸில் போய்க் கொள்வேன். நீங்கள் போகலாம்..." என்று சொல்லிவிட்டாள்.

சத்யன் காரில் ஏறப்போனவன் நின்று புருவம் உயர்த்தி அவளைப் பார்த்தான்.

அவன் ஏதாவது மறுத்துச் சொல்வான் என்று எதிர்பார்த்த வளுக்கு சப்பென்று போயிற்று.

சத்யன் எதுவும் சொல்லாமல், "சரி... உன் இஷ்டம்..." என்பது போல் தலையசைத்தவாறு காரில் ஏறிக் கொண்டான்.

அன்று இரவு ஹாஸ்டல் ரூம் மொட்டை மாடியில் நிலா வெளிச்சத்தில் நட்சத்திரங்களை ரசித்துக் கொண்டிருந்தாள் மதுரா. அதை கவனித்து பூனையாய் இருட்டோடு இருட்டாய் அங்கு சத்யன் தோன்றினான். மேலும் ஓசைப்படாமல் நடந்தவன் அவள் பக்கம் வந்ததும், டக்கென அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

திடீரெனத் தன் முழு பலம் கொண்டு இறுக அணைத்த சத்யனைக் கண்டு மதுரா திடுக்கிட்டுத்தான் போனாள். சத்யனின் கரங்கள் மலைப்பாம்பாய் அவள் உடலை இறுக்கின. அந்த ஆண்மையின் திடீர் ஸ்பரிசத்தில் ஒருகணம் தன்னிலை மறந்து துவண்டுதான் போனாள்.

விறுக்கென திமிறிய அவளது உடம்பு அணைத்தது சத்யன் என்றதும் உடன்பட்டுப் போயிற்று. சத்யன் இறுக அணைத்தவன் சும்மா இருக்கவில்லை. மெல்லக் குனிந்து அப்படியே அவளது சிவந்த கன்னங்களில் முத்தமிடவும் ஆரம்பித்தான்.

அந்த முத்த சிலிர்ப்பில் மதுரா சிலிர்த்தவள் கண்கள் சொருக மயக்கத்துடன் அவன் நெஞ்சில் சாய்ந்தும் கொண்டாள்.

அவள் அப்படி தன் கரங்களில் துவண்டு கொண்டிருப்பதை சத்யன் வெகுவாய் ரசித்தான். சட்டென கொஞ்சமும் எதிர்பாரா சமயத்தில் விடுவித்தான். விலகி நின்றான்.

தன்னை அணைத்தவனோடு மதுரா மெய்மறந்து கிடந்தவள் அவன் திடீரென அப்படி விடுவித்து தள்ளி நின்றதும்தான் சுயநினைவுக்கு வந்தாள். எதிரே எதையோ கண்டுபிடித்துவிட்ட திருப்தியில் நின்ற சத்யனைக் கண்டு தவிக்கத்தான் செய்தாள்.

சத்யன் அவளை லேசில் விடுவதாய் இல்லை. குறுஞ்சிரிப்பு [illegible] அவளை நெருங்கி வந்தவன், ''எல்லாவற்றையும் கண்டுபிடித்து விட்டேன்...'' என்றான் சிரிப்பு மாறாமல்.

மதுரா வெட்கம் பிடுங்கித் தின்றவளாய் தவித்தவள், எப்படி சத்யன் அணைத்ததும் தான் சுயநினைவு இழந்துபோனோம் என்று அதிர்ச்சியாய் யோசித்தாள்.

அவன் சத்யன்... எப்படி... என்ன தைரியத்தில் திடுமென அணைத்தான்? அப்படி அவன் அணைத்தானென்றால் முதலிலே சுதாரித்து விடுங்கள் என்று விடுவித்துக் கொண்டிருக்கலா மல்லவா?

அதைவிட்டு விட்டு எப்படி அந்த அணைப்பில் தன்னை மறந்து அவன் கரங்களில் துவண்டு கொண்டு... எப்படி நடந்தது இது? எவ்வளவு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய விஷயம்? புலன்கள் நொடியில் தறிகெட்டு... எல்லாவற்றையும் மறந்து காணாததை, கண்டது போல் உடம்பு சத்யனை அணைத்துக் கொண்டதே?

வெட்கிப் போனவளாய் மதுரா முகம் சிவக்க சத்யன் விடாப்பிடியாய், ''நான் சொன்னது கேட்கவில்லை...? உன்னைக் கண்டுபிடித்துவிட்டேன்...'' என்றான் மறுபடியும்.

மதுராவினுள் இனம்புரியா படபடப்பு தோன்றி மறைந்தது.

10

மறுநாள் பெரியவர் தன்னை சந்திக் கும்படி அழைத்ததும் மகிழ்ச்சியோடு கிளம்பினாள் மதுரா. பெரியவர் குருநாதர் சத்யனிடம் எல்லா அலுவலக பொறுப்புகளையும் ஒப்படைத்து விட்டு

[illegible]னக்கென்று ஆசிரம பாணியில் குடில் ஒன்றை அமைத்து [illegible]றைபணியில் ஈடுபட்டு வந்தார்.

அந்தப் பெரியவரின் குடிலுக்குள் நுழைந்தவளை இன்முகமாய் வாசலிலே வந்து வரவேற்றார் குருநாதர்.

அன்பாய் உட்காரச் சொல்லி உபசரித்தார்.

''உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் அம்மா...'' என்ற பீடிகையுடன் விஷயத்தை ஆரம்பித்தார்.

பேச்சை ஆரம்பித்த குருநாதரின் முகத்தில் பயமும் ஒருவித கலவரமும் உருவானதைக் கண்டு மதுரா திடுக்கிடத்தான் செய்தாள்.

''அம்மா... இந்த விஷயம் யாருக்கும் தெரியாது. உன்னைத் தவிர வேறு யாரிடமும் நான் சொல்லப் போவதில்லை. நீ தான் இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்ய வேண்டும். செய்வாயா அம்மா?''

சொல்லியபடி சிறு குழந்தை போல கை கூப்பி கெஞ்சிய பெரியவரைக் கண்டு மதுரா திடுக்கிட்டுத்தான் விட்டாள்.

பதறியவளாய், ''ஐயா நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிடுங்கள். உடனே செய்து முடிக்கிறேன். நீங்கள் இப்படி என்னிடம் கெஞ்சுவதை என்னால் தாங்க முடியவில்லை..!'' என்றாள் உணர்ச்சிகள் முழுவதையும் தன் குரலில் அடக்கி.

குருநாதர் பெருமூச்சு விட்டுக் கொண்டு, ''விஷயம் அப்படிப் பட்ட சிறுமையானதும்மா. அதனால்தான் கெஞ்சுகிறேன்...'' என்றாள்.

''சிறுமையானதா?''

''ஆமாம்மா...! வாலிப வயதில் நான் ஒரு தவறு செய்து விட்டேன். அது இப்போது விசுவரூபமெடுத்து என்னை வாட்டுகிறது...''

''என்ன நீங்கள் தவறு செய்தீர்களா?'' நம்ப முடியாமல் உலக அதிசயமாய்க் கேட்ட மதுராவை புன்னகை மாறாமல் குருநாதர் பார்த்தார்.

''உனக்கு இது ஆச்சரியமாகத்தான் இருக்கும்... ஏனெனில் நான் இப்போது போட்டிருக்கும் கௌரவமான வேஷம் அப்படி. அது ஒரு பெரிய கதை அதை கள்ளங்கபடமற்ற உன்னிடம் சொல்லவே வெட்கத்தில் வாய் கூசுகிறதம்மா...''

குருநாதர் நிறுத்திவிட்டு கண்கலங்க ஒரு நிமிடம் தயங்கியவர், ''ஆனாலும் வேறு வழியில்லை உன் உதவியைப் பெற நான் எல்லாவற்றையும் சொல்லித்தான் ஆக வேண்டும்...'' என்றபடி தன் நீண்ட உரையை ஆரம்பித்தார்.

''அம்மா, நீ பார்க்கும் குருநாதர் இன்று கௌரவமாய் தான தர்மம் பண்ணிக் கொண்டு அமைதியாக வாழ்பவர். ஆனால் சுமார் முப்பது வருடங்களுக்கு முன் நான் சாதாரண மனிதனாய் எல்லா ஆசாபாசங்களுக்கும் உட்பட்டுத்தான் இருந்தேன். அப்போதுதான் அது நடந்தது....

அம்மா நான் சொல்லப்போகிற விஷயம் உனக்கு அதிர்ச்சியாய் இருக்கும். ஆனால் உண்மை அதுதான் எனக்கு சத்யன் மட்டும் மகனில்லை இன்னொரு வாரிசும் எனக்கு இருக்கிறான்...''

''என்ன சொல்கிறீர்கள் இன்னொரு வாரிசா? நிஜமாவா அய்யா?''

''நிஜம்தான். இந்த விஷயம் என்னைத் தவிர சத்யனுக்கோ எனது மனைவி மகாலக்ஷ்மிக்கோ... வேறு யாருக்கும் தெரியாது... அவ்வளவு ரகசியமாக வைத்திருக்கிறேன்...''

''.....''

''அவன் பெயர் பாஸ்கர். அவனுக்கும் சத்யனைப் போலவே வயசுதான். ஆனால் சத்யனுக்கு நேர் எதிரான குணம். எனக்கும் சரோஜா என்ற பெண்ணுக்கும் ஏற்பட்ட தொடர்பால் பிறந்தவன்...''

''சரோஜாவா?''

''ஆமாம்மா... நான் சொன்ன வாலிப பருவத்தில் பணத்திமிரில் எனக்கு ஏற்பட்ட தொடர்பு அது. சரோஜா எனது தேயிலை தோட்டத்தில் சாதாரண கூலியாய் சேர்ந்த பெண்தான். அவளது அழகும் வசீகரமும் என்னை ஈர்த்துவிட எளிதில் அவளிடம் மயங்கி விட்டேன். எனது எஸ்டேட் பங்களாவில் அவளை தங்க வைத்து நான் அங்கு செல்லும் சமயமெல்லாம் தாலிகட்டாத மனைவியாய் அவளுடன் குடும்பமே நடத்த ஆரம்பித்து விட்டேன். அப்படி எங்கள் தொடர்பில் பிறந்தவன்தான் இந்த பாஸ்கர்...

''பாஸ்கர் பிறந்ததும் சரோஜா ஊரறிய என்னைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்த ஆரம்பித்தாள். எனக்கோ என் கௌரவமும், அந்தஸ்துமே பெரிதாய் தெரிந்தது. சரோஜாவின் வேண்டுகோளை தட்டிக் கழித்து வந்தேன். ஒருநாள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த சரோஜா மனம் உடைந்து பாஸ்கரை சொல்லாமல் கொள்ளாமல் அனாதை இல்லம் ஒன்றில் சேர்த்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டாள்...''

''என்ன தற்கொலையா?''

''ஆம்... எஸ்டேட் பெரிய கிணறு ஒன்றில் வாழ்வை முடித்து விட குதித்துவிட்டாள். விஷயம் கேள்விப்பட்டு பதறி அவளைக் காப்பாற்ற ஓடி வந்தேன்... ஆனால் அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. சரோஜா இந்த உலகத்தை விட்டே போய் விட்டாள். பாஸ்கர் என்ன ஆனான் என்று தேட ஆரம்பித்தால்.. அதையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை...''

''ஆனால் அனாதை இல்லம் ஒன்றில் சேர்த்து விட்டு விட்டதாய் சொன்னீர்களே அய்யா?''

''ஆமாம். உண்மைதான்! சரோஜா வாழ்க்கையை வெறுத்து பாஸ்கரை அனாதை இல்லம் ஒன்றில் சேர்த்திருந்தாள். ஆனால் எந்த ஊரில், எந்த அனாதை இல்லத்தில் சேர்த்தாள் என்பது தெரியாதே....? அதனால் ரொம்பவும் தவித்தேன். ஊர் ஊராகப் போய் தேடினேன். ஒவ்வொரு அனாதை இல்லமாய் ஏறி இறங்கினேன். அப்படித்தான் உங்களது 'அன்பு இல்லத்திற்கும்' பாஸ்கரைத் தேடி வந்தேன்... என் நல்ல நேரம் பாஸ்கர் அங்கே இருந்தான். சரோஜா அன்பு இல்லத்தில் ரங்கமணி அம்மாளிடம் தான் பாஸ்கரை கொடுத்துவிட்டுப் போயிருக்கிறாள் என்பதும் புரிந்தது...''

''என்ன அன்பு இல்லத்திலா? எனக்கு எப்படித் தெரியாமல் போயிற்று...?'' என்று வியந்தவளை கனிவாய்ப் பார்த்தார் குருநாதர்.

''அப்போது நீ சிறு வயது குழந்தையம்மா. பாஸ்கரும் அப்போது ஐந்து வயதுச் சிறுவன்தான். அவனை அன்பு இல்லத்தில் பார்த்ததும் என் மனது பொறுக்கவில்லை. என் வாரிசை செல்வச் செழிப்புடன் வாழ வேண்டியவன் இப்படி அனாதை போல் வாழ்வதா என்று தவித்துப் போனவனாய் உடனே பாஸ்கரை அன்பு இல்லத்திலிருந்து என்னுடன் அழைத்து வந்துவிட்டேன் ஆனால்...''

''சொல்லுங்கள் ஐயா...''

''உண்மையை ஒத்துக்கொண்டு பாஸ்கரை என்னுடனே வளர்க்க எனக்கு தைரியம் இல்லை. அதனாலே அவனுக்காக யாருக்கும் தெரியாமல் வீடு ஒன்றை வாடகை பிடித்து வேலையாட்களின் துணையோடு வளர்க்க ஆரம்பித்தேன். ஆனால் அதுவே அவனுக்கு எமனாகவும் போயிற்று...''

''என்ன அப்படியா?''

''ஆமாம்மா.. பாஸ்கர் வளர வளர தன் சூழ்நிலையை புரிந்து கொண்டான். தன்னை ஊரறிய ஏற்றுக்கொள்ளாத என்னை வெறுக்க ஆரம்பித்தான். பின் அவனது வெறுமை கூடிய வாழ்க்கையே அவனுக்கு வெறுப்பாயிற்று. தான் தோன்றித்தனமாய் தன் இஷ்டத்திற்கு ஒரு வாழ்க்கைப் பாதையை உருவாக்கிக் கொண்டான். எல்லா கெட்டப் பழக்கங்களும் அவனை தொற்றிக் கொண்டன. முக்கியமாய் மதுப்பழக்கம் மதுவிற்கு நிரந்தர குடிகாரனாகவும் ஆகி விட்டான்...''

''என்ன பாஸ்கர் குடிகாரரா?''

''ஆமாம். அதுவும் நிரந்தரக் குடிகாரன். அந்தக் குடியால் அவனுக்கு தீராத வியாதியும் வந்துவிட்டது...''

''வியாதியா?''

''ஆமாம். அதிக குடிப்பழக்கத்திற்கு அடிமையானதால் உடம்பு கெட்டு மிகவும் மோசமாகிவிட்டது. உயிருக்கு ஆபத்தான நிலையில் இப்போது அவன் இருக்கிறான்...''

''நிஜமாகவா?''

''நிஜம்தான். வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய வயதில் உலகை வெறுத்து தள்ளாடும் குடிகாரனாய் மாறி உயிரை விட நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறான்....''

''நீங்கள் எப்படியாவது அந்த மதுப்பழக்கத்தை நிறுத்த முயற்சி செய்தீர்களா அய்யா?''

மதுரா ஆவலாய் கேட்க உதடுகளைப் பிதுக்கி வெறுமையாய் புன்னகைத்தார் குருநாதர்.

''முயற்சி செய்தேன். ஆனால் அவன் பாஸ்கர் பிடிவாதக் காரனம்மா. நான் எத்தனையோ வழிகளில் தடுத்துப் பார்த்தேன். தடுக்க தடுக்க மேலும் குடிக்கத்தான் செய்தான் அவன். கடைசிவரை

அவனை திருத்த அவனது குடிப்பழக்கத்தை நிறுத்த என்னால் முடியவில்லையம்மா...''

குருநாதர் மௌனமாகிவிட்டார்.

மதுராவும் மௌனமானாள். கூடவே அவளுள் அதிர்ச்சியான திகைப்பும் ஏற்பட்டு விட்டது.

குருநாதருக்கு பின் இப்படியொரு கதை இருக்குமென அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதைவிட இந்த விஷயத்தில் அவர் தன்னிடம் என்ன உதவி கேட்க முடியும் என்பது அவளுக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

குருநாதர் அவளையே உற்றுப் பார்த்தவர், ''என்னம்மா, இப்படியொரு இழிபிறவியாய் நான் இருப்பேன் என்று நீ நினைக்கவில்லை இல்லையா?'' என்றார் வேதனை பொங்க.

மதுரா அதை அவசரமாய் மறுத்தவள், ''அப்படியெல்லாம் இல்லை. இந்த விஷயத்தில் உங்களுக்கு எப்படி உதவ முடியும் என்னால் என்ன செய்ய முடியும்... என்றே யோசிக்கிறேன் அய்யா...'' என முடிக்கவும் செய்தாள்.

குருநாதர் பெருமூச்சு விட்டவர், ''உன்னால் ஒரு உதவி ஆகவேண்டும். எனக்காக செய்வாயா அம்மா?'' என்றார் பீடிகையுடன்.

''சொல்லுங்கள் ஐயா..''

''பாஸ்கரை ஊருக்கு ஒதுக்குப்புறமாய் ஒரு வீட்டில்தான் குடி வைத்திருக்கிறேன். அவனுடைய நிலைமையும் ரொம்பவும் மோசமாகிவிட்டது. பாதி சுயநினைவு இழந்தவனாய்த்தான் நடமாடிக் கொண்டிருக்கிறான். அவனை பரிசோதித்த டாக்டர் கொடுத்த மருந்துகளைக் கூட ஒழுங்காய் அவன் சாப்பிடுவது கிடையாது. எனக்கிருக்கும் வேலைகளில், யாருக்கும் விஷயம்

தெரிந்துவிடக் கூடாது என்ற பயத்தில் அவனை அடிக்கடி போய் கவனித்து வர முடியவில்லை. எனக்காக நீ அங்கு தினம் ஒரு முறை சென்று அவன் நிலைமையை கண்காணித்து எனக்குச் சொல்ல வேண்டும். இதுதான் நீ செய்ய வேண்டிய உதவி முடியுமா அம்மா?''

குருநாதர் ஆவலாய்க் கேட்க, அதற்கு மறுபேச்சின்றி, ''கண்டிப்பாக செய்கிறேன் ஐயா...'' என்றாள் மதுரா உறுதியான குரலில்.

''அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம்...''

''சொல்லுங்கள்...''

''இந்த பாஸ்கர் விஷயம் சத்யனுக்கோ என் குடும்பத்தாருக்கோ, யாருக்கும் தெரிந்து விடக்கூடாது. எந்த சந்தர்ப்பத்திலும் விஷயம் வெளிவந்து விடாமல் ரகசியமாக இருக்க வேண்டும். உன்னால் உறுதி கூற முடியுமாம்மா?''

அதற்கும் பலமாய் தலையாட்டி மதுரா உறுதி கூறினாள். குருநாதர் பெரும் நிம்மதியடைந்தவராய் கண்கலங்க எழுந்து கொண்டார். ''சரி அம்மா, நான் கிளம்புகிறேன். நாளை உன்னை பாஸ்கர் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்கிறேன். வரட்டுமா?'' குருநாதர் விடைபெற்று கிளம்பினார்.

11.

மறுநாள் சொன்னது போலவே மாலை அலுவலகம் முடிந்ததும் ஹாஸ்டல் ரூமிலிருந்து யாருக்கும் தெரியாமல் அவளை பாஸ்கரிடம் அழைத்துச் சென்றார் குருநாதர்.

பாஸ்கரை அவர் தங்க வைத்திருந்த வீடு ஊருக்கு வெளிப்
மாய் நிறைய மரங்கள் சூழ்ந்த இடத்தில் அமைந்திருந்த
பாஸ்கரை கவனிப்பதற்கென்றே இரண்டொரு வேலையாட்கள்
யும் ஆயா ஒருத்தியையும் குருநாதர் ஏற்பாடு பண்ணியிருந்தா

'இவர்களையெல்லாம் அவன் பொருட்படுத்துவதே இல்லை.
என்று சொன்னபடி மதுராவை உள்ளே அழைத்துச் சென்றா
குருநாதர். வீட்டினுள் முகப்பு தாண்டிய பெரிய ஹாலி
நடுநாயகமாய் பாஸ்கர் சேரில் தொய்ந்து போய் கிடந்தான். அவ
முன்னால் காலியாகிப் போன மது பாட்டில்களும் கோப்பைகளு
இரைந்து கிடக்க... சத்தம் கேட்டு மெல்ல நிமிர்ந்தான் பாஸ்கர்.

மதுரா அவனை உற்றுப் பார்த்தாள்.

பாஸ்கருக்கும் சத்யனைப் போல முப்பதுக்கு உட்பட்
வயதுதான். நெடு உயரமில்லாமல் குட்டையாய் கணத்
சரீரத்துடன் பாதி முகத்தை தாடி மறைத்திருக்க... தூக்கத்திலிருந்
விழிப்பவன் மெல்ல கண்களை இடுக்கி ஓரிரு நிமிட
இருவரையும் பார்த்தான். பின்பு முன்பு போல மூடிக் கொண்டான்

மதுரா புரியாமல் குருநாதரைப் பார்க்க ''இப்படித்தானம்மா..
எப்போதும் கண்திறந்து ஒரு பார்வை பார்ப்பான். அத்தோடு சரி...
வாயைத் திறந்து அவன் பேசுவதே கிடையாது...''

''என்ன பேச மாட்டாரா?''

''ஆமாம் அவன் பேசி ஒரு வருடமாயிற்று. ஜடம் என்று
சொல்வார்களே... அதுபோன்றதுதான் அவன் உணர்வில்லாமல்
நடந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு தெரிந்தது எல்லாம் மதுப்
புட்டி ஒன்றுதான். அதைக் கொடுத்தால் மடமடவென்று குடித்து
விடுவான்... பசிக்கும் நேரத்தில் உணவை எடுத்து வைத்தால்
சாப்பிடுவான். மற்றபடி மற்ற எல்லா சமயங்களிலும் இப்படித்தான்

சேரில் கண்கள் சொருக உட்கார்ந்திருப்பான். அவன் அப்படி எந்த
உலகத்தில் இருக்கிறான் என்பது அவனுக்குத்தான் வெளிச்சம்...''

குருநாதர் சொல்வதற்கேற்றாற் போல் பாஸ்கர் அதற்குப் பின்
அவர்களைப் பார்க்கவில்லை. கண்களை திறக்கவுமில்லை. அவன்
பாட்டுக்கு போதை நிலையில் உலகை மறந்தவனாய் இருந்தான்.
இப்படியும் ஒருவன் இருப்பானா? என்ற உணர்வு தாக்க மதுரா
அவனையே அதிசயமாய்ப் பார்த்தாள்.

குருநாதர் அவளைப் பின் அடுத்த அறையில் இருந்த ஷெல்ப்
ஒன்றுக்கு கூட்டிச் சென்றார். ஷெல்ப்பில் மருந்துகள், மாத்திரைகள்
என நிறைய இரைந்து கிடந்தன. ''எல்லாம் அவன் வேளா
வேளைக்குச் சாப்பிட வேண்டிய மருந்துகள். ஆனால் இதையெல்
லாம் ஆயா பார்த்துக் கொள்வாள். நீ செய்ய வேண்டியதெல்லாம்
ஒன்றே ஒன்றுதான் அம்மா...''

''சொல்லுங்கள் ஐயா...''

''தினம் உன் வேலை முடிந்ததும் ஒரு முறை இங்கு வந்து
பாஸ்கரின் நிலைமையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். பாஸ்கர்
மருந்துகளை ஒழுங்காய் சாப்பிட்டானா... அவன் உடல்நிலையில்
எதும் முன்னேற்றம் உண்டா என்பதை கவனித்துச் சொல்ல
வேண்டும்... இது மட்டும், இந்த உதவியைச் செய்தால் மட்டும்
போதும். உன்னால் முடியுமாம்மா...?''

குருநாதர் கெஞ்சலாய்க் கேட்க அவருக்கு தலையசைத்து மதுரா
உறுதி கூறினாள்.

இருவரும் கிளம்பினார்கள்.

கிளம்பும்போது குருநாதர் ஞாபகம் வந்தவராய், ''அம்மா இந்த
விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாய் சத்யனுக்கு
தெரியவே கூடாது. ரகசியம் காக்க வேண்டியது உன் பொறுப்பு...''
என்று சொல்ல அதற்கும் சம்மதித்து தலையசைத்தாள்.

ஆனால் உள்ளுக்குள், 'சத்யனுக்குத் தெரியாமல்தான் செய்ய வேண்டியிருக்கிறதே?' என்ற உணர்வு பயமாய் எழுந்து கவலையாய் அவளை வாட்டியது.

12

மறுநாள் முதல் மதுரா அலுவலகம் முடிந்ததும் பாஸ்கர் வீடு வந்து ஒழுங்காக மருந்து மாத்திரைகளை பாஸ்கர் சாப்பிடுகிறானா... வேலையாட்கள் அவனை பார்த்துக் கொள்கிறார்களா என்று கவனித்து விட்டுப் போனாள். அன்று இரவே குருநாதருக்கு போன் செய்து சொன்னாள்.

பதிலுக்கு குருநாதர், ''வாரம் ஒருமுறை போன் செய்து பாஸ்கர் உடல்நிலை பற்றி தெரிவித்தால் போதும்...'' என்று அவளை கேட்டுக் கொண்டார். மனிதர் தப்பை செய்துவிட்டு மகனுக்கும், மனைவிக்கும் என்னமாய் பயப்படுகிறார் என மதுரா நினைத்துக் கொண்டாள்.

பாஸ்கரின் உடல்நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. எப்போதும் மயக்கத்திலிருப்பவன் போல்தான் கண்கள் சொருக உட்கார்ந்திருந்தான். மதுரா உள்ளே நுழைந்தால் நிமிர்ந்து ஒரு பார்வை பார்ப்பதோடு சரி மறுபடியும் திரும்பி வெறிக்க ஆரம்பித்து விடுவான்.

மதுப்பழக்கத்தை உடனே நிறுத்திவிடக்கூடாது என்ற டாக்டரின் ஆலோசனைப்படி தினம் இரண்டு கோப்பை மதுவை வேலையாட்கள் அவனுக்கு ஊற்றிக் கொடுப்பார்கள். அதை குடிக்கும் போது மட்டும் பாஸ்கரின் முகத்தில் இனம்புரியா பரவசம் ஏற்படும்.

அதை குடித்துவிட்டால்.... அவ்வளவுதான்...! அப்படியே மோன நிலைக்கு போய்விடுவான்.

மதுரா அவனை ஆச்சரியமாய்ப் பார்ப்பாள். என்னதான் துன்பம் வந்தாலும் இப்படியா ஒருவன் தன்னை சீரழித்துக் கொள்வது என்ற ஆதங்கத்தோடு அவனையே வெறித்துப் பார்ப்பாள்.

பணியாட்கள் சொல்வதை வைத்து பாஸ்கர் பற்றி மேலும் புரிந்து கொண்டாள். பாஸ்கர் இயல்பிலே கூச்ச சுபாவக்காரனாம். யாரிடமும் அதிகம் பேச மாட்டானாம். பள்ளி படிப்பு கல்லூரி படிப்பெல்லாம் ஹாஸ்டலில் தங்கி முடித்தானாம். படித்து முடித்தவனை இங்கு இந்த வீட்டில் கொண்டு வந்து குருநாதர் தங்க வைத்ததும்தான் வினை ஆரம்பித்து விட்டதாம். எப்படியோ கெட்ட சகவாசங்களால் பாஸ்கர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி முடாக் குடிகாரனாக ஆகிவிட்டானாம்!

மதுரா பாஸ்கரைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டதும் அவனை எப்படியாவது மதுப் பழக்கத்திலிருந்து மீட்டு குணப் படுத்த வேண்டும். பாஸ்கரை தன்னம்பிக்கையுள்ள நல்ல மனிதனாக்கி குருநாதரிடம் ஒப்படைத்து அவரைத் திகைக்க வைக்க வேண்டும் என்று உறுதியையும் தனக்குள் எடுத்துக் கொண்டாள்.

அதற்காக பாஸ்கரை தினம் கவனிக்க வரும் மருத்துவரிடம் பேசிப்பார்த்தாள். பாஸ்கரின் உடல்நிலை, மனநிலை பற்றிய அனைத்து விபரங்களையும் தெரிந்து கொண்டாள்.

தினம் தினம் பாஸ்கரிடம் அன்பொழுக பேச்சுக் கொடுத்துப் பார்த்தாள். தன்னம்பிக்கையூட்டும் பல விஷயங்களை விடாமல் எடுத்துச் சொன்னாள். ஆனால் பாஸ்கரிடம் எந்த பதிலும் இல்லை. அப்படியே இடித்த புளி மாதிரிதான் இருந்தான். எப்போதாவது ஒரிரு முறை நிமிர்ந்து அவளை உற்றுநோக்குவதோடு சரி.

ஆனால் மதுரா மனம் தளராமல் தனது முயற்சியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள்.

பின் டாக்டரின் ஆலோசனைப்படி தினம் கடற்கரைக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டாள். தினம் வேலை முடிந்து வந்து ஐந்து மணியளவில் பாஸ்கருடன் கிளம்பி விடுவாள்.

கடற்கரை பாஸ்கரின் வீட்டிலிருந்து பின்புறமாய் அரை கிலோ மீட்டர் தூரத்திலே இருந்தது. பாஸ்கர் நடப்பது நல்லது என்று மருத்துவர் கூறியிருப்பதால்... தள்ளாடும் அவனை கைத்தாங்கலாகவே கடற்கரைக்கு அழைத்துச் செல்வாள்.

வழக்கம் போல் பாஸ்கரும் எந்தவித உணர்வில்லாமல் இயந்திரமாய் அவளுடன் நடந்து வருவான். அவள் கடற்கரை மணலில் உட்கார்த்தி வைத்ததும் அப்படியே உட்கார்ந்து கொள்வான். கொஞ்சமும் இமைக்காது கடலலைகளை வெறிக்க ஆரம்பித்து விடுவான்.

ஒரு மணி நேரம் இப்படியே கழிந்ததும் மதுரா திரும்ப வீட்டிற்குக் கிளம்ப அழைப்பாள். அதே போல் இயந்திரத் தனத்துடன் அவள் பின்னாலேயே நடந்து வந்து விடுவான் பாஸ்கர். இது கொஞ்ச வாரங்கள் தொடர்ந்தது.

ஒருநாள் யதேச்சையாய் பிஸினஸை மறந்து ரிலாக்ஸாக காற்று வாங்க கடற்கரைக்கு வந்தான் சத்யன். அவன் கழுகுக் கண்களில் பாஸ்கரும் மதுராவும் கடற்கரையில் இருந்த காட்சிப் பட்டு விட்டது.

முதலில் சத்யனால் அதை நம்ப முடியவில்லை. மதுரா இன்னொரு தடியான இளைஞனுடன் ஜோடி போல் நடந்து கொண்டு.. இது நிஜம்தானா?

காரை ஓரமாக நிறுத்தியவன் நன்றாக உற்றுப் பார்த்தான்.

அந்த பெண் மதுராவின் சாயலில்தான் தெரிந்தாள். அன்று ஞாயிற்றுக் கிழமையானதால் கடற்கரையில் கூட்டம் வேறு. சரியாக அவனால் பார்க்க முடியவில்லை.

காரை விட்டு அவசரமாய் இறங்கி தூரத்தில் அவர்களை நெருங்க சத்யன் முயற்சித்தான்.

ஆனால் கூட்டத்தில்... மணற்பரப்பில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியர்களை, அவனால் அவ்வளவு களுவாய் தடக்க முடியவில்லை.

ஒருவாறு அவர்களைக் கடந்து... வந்து... அவன் மதுராவைத் தேடியபோது... அவனால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கூட்டமான ஜனத்திரளில் எந்த திசையில் அவள் சென்றிருப்பாள் என்பதை அவனால் கணிக்க முடியவில்லை!

சே! விட்டுவிட்டோமே...? என ஏமாற்றமாய் கைகளைப் பிசைந்தவன் முகம் சிவந்தவனாய் யோசித்தான்.

அது... மதுராவென்றால்... கூடச் சென்ற அந்த தடியான இளைஞன் யார்? அவனுக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? காற்று வாங்க வரும் காதல் ஜோடி போல் அல்லவா இருவரும் கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள்?

அன்று இரவு முழுவதும் சத்யனுக்கு தூக்கம் போயிற்று.

மறுநாள் வழக்கம் போல் பைல் ஒன்றில் கையெழுத்து வாங்குவதற்காக அவன் ரூமிற்குள் நுழைந்தாள் மதுரா.

கள்ளங்கபடமற்ற அவளது வெண்மை முகத்தை ஒருகணம் உற்று நோக்கினான் சத்யன்.

அவன் விடாமல் அப்படிப் பார்க்கவே மதுராவிற்கு பொறுமை போயிற்று.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்றாள்.

சத்யன் மேலும் அவளையே ஆழமாய்ப் பார்த்தபடி ''ஒன்றுமில்லை. இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்கிற சந்தேகம் வந்தது. அதான் பார்க்கிறேன்...''

மதுராவிற்கு சட்டென ஒன்றும் புரியவில்லை.

''என்ன அது...? பூனை பால் குடிக்குமா? என்ன சொல்கிறீர்கள்...?'' என்றாள் சினம் கொண்டவளாய்.

''நேற்று உன்னை கடற்கரையில் பார்த்தேன்...'' சொல்லிவிட்டு சத்யன் அவளையே பார்த்தான்.

நிதானமாய் சத்யன் சொல்லிவிட்டு அவள் முகக்குறிப்பை கவனமாய் தேடியபோதுதான் மதுராவுக்கு சட்டென உண்மையை உரைத்தது.

நேற்று பாஸ்கருடன் கடற்கரையில் இருந்ததை சத்யன் பார்த்து விட்டானா? ஆனாலும்.. மதுரா சுதாரித்து விட்டாள்.

''என்ன கடற்கரையிலா? என்னையா? ஒருக்காலும் இருக்காது? நேற்று முழுவதும் என் ரூமில் இருந்தேன். ஆமாம் எதற்கு கேட்டீர்கள்?'' என்றாள் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு.

அப்படி சத்யன் முன் ஒரு பொய்யைச் சொல்வது கூசாமல் நடிப்பது மதுராவுக்கு முள் மேல் நிற்பது போல் துடிப்பாய் இருந்தது.

உண்மையை அவனிடம் சொல்லிவிட எவ்வளவோ தவித்தாள். ஆனால் பெரியவர் சொல்லி இருக்காரே... எக்காரணம் கொண்டும் இந்த பாஸ்கர் விஷயம் சத்யனுக்கு தெரிந்துவிடக் கூடாது என்று அவளிடம் சத்தியம் வாங்கியிருக்காரே...?

வேறு வழியில்லை. பொய் சொல்லித்தான் ஆகவேண்டும். மனதை திடப்படுத்திக் கொண்டு மதுரா அழுத்தமாய் சத்யன் நம்பும்படி நடித்துப் பேசினாள்.

அவள் திடமான பேச்சில் சத்யனுக்கே சந்தேகம் வந்துவிட்டது.

நாம் பார்த்தது மதுராவில்லையோ? மதுரா போன்ற சாயலில் வேறு பெண்ணை பார்த்திருப்பேனோ?

தனக்குத்தானே குழம்பியவனாய் சத்யன் அசுவாசப்படுத்திக் கொண்டான். அவளை போகச் சொன்னான்.

நிம்மதியடைந்தவளாய் வெளியே வந்து மூச்சுவிட்டாள் மதுரா. கூசாமல் சத்யனிடம் பொய் சொன்னதை நினைத்து மனம் கனக்க ஆரம்பித்தது. வேலையில் கவனம் செலுத்த முடியாமல் அப்படியே உட்கார்ந்து விட்டாள் மதுரா.

13

அன்று சத்யன் கண்ணிலிருந்து மதுரா தப்பிவிட்டாலும். அவள் கையும் களவுமாய் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் அடுத்த வாரமே நிகழ்ந்து விட்டது.

அன்று அலுவலகத்திலிருந்தவள் தன்னை பதட்டமாய் தேடி வந்த பணியாளைப் பார்த்து திடுக்கிட்டு விட்டாள். பாஸ்கரை கவனித்துக் கொண்டிருக்கும் பணியாள் அது.

''அம்மா உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்...'' என்றதும் அவனை தனியே கூட்டிப் போய் மதுரா விசாரித்தாள்.

விஷயத்தைக் கேட்டதும் திக்கென்றது.

விஷயம் இதுதான். மருத்துவர் ஆலோசனைப்படி பாஸ்கர் குடிக்க இரண்டு கோப்பை மது அவனுக்கு கொடுப்பதுண்டு. அன்று மது தீர்ந்து விட்ட காரணத்தினால் பணியாட்களால் பாஸ்கருக்கு இரண்டு கோப்பை மது கொடுக்க முடியவில்லை. தனக்கு மது கொடுக்கப்படவில்லை என்றதும் பாஸ்கர் கோபமாகிவிட்டானாம் வெறி வந்தவன் போல் பணியாட்களை தள்ளிவிட்டு வெளியே சென்று விட்டானாம்...!

மதுராவிற்கு ஒருகணம் ஒன்றும் ஓடவில்லை. இந்நேரம் பார்த்து பெரியவர் குருநாதர் வேறு ஊரில் இல்லை. ஒரு மாத கால வெளிநாடு சுற்றுப்பயணம் சென்றிருக்கிறார். இந்நிலையில்.. மூன்று நான்கு பணியாட்கள் அவனைப் பிடித்து வைக்காமல் விட்டு விட்டு தன்னிடம் வந்து சொன்னால்.... தனியொரு பெண்ணாய் அவளால் என்ன செய்ய முடியும்?

ஆனாலும் அதற்காக சும்மா இருக்க முடியாது. பெரியவர் குருநாதருக்காக ஏதாவது செய்தாக வேண்டும். பின் தன்னிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கும் அவருக்கு என்ன பதில் சொல்வது? வேறு வழி தோன்றாதவளாய் அலுவலக விடுப்பிற்கு சொல்லிவிட்டு பணியாளுடன் பாஸ்கரை தேடி கிளம்பினாள்.

பாஸ்கரை எங்கே போய் தேடுவது?

அவள் யோசனைக்கு பணியாளே விடையும் கொடுத்தான்.

''அம்மா பாஸ்கர் மதுவை நாடி ஏதாவது பார் கிளப்பிற்கு சென்றிருப்பார் என்று எண்ணுகிறேன்...'' எனவும் அவனிடமே மதுரா விசாரித்தாள்.

பாஸ்கர் வீடு அருகே மட்டும் நான்கு பார் கிளப்புகள் இருந்தன.

மதுரா பணியாளுடன் அவைகளைத் தேடிச் சென்றாள்.

பார் கிளப் நகரின் போக்குவரத்து குறைந்த சாலைகளில் ஓரமாய் அமைந்திருந்தது. பணியாளை இரண்டு பார் கிளப்புகளில

தேடச் சொல்லிவிட்டு மதுராவே நேரிடையாய் ஒரு கிளப்பிற்குள் நுழைந்தாள்.

அங்கு அவள் நினைத்தது போலவே குடித்துவிட்டு மேஜை ஒன்றில் பாதி மயக்கத்தில் முணங்கியபடி பாஸ்கர்! மதுரா அவனை நெருங்கினாள்.

கிளப்பினுள் நுழைந்த அவளை வைத்த கண் வாங்காமல் விடலைத்தனத்துடன் முறைத்த பார்வைகளை சட்டை செய்யாமல்... கைத்தாங்கலாய் பாஸ்கரை பிடித்து தூக்கினாள்.

பாஸ்கர் ஒருவாறு தள்ளாடி எழுந்தான்.

அவனை அப்படியே தள்ளாத குறையாய் நகர்த்தி வெளியே கொண்டு வந்தாள் மதுரா.

அதே சமயம்... விதியும் விளையாடியது. பார் கிளப்பின் எதிரிலிருந்த ஸ்டார் ஹோட்டலிலிருந்து மீட்டிங் ஒன்றை முடித்து விட்டு சத்யன் தற்செயலாக வெளிவந்தான்.

அவன் கண்களில் அந்தக் காட்சி!

மதுரா பாஸ்கரோடு நின்ற காட்சியை சத்யன் கவனித்து விட்டான்!

அவனால் சற்றும் நம்ப முடியவில்லை. முன்புறம் வழியாய் ஹோட்டலின் கேட்டை அடைந்து நன்றாக அவர்களைப் பார்த்தான்.

சந்தேகமில்லாமல் அது மதுராதான். பக்கத்தில் தடித்த அந்த பணக்கார இளைஞன்!

அவன் குடித்திருப்பான் போலும். தள்ளாட்டமாய் மதுராவின் மேல் விழாத குறையாய் நின்று கொண்டிருந்தான். மதுராதான் அவன் கைகளைப் பற்றி ஏறக்குறைய அவனை தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

காட்சியைப் பார்த்த சத்யனுக்கு கண்களே எரிவது போல் இருந்தது. உருக உருக அவன் நினைத்து காதலித்தவள் அவன் மனதின் இதய சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருப்பவளா... இப்படி இன்னொருவனுடன் சல்லாபித்துக் கொண்டு...? மதுராவைப் பற்றி அவன் கொண்டிருந்த உயர்ந்த எண்ணம் மறுநிமிடமே மட்டரகமாய் மாறிக் கொண்டது.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மதுரா டாக்ஸி ஒன்றை நிறுத்தி இருவரும் ஏறினார்கள்.

விடக்கூடாது இருவரையும் கையும் களவுமாய் பிடித்தாக வேண்டும்!

சத்யனும் டக்கென தன் காரிலேறி கிளம்பியவன் அவர்களை பின்தொடர ஆரம்பித்தான்.

டாக்ஸி புறநகர் பகுதி நோக்கி விரைந்தது. பாதி தூரம் சென்றதும் நின்றது. மதுரா டிரைவரிடம் பாஸ்கர் வீட்டு முகவரி சொல்லி இறக்கி விடும்படி கேட்டுக் கொண்டாள். காரை விட்டு இறங்கிக் கொண்டாள்.

சத்யன், கார் மதுராவை இறக்கிவிட்டு செல்வதை கவனித்தான்.

முக்காடிட்ட உருவமாய் மதுரா வெளிப்பட்டு ரோட்டிலிறங்கி விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

சத்யனுக்கு அவள் வெளிப்பட்டு நடப்பதைப் பார்த்ததும் ஒரே வேகம்.

முழுக்க நனைந்து விட்டு இதில் முக்காடு வேறு?

சரட்டென காரை கிளப்பி வேகமாய் அவளது குறுக்கே சடன் பிரேக்கிட்டு நிறுத்தினான்.

திடீரென குறுக்காய் தன் மேல் மோதவந்த காரைக் கண்டு மதுரா திடுக்கிட்டாள்.

அது சத்யனுடைய கார் என்றதும் அவள் உயிரே போய் விட்டது.

யார் பார்த்துவிடக்கூடாது என்று நினைத்தாளோ அவனே பார்த்து விட்டான்.

இனி என்ன செய்வது? எப்படி தப்பிப்பது?

காரிலிருந்து வேல் குத்தும் பார்வையோடு சத்யன் வெளிப் பட்டவன் அவளை எரித்துவிடுவது போல் பார்த்தான்.

கழுகிடம் அகப்பட்ட கோழிக்குஞ்சாய் மதுரா அவனது பார்வையைக் கண்டு தவித்தாள்.

''யார் அது?'' என்றான் சத்யன் கடும் குரலில்.

மதுராவுக்கு புரியவில்லை யாராம்...? ஒருவேளை சத்யன் பார்த்துவிட்டானா...? பார்த்துவிட்டுத்தான் கேட்கிறானா...?

''என்ன கேட்கிறீர்கள் நீங்கள்?'' என்றாள் புரியாதவள் போல்.

''புரியவில்லை..? கொஞ்ச நேரத்திற்கு முன் தடிப்பயல் ஒருவனுடன் பாரிலிருந்து கூத்தடித்துக் கொண்டு கிளம்பி வந்தாயே அவனைத்தான் கேட்கிறேன். பதில் சொல்...'' என்றான் மிரட்டும் குரலில்.

''அவர்... அவர்...'' மதுரா தடுமாறினாள்.

''ஓ... அவரோ...? அவ்வளவு மரியாதைக்காரனோ...? நல்ல மரியாதைதான்...!'' எனவும் மதுராவுக்கு சினம் எகிறிற்று.

''அ... அது... அது.... உங்களுக்கு தேவையில்லாதது. வழியை விடுங்கள்...!'' என்றாள் அவளும் கோபமாக.

அவள் பதில் சத்யனை ரௌத்திரமாயிற்று.

''தேவையில்லாததா? என்னடி பசப்பு வேலை காட்டுகிறாய்? உன்னை அன்பு இல்லத்திலிருந்து பிடித்துக் கொண்டு வந்தவன் நான்... என்னை விட்டுவிட்டு இன்னொருவனுடன் சரசமாடுவதை எப்படி நான் அனுமதிக்க முடியும்?''

தெறித்து வந்த வார்த்தைகளைக் கண்டு மதுரா பொசுங்கித்தான் போனாள். ஐயோ, என்ன ஒரு அபாண்டம்! அவள் சரசமாடிவிட்டு வருவதாய் வாய் கூசாமல் சொல்கிறானே!

''என்னடி, குட்டு உடைந்து விட்டதும் என்ன செய்வதென்று தவிக்கிறாயா?''

அப்போதுதான் அவன் 'டி' போட்டு மட்டரகமாக பேசுவதை மதுரா ஆத்திரமாக உணர்ந்தாள்.

''மிஸ்டர்.. கொஞ்சம் மரியாதையாய் பேசுங்கள்..'' என்றாள் அதே ஆத்திரத்துடன்.

''என்ன... மிஸ்டரா? அதற்குள் என் பெயர் மறந்துவிட்டதா? அது சரி தினம் ஒருத்தனுடன் கூத்தடித்து சல்லாபித்தால் என் பெயர் மறந்துதான் போகும்...!'' என்றான் சத்யன் இகழ்ச்சியாக.

''என்ன உளறுகிறீர்கள்?''

''நான் ஒன்றும் உளறவில்லை. எனக்கு எல்லாம் புரிந்து விட்டது...''

''என்ன புரிந்தது?''

''உன்னை அன்பு இல்லத்தில் கட்டுப்பாட்டோடு அடைத்து வைத்திருந்தார்கள். உன்னை நான் வெளியே கொண்டு விட்டதும் உன்னால் அடக்க முடியவில்லை...''

''என்ன ... அடக்க முடியவில்லையா?''

''ஆமாம்... உன் உடம்பு உணர்ச்சிகளை உன்னால் அடக்க முடியவில்லை. அதான் அவிழ்த்துப் போட்டுவிட்டு ஆடாத குறையாய் கண்டவனுடன் சுற்ற ஆரம்பித்து விட்டாய்..''

''ச்சீ... உங்கள் அசிங்கமான கற்பனைகளை நிறுத்துங்கள்...!'' என்றாள் மதுரா ஆத்திரமாய் காதை பொத்திக் கொண்டு.

''நிறுத்துகிறேன். ஆனால் அதற்கு நீ ஒன்று செய்ய வேண்டும்...''

மறுபடியும் என்ன சொல்லப் போகிறான். வார்த்தையால் என்ன குத்து குத்தப் போகிறான் என்று பயந்தே மதுரா பார்த்தாள்.

அவள் நினைத்தது போலவே ஓங்கி இதயத்தில் குத்தினான்.

''உன்னை கோபுரமாய் நினைத்து பூஜித்துவிட்டேன். ஆனால் நீ குப்பை மேடு என்று இன்று தெரிந்து விட்டது. அதனால் பரவாயில்லை. ஒருநாள் என்னுடன் படுக்கைக்கு வந்துவிடு. உன்னுடைய உணர்ச்சிகளுக்கு வடிகாலாய் நானும் ஒருநாள் இருந்து விடுகிறேன்... எனக்கும் உன்னுடன் பழகின தோஷத்திற்கு திருப்தி கிடைத்துவிடும்...''

சம்மட்டியாய் வார்த்தைகள் மதுராவின் இதயத்தினுள் இறங்கியது. நெருப்பில் அகப்பட்ட புழுவாய் துடித்தாள். ஆனால் சத்யன் அத்தோடு அவளை விட்டுவிடுவதாயில்லை.

''என்ன யோசிக்கிறாய்? பணம் தருவானா மாட்டானா என்றா? கவலையே படாதே. கட்டு கட்டாய் தருகிறேன்... வாங்கிக் கொள்கிறாயா?''

பர்ஸை எடுத்து வேறு காட்டினான் சத்யன். அவனை எரித்துவிடுவது போல் மேலும் மேலும் முறைத்தாள் மதுரா.

''ஸ்ஸ்... ஆத்திரப்படாதே...! அவசரமில்லை கொஞ்சம் யோசித்து புத்திசாலியாக நடந்து கொள். என் மாதிரியான

பணக்கார கஸ்டமர்களை பிடித்து வைத்துக் கொண்டால் உனக்கு ரொம்பவும் நல்லது. எதிர்காலத்தில் நீ உன் போன்ற பெண்களை வைத்து ஒரு தொழில் சாம்ராஜ்யமே அமைத்துக் கொள்ளலாம் என்ன சொல்கிறாய்?''

அவளைக் கேள்விகளால் குத்து குத்தென்று குத்தி நாராய்க் கிழித்துப் போட்டவாறு அங்கிருந்து கிளம்பிப் போனான் சத்யன்.

தோய்ந்து போன நூலாய் நடைப்பிணம் போல் ஆட்டோ ஒன்றை பிடித்து மதுரா ரூமிற்கு போய் சேர்ந்தாள்.

14

சத்யன் வீட்டிற்கு திரும்பியவனுக்கும் ஒன்றும் ஓடவில்லை. தன் ரூமில் இரை தேடும் புலிபோல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். மதுராவை பாஸ்கருடன் பார்த்தது அவனது கனவுக் கோட்டையை நொறுக்கி தூள் தூளாக்கியிருந்தது.

அன்பு இல்லத்தில் கட்டுப்பாட்டோடு வளர்ந்தவள் நகரச் சூழ்நிலையில் இப்படி தறிகெட்டு போய்விட்டாள் என்றே நம்பினான். கூட இந்த அந்த தடியன் யாரென்று தெரியவில்லை. தெரிந்தால் நாலு சாத்து சாத்திருக்கலாம்! ஆனால் அதைவிட...

அதைவிட... மனதுக்குள் கோபுரமாய் பூஜித்தவள் குப்பை மேடாய் போய்விட்டாளே? அவளுக்கு என்ன தண்டனை கொடுப்பது? தன் புனிதமான மனக்கனவுகளை தரைமட்டமாக்கி தன்னை வஞ்சித்து விட்டவளை எப்படி பழி வாங்குவது?

ஆக்ரோஷமாய் மதுராவைக் கடித்துக் குதறும் உணர்வுடன் சத்யன் நடமாடினான். அந்தச் சிந்தனையாலே அவனுக்கு அன்றைய தூக்கமும் போயிற்று.

மறுநாள் மதுரா வேலைக்கு கிளம்பியவளுக்கு அலுவலகம் செல்லவே இஷ்டமில்லை. எப்படிச் செல்ல? அங்குதான் கையில் வேலை வைத்துக் கொண்டு அவளைக் குத்திக் கிழிக்க தயாராய் சத்யன் காத்திருப்பானே?

தளர்வான நடையுடன் கிளம்பியவள் சிறிது தூரம் நடந்ததுமே எண்ணங்கள் மாற, உயிர் வந்தது போல் நிமிர்ந்து கொண்டாள்.

அவள் செய்யும் பணி எவ்வளவு தூய்மையான விஷயம். அதில் போய் சேற்றைப் பூசுகிறானே? அவன் சொல்லிவிட்டால் அது உண்மையாகி விடுமா?

அவளை மரியாதைக் குறைவாய் எவ்வளவு கேவலமாய் நினைத்து விட்டான்!

உணர்ச்சிகளை அடக்க முடியாமல் ஆண் துணைக்கு அலைகிறாளாம்...? என்ன ஒரு கீழ்த்தரமான பழி?

அது... அவள் கை பிடித்து அழைத்து வந்த அவர் யாரென்று இவனுக்குத் தெரியுமா? தெரிந்தால் இப்படியெல்லாம் பேசுவானா?

அவசரக்காரன்... ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதை போல பேசிவிட்டான். இதைப் பெரிசுபடுத்துவதோ இதற்காக வருந்துவதோ பெரும் முட்டாள்தனம்! தனக்குத்தானே பேசி முணுமுணுத்துக் கொண்டு விறுவிறுவென மதுரா நடந்தாள்.

அலுவலகத்தில் எந்தவித உணர்ச்சியுமில்லாமல் நுழைந்தவள் நேராக தன் இருக்கைக்குச் சென்று வேலைகளை கவனிக்க ஆரம்பித்து விட்டாள். நேரமாக ஆக, அக்கவுண்டிங் லெட்ஜர், டேலி ஷீட், டெலிவரி வவுச்சார், என எத்தனை வேலைப் பளுக்களையும் தன் மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு மனம் சஞ்சலப்படாதவாறு வேலைகளில் மூழ்கியே விட்டாள் மதுரா.

அப்படி மூழ்கிவிட்டதால் வழக்கம்போல் அடிக்கடி ஜன்னல் வழியே சத்யனின் கார் வருகிறதா என்று பார்ப்பது கூட மறந்து போயிற்று.

அதனால்தானோ .. என்னவோ கொஞ்ச நேரத்தில் தற்செயலாக முன்புறம் நிமிர்ந்தவள் அப்படியே திடுக்கிட்டு விட்டாள்.

அவளுக்கு முன்னால் எதிர் சேரில் சத்யன் கைகளை கட்டியபடி... அவளையே விழுங்குவது போல் பார்த்துக் கொண்டு...! எப்போது இவன் வந்தான்? எப்போது உட்கார்ந்தான்?

அட... கழுகு இரை தேடுவது போல் என்ன ஒரு பார்வை?

முன்பு அவன் பார்த்த பார்வையில் கனிவு இருக்கும். இப்போது அவனது பார்வையில் காமம் அல்லவா தெரிகிறது? பார்வையாலே கற்பழித்து விடுவது போல் என்ன ஒரு பார்வை!

உணர்ச்சி அடக்க முடியாமல் தவிப்பவன் இவனல்லவா? அதை விட்டுவிட்டு அவள் மீது பழி போடுகிறான்.

மதுராவிற்கு அப்படி அவனை எதிரில் பார்த்த அதிர்ச்சியில் ஒருகணம் பேச்சே வரவில்லை.

சத்யனும் லேசில் பேசுவதாய் இல்லை.

அவளையே கூசச் செய்யும் உரித்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தான். இந்த அழகை வைத்துக் கொண்டுதானே என்னமாய் மயக்குகிறாள்! என்னமாய் நடிக்கிறாள்!

சிவப்புத் தோலும், செழிக்கும் இளமையுமாய் பேரழகியாய் இருக்கும் திமிர்தானே இப்படி நடக்கச் செய்கிறது? இதை கடித்து குதறி அனுபவித்து விட்டால்...?

அதற்கு மேல் மதுராவால் பொறுக்க முடியவில்லை.

''எதுவானாலும் கண்களைப் பார்த்து பேசலாம்...'' என்றாள் வெடுக்கென கொட்டுவது போல்.

அவளது பேச்சு சாட்டையடியாய் சத்யனுக்கு விழுந்திருக்க வேண்டும்.

நிமிர்ந்து அடிப்பது போல் அவளைப் பார்த்தான்.

''உன் சதையைப் பார்க்க ஒன்றும் நான் வரவிலலை..'' என்றான் மேலும் கோபமாக...

''அப்படியானால் பார்வையை அலையவிடாமல் கண்களை நேராய் பார்த்து பேசலாம்...'' என்றாள் விடாப்பிடியாக.

''பயம் எனக்கு இல்லை...''

''எனக்கும் பயம் இல்லை...'' என்றாள் மதுரா.

''திமிர் பிடித்த கழுதைகள் பயப்படுவது இல்லை..''

''அது... இன்னொரு கழுதைக்கு புரிந்தால் சரி...'' என்றாள் பதிலடி கொடுத்தவளாய்.

சத்யன் அவளையே ஒரு கணம் உறுத்து முறைத்தவன்.

''வெட்டிப் பேச்சு வேண்டாம்... உன்னிடம் ஒரு விஷயம் பேச வந்தேன்...'' என்றான் காரியம் ஞாபகம் வந்தவனாய்.

''என்ன விஷயம்?'' என்றாள் மதுராவும் சட்டென தாவி விட்ட இயல்புக் குரலில்.

''இன்று மாலை அந்த ஜெர்மன் பார்ட்டி எக்ஸ்போர்ட் ஆர்டர் விஷயமாய் சந்திக்க வருகிறார்கள். சந்திப்பு ஹோட்டல் ட்ரீம்லாண்ட்டில் நடக்க இருக்கிறது...''

''இருக்கட்டும்...''

''அதனால் நீயும் என்னுடன் மாலை ஹோட்டலுக்கு வருகிறாய்..''

''நானா...?'' என்றாள் மதுரா வியந்த குரலில்.

''ஆமாம். கம்பெனியின் ஆடிட்டிங், டர்ன் ஓவர் பற்றி புள்ளி விவரங்களை நாம் பார்ட்டிக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். அதற்கு உன் உதவி தேவை...''

சத்யன் சொல்லிவிட்டு அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தாள். அவள் யோசித்தது அவன் எரிச்சலைக் கூட்டியது.

''என்ன யோசிக்கிறாய்? மற்ற விஷயங்களில் காட்டும் உன் அதீத திறமையை கொஞ்சம் வேலையிலும் காட்டலாமே?'' என்று மீண்டும் அவன் குத்த ஆரம்பிக்கவும் மதுரா அவசரமாய் சம்மதித்தாள்.

''வருகிறேன்....'' என்றாள் ஒற்றைச் சொல்லாக.

சத்யன் அதற்கு மேல் ஒரு வார்த்தை பேசாமல் அவளை ஒரு ஆழமாக பார்த்து விட்டு எழுந்து போனான். அவன் கண்களில் அப்படி மின்னியது கனிவா? இரக்கமா? இல்லை கடித்துக் குதறும் காமமா?

ஒன்றும் புரியாதவளாய் மீண்டும் வேலைகளில் ஆழ்ந்தாள் மதுரா.

மாலை ஐந்து மணிக்கு டாணென சத்யன் ரூமிற்கு வந்து விட்டான்.

அவன் கரெக்டாய் வந்து விடுவான் என்பதையறிந்த மதுராவும் தயாராகவே இருந்தாள்.

''என்ன கிளம்பலாமா?'' என்றான் அவளையே அளவெடுத்தவாறு.

மதுரா அவனை அசந்து பார்த்தாள். வழக்கமாய் புல் சூட்டில் இருப்பவன் இன்று டீ ஷர்ட்டும் ஜீன்சுமாய் கச்சிதமாய் இருந்தான். அவனது ஆறடி உயரத்திற்கு திடமான உடல்வாகு கம்பீரத்திற்கு அது ரொம்பவும் பொருத்தமாயிருந்தது.

மஞ்சள் டீ ஷர்ட் தழுவியிருந்த அவனது பரந்த மார்பில் அப்படியே தலைவைத்து தூங்கிவிட்டால் என்ன என மதுராவிற்கு நினைப்போடியது. மறுகணமே சிலுப்பிக் கொண்டாள். சே! என்ன ஒரு நினைப்பு! நான் முன்பு பார்த்த கனிவான சத்யன் எங்கே? வீணாக சந்தேகப்பட்டு தன்னை கடித்துக் குதறும் இவன் எங்கே?

அவள் யோசனை அவனுள் குறுகுறுப்பைக் கூட்டியது. மறுபடியும் குத்த வாய்ப்பைத் தேடினான் சத்யன்.

''என்ன அம்மணி ரொம்ப யோசிப்பதாய் தெரிகிறது. மேட்சிங் சரிதானே? கவர்ச்சி போதும்தானே?'' என்றான்.

அவன் என்ன கேட்கிறான் என்று புரியாமலே,

''சரிதான்...!'' என்றாள் மதுரா.

மெள்ள அவள் கிடைத்தது போல் அவன் முகம் மாறிற்று.

''ஆண்களுக்கு இந்தக் கவர்ச்சி போதும். உன் போன்ற பெண்களுக்கு...'' என்று இழுத்தவன், ''கொஞ்சம் சேலையை அவிழ்த்துவிட்டால் போதும். தானாக கவர்ச்சி கூடிவிடும்...'' அவள் முறைப்பை பொருட்படுத்தாமல் வார்த்தைகளை முடித்தான்.

இவனுடன் பேசுவது முட்டாள்தனம் என்று எண்ணிய மதுரா, தேவையான பைல்களையும் ஹாண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு விறுவிறுவென கிளம்பினாள்.

சத்யனிடம் எழுந்த குறுஞ்சிரிப்பு மர்மப் புன்னகையாய் மாறியது.

அதே மர்மப் புன்னகையுடன் கார் கதவைத் திறந்து அவளை ஏற்றிக் கொண்டு கிளம்பினான்.

ஹோட்டலை அடையும் வரை இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

'ஹோட்டல் ட்ரீம்லாண்ட்' பணக்காரர்களின் சொர்க்கம் என்று சொல்வதற்கேற்ப இருந்தது. மதுரா இதுபோன்ற நட்சத்திர ஓட்டலுக்கு வருவது இதுவே முதல் முறையானதால் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சத்யன் காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு வந்தவன் மதுரா பிரமித்தபடி ஹோட்டலை, ஹோட்டலில் இடுப்போடு இடுப்பு அணைத்தபடி ஆவலாய் நுழையும் ஜோடிகளை வியப்பாய் பார்ப்பதை கவனித்தான்.

அவன் கண்களில் குறுகுறுப்பு கூடியது.

டக்கென மதுரா பக்கம் நெருக்கமாக வந்தவன், 'வா'... என்றபடி அவளது பளீரிட்ட சின்ன இடையை அணைத்துப் பிடித்தபடி விறுவிறுவென உள்ளே நுழையப் போனான்.

சத்யனின் கை தனது இடையை காதலியை தழுவுவது போல் தழுவியதைக் கண்டு மதுரா கொதித்துதான் போனாள். ச்சீ! என மறுகணமே தட்டி விட்டாள்.

சத்யனும் அதை பொருட்படுத்தவில்லை! அட... நல்லாத்தான் சிலிர்த்துக்கிற...! என்றபடி உள்ளே நடந்தான். நேராய் இருவரும் மங்கிய விளக்கொளியில் மூழ்கியிருந்த அந்த பெரிய ஹாலுக்குள் நுழைந்தனர்.

ஹாலில் நடுநாயகமாக இசைக்குழுவினர் இரைந்து மேற்கிந்திய இசையை இசைத்துக் கொண்டிருந்தார்கள். வரிசையாய் பாலிமர் இருக்கைகள் போடப்பட்டிருக்க... ஓரமான இருக்கை ஒன்றில் இருவரும் அமர்ந்து கொண்டனர்.

மதுரா ஒருகணம் முன்பு போல் நிஜமான மகிழ்ச்சியான நிலையில் இங்கு சத்யனோடு வந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என எண்ணிப் பார்த்தாள். அதற்குத்தான் இடமில்லாமல் போயிற்றே! அவளை மட்டரகமாக எண்ணி நுவைத்து துவம்சம் பண்ண அல்லவா சத்யன் உருவெடுத்து விட்டான்...! மனதுள் எண்ணியபடி சத்யன் மீது பார்வையை விட்டவள் அதிர்ந்தாள்.

சத்யன் அவனுக்கு நேர் எதிராய் அரைகுறை ஆடையுடன் அமர்ந்த வெளிநாட்டுப் பெண்ணை விழுங்காத குறையாய் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் முன்னே வேறு ஓர் பெண்ணை ரசிப்பதாவது?

மதுரா அதை சகிக்க முடியாமல், ''வந்த காரியம் மறந்து விடாமல் இருந்தால் சரி...'' என்றாள் அவன் காதுபடும்படி.

சத்யன் உணர்வுக்கு வந்தவனாய் திரும்பியவன்.

''ஆமாம் ஆமாம்... அழகுப் பெட்டகமான உன்னை முன்னால் வைத்துக் கொண்டு இன்னொருத்தியை ரசிப்பது தவறுதான்...'' என தனது கழுகுப்பார்வையை முழுமையாய் அவள் பக்கம் திருப்பினான். அவனுக்கு பிடித்தமான உரித்த பார்வையில் மதுராவை ரசித்து பார்க்க ஆரம்பித்தான்.

இது என்ன வம்பு...! வேலியில் ஓடுகிற ஓணானை எடுத்து மடியில் கட்டிக் கொண்ட மாதிரி மதுரா தவித்தாள். மறுகணமே பேச்சை மாற்றுபவளாய், ''அவர்கள் வந்து விடுவார்களா?'' என்றாள்.

''யார்?'' என்றான் சத்யன் புரியாதவன் போல் புருவம் உயர்த்தி.

''அதான் அந்த ஜெர்மன் பார்ட்டி.''

''ம்ம்... வந்து விடுவார்கள்..''

அவன் சொல்லி முடித்ததும் ஹோட்டல் பணியாள் வந்து காதில் ஏதோ சொல்லிவிட்டுப் போனான்.

அவன் சென்றதும் சத்யன், ''ஹோட்டலில் டபுள் பெட் ஏ.ஸி ரூம் தயாராக இருக்கிறதாம்...'' என்றான்.

''எதற்கு?'' என்பது போல் மதுரா பார்க்க, ''நீ.. தயார் என்றால் அதற்கு நானும் தயார்தான்...!'' என அவள் முறைப்பை பொருட் படுத்தாமல் கண் சிமிட்டியதும் முடிக்கவும் செய்தான் சத்யன்.

உதடுகளை அலட்சியமாய் அவனைப் பார்த்து சுழித்துவிட்டு மதுரா முகம் திருப்பினாள்.

மதுரா அவன் பக்கம் திரும்பாமல் வெளியே அலட்சியப் பார்வை பார்த்தாள். சத்யனிடமிருந்து குறும்பான மர்மப்புன்னகை பெரிதாகியது. அப்போதுதான் ஒரு விஷயத்தை கவனித்தாள் மதுரா.

அந்த பெரிய ஹால் முழுவதும் ஆண்களும் பெண்களுமாய் எல்லோரும் ஜோடிகளாகவே உட்கார்ந்திருந்தனர். எல்லோரும் வெடிக்கும் உதட்டுச் சாய சிரிப்புடன் கைகளில் கோப்பைகள் மின்ன அமர்ந்திருந்த விதம் மதுராவுக்கு முதல் முறையாக சந்தேகத்தை உண்டு பண்ணியது.

இந்த இடத்தில் ஜெர்மன் பார்ட்டியுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமா? பேசக்கூடிய இடமா இது?

அவள் சந்தேகத்தை அதிகரிக்கும் வண்ணம் ஹாலில் இருந்த அரை வெளிச்சங்கள் பட்டென அணைந்து போய் மினுக் மினுக் கென டிஸ்கோ லைட்டுகள் ஒளிர ஆரம்பித்தன. மேடையிலிருந்த இசை ஒலிகள் வேகம் கூடின. ட்ரம்ஸ் இசை அதிர்வாய் எழும்பியது.

அவ்வளவுதான் எல்லா ஜோடிகளும் இருக்கையை விட்டு எழுந்துவிட்டனர். ஒருவரையொருவர் இடையோடு இடையாய் கட்டித் தழுவியபடி ஒலிக்கும் இசையின் சுருதிக்கேற்ப ஆட ஆரம்பித்துவிட...

சத்யனும் பட்டென இருக்கையை விட்டு எழுந்தவன் மதுராவைப் பிடித்து இழுத்தான்.

அவன் இழுத்த வேகத்தில் நிலை தடுமாறி அவன் மேலேயே விழுந்தாள் மதுரா.

இருந்தும் அவசரமாய் விலகியவள் சீறும் பாம்பாய் அவனை முறைத்து, ''என்ன இது? விடுங்கள்...!'' என்றாள் அலறாத குறையாய்.

விலகியவளை விடாமல் தாவிப்பிடித்துக் கொண்டான் சத்யன்.

''ச்சூ! விடுங்கள், என்ன இது விளையாட்டு?''

வெகுண்டு பார்த்தவளை அலட்சியமாய் ஏறிட்டான்.

''விளையாட்டா? வந்ததே இதற்குத்தானே!''

''என்ன இதற்கா? அப்படியானால் ஜெர்மன் பார்ட்டி?''

''எல்லாம் கப்ஸா. இதுபோன்ற கேளிக்கை விடுதியில் பிஸினஸ் டீலிங் பேச வாய்ப்பே இல்லை என்பது உன் மூளைக்கு இன்னும் புரியாமலா போயிற்று?''

''அப்படியானால்...?''

கேள்விக்குறியுடன் மதுரா முறைக்க ஏளனமாகச் சிரித்தான் சத்யன்.

''வேறென்ன? கண்டவனுடன் கூத்தடிக்கிறாய் என்னுடன் ஒருநாள் கூத்தடித்தால் குறைந்தா போய்விடுவாய்? அதான் கூட்டி வந்தேன்... வா! உடம்போடு உடம்பு உரச ஆடுவோம்..!''

சிரித்தபடி சொன்னான். சத்யனின் நினைப்பு புரிந்தது.

சே! என்ன ஒரு மட்டமான நினைப்பு! வெகுண்டு போனவளாய் அங்கிருந்து திமிறிக் கொண்டு ஓட முயன்றாள் மதுரா.

அவளை கோழிக்குஞ்சுபோல் அமுத்திப் பிடித்துக் கொண்டான் சத்யன். அவள் காதுகளில், ''அதோ பார் இங்கிருந்து நீ நினைத்தாலும் போக முடியாது. இந்த ஹாலின் கதவை பூட்டி வைத்திருப்பார்கள். நட்னம் முடிந்ததும்தான் திறந்து விடுவார்கள். பேசாமல் என்னுடன் ஆடு...!'' என்றான்.

மதுரா திரும்பி கதவுகளைப் பார்த்தாள். சத்யன் சொன்னபடியே பணியாட்களால் அது மூடப்பட்டிருந்தது. பக்கத்திலோ மேற் கிந்திய இசைக்கேற்ப ஜோடிகள் தலைதெறிக்க ஆடிக் கொண்டிருந்தார்கள்.

''பார்! வாழ்க்கையை எப்படி அனுபவிக்கிறார்கள். அப்படித் தான் அனுபவிக்க வேண்டும்! கமான் க்விக்! ஆடு...!'' என்றபடி ஒருகையால் அவளது சிறு இடையை அணைத்துக் கொண்டு மறுகையோடு கை கோர்த்துக் கொண்டு பிடிவாதமாய் இசைக் கேற்ப சத்யன் ஆட ஆரம்பித்தான். அவளையும் அவனுடன் சேர்த்து ஆட வைத்தான்.

அலுவலகத்தில் நெடுநேரம் வேலை பார்த்த உடம்புச் சோர்வும், மனச்சோர்வும் ஒருசேர எழுந்து மதுராவை வாட்டியது.

ரொம்பவும் தளர்வாய் உணர்ந்தாள். சத்யனிடம் போராடி விடுபட அவளிடம் பலமும் இல்லை. சத்யன் இரும்புப் பிடியாய் அவளைப் பிடித்திருந்தான். அவன் இழுத்த இழுப்பிற்கு அவள் உடல் வலுவில்லாமல் போனது.

சத்யன் வெறி வந்தவன் போல் ஆடியவன் இசை உச்சமாகிப் போன ஒரு கட்டத்தில் அப்படியே அவளை நெஞ்சோடு

வாரியணைத்து மேலும் இறுக்கியவன் அவளது சின்ன உதடுகளில் தனது உதடுகளைப் பொருத்தினான். அழுத்தமாய் முத்தமிடவும் ஆரம்பித்தான்.

15

சத்யன் இதழோடு இதழாய் மதுராவை முத்தமிட்டுக் கொண்டிருந்தான். மதுரா தளர்வான நிலையில் சுயநினைவு இழந்திருந்தாள். அழுது அடம்பிடித்த குழந்தைக்கு ஆசைப்பட்ட பொருள் கிடைத்து விட்டதுபோல் அவன் கரங்களில் தன்னிலை மறந்து துவண்டாள். அப்படியே அவனோடு ஐக்கியமானவள் ஒன்றியும் கொண்டாள்.

சத்யன் அவள் மலர் முகத்தை நிமிர்த்தி முகத்தோடு உரசியவன் மீண்டும் மீண்டும் முத்தமிட்டான். தன்னிலை மறந்து தன் கையில் துவண்டு கொண்டிருந்த அவளை ரசித்துப் பார்த்தவன், ''என்ன ஒரு தவிப்பு! இதற்குத்தானா.. இத்தனை ஆர்ப்பாட்டமும்...?'' என காதுபட முணங்கவும் செய்தான்.

சத்யன் முணங்கியது அவளது காதுகளில் உரைத்து செய்தியாய் மூளைக்குப் போன போதுதான் மதுராவிற்கு உணர்வே வந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் உணர்வுக்குத் திரும்பியவள் திடுக்கிட்டும் போனாள்.

காதல் ரசம் சொட்ட சொட்ட... இறுக்கமாய் சத்யனுடைய அணைப்பில் மெய்மறந்து கொண்டு... எப்படி எப்படி இது நிகழ்ந்தது? எப்படி தன்னிலை வசம் இழந்தேன்? எப்படி இதற்கு உடன்பட்டேன்?

தவித்தவள் கோபமும் அவமானமும் தாக்க ஆவேசமாய் அவன் பிடியிலிருந்து விலகினாள். அவளின் அந்த சிலிர்ப்பான கோபத்தை ரொம்பவும் ரசித்தான் சத்யன்.

''முத்தம் பிரமாதம்.. தித்திப்பாக இருந்தது...'' என்றான் வேண்டுமென்றே அவளை ஆவேசப்படுத்த.

''உங்களுக்கு வெட்கமாயில்லை?'' என்றாள் மதுரா ஆத்திர மாக.

''வெட்கமா? எனக்கா? உனக்குக் கூடத்தான் வெட்கம் இல்லை. என் உதடுகள் கிடைத்ததும் காணாததை கண்டது போல் என்னமாய் சொக்கி முத்தமிட்டாய்?''

''ச்சீ... அசிங்கமான பேச்சு!'' உதட்டளவில் மதுரா சொன்னாலும் உள்ளுக்குள் குறுகுறுப்பாய் உணர்ந்தாள். சத்யன் சொல்வது நிஜம்தானே? அவன் முத்தமிட்டதும் காணாததை கண்டது போலத்தானே மதியிழந்து சொக்கி விட்டாள் சொக்கி...!

அப்படியானால் உள்ளுக்குள் என்னதான் அப்படி நினைப்பு ஓடுகிறது? மதுரா மறுபடியும் தவிக்க ஆரம்பிக்க சத்யனுக்கு அது சாக்காய் போயிற்று.

''என்ன யோசிக்கிறாய்? உண்மை புரிந்து விட்டதா? முத்தம் ஆரம்பம்தான். அடுத்த நெருக்கமான விஷயத்திற்குப் போவோ மா?'' என்றதும் மேலும் வெகுண்டவளாய் விறுவிறுவென நடக்க ஆரம்பித்தாள்.

அதற்குள் ஹாலில் ஆட்டமும் இசையும் முடிந்திருக்க... ஹாலின் நுழைவாயில் திறக்கப்பட்டது. விடுவிடுவென வெளியேறினாள் மதுரா.

அவள் சிலிர்த்துப் போகும் அழகை வெகுவாய் ரசித்தபடி சத்யன். பின் தொடர்ந்தான். அதற்குப்பின் இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

சத்யன் காரை எடுத்ததும் இயந்திரம் போல் மதுராவும் ஏறிக்கொண்டாள். சத்யன் நேராய் காரை அவள் ஹாஸ்டல் ரூம் முன் நிறுத்தியதும் இறங்கிக் கொண்டாள். காரின் கதவை விரைந்து சாத்தியவள் திரும்பிப் பாராமல் நடந்து ஹாஸ்டலுக்குள் சென்று விட்டாள்.

மதுரா சென்ற பிறகும் காரைக் கிளப்பாமல் கொஞ்ச நேரம் அப்படியே வெறித்திருந்து விட்டு கிளம்பிப் போனான் சத்யன்.

தன் ரூமிற்கு போய் கட்டிலில் தளர்வாய் பொத்தென விழுந்தாள் நடந்ததை நினைத்து உடம்பு முழுவதும் நடுங்கிற்று.

சத்யனின் இன்றைய பேச்சு, நடவடிக்கை எல்லாம் அவளை ரொம்பவும் பாதித்துவிட்டது. ஏன்? எதற்கு? இவன் என்ன அப்படி? எத்தனை பேரை பார்த்திருக்கிறாள்? எத்தனை பேர் அவளிடம் வாலாட்ட முயன்று... அவளும் ஒட்ட நறுக்கியிருக் கிறாள்...?

ஆனால்... இந்த சத்யன்? இவனிடம் எதுவும் முடியவில் லையே! அவளுடைய கோபம் இவனிடம் பலிக்கவில்லையே! ஏன்? எதனால்? எப்படி இது நிகழ்ந்தது?

மதுரா புரியாமல் ரொம்ப நேரம் தவித்தாள். பாதிப்பின் அர்த்தம் என்ன என்று தேடினாள். அர்த்தம் தெரிந்தது. நிஜம் புரிந்துபோது நிஜம் அவளை மேலும் கவலைக்குள்ளாயிற்று.

16

அலுவலகத்தில் வந்து அன்று வேலை யில் ஆழ்ந்தவளுக்கு மனம் கொஞ்சமும் லயிப்பில்லை. புயலாய் சத்யன் எப்போது நுழையப் போகிறான், நுழைந்து அவளை என்ன வாட்டு வாட்டப் போகிறான் என்ற பயமே பிசைந்தது.

அவள் நினைத்தது போல அன்று அவளுக்கு பெரும அதிர்ச்சியைக் கொண்டு வந்திருந்தான் சத்யன். காரிலிருந்து அவனுடன் மினுக்கிக் குலுக்கி இறங்கினாள் அந்தப் பெண்.

இருபது வயது இருக்கும். நல்ல மாநிறம்தான். ஆனால் அதற்கு வெள்ளையடிப்பது போல் ஒரு வண்டி பவுடரை, ஸ்நோ க்ரீம்களை தடவி வைத்திருந்தாள். காதுகளில் ஊசலாடும் சாவிகள் லேட்டஸ்ட் பேஷனாம். கண் இமைப்பகுதியில், புருவங்களில் அதீதமாய் தடவப்பட்ட மினுமினுப்பு லோஷன். லோ ஹிப்பில் பளபளப்பான சில்க் ஸேரி. சினிமா நடிகை போல் கட்டாயம் தொப்புள் சுழி தெரிய வேண்டும் என்பதில் சிரத்தையெடுத்திருந்தாள். முந்தானையை ஏறக்குறைய விலக்கியே விட்டிருக்க...

அந்த அலட்டல்காரியை பெரும் மகாராணியைக் கூட்டிச் செல்வது போல் வழிநடத்தி தன் ரூமிற்கு கூட்டிச் சென்றான் சத்யன்.

அந்தப் பெண்ணையே வைத்த கண் வாங்காமல் பார்த்த மதுராவுக்கு என்னவோ போல்தான் இருந்தது. அவள் இடித்து அணைக்காத குறையாய் சத்யனுடன் நடந்த விதம், கொஞ்சிக் குலவி நொடிக்கொருதரம் சிரித்த அவளது போக்கு எல்லாம் மதுராவுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

ரூமிற்குள் சென்று கதவு சாத்திக் கொண்டதும் மதுராவால் பொறுக்க முடியவில்லை. பரபரப்பு கூடியவளாய் கதவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரத்தில் அவள் நினைத்தது போலவே இண்டர்காமில் 'வா'... என்று ஒற்றைச் சொல்லாய் அழைத்தான் சத்யன்.

மதுரா எந்த உணர்ச்சியும் காட்டாமல்தான் உள்ளே சத்யனின் ரூமிற்குள் நுழைந்தாள். ஆனால் உள்ளே அவள் கண்ட காட்சி

அவள் உணர்ச்சிகளையெல்லாம் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டி விட்டது.

உள்ளே சத்யன் சேரில் கம்பீரமாய் உட்கார்ந்திருக்க... அவன் கழுத்தை வளைத்து கை போட்டபடி சேரின் விளிம்பில் அந்தப் பெண் சத்யனை இடித்து அணைக்காத குறையாய் அவள் உட்கார்ந்திருந்தாள்.

இப்படியும் ஆட்கள் இருக்கிறார்களா? என்ற வியப்பும் அதிர்ச்சியுமாய் அவர்களைப் பார்த்தாள். கண்களில் கண்ட காட்சி எரிச்சலை மூட்டி பெரும் ஆத்திரமாக்கியது.

ஆனால் அவள் ஆத்திரத்தை கொஞ்சமும் சட்டை செய்யாதவனாய் சத்யன், ''இவள் யார் தெரிகிறதா? லலிதகுமாரி, என்னுடைய பர்சனல் செகரெட்டரி...'' என்று அறிமுகப்படுத்தவும் செய்தான்.

அவன் அறிமுகப்படுத்தியதும் அந்த அலட்டல் லலிதகுமாரி நிமிர்ந்து மதுராவை ஒரு அலட்சியப் பார்வை பார்த்தாள்.

சத்யன் அவள் பக்கம் திரும்பி, ''லலித், நான் சொன்ன மதுரா இதுதான்!'' என கை காட்டவும் செய்தான்.

லலித்தாம்! நான் சொன்ன மதுராவும்... அப்படி என்ன சொல்லி விட்டான் இந்த சத்யன்? சினம் தாக்கியவளாய் வெகுண்டு போய் பார்த்தாள்.

லலிதகுமாரி மதுராவை அறிமுகப்படுத்தியதும் எழுந்து அவள் பக்கத்தில் வந்து கைகளை குலுக்கினாள். வேண்டா வெறுப்பாய் கைகளை கொடுத்தாள் மதுரா.

லலிதகுமாரி அத்துடன் நிற்கவில்லை. கை கொடுத்த அதே வேகத்தில் மதுராவைக் கட்டிப் பிடித்து ஆங்கில பாணியில் கன்னத்தில் முத்தம் கொடுக்கவும் போனாள்.

'ச்சீ! என்ன இது நாகரீகம்?' என்று அதிர்ந்து சிவந்த மதுரா அதைத் தவிர்த்தாள். அவள் கைகளைத் தட்டி விட்டாள். லலித குமாரியின் முகம் சுண்டிப் போய் விட்டது. எல்லாவற்றையும் கவனித்த சத்யன், ''கவலைப்படாதே லலிதா. அவளுக்கு முத்தம் பெண்கள் கொடுத்தால் பிடிக்காது. ஆண்கள்தான் கொடுக்க வேண்டும்...'' என்று முத்தாய்ப்பாய் மதுராவின் முறைப்பை பொருட்படுத்தாமல் சொன்னான்.

மதுராவுக்கு அதற்கு மேல் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை.

விருட்டென திரும்பி வெளியேறிப் போனாள்.

''நில்!'' என்று அவளை நிறுத்தியது சத்யனின் குரல்.

''உன்னை வரச் சொன்ன காரணம் முடியவில்லை. அதற்குள் ஓடப் பார்க்கிறாய்...''

''என்ன?''என்பது போல் வெடுக்கென மதுரா அவனது முகத்தையே பார்த்தாள்.

சத்யன் நிதானமாய் அவள் முன் வந்து கைகளை கட்டி நின்று கொண்டான். ''நாதன் கம்பெனிக்கான டெண்டர் லெட்டர் ஒன்றை டிக்டேட் செய்ய வேண்டும். சொல்கிறேன்...'' என்றபடி சத்யன் திரும்பி லலிதகுமாரியை பார்த்தவன், ''லலிதகுமாரி, கொஞ்சம் இப்படிவா..'' என்றான்.

சத்யன் அழைத்ததும் குதி போடாத குறையாய் துள்ளி அவன் பக்கத்தில் போனாள் லலிதா. அவள் இடையை தன் கரங்களால் வளைத்து அவளை தன்னோடு அப்படியே அணைத்துப் பிடித்துக் கொண்டான். லலிதகுமாரியும் அவனோடு அப்படியே ஒட்டிக் கொண்டாள். கரங்களால் அவனது கழுத்தை மாலை போல் பிடித்துக் கொண்டாள்.

மதுரா தவித்துப் போனாள்.

என்ன ஒரு காட்சி! அவள் கண் முன்னே சத்யன். இன்னொரு பெண்ணை காதலி போல் கட்டிப் பிடித்துக் கொண்டு... சரஸமாடும் மன்மதன் ரதி போல் இருவரும் போஸ் கொடுத்துக் கொண்டு...?

சிவந்து போன மதுராவை மேலும் சிவக்க வைத்தவனாய் சத்யன், ''மதுரா, அந்த நாதன் கம்பெனிக்கான லெட்டரை, இப்போது டிக்டேட் செய்கிறேன், குறிப்பெடுத்துக் கொள்கிறாயா?''என்றான்.

சத்யன் சொல்லச் செல்ல மதுராவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.

இவன் மன்மத ரசம் சொட்டச் சொட்ட இன்னொரு பெண்ணுடன் அவள் கண் முன் சரசமாடிக் கொண்டே லெட்டர் டிக்டேட் செய்வானாம். அவள் குறிப்பெடுக்க வேண்டுமாம்...?

சிவந்து சிலிர்த்துப் போன மதுரா மறுகணமே தனது உணர்வுகளையும் அடக்கினாள். அவன் சத்யன்... எப்படிப் போனால்... எந்தப் பெண்ணுடன் கூத்தடித்தால் அவளுக்கென்ன? அவனுக்காக அவள் ஒன்றும் உருகவில்லை! அவன் இன்னொரு பெண்ணுடன் கூத்தடிப்பதால் அவள் ஒன்றும் துடித்துப் போகவில்லை...

தனக்குத் தானே சொல்லிக் கொண்ட மதுரா இறுகிய முகத்தோடு கையிலிருந்த லெட்டர் பேடையும் பேனாவையும் உயர்த்திப் பிடித்து, ''ம்..ம்... சொல்லுங்கள்...'' என்றாள் அவன் முகம் பாராமலே.

சத்யன் கண்களால் ஊடுருவி அவளின் மன ஓட்டத்தை ஒரு கணம் படித்தான்.

பின் நிதானமாய் அதே மன்மத போஸில் லெட்டர் டிக்டேட் செய்ய ஆரம்பித்தான். ஒவ்வொரு வார்த்தையையும் மெல்ல உச்சரித்து அவள் மதுரா நிமிர்ந்து, ''என்ன சொன்னீர்கள்? பவர் ஆஃப் அதாரிட்டியா? இல்லை பவர் ஆஃப் அட்டானியா?'' என

லெட்டரின் ஒவ்வொரு வரிக்கும் சந்தேகம் கேட்கும்படி வைத்தான் ஒவ்வொரு வார்த்தைக்கும் உச்சரிப்பு புரியாமல் மதுரா நிமிர்ந்து அவனை... லலிதகுமாரியுடன் அவன் கட்டிப் பிடித்தபடி நிற்கும் மன்மத போஸை பார்க்கும்படி செய்தான்.

மதுரா கஷ்டப்பட்டு மனதை திடப்படுத்தி இரண்டு வரிகள்தான் குறிப்பேட்டில் எழுதியிருப்பாள். அதற்கு மேல் அவளால் சகிக்க முடியவில்லை. தாங்க முடியாத எரிச்சலும் கோபமும் ஒருசேர அவளைத் தாக்கின.

வெகுண்டு போனவளாய் லெட்டர் பேடையும் பேனாவையும் மேஜை மீது வீசி விட்டு விறுவிறுவென்று ரூமை விட்டு வெளியேறினாள்.

சிலிர்த்துப் போன அவளது வேகத்தை ரசித்துப் பார்த்தவன் சத்யன். அவன் முகத்தில் குரூரத் திருப்தியொன்று புன்முறுவலுடன் ஓடியது.

தன் சீட்டிற்கு வந்து தளர்வாய் விழுந்தாள் மதுரா.

என்ன ஒரு சோதனை! அவளால் அந்தக் காரியத்தை, சத்யன் எவளுடன் எக்கேடோ கெட்டிருந்தால் என்ன என்று விட்டு விட்டு கடமையைச் செய்ய முடியாமல் ஏன் போயிற்று?

தவித்தவளாய் உட்கார்ந்திருந்தவளை வேண்டுமென்றே தேடி வந்தான் சத்யன்.

வந்தவன் நிதானமாய் எதிர் இருக்கையில் அமர்ந்து கொண்டு "அடடா! தேவிக்கு இவ்வளவு கோபம் வருமென நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை..." என்றான் போலியான வருத்தக் குரலில்.

தன்நிலையை அவன் நன்றாக படிக்க முயல்கிறான் என்று நினைத்த மதுரா அவசரமாய் சுதாரித்துக் கொண்டாள்.

"கோபம் எல்லாம் ஒன்றுமில்லை. நான் ஒழுங்காகத்தான் இருக்கிறேன்..." என்றாள் உணர்ச்சி ஏதுமில்லாத அமைதிக் குரலில்.

"பின் ஏன் லெட்டர் டிக்டேட் செய்வதற்குள் சகிக்க முடியாதவள் போல் ஓடி வந்து விட்டாய்?"

ஒரு கணம் மதுரா யோசித்தாள். உண்மை அதுதான். ஆனால் உண்மையை எப்படி அவளால் சொல்ல முடியும்?

"ம்ம்... சொல்லு..."

எதையோ பெரிதாய் கண்டுபிடித்து விட்டவன் போல் சத்யன் விரட்டினான்.

"அது...வந்து... நீங்கள் ஒரு நிலையில் இல்லாமல் உணர்வுகளின் பிடியிலிருப்பது போல் இருந்தது. மேலும் அப்படியொரு நேரத்தில் பிஸினஸ் லெட்டர் எழுதி இடைஞ்சலாக்க வேண்டாமேன்னுதான் வந்து விட்டேன்..."

"ஓஹோ..."

சத்யன் சொல்லிவிட்டு ஆழமாய் அவளைப் பார்த்தான்.

"மதுரா ஒன்று சொல்கிறேன், கவனமாய் கேட்டுக் கொள்..." என்றபடி பெரு மூச்சிழுத்தவன் தொடர்ந்து, "இப்போது உனக்கு எப்படி பற்றிக் கொண்டு வருகிறதோ அதுபோல்தான் அந்த தடியனுடன் உன்னைப் பார்க்கும்போது எனக்கு இருக்கிறது.... நேற்று கூட கடற்கரைப் பகுதியில் உன்னை அவனுடன் பார்த்தேன்..."

சொல்லிவிட்டு நிறுத்தியவன் ஒரு வினாடி அவள் முகக் குறிப்புகளைத் தேடினான். மதுரா கர்ணசிரத்தையாய் முகத்தை கட்டுப்படுத்தியிருந்தாள். எந்த ஒரு சிறு அசைவும் அவளிடம் இல்லை.

இவள் சரியான அழுத்தக்காரிதான் என்பதை சத்யன் புரிந்து கொண்டவன், ''மதுரா, உன் உள்மனம் என்ன, அதில் என்ன ஓடுகிறதென்று எனக்கு நன்றாகத் தெரியும். அதனாலே சொல் கிறேன். உன்னைப் பற்றிய சில விஷயங்கள் என்னை உறுத்துகிறது. ரொம்பவும் மர்மமாயிருக்கிறது. அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.''

சத்யனின் குரல் தாழ்ந்து பின் கடும் கட்டளை போல் எழுந்தது.

''உனக்கு ஒரு நாள் டயம் தருகிறேன். நீ நன்கு யோசி. உன்னைப் பற்றிய எல்லா விஷயங்களையும் அது எதுவானாலும், எப்படிப்பட்ட அசிங்கமாயிருந்தாலும் என்னிடம் சொல்லி விடு. இல்லையெனில்...''

மறுபடியும் நிறுத்தியவன் நேருக்கு நேராய் அவளைப் பார்த்தான்.

''ஒருபோதும் என்னுடைய அன்பை நீ பெற முடியாது...''

உறுதியான கட்டளைக் குரலில் சொல்லிவிட்டு விருட்டென வெளியேறினான் சத்யன்.

17

சத்யன் போய், ரொம்ப நேரமாகி விட்டது. ஒன்றும் தோன்றாதவளாய் அப்படியே மதுரா உட்கார்ந்திருந்தாள்.

என்ன சொன்னான்? எதுவானாலும் எப்படிப்பட்ட அசிங்கமானாலும்... சொல்லிவிட வேண்டுமாம்...!

அப்படியானால்...? அவளைப் பற்றி அவன் எண்ணியிருக்கும் கணிப்பு...? ஏதோ சாக்கடையில் புரளும் மட்டமான வாழ்க்கை

நடத்துவதாய் நினைத்திருக்கிறானா? இல்லை உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் கண்ட கண்ட ஆண்களுடன் கூத்தடிப்பதாய் முடிவே பண்ணி விட்டானா?

எதுவானாலும் சரி. அவனிடம் சொல்லி விட வேண்டுமாம். இல்லாவிட்டால் அவனது அன்பை இனி பெறவே முடியாது என்ற மிரட்டல் வேறு.

அரிசிப் பற்கள் கடிபட காது தொங்கட்டான்கள் அதிர வெகுண்டு போய்தான் மதுரா சிந்தித்தாள். தன்னை மட்டமாக எண்ணிவிட்டு அதில் மிரட்டலாய் ஒருநாள் கெடு வேறு!

ஒருகணம் சத்யன் மேல் கோபம் கோபமாக வந்தாலும் மறுகணம் எங்கே அவன் சொல்வது போல் ஒரேயடியாய் அவனது அன்பை பெற முடியாமல் போய் விடுமோ? என்ற பயமும் மதுராவுக்கு இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அந்த ரகசியத்தை ஒருபோதும் அவள் வாயால் சத்யனிடம் சொல்ல முடியாது. சொல்லவும் வாய்ப்பில்லை..?

பின்... என்ன செய்வது? என்னதான் செய்யப் போகிறாள்?

இந்த சமயம் பார்த்து குருநாதரும் ஊரில் இல்லை. வெளிநாடு டூர் சென்றிருக்கிறார். வர ஒரு மாதம் ஆகும். அவர் இருந்தா லாவது நிலைமையை விளக்கி அவர் யோசனையைப் பெறலாம். ஏதாவது செய்யலாம். மனிதர் பெரிய இக்கட்டில் நம்மை மாட்டி விட்டுச் சென்று விட்டாரே! யோசித்து யோசித்துப் பார்த்தும் மதுராவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தவளாய் பாஸ்கர் வீட்டிற்கு போன் செய்தாள். பணியாள் எடுத்ததும் அவனிடம் விபரம் சொன்னாள்.

ஒரு வாரம்தான் அங்கு பாஸ்கரை பார்க்க வரப்போவதில்லை என்றும், பாஸ்கரை ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளும்படியும், எதுவும் அவசரத் தேவையேற்பட்டால் அலுவலகத்தில் வந்து பார்த்து தகவல் சொல்லும்படி சொல்லிவிட்டு போனை வைத்தாள்.

தன்னால் செய்ய முடிந்தது இது ஒன்றுதான் என்றும் சொல்லிக் கொண்டாள்.

கூடவே சத்யன் வைத்த ஒருநாள் 'கெடு' ஞாபகம் வந்தது. தன் மீது அத்தனை சேற்றையும் பூசிவிட்டு அதற்கு கெடு வேறு!

ஆனால் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. தலைக்கு மேல் வெள்ளம் போய் விட்ட பிறகு இதைக் கண்டு அஞ்சுவது அவளால் இயலாத காரியம்!

வழக்கம் போல் அலுவலகம் சென்று வந்து கொண்டிருந்தாள் மதுரா.

ஒவ்வொரு நாளும் சத்யன் அலுவலகத்தில் நுழையும்போது அவள் ஸீட் முன் நின்று ஒருகணம் அவளையே உற்றுப்பார்த்தான். வேண்டுமென்றே வேலையில் ஆழ்ந்திருப்பது போல் மதுரா தன் கூட்டுக்குள் சுருங்கிக் கொள்வாள். ஒரு அர்த்தமான முறைப்புப் பார்வையுடன் அங்கிருந்து சத்யன் அகல்வான்.

இப்படியே ஒரு வாரம் ஓடியது.

கடைசியில் அன்று பொறுமையில்லாதவனாய் சத்யனே அவளை கூப்பிட்டனுப்பினான்.

ரூமிற்குள் அப்பாவியாய் நுழைந்தவளை வேல் குத்தும் பார்வையோடு எதிர் கொண்டான்.

''ஆனாலும் உனக்கு திமிர் ஜாஸ்தி...'' என்றான் எடுத்த எடுப்பில் ஆவேசமாய்.

மதுரா பதில் சொல்லவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு அவனையே பார்த்தாள்.

''எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால்... இன்னும் என் கேள்விக்கு பதில் சொல்லாமல்... நீ பாட்டுக்கு அலைந்து கொண்டிருப்பாய்...?''

''என்ன கேள்வி? என்ன பதில்?''

மதுரா எந்தவித உணர்ச்சியுமில்லாமல் கேட்டது சத்யனை மேலும் ஆவேசப்படுத்தியது.

''ஓஹோ! அது கூட தெரியாதா... இல்லை மறந்தது போல் நடிக்கிறாயா...? உன்னை...'' என்றபடி கைகளை அவள் கழுத்தை நெறிப்பது போல் கொண்டு வந்து நிறுத்தியவன், ''அந்த தடியனைப் பற்றி கேட்கிறேன்! யார் அவன்? உனக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? எதனால் இந்த கள்ளத்தனமான உறவு?''

பீறிடத் துடித்த கோபத்தை அடக்கிக் கொண்டாள் மதுரா.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை...'' என்றால் அதே உணர்ச்சியற்ற தொனியில்.

ஆனால் சத்யன் லேசில் விடுவதாய் தெரியவில்லை. சேரில் இருந்து எழுந்து அவள் முன் கைகட்டியபடி வந்து பார்வையால் முறைத்தான்.

''ஒன்றுமில்லை என்றால் விட்டுவிடுவேனா? பதில் சொல்! அப்படியென்ன அந்த தடியனோடு ரகசியம் இருக்கிறது. எல்லாவற்றையும்தான் நான் பார்த்துவிட்டேன். எல்லாம்தான் வெட்ட வெளிச்சமாகி விட்டது.

''நீங்கள் நினைப்பது போல் இல்லை...''

''ஆமாமா இல்லைதான். நான் நினைத்ததை விட நீ மகா மட்டமாக இருக்கிறாய்...''

''.....''

அவள் பதில் சொல்லாமல் இருக்கவே மறுபடியும் அவளைக் குத்தினான்.

''அப்படி என்னதான் அவனிடம் இருக்கிறது? தினம் தினம் அவனுடன் இந்த ஆட்டம் போடுகிறாய்? ம்ம்... பதில் சொல்..!''

''உங்கள் கேள்விக்கெல்லாம் என்னால் பதில் சொல்ல முடியாது...''

''சொல்லித்தான் ஆக வேண்டும்...'' சத்யனின் குரலில் மிரட்டல் தொனித்தது.

அவளை மேலும் நெருங்கி நேருக்கு நேராய் பார்த்தான்.

''இல்லையெனில்... நீ பயங்கரமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்...''

சுட்டு விரலை உயர்த்திக் காட்டி எவ்வளவு மிரட்ட முடியுமோ அவ்வளவு மிரட்டினான் சத்யன். ஆனால் மதுராவிற்கு எரிச்சல்தான் வந்தது. இவனாக எதையோ நினைத்து அசிங்கமாய் கற்பனை பண்ணிக் கொண்டால் அதை எப்படி சகிக்க முடியும்?

''எதையும் சந்திக்கத் தயார்...!'' என்றாள் விட்டேற்றியாக.

இந்த பதிலை சத்யன் ஒருகணம் எதிர்பார்க்கவில்லை.

அவளையே ஆழமாய் உற்றுப் பார்த்தான்.

''ஓஹோ! அந்த அளவிற்கு துணிந்து விட்டாயா? நீ செய்தாலும் செய்வாய். உனக்கு அந்த தடியனோடு கூத்தடிக்க வேண்டும். அதற்காக என்ன வேண்டுமானாலும் நீ செய்வாய். ஆனால் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு என்னால் சும்மா இருக்க முடியாது. உன் மீது உடனே ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போறேன்...''

சத்யன் சொல்லச் சொல்ல... மதுராவுக்கு எரிச்சல் அதிகமாகி பொறுமையே போயிற்று. ''தாராளமாய் எடுங்கள்...!'' என்றபடி அங்கிருந்து விறுவிறுவென அகலப் போனாள்.

சத்யனுக்கு வந்ததே கோபம்!

ஒரே வீச்சில் அவளைத் தாவிப் பிடித்து இழுத்தவன், ''என்னடி என் பேச்சை முழுதும் கேட்கக் கூட உனக்கு பொறுமை இல்லையோ?'' என்றபடி ஆவேசப்பட்டவனாய் திமிறிய அவளை மென்னி நொறுங்கும்படி இறுக அணைத்தான்.

''மனம் என்ற ஒன்று இடிக்கிறது. இல்லாவிட்டால் இதற்குள் உன்னை ருசி பார்த்துவிட்டு எப்பவோ கசக்கி எறிந்திருப்பேன்...'' மூச்சு முட்ட அணைத்தவன் மறுகணமே தூக்கியெறிவது போல் அவளை விடுவித்து விலகினான்.

மதுரா ஒருகணம் அதிர்ந்து குன்றிப் போனவள் மறுகணமே விடுவிடுவென வெளியேறினாள்.

சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லி முடித்து விட்டான் சத்யன்! இன்னும் ஒன்றும் பாக்கியில்லை. எல்லா மட்டமான வார்த்தைகளையும் உபயோகித்து அவளை நார் நாராய் கிழித்துவிட்டான். இனி எதற்கு கவலைப்பட வேண்டும்? கவலைப்பட்டு என்ன ஆகப் போகிறது?

சீட்டில் உட்கார்ந்து விருப்பாய் நினைத்தாலும் மறுநிமிடமே மனம் பின்னோக்கி பாய்ந்தது. சத்யன் சொன்ன சுட்டெரிக்கும் வார்த்தைகளை நினைத்து உள்ளுக்குள் அழுதது.

மதுராவுக்கு தன் மேலே கோபம் பற்றிக் கொண்டு வந்தது. இப்படி ஆண் ஒருவருடன் தன்னைப் பார்த்ததும் சராசரி மனிதன் போல் தனது அசிங்கமான கற்பனைகளை பூசி! அவளை எள்ளி நகையாடும் சத்யனுக்காக ஏன் வருத்தப்பட வேண்டும்? அவன் இப்படிப் பேசிவிட்டானே என ஏன் உருக வேண்டும்?

உடனடியாக அவன் முகத்தில் அறைவது போல் உண்மையை ஒப்புவித்து விடலாம். ஆனால் அதற்கும் குருநாதரின் கெஞ்சிய

முகம் அவளை தடுத்திற்று. மறுபடியும் குருநாதரின் செயலாள ருடன் தொடர்பு கொண்டு குருநாதர் எப்போது வருவார் என ஆவலாய் விசாரித்தாள்.

ஆனால் குருநாதர் வர இன்னும் ஒரு மாத காலம் ஆகலாம் என்று அவள் காதில் விழுந்தபோது அவள் கொண்டிருந்த நம்பிக்கை முழுதும் போயிற்று. அதை நினைத்தே அன்றைய இரவுப் பொழுதும் அவளுக்கு தூங்காமல் கழிந்தது.

18

மறுநாள் அலுவலகம் சென்று சீட்டில் உட்காரும் போதுதான் சத்யன் சொன்ன 'ஒழுங்கு நடவடிக்கை' பற்றி ஞாபகம் வந்தது.

அப்படியென்ன ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விடப் போகிறான்? எதுவானா லும் சந்திக்கத் தயார்தான்!

நிமிர்ந்து கொண்டவளாய், வில்லில் முறுக்கேறிய நாணின் விரைப்புடன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள்.

காலை, மதியம் வரை எவ்வித பிரச்சினையுமில்லை.

சத்யனும் அலுவலகத்திற்கு அன்று வந்த மாதிரியும் தெரியவில்லை!

நிம்மதியுடன் வேலை பார்த்தவள் மாலை வேலை முடியும் தருவாயில் அலுவலகத்தினுள் சத்யனின் கார் நுழைவதை திகைப்புடன் கவனித்தாள்.

சத்யன் அவள் எதிர்பார்த்தது போலவே நேராய் அவளைத் தேடித்தான் வந்தான்.

அவன் முகத்தில்தான் என்ன ஒரு இறுக்கம்? புன்னகை விரிய அவளைப் பார்த்ததும் மலர்ந்த முகமா இது!

அதே கடுகடுத்தனத்துடன் அவளை நெருங்கியவன், "நாளை நீ ஊருக்கு கிளம்புகிறாய். புறப்படத் தயாராய் இரு..." என்றான் கட்டளை போல்.

மதுரா ஒரு கணம் வியப்புடன் பார்த்தாள்.

"ஊருக்கா? எதற்காக?"

"உன்னை எங்கிருந்து பிடித்து வந்தேனோ... அங்கு மறுபடியும் கொண்டு சென்று அடைக்கப் போகிறேன்."

மதுரா மறுபடியும் புரியாமல் விழிக்கவே, "என்ன இன்னுமா புரியவில்லை...? அன்பு இல்லத்திற்கு! உன்னை மறுபடியும் அன்பு இல்லத்தில் கொண்டு போய் மேடத்திடம் ஒப்படைத்து விடப் போகிறேன்..."

"அன்பு இல்லத்திற்கா?"

ஒருகணம் நிஜமாகவே திடுக்கிட்டு விட்டாள் மதுரா?

அவளையறியாமல் அவள் கண்களில் நீர் தளும்பிவிட்டது.

"என்ன முழிக்கிறாய்? இவ்வளவு நாள் நீ அவிழ்த்துப் போடாத குறையாய் ஆட்டம் போட்டது முடிவுக்கு வந்துவிட்டது என திகைக்கிறாயா? உன்னைப் போன்று கொட்டிலில் அடைத்து மேய்க்க வேண்டிய கேஸ்களை ஊர் மேய விட்டால் இப்படித்தான் நடக்கும் என்பதை அனுபவத்தில் புரிந்து கொண்டேன். நாளை மூட்டை முடிச்சுகளுடன் தயாராய் இரு. நீ இனி இருக்க வேண்டிய இடம் அன்பு இல்லம்தான்!"

படபடவென நெருப்புத் துண்டங்களை அவள் தலையில் கொட்டிவிட்டு அதே வேகத்தில் நிம்மதியுடன் வெளியேறினான் சத்யன்.

அதிர்ந்து ஆடித்தான் போய் விட்டாள்.

அதிரடியாய் சத்யன் இப்படி ஒரு முடிவு எடுப்பான் என அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

அன்பு இல்லத்திற்கு அவள் திரும்பப் போவது ஒன்றும் கசப்பான விஷயமில்லை. ஆனால் தான் சரியில்லை என்ற அவப்பெயருடன் சத்யன் அங்கு கொண்டு போய் விடுவதை எப்படி சகித்துக் கொள்ள முடியும்?

ஏதாவது செய்தாக வேண்டும். சத்யன் சொன்னால், சொன்னது போல் நாளை செய்து விடுவான்.

திரும்பவும் பிரயாசையுடன் குருநாதர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டாள். அவர் இன்னும் வெளிநாட்டில் இருந்து திரும்பவில்லை என்ற பதிலே கிடைத்தது.

ஒன்றும் தோன்றாதவளாய் ரொம்ப நேரம் யோசித்தாள். சத்யனிடம் இனியும் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடி தப்பிப்பது இயலாத காரியம் என்று அவளுக்கு புரிந்தது.

அதே நேரம் எக்காரணம் கொண்டும், தனக்கு கொடுத்த பணியை முடிக்காமல், அவப்பெயருடன் அன்பு இல்லம் செல்வதையும் அவள் விரும்பவில்லை.

நிதானமாய் திரும்பத் திரும்ப யோசித்து திடமாய் ஒரு முடிவும் எடுத்தாள் மதுரா.

19

மறுநாள் அதே வீராப்புடன் சத்யன் அவளைத் தேடி ஹாஸ்டல் ரூமிற்கு வந்தான். அறை காலியாயிருந்தது. பக்கத்து ரூமில் விசாரித்தபோது நேற்று

இரவோடு இரவாய் பெட்டியைத் தூக்கிச் சென்று விட்ட விபரம் தெரிந்தது.

'ஓடுகாலி! அதற்குள் ஓடிவிட்டாளா? குட்டு வெளிப்பட்டவுடன் இடத்தைக் காலி பண்ணி விட்டாள். விடக்கூடாது, விடமாட்டேன்...!' கைகளைக் குத்திக் கொண்டு ஆத்திரமாய் வெளிவந்து யோசித்தான் சத்யன்.

பின் கோபமாய் காரிலேறி விருட்டென கிளம்பிப் போனான்.

சத்யன் ஹாஸ்டல் ரூமிற்கு தன்னைத் தேடிப் போனதை ஏமாற்றமுடன் கோபமுமாய் வெளியே வந்ததை, காரிலேறி வேகமாய் போனதை எல்லாவற்றையும் தூர நின்று கவனித்துக் கொண்டிருந்தாள் மதுரா!

எதிரே சாலையோர மரம் ஒன்றின் மறைவிலிருந்து வெளிப்பட்டு ஹாஸ்டலை நோக்கி நடந்தாள்.

சத்யனின் கோபமான முகம், அந்த ஆவேசம் எல்லாம் அவளை அதிரச் செய்தது. அவன் இப்படி கோபம் கொள்ளும் அளவுக்கு ஆகிவிட்ட தன் சூழ்நிலையை நினைத்தும் வெறுப்பாய் இருந்தது.

நேராய் ஹாஸ்டலுக்கு நுழைந்து தான் சொன்னபடி சொல்லி நடித்த பக்கத்து ரூம் தோழிக்கு நன்றி சொன்னாள். தனது உடமைகளில் சில துணிமணிகளை மட்டும் சிறிய பை ஒன்றில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அவள் மனதில் தெளிவும் பிறந்திருந்தது.

நேராய் பாஸ்கர் தங்கியிருக்கும் வீட்டிற்குச் சென்று கொஞ்ச நாட்கள் தங்கிக் கொள்ள வேண்டும். பெரியவர் குருநாதர் ஊரிலிருந்து திரும்பியதும் விஷயத்தை தெரிவித்து சத்யனுக்கு உண்மையை புரிய வைக்க வேண்டும்.

நினைத்தவளாய் ஆட்டோ ஒன்றை பிடித்து பாஸ்கர் தங்கியிருக்கும் லயன்ஸ் காலனிக்குப் போகச் சொன்னாள்.

மதுரா சென்ற அதே சமயம் அலுவலகம் வந்து உட்கார்ந்த சத்யனுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

ஆத்திரமாக துடித்துக் கொண்டிருந்தான்.

எங்கே போயிருப்பாள்? என்னிடமே நாடகமாடிவிட்டு... நாளை கிளம்ப வேண்டும் என்றதும்... பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவளே போய்விட்டாளா?

எங்கு போய் விடுவாள்? எப்படியும் கண்டு பிடித்தே தீருவேன்..!

நிமிர்ந்து ஆவேசமாய் யோசித்தவனின் மனதில் மதுராவுடன் பார்த்த பாஸ்கர் உருவம்தான் விரிந்தது.

அந்த தடிப்பயலுடன் தானே சுற்றிக் கொண்டு இருக்கிறாள்... அவனைத் தேடித்தான் போயிருப்பாள்...? ஆனால் அவன்... தங்கியிருப்பது.... அவனது வீடு... அதை எப்படிக் கண்டுபிடிப்பது?

நெற்றி சுருங்க யோசித்தவன் அதற்கும் விடை கிடைத்தவனாய் நிமிர்ந்தான். பாஸ்கரை அடிக்கடி பார்க்கும் பார் கிளப் ஞாபகம் வந்தது. அந்த பார் கிளப் ஆசாமியை பர்ஸைத் திறந்து கவனித்தால்.... அட்ரஸை சொல்லிவிடுவான்.

யோசனை உருப்பெற்றதும் மின்னலாய் அங்கிருந்து கிளம்பினான் சத்யன்.

★ ★ ★

மதுரா பாஸ்கர் வீட்டை அடைந்தபோது... பணியாட்கள் சுறுசுறுப்பாய் வேலைகளைச் செய்து கொண்டிருக்க... பாஸ்கர் மட்டும் வழக்கம் போல் சுவரை வெறித்த மயக்க நிலையில் இருந்தான். அவன் உடல் நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

மதுரா வீட்டின் ஓரமாய் இருந்த சிறிய அறை ஒன்றை தனக்காக தேர்ந்தெடுத்து பெட்டியை வைத்துக் கொண்டாள். பாஸ்கருக்கு கொடுக்க வேண்டிய மருந்து மாத்திரை பொறுப்புகளை உடனடியாக ஏற்றுக் கொண்டு அவனை கவனிக்க ஆரம்பித்தாள்.

இரண்டு நாள் எவ்வித பிரச்சினையுமில்லாமல் கழிந்தது.

மூன்றாம் நாள் அது நிகழ்ந்தது.

மாலை வழக்கம் போல் வீட்டுத் தோட்டத்தில் பாஸ்கரை கைத்தாங்கலாய் வாக்கிங் கூட்டிச் சென்றாள்.

சிறிது தூரம் சிரமப்பட்டு பாஸ்கர் நடந்தவன் அதற்கு மேல் நடக்க முடியாதவனாய் அப்படியே உட்கார்ந்து விட்டான்.

அந்நேரம் பார்த்து பணியாட்கள் யாருமில்லை.

மதுராதான் வேறு வழியில்லாதவளாய் பாஸ்கரை தாங்கிப் பிடித்து சிரமத்துடன் உள்ளே கூட்டிச் சென்றாள்.

உள்ளறைக்கு சென்று படுக்கையில் பாஸ்கரை அமர்த்தி படுக்க வைத்தாள்.

மூச்சு வாங்க நிமிர்ந்தவள்... எதிரே கடித்துக் குதறும் புலியாய் நின்றவனைப் பார்த்து அதிர்ந்தே விட்டாள்!

எதிரே கண்கள் ஜொலிக்க சத்யன்!

இவன் எப்படி இங்கு வந்தான்? எப்படி பாஸ்கர் வீட்டைக் கண்டுபிடித்தான்? கடவுளே! வகையாய் இவனிடம் மாட்டிக் கொண்டேனே...! மதுரா தவித்தாள்.

''என்ன படுக்கை வரை சல்லாபம் வந்து விட்டதா? நல்ல சமயத்தில்தான் நான் வந்திருக்கிறேன்...!'' நிஜமாகவே அவளைக் குதறினான் சத்யன்.

மதுராவுக்கு ஒன்றும் பதில் பேசத் தோன்றவில்லை. என்ன சொன்னாலும் கேட்கவா போகிறான்? இரை தேடும் மிருகமாய் அல்லவா வந்திருக்கிறான்!

இருந்தாலும் நம்பிக்கை கொண்டவளாய், பாஸ்கர் முகத்தை காட்டியவள், ''முதலில் இவரைப் பாருங்கள், பார்த்தால் தெரியவில்லை...? எவ்வளவு பெரிய நோயாளி என்று...?'' மதுரா சொன்னதற்கு சத்யன் சிரித்தான்.

''நோயாளியா...? இவனா...?'' என்றபடி ஒரு நிமிடம் பார்வையைக் கீழிறக்கிவிட்டு சத்யன் நிமிர்ந்தவன், இகழ்ச்சியாய், ''இவனைப் பார்த்தால் நோயாளி மாதிரி தெரியவில்லை. உன்னிடம் சுகம் அனுபவித்துவிட்டு கிறங்கிக் கிடப்பவன் போல் அல்லவா தெரிகிறது?'' என்றான் அவள் நெஞ்சில் நேராய்க் கத்தியைக் குத்துவது போல்.

மதுரா காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

''என்ன ஒரு அசிங்கமான கற்பனை...? ச்.சீ...! போங்கள்...! போய்விடுங்கள் இங்கிருந்து...'' குரலில் உச்சஸ்தாயியில் மதுரா கத்தினாள்.

ஆனால் சத்யன் அதற்கெல்லாம் பயப்படுகிறவனா?

நிதானமாய் அவள் பக்கம் வந்து முறைத்தான்.

''சும்மா குதித்து ரகளை பண்ணாதே. உன் குட்டெல்லாம் வெளிச்சமாகி விட்டது. இனி என்ன நடக்கப் போகிறது தெரியுமா?''

''என்ன நடக்கப் போகிறது?''

''நான் முன்பு ஒருமுறை உன்னிடம் சொன்னேனே... உன் தலைமுடியைப் பற்றி தரதரவென இழுத்து செல்லுவேன்... என... அதைத்தான் இப்போது செய்யப் போகிறேன்...''

சத்யன் இப்படிச் சொன்னதும் ரொம்பவும் வெகுண்டுதான் போனாள் மதுரா.

''அப்படி நீங்கள் செய்தால் என் கை ஒன்றும் பூப்பறித்துக் கொண்டிருக்காது...''

''அதையும்தான் பார்ப்போமே...'' என்றபடி சத்யன் அவளை நெருங்கினான்.

ஆவேசமாய் அவன் கைகளைக் கொண்டு அவள் முகத்தை நெருங்கி தலைமயிரை பற்றிக் கொள்ளப் போனான்.

மதுரா மட்டும் அவனுக்கு இளைத்தவளா? அவளும் ஆத்திரமாக கைகளை ஓங்கி தடுத்தபடி அவனை எதிர்கொண்டாள்.

''இருவரும் கொஞ்சம் பொறுங்கள்...!''

திடீர்க்குரலில் இருவரும் ஸ்தம்பித்துத் திரும்பினர்.

அங்கு... குருநாதர் நின்று கொண்டிருந்தார். ''வெளிநாட்டிலிருந்து இன்றுதான் திரும்பினேன். நான் பயந்தபடியே நடந்திருக்கிறது!'' பெருமூச்சு விட்டார்.

குருநாதரைப் பார்த்ததும்தான் மதுராவுக்கு மூச்சே வந்தது.

தந்தையைக் கண்டதும் சத்யனுக்கு ஒரே ஆச்சரியம்! கோபம் எல்லாம் இறங்கியவனாய் தன்னிலைக்கு வந்தான்.

''சாந்தம்..! சாந்தம்..! இருவரும் கோபத்தை விடுங்கள் எல்லாவற்றுக்கும் காரணம் நான்தான்!'' குருநாதர் கைகளை கூப்பியபடி சத்யனை நெருங்கினார்.

பாவமன்னிப்பு கேட்காத குறையாய் குரல் கம்ம சத்யனிடம் பாஸ்கர் பற்றிய எல்லா விவரங்களையும் சொல்ல ஆரம்பித்தார்.

ஆடித்தான் போய் விட்டான் சத்யன்!

தந்தைக்கு இப்படியொரு மறுபக்கம் இருக்கும் என அவன் கொஞ்சமும் நினைக்கவில்லை!

ஆனாலும் பெற்றவராயிற்றே! சொல்லியபடி தேம்ப ஆரம்பித்தவரை தேற்றி சமாதானப்படுத்தினான்.

கொஞ்ச நிமிடங்கள் அமைதியாய் கழிந்தது.

குருநாதர் அங்கிருந்து அகன்று விட்டார்.

சத்யன் திரும்பி மதுராவைப் பார்த்தான்.

சண்டைக்கோழி போல் சிலிர்த்துக் கொண்டு மதுரா நின்றிருந்தாள்.

'ஆனாலும் இவளை ரொம்புத்தான் படுத்திவிட்டேன் என்ன ஒரு மட்டமான சந்தேகப் புத்தி எனக்கு...!'

சத்யன் குற்ற உணர்ச்சி பொங்க நெருங்கினான்.

''நிஜமாகவே வருந்துகிறேன். என்னை மன்னித்துவிடு மதுரா. உன்னை நிறையவே துன்புறுத்தி விட்டேன்...'' உண்மையான வருத்தம் தோய்ந்த குரலில் பேசினான்.

மதுரா பேசாமலிருக்க அவள் பக்கம் நெருங்கினான்.

சிலிர்த்து நின்றவளின் தோளில் மெல்ல கை வைத்தான்.

''ச்சீ... தொடாதீர்கள்...''

மேலும் சிலிர்த்து அவசரமாய் தட்டி விட்டாள் மதுரா.

சத்யனின் முகத்தில் குறுஞ்சிரிப்பு படர்ந்தது.

மறுநிமிடமே மதுரா சற்றும் எதிர்பாரா வண்ணம் அவளை தாவிப் பிடித்து இறுக அணைத்தான் சத்யன்.

''விடுங்கள்.. விடுங்கள்...'' என திமிறினாள் மதுரா. ''உங்கள் கை பட்டதும் கம்பளிப் பூச்சி ஊர்வது போல் இருக்கிறது விடுங்கள்..'' என்று கோபமாய் சினந்தவளை மேலும் இறுக்கி மூச்சு முட்டுமளவுக்கு சத்யன் அணைத்தான்.

அணைத்தபடியே மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தி அவள் இதழ்களில் முத்தமிடவும் செய்தான்.

''ச்சீ... உங்களுக்கு வெட்கமாயில்லை?'' என்று துடித்துச் சிவந்தவளிடம் சிரிப்பு மாறாமல் கன்னங்களை உரசியவன் ''இனி எதற்கும் வெட்கமில்லை எல்லாம் போயிற்று...'' என்றபடி கரங்களால் அவளது சின்ன இடையை மேலும் வளைத்தவன். ''உன்னை வார்த்தைகளால் ரொம்பவும் துன்புறுத்தி விட்டேன். அதற்கு சரியான மருந்து இதுதான்...!'' என்றபடி மீண்டும் அணைத்தான்.

''நான் என்ன செய்யட்டும்?'' பின் சத்யன். சாந்தப்படுத்துவது போல் என் சூழ்நிலை அப்படி கண்மணி!'' என அவள் காதுகளில் முணுமுணுத்தது அவளை ஆச்சரியப்படுத்தியது.

''என்ன... சூழ்நிலையா?''

''ஆமாம். உன்னை இன்னொரு ஆணுடன் பார்த்ததும் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எங்கே நீ கிடைக்காமல் போய் விடுவாயோ என்ற பயம் வேறு...''

''ஓ... அப்படி ஒரு பயம் கூட இருந்ததா?'' என மதுரா கேலி பொங்க வினவவும், ''பின் இருக்காதா இப்படியொரு பேரழகியை எந்த ஆணும் பார்த்துவிட்டால் சலனப்படாமல் விட்டு வைப்பானா...?'' என அவன் முடிப்பதற்குள், ''அதற்காகத்தான்

நீங்களும் கசக்கியெறிய துடித்தீர்கள்... அப்படித்தானே?'' சினமாகக் கேட்டு முடித்தாள் மதுரா.

''என்ன சொல்கிறாய் கண்மணி?''

''அதற்குள் மறந்து விட்டதா? அன்று என்ன சொன்னீர்கள்... மனம் என்ற ஒன்று இடிக்கிறது. இல்லாவிட்டால் உன்னை எப்போதோ கசக்கி எறிந்திருப்பேன்... என்று...''

மதுரா ஞாபகப்படுத்தியதும் சத்யன் ஒருகணம் சங்கடமாய் நெளிந்தவன், ''சொன்னேன். ஆனால் ஒருபோதும் நான் அப்படிச் செய்ய மாட்டேன். உனக்குத் தெரியாதா கண்மணி?'' என்றான் புன்னகை மாறாமல்.

''ஆனாலும் பர்ஸையெல்லாம் தூக்கி ஆசை காட்டினீர்களே?'' என்று மறுபடி அவனது செயலை அவள் ஞாபகப்படுத்தியதும், ''இன்னும் அதையெல்லாம் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாயா? விட்டு விடு...!'' என்றபடி சத்யன் அவள் இதழ்களில் முத்தமிடப் போனான்.

மதுரா லேசில் விடுவதாயில்லை. சினந்து அவனை பார்த்தவள், ''என்னவெல்லாம் பேசினீர்கள்? வார்த்தைகளால் எப்படியெல்லாம் என்னை சாகடித்தீர்கள்? அதற்கெல்லாம் பதில் சொல்லுங்கள்?'' என்றாள் சீறியவளாய்.

சத்யன் அசட்டுப் புன்னகையுடன் தலை சாய்த்தவன்.

''மன்னித்து விடு. எல்லாம் ஆண்கள் புத்தி...!'' என்றான் சிரிப்பை பெரிதாக்கியபடி.

''இப்படி சொல்லிவிட்டால் போதுமா?''

''போதாதுதான். ஏதாவது தண்டனை கொடு. ஏற்கத் தயாராயிருக்கிறேன்...''

''தண்டனை...? ம்ம்... கொடுக்கத்தான் வேண்டும்...?'' ஒரு கணம் யோசிப்பது போல் மதுரா புருவங்களை உயர்த்த... அவள் காதுமடல்களை உரசி மறுபடியும் கன்னத்தில் இதழ்களைப் பதித்தவன், ''ரொம்பவும் யோசிக்காதே கண்மணி. உண்மையிலே அன்பு இல்லத்து 'அறிவாளி' நீதான்... என்பது புரிந்து விட்டது...!''

சொல்லியபடி அவன் நகைக்க முயலவும், ''என்ன மறுபடியும் கிண்டலா?'' என்று சினந்து குரல் உயர்த்தியவளிடம், ''கிண்டல் இல்லை. நிஜமாகவே! இல்லையெனில்... இப்படி அணைத்துப் பிடித்து முத்தமிட்டதும் கொண்டிருந்த கோபமெல்லாம் நீரூற்றாய் மாற நீயும் என்னை அணைத்திருப்பாயா?'' என சத்யன் கேட்டதும்தான் தன்னையறியாமல் கரங்களால் தானும் அவனை அணைத்து தழுவியிருப்பதை உணர்ந்தாள் மதுரா.

குட்டு வெளிப்பட்டு விட்ட தவிப்போடு விலக முயன்றவளை அடக்கியவன் மேலும் இறுக்கி அவளது செவ்விதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

அணைத்திருந்த அவள் கூந்தலை மெல்ல வருடினான். வருடிய கரங்களால் விடாதபடி.

''இப்போது நான் ஒன்று செய்யப் போகிறேன்...'' என்றான் சத்யன் பீடிகை பொங்க.

மதுரா கண்களை ஆச்சரியமாய் விரித்துப் பார்த்தாள்.

''உன் தலைமுடியைப் பிடித்து...''

''.....''

''உன்னை தரதரவென... இழுத்து...''

''என்ன...? என்ன..?'' என வெகுண்டு போய்,

மதுரா கோபமாய் சிலிர்க்கவும் அவசரமாய் கட்டிலைக் காட்டிய சத்யன், "அங்குதான் இழுத்துச் செல்லப் போகிறேன்..." என சிரிப்புடன் முடிக்க, முகம் சிவந்து விலகப் போனாள் மதுரா.

விலகப் போனவளை மறுபடி இழுத்து அணைத்தவன் அப்படியே தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டான்.

அவனது அணைப்பில் கட்டுண்டு தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் மதுரா.